
செண்பகத்தோட்டம்

சாண்டில்யன்

வானதி பதிப்பகம்

செண்பகத் தோட்டம்

சாண்டில்யன்



வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி. நகர், சென்னை 17.

இரண்டாம் பதிப்பு : மே, 1963
ஆறாம் பதிப்பு : நவம்பர்,2001
ஏழாம் பதிப்பு : செப்டம்பர், 2005

உரிமை : ஆசிரியருக்கு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 60.00

➢ TITLE SENBAGA THOTTAM
➢ AUTHOR SANDILYAN
➢ LANGUAGE TAMIL
➢ SUBJECT : SOCIAL NOVEL
➢ EDITION : SEVENTH EDITION, SEPTEMBER, 2005
➢ TOTAL PAGES : 292
➢ PUBLISHED BY: VANATHI PATHIPPAKAM
13, Deenadayalu Street,
T. Nagar, Chennai - 17
➢ PRICE Rs. 60.00

Typesetter : AMARAVATHI Chennai - 33. Ph : 485 04 84

Printed at : Nathan & Company, Chennai - 42.

முன்னுரை

செண்பகத் தோட்டம் ஒரு சமூகக் கதை. இதை நான் எழுதத் துவங்கியதும் பலபேர் ஆச்சரியப்பட்டார்கள்.

பெரும்பாலும் நான் சரித்திரக் கதைகளையே எழுதி யிருப்பதால் எல்லோரும் என்னை 'சரித்திரக் கதாசிரியர்' என்றே அழைத்து வந்திருக்கிறார்கள். பத்திரிகைகளும் இதே பட்டத்தைத்தான் அளித்திருக்கின்றன. சமூகக் கதைகளை நான் எழுதினால் சரியாக இருக்காது என்று திட்டமான அபிப்பிராய முள்ளவர்களும் உண்டு. ஆகவே, நான் இந்தக் கதையை எழுத ஆரம்பித்ததும் பலர் ஆச்சரியப்பட்டார்கள். 'உங்களுக்கேன் இந்தத் தொல்லை' என்று சிலர் சொல்லவும் சொன்னார்கள்.

இத்தனை எதிர்ப்புகளுக்கிடையே, என்னுடைய பிடிவாத குணத்தால் இந்தச் சமூகக் கதையை எழுத முற்பட்டேன். அப்படி நான் எழுதும் சமூகக் கதையைப் புதுமையான முறையில் அமைக்கவும் தீர்மானித்தேன். கதை எழுதுவது என்ற சாக்கை வைத்துக்கொண்டு தற்காலத் தமிழ்நாட்டின் கிராமங்களை ஆராய்வது என்று முடிவு செய்தேன். அதன் விளைவுதான் 'செண்பகத் தோட்டம்.'

'செண்பகத் தோட்டத்'தில் கதையிருப்பதைப் பார்ப்பீர் கள். கதையையும் மீறி கதாபாத்திரங்கள் அதாவது சமூகத் தோழர்கள் உங்கள் கண்முன்னே காட்சி அளிப்பதைப் பார்ப்பீர்கள்.

அச்சமோ, விருப்பு வெறுப்போ இல்லாமல் தமிழ் நாட்டின் மக்களை அவர்களுடைய குணதோஷங்களுடன்

உங்கள் கண்முன்பாக நிறுத்தப் பிரயத்தனப்பட்டிருக்கிறேன். வெளிவேஷ வராஹாச்சாரி, இனத்துவேஷ அழகண்ணல், தாஷ்டிகக் குருக்கள், கம்பராமாயண உத்திராதி படையாச்சி, ராஜபார்ட் ராமலிங்கம் - இவர்கள் அனைவரையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள் என்று நினைக்கிறேன்.

இந்தக் கதையை எழுதியதில் எனக்கு மிகவும் திருப்தி. வாசகர்களாகிய உங்களுக்கு இது எத்தனை தூரம் திருப்தியளிக்குமோ எனக்குத் தெரியாது. இதற்கு நீங்கள் ஆதரவளித்தால் இதுபோன்ற இன்னும் பல கதைகளை எழுத உத்தேசித்திருக்கிறேன்.

'செண்பகத் தோட்டம்' கதையை எழுதுகிறேன் என்று சொன்னதும் அதைப் பிரசுரிக்க முன்வந்த 'அமுதசுரபி' காரியாலயத்திற்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். எத்தனையோ விஷயங்களுக்கு நான் அந்தக் காரியாலயத்திற்கு நன்றி தெரிவிக்க வேண்டும். அந்த நன்றியுரைகளைத் தொகுத்தால் அதுவே பெரிய பட்டியலாகி விடும். இன்று நான் 'குமுதம்' போன்ற மகத்தான பத்திரிகையில் வருஷக் கணக்கில் பெரும் கதைகளை எழுதி வருகிறேனென்றால் அதற்கு மூலகாரணம் பிரபல மாதப் பத்திரிகையான 'அமுதசுரபி' நிர்வாகிகள் ஆரம்பத்தில் எனக்களித்த ஊக்கமும், ஆதரவுந்தான் காரணம். ஆகவே, அவர்கள் இந்த எனது புதுமுயற்சிக்கும் இடமளித்ததில் ஆச்சரியமே இல்லை.

இந்தக் கதைக்கு 'அமுதசுரபி' வாசகர்கள் அளித்த பேராதரவை இதர தமிழ்ப் பொதுமக்களும் அளிக்க வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இதைப் புத்தக ரூபத்தில் வெளியிட முன்வந்த வானதி பதிப்பக உரிமையாளர் திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கு என் நன்றி.

-சாண்டில்யன்

சென்பகத் தோட்டம்

1. மாடி வீட்டு முதலாளி

இருள் குறைவாகவும் பகல் அதிகமாகவும் கால நிலையை மாற்றும் உத்தராயண புண்ணிய காலத்தை முன்னிட்டுச் சீக்கிரமாக எழுந்துவிட்ட இளம்பரிதி தன் செவ்விய கிரணங்களால் செண்பகத் தோட்டத்துக்குத் தங்க மெருகு கொடுக்கத் தொடங்கினான். ஏற்கனவே பொன்னிறத்துடன் பளபளத்துக் கதிர்களின் கனத்தால் தலை சாய்த்து அறுவடையை எதிர்பார்த்து வயல்களில் படுத்துக் கிடந்த நெற்பயிர்கள் கதிரவன் தீட்டிய மெருகால் கண்களைப் பறிக்கும்படியாக ஜொலிக்கத் தொடங்கின. கீழைக்குளத்துத் தாழைக் காட்டில் புஷ்பித்து வெளியே ஆங்காங்கு தலையை நீட்டிக் கொண்டிருந்த தங்க நிறத் தாழை மலர்கள் கதிரவன் தயவு தங்களுக்குத் தேவையில்லை என்பதைக் குறித்துக் குறுகிய வாய்களைச் சற்றே திறந்து கிழக்கு நோக்கிச் சிரித்துக்கொண்டிருந்தன. இரவு முழுவதும் கதிரவனை எதிர் நோக்கியிருந்த பெருமாள்குளம் என்றழைக்கப்பட்ட மேல்திசைக் குளத்து அல்லி மலர்கள் மட்டும் ஆதவன் வரவால் மகிழ்ந்து தங்கள் வெண்பற்களைக் காட்டிச் சிரித்தன. செண்பகத் தோட்டத்தை அணைத்து ஓடிய இரு

பாசன வாய்க்கால்களில் தண்ணீர் பூர்ணமாக இருந்ததால், அவற்றின் கரையோரத்தில் தாக்கிய சிற்றலைகள் சூரிய வெளிச்சத்தால் பளபளத்துக் கண்களைச் சிமிட்டின.

காலை வேளையாதலாலும், தை அன்று பிறந்தும் மார்கழிப் பனி மட்டும் விடாமல் வாட்டியதாலும் மேய்ச்சலுக்கு மந்தை மந்தையாகப் போய்க்கொண்டிருந்த மாடுகள் சூரிய உஷ்ணம் பட்டதும் உடம்பை ஓர் உலுக்கு உலுக்கி வாலைச் சுழற்றி முதுகுகளில் சற்றே அடித்துக்கொண்டன. ஓரிரண்டு தறி கெட்ட சிறுகன்றுகள் மட்டும் வால முறுக்கிக்கொண்டு மந்தைகளிலிருந்து விலகி ஓடின. அந்த வருஷம் மழை கொஞ்சம் காலந்தள்ளிப் பெய்ததால் பயிர்ச் செலவு நாள் கழித்தே நடந்ததன் காரணமாக எல்லா வயல்களும் அறுக்கப்படவில்லை. இடை இடையே சில வயல்களே அறுக்கப்பட்டிருந்தபடியால் கட்டைத் தாள்களுடன் மொட்டையாகச் சில வயல்களும், பழுத்துக் காய்ந்த பயிர்களுடன் மற்றும் சில வயல்களும் காணப்பட்டன. அக்கம் பக்கங்களில் தரிசாகக் கிடந்த வயல்கள், வாழ்வில் போலவே வளப்பமும் வரட்சியும் வயல்களிலுமுண்டு என்பதை நிரூபித்தன:

வயல்களிலோ அந்த ஊரிலிருந்த மனிதர்களிலோ என்ன ஏற்றத்தாழ்வுகளிலிருந்த போதிலும் செண்பகத் தோட்டம் மிக ரம்மியமாகவே காட்சியளித்தது. செண்பகத் தோட்டம் பொன் விளையும் பூமியென்றும், விவசாயிகளின் சொர்க்கமென்றும் தஞ்சை ஜில்லா முழுவதிலுமே பேச்சாயிருந்தது. அதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்தது. சொர்க்கத்துக்குப் போகும் பாதை எத்தனை கரடுமுரடு என்று புராணங்களில் குறிப் பிட்டிருக்கிறார்களோ அதைவிடக் கரடு முரடான பாதையைக் கடந்துதான் செண்பகத் தோட்டத்துக்குப் போகவேண்டும். கொல்லுமாங்குடி ஸ்டேஷனிலிருந்து சிறுபுலியூர் இலுப்பைத் தோப்பில் நுழைந்து வயல்களில் விழுந்து குறுக்கே போனால் செண்பகத்தோட்டம் இரண்டரை மைல் தூரம்தான் என்று

அந்தப்பக்கத்துக் கிராமவாசிகள் சொல்லுவார்கள். நடக்கத் திராணியில்லாத பட்டணத்து வாசிகள் அந்தப் பக்கம் வரும்போது வயலில் நடந்து போவது மிகவும் கஷ்டம். 'பேசாமல் மங்கநல்லூரில் இறங்கி நண்டலாற்றின் வழியாக வண்டியில் போய் விடலாம்' என்று தீர்மானிப்பார்கள். யார் தீர்மானம் எப்படி இருந்தாலும் சொர்க்கமான சென்பகத் தோட்டத்தை அணுக இரண்டு பாதைகளும் நரகந்தான்.

சிறுபுலியூர் இலுப்பைத் தோப்பு வழியாக வயலில் புகுந்தால் அறுவடையாகாத காலத்தில் வரப்புகள் வழுக்கும்; வழுக்காத இடங்களில் கணுக்கால்வரையிலாவது உளையில் இறங்கும். அந்தக் காலங்களில் சர்க்கஸ் பழகினவர்களே அந்தப் பாதையில் நடப்பது கஷ்டமென்றால் சாதாரண மனிதர்களைப் பற்றிக்கேட்க வேண்டியதில்லை. இந்தக் கஷ்டத்தைத் தவிர வயல் நீரில் விளையாடிக் கொண்டிருக்கும் வழுலைப் பாம்புகள் காலைச் சுற்றிக்கொள்வதும் உண்டு. அறுவடையாகாத காலங்களில்தான் இந்த லட்சணமென்றால், அறுவடையான காலங்களில் விஷயம் இன்னும் மோசம். வரப்புகளின்மேல் நடந்தால் அநாவசியமாக வழி சுற்றுகிறதே என்று வயலில் இறங்கி நடப்போமானால் அறுவடையாகி மொட்டை மொட்டையாக நிற்கும் தாள்கள் காலைப்பிய்த்துவிடும். போதாக் குறைக்கு முட்களுக்கும் குறைவில்லை. பகல் காலத்தில் இந்த வழியில் பிரயாணம் செய்வதில் இந்தக் கஷ்டமென்றால் இரவு நேரங்களில் ஒரே ஒரு தொந்தரவு இருப்பதாகக் கிராம வாசிகள் சொல்வார்கள். அது வேறு ஒன்றுமில்லை; பொழுது போனதும் அந்த வயல்களில் போகிறவர்களை நரிகள் வழிமறித்துக் கொள்ளுமென்றும், ஆனால் அவை 'அநேகமாகக்' கடிக்காதென்றும் ஆதரவு சொல்லுவார்கள். ஆனால் 'அநேகமாகக் கடிக்கா' தென்பதற் காகப் பயப்பட்டும் பலர் மங்கநல்லூர் வண்டிப் பயணத்தை விரும்புவது வழக்கம்.

மங்கநல்லூர் வண்டிப் பயணமும் அவ்வளவு சுலபமான தல்ல, கொல்லுமாங்குடி குறுக்கு வழி இரண்டரைமைல் என்றால் மங்கநல்லூர் வண்டிப்பாதை நான்கு மைல் தூரம். சென்னை ராஜாங்கம் எத்தனையோ கைகள் மாறியும், மங்கநல்லூரிலிருந்து நண்டலாற்றங் கரை வழியே செண்பகத் தோட்டம் செல்லும் வண்டிப் பாதை மட்டும் சிறிதும் மாறவில்லை. வழி நெடுகப்பிளவுகள் இருந்ததால் வண்டிச் சக்கரங்கள் நொடித்து நொடித்து வண்டிக்குள்ளிருக்கும் பிரயாணிகள் மண்டையோடு எத்தனை பலம் என்பதைப் பரீட்சை செய்யும். கிராமங்கள் தான் நாட்டின் முதுகெலும்பு என்பதை நமது தலைவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். அத்தகைய முதுகெலும்புகளில் ஒன்றான செண்பகத் தோட்டத்துக்குச் செல்லும் பிரயாணிகளின் முதுகெலும்பை நண்டலாற்றுப்பாதை எத்தனை பதம் பார்த்திருக்கிறதென்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்? அந்தப் பாதையில் வெடிப்புகள் மட்டுமிருந்தால் மண்டையை மாத்திரம் லேசாக உடைத்துக்கொண்டு ஊர் போய்ச் சேர்ந்துவிடலாம். ஆனால், பாதை பல இடங்களில் சாய்ந்தும் இருக்கும். ஒரு சக்கரம் மேட்டிலும் இன்னொரு சக்கரம் பள்ளத்திலும் போய்க் கொண்டிருக்கும். வண்டியை இழுக்கும் மொட்டைக் காளை களில் ஏதாவது ஒன்று முரண்டினாலும் சரி, அல்லது வண்டியோட்டுபவன் தன் சாமர்த்தியத்தைக் காட்டக் காளை களின் வாலை முறுக்கியோ, தார்க்குச்சியை மாட்டின் முதுகில் தாராளமாகச் செலுத்தியோ சேஷ்டை செய்தாலும் சரி, வண்டி குடைசாயாமல் போய்ச் சேராது என்பது திண்ணம்.

செண்பகத் தோட்டத்துக்குச் செல்லும் வண்டிகளும் சாதாரணப் பட்டணத்து வண்டிகளைப் போலில்லாமல் ஏக நீளம். இரண்டு வண்டிகளைச் சேர்த்து இணைத்தது போல் நெடுக நீண்டு முன்புறமும் பின்புறமும் கூச்சாக அமைக்கப் பட்டிருக்கும். உள்ளே மிகவும் குறுகலாதலால் உட்காருபவர்கள்

எல்லாம் ஆண்களாயிருந்தாலும், பெண்களாயிருந்தாலும் ஒருவர் தொடையை இன்னொருவரது தொடை அழுத்தும் நிலையில்தான் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கும். போதாக் குறைக்குப் பிரயாணிகள் கொண்டு வரும் மூட்டை முடிச்சுகளும் வண்டிக்குள் திணிக்கப்படுமாதலால் வண்டி குடை சாய்ந்தாலும் யாரும் தப்ப முடியாத நிலையிலேயே பிரயாணம் செய்ய வேண்டியதாயிருக்கும்.

இந்த நிலையில் மங்கநல்லூர் மார்க்கத்தில் வண்டி குடை சாயாமல் தலையிலோ காலிலோ அடிபடாமல் பிரயாணம் செய்பவர்களே கிடையாது. அப்படிப் பிரயாணம் செய்ய வண்டிக்காரனும் விடமாட்டான். வெற்றிலையை வாய் நிறையப் போட்டுக் குதப்பிக் கொண்டு, "ஏலே! ஏது? கிறுவம் பிடுச்சுக் கிடக்கிறீங்களோ?" என்று காளைகளுடன் உறவாடித் தார்க்குச்சியைச் செலுத்தித் துரத்தித் தன் சாமர்த்தியத்தைக் காட்டி வண்டியைக் கவிழ்த்து விடுவான். அவனையும் மீறி வண்டி கவிழாவிட்டாலும் பாதையிலுள்ள பிளவுகள் தலையைக் கவனித்துக் கொள்ளும்.

மங்கநல்லூர் பாதையில் வண்டி குடை சாய்ந்தால் நல்லதா, சாயாமல் ஊர் போய்ச் சேர்ந்தால் நல்லதா என்பதையும் திட்டமாகச் சொல்ல முடியாது. வண்டி குடை சாய்ந்து கை காலில் அடிபட்டு, செண்பகத் தோட்டத்துக்குப் போய்ச் சேர்ந்தால் அங்கு வைத்தியப் பக்கிரியின் சிகிச்சைக்கு உள்ளாக நேரிடும். வைத்தியப் பக்கிரியை அறியாதவர்கள் செண்பகத்தோட்ட கிராமத்தில் மட்டுமல்ல, சுற்று வட்டத்திலுள்ள எந்தக் கிராமத்திலும் கிடையாது. தலையில் பெரிய முண்டாசுடனும் தோளில் துண்டுடனும் இடையே சுற்றாகக் கட்டிய வேஷ்டியுடனும் வரும் வைத்தியப் பக்கிரியின் கையிலிருந்த பட்டுக்கச்சையைப் பார்த்தால் சாதாரணமாக அழுத பிள்ளையும் வாய் மூடுமென்றால் காயம்பட்டு அலறும் பேர்வழிகளின் நிலையைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

மூன்று சுற்றாகச் சுற்றிக் கட்டியுள்ள பட்டுக் கச்சையின் மேல் கயிற்றைச் சுழற்றிச் சுழற்றி அவிழ்த்துக் கச்சையை விரித்து நீட்டாகப் பக்கிரிவைக்கும் தினுசே ஒரு தனி ரகம். அந்தக் கச்சைக்குள் அறை அறையாகத் தடுக்கப்பட்ட இடங்களில் செண்டுபாட்டில்கள் அளவிலுள்ள சின்னஞ்சிறு சீசாக்களில்தான் வைத்தியப் பக்கிரி வீரம், பூரம், இத்யாதி விஷங்களையும் உயர்ந்த செந்தூரங்களையும் வைத்திருப்பான். பக்கிரி தமிழ் வைத்தியம் செய்பவனாகையாலும் தமிழ்ப் பண்பிலிருந்து சிறிதும் வழுவாதவனாகையாலும் தன் கையே தனக்கு உதவியென்ற மூதுரையைக் கடைப்பிடித்து செந்தூரங்களை அளந்து மடிக்கத் தனிப்பட்ட ஸ்பூனோ, கரண்டியோ வைத்துக் கொள்ளாமல், தன் சுண்டுவிரல் நகத்தையே பெரிதாக வளர்த்து, அந்த 'மனித அளவை' மூலமே வியாதியஸ்தர்களுக்குப் பஸ்பங்களைப் பரிமாறி வந்தான். அந்தப் பட்டுக் கச்சைக்குள் இந்த மருந்துகள் மட்டுமல்லாமல் ஆபரேஷனுக்கு வேண்டிய கருவிகளும் இருக்கும். முள் எடுப்பதற்கு நீண்ட ஓர் ஊசி, நகத்தைத் திருகி எடுக்கவும் சதையைக் கிண்டவும் நுனியில் சிறிதளவு பட்டையான ஓர் ஆயுதம், கட்டி முதலியவற்றை அறுக்கவும் இதர ரண சிகிச்சைகளைச் செய்யவும் நன்றாகத் தேய்ந்து போய்விட்ட ஒரு பழைய கிராப் ரேஸர் இவற்றையும் பக்கிரி அந்தப் பட்டுக் கச்சைக்குள் வைத்துக் கட்டிக் கொண்டு வருவான்.

இவற்றைத் தவிர பக்கிரி கையாண்டு வந்த நாட்டு வைத்தியத்தின் பழமையைக் குறிக்கும் துருப்பிடித்த சம்புடங்களும் ஓரிரண்டு உண்டு. நகரத்து டாக்டராயிருந்தால் இந்தத் துருவைக் கண்ட மாத்திரத்தில், 'இதிலிருப்பதை புண்ணில் வைத்தால் 'செப்டிக்' ஆகிவிடுமே' என்று அலறுவார். ஆனால், 'ஸெப்டிக்'குக்கெல்லாம் அஞ்சும் சுபாவம் பக்கிரிக்குக் கிடையாது. அந்தச் சம்புடங்களிலுள்ள ஔஷதங்களைக் கொண்டு தான் அவன் வைத்தியம் செய்து வந்தான்.

அத்தனைக்கும் செண்பகத் தோட்டத்து மக்கள் பிழைத்துக் கொழுக்கட்டை மாதிரிதான் இருந்து வந்தார்கள். அழுக்கு ரோகத்தைத் தரும் என்று நமக்குத் தெரியும்; ஆனால், செண்பகத் தோட்டத்து வீதியில் புழுதியில் சதா விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் குண்டு குண்டாகவே இருந்தன. வைத்தியப் பக்கிரியும் அவன் துருப்பிடித்த ஆயுதங்களும் ஊரின் புழுதியும் அங்குள்ள மக்களுக்குச் சகஜமாகிவிட்டதே தவிர மங்கநல்லூரிலிருந்து வண்டிக் காயத்துடன் அங்கு வந்து சேரும் நகர வாசிகளுக்கு சகஜமாயிராது. பக்கிரியை அவர்கள் பார்த்து விட்டால் பிரயாணத்தின் போது பட்ட காயங்களை ஒளித்துக் கொள்வார்களே யொழியப் பக்கிரியின் சிசுரூஷைக்கு ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

இத்தனை பிரயாணக் கஷ்டமுள்ள செண்பகத் தோட்டத்துக்கு நகர மக்கள் ஏன் வரவேண்டும் என்று கேட்கலாம். அதற்குக் காரணமும் இருந்தது. வழியின் கோரமும், பிறகு பக்கிரியின் வைத்தியமும் மட்டும் இருந்துவிட்டால் எந்த நகரத்தாரும் செண்பகத் தோட்டத்தின் திக்கு நோக்கி நகர்ந்திருக்க மாட்டார்கள். செண்பகத்தோட்டத்தில் எத்தனையோ குறையிருந்த போதிலும் அது பொன்விளையும் பூமியாயிருந்த படியால் மங்கநல்லூர் மார்க்கமாகப் பட்டணத்துக்குச் செல்லும் பலவித சாமான்களும் அங்கு உற்பத்தியாகிக் கொண்டிருந்தன. நஞ்சை புஞ்சை இருவிதப் பயிர்கள் மட்டுமின்றிச் சாதாரணக் காய்கறிகளும், நாகரிக கறிவகைகளான முட்டைக்கோசு, தக்காளி, பட்டாணி, காலிபிளவர் முதலியவையும் ஏராளமாகப் பயிராகும் கிராமம் அந்த வட்டாரத்திலேயே அது ஒன்றுதான். ஆகவே அங்கிருந்து சாமான்களை வாங்கிக்கொண்டு போக மாயவரம், கும்பகோணம் வியாபாரிகளும் காண்டிராக்டு காரர்களும் எல்லா ஹிம்சையையும் பொறுத்துக்கொண்டு செண்பகத் தோட்டத்துக்கு வந்து போய்க்கொண்டிருந்தார்கள். செண்பகத் தோட்டத்தின் இத்தனை வளப்பத்துக்கும் காரண

பூதராக ஒரு மனிதர் இருந்தார். அவர் தான் பெரிய வீட்டுச் சிவசங்கரம் பிள்ளை. சிவசங்கரம் பிள்ளை வீட்டார் தலைமுறை தலைமுறையாகச் செண்பகத் தோட்டத்திலேயே வாழ்ந்து வேளாண்மைத் தொழிலில் காலங் கழித்தவர்கள். சிவசங்கரம் பிள்ளையும் அவர்களைப் போலவே அந்த ஊரிலேயே காலங்கழித்திருந்தால் செண்பகத் தோட்டத்திற்கு இத்தனை பெருமை வந்தேயிருக்காது.

சிறு வயதில் செண்பகத் தோட்டத்தின் மாரியம்மன் கோயில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து, பிறகு பக்கத்திலுள்ள பாவட்டக்குடி ஸ்கூலில் ஐந்தாவது தேறிய. பிறகு, மாயவரம் போய் ஹைஸ்கூலில் தேறினார். பையன் பத்து ரூபாய்ப் பரீட்சை (மெட்ரிகுலேஷன்) தேறியதிலேயே பெருமையடைந்த அவருடைய பெற்றோர் படித்தது போதுமென்று நினைத்தார்கள். ஆனால், சிவசங்கரம் பிள்ளை விடாப்பிடியாகக் கலாசாலையிலும் படித்து நவீன விவசாய முறைகளையும் தனிப்படக் கற்றுத் தேர்ந்து ஊர் திரும்பினார். படித்து பட்டம் பெற்ற சிவசங்கரம்பிள்ளை மற்ற பட்டதாரி களைப்போல் குமாஸ்தாவாக மாறியிருந்தால் செண்பகத் தோட்டத்துக்குத் தற்சமயமுள்ள 'மவுஸ்' ஏற்பட்டேயிருக்காது. திடச்சித்தரான சிவசங்கரம்பிள்ளை பட்டணத்துப் பகட்டுக் களிலோ மேற்படிப்பின் உல்லாசத்திலோ மனத்தைப் பறி கொடுக்காமல் சொந்தக் கிராமம் திரும்பி விவசாயத்தில் பூர்ண ஊக்கம் செலுத்திச் செண்பகத் தோட்டத்தை மிகப் பிரசித்தியுள்ள கிராமமாகச் செய்துவிட்டார். நவீன விவசாய முறைகளைக் கையாண்டு ஏற்கெனவே பொன்விளையும் பூமியில் பொன்னைப் பாளம்பாளமாக எடுத்து அந்தக் கிராம வாசிகளுக்கு வழி காட்டினார். அவரை அந்த ஊர் வாசிகளெல்லாம் பெரிய வீட்டுப் பிள்ளை என்றே அழைத்து வந்தார்கள். ஆனால், பெரிய வீட்டுப் பிள்ளை என்ற பட்டத்தையோ எசமானன் பட்டத்தையோ அவர் வெறுத்தார். அவர் முயற்சியால் அவர்

பண்ணை பெருகியதால் பண்ணையார் என்றும் பெரிய மிராசுதாரர் என்றும் ஊர் ஜனங்கள் கூப்பிட ஆரம்பித்தார்கள். அப்படிக் கூப்பிட்டவர்களை அவர் கண்டிக்கவும் செய்தார். "நான் பண்ணையார் அல்ல; பண்ணையாள்தான். என் தகப்பனார் விவசாயி. என் பாட்டனார் விவசாயி. எனக்கு மாத்திரம் என்ன மிராசுதாரர், பண்ணையார் பட்டமெல்லாம்? 'விவசாயி' என்ற பட்டம் அவர்களுக்குக் கௌரவமாயிருந்தால் எனக்கு மட்டும் எப்படிக் கௌரவமில்லாது போய்விடும்?" என்பார். உண்மையில் அவர் செண்பகத்தோட்டத்தையும் அதன் மண்ணையுமே தெய்வமாக மதித்து வந்தார்.

அந்த ஊரில் தெய்வங்களுக்கும் குறைவில்லை. மேலைக் குளத்தருகே ஒரு பெருமாள் கோயிலும், கீழைக்குளத்தருகே ஒரு சிவன் கோயிலும் இருந்தன. இவை தவிர தெற்குப் பக்கத்தில் மாரியம்மன் ஆலயமும் ஊருக்கு வெளியே ஓர் ஐயனார் கோயிலும் உண்டு. இந்தத் தேவாலயங்களைத் தவிர சிவன் கோயிலுக்குப் பக்கத்திலிருந்த ஒரு மரத்தில் சங்கலி வீரன் என்றொரு தேவதை இருப்பதாக மக்கள் நம்பி, குழந்தைகளுக்கு அங்கு மொட்டையும் அடித்து வந்தார்கள். சிவசங்கரம் பிள்ளை செண்பகத் தோட்டத்து மண்ணைத் தெய்வமாக மதித்தாலும் அதற்காக நாஸ்திகராகிவிடவில்லை. காலை மாலை வேளைகளில் அவர் எல்லாக் கோயில்களுக்கும் வித்தியாச மின்றிப் போய் வருவார்; எல்லாக் கோயில்களுக்கும் வித்தியாசமின்றி அபிஷேகச்சாமான்களை அனுப்புவார்; சொந்த ஊர்க் கோயில்கள் என்பதற்காகவே அவற்றிடம் அவருக்கு அபார பிரியம் உண்டு. செண்பகத் தோட்டத்தின் சம்பந்தம் எதற்கு இருந்தாலும் அதை உயர்வாகவே கருதி வந்தார். செண்பகத் தோட்டத்தின் நறுமணம் எந்தக் கிராமத்துக்கும் கிடையாது என்பது அவரது சித்தாந்தம்.

நறுமணம் என்றவுடன் செண்பகத் தோட்டத்தில் உண்மையாகவே நறுமணம் கமழும் மலர்கள் ஏராளமாக உண்டு

என்று நினைக்க வேண்டாம். கீழைக் குளத்துத் தாழைக் காட்டையும் சிவசங்கரம் பிள்ளை வீட்டு முற்றத்திலிருந்த பெரிய ரோஜாச் செடியையும் தவிர வேறு வாச மலர்ச் செடிகள் அந்த ஊரில் கிடையாது. ஊரின் பெயர்தான் செண்பகத் தோட்டம். செண்பக மரம் மருந்துக்குக்கூடக் கிடையாது. அந்த ஊர் சிவபிரான் பெயர் செண்பகவனநாதர் என்றும், அவரை முன்பொருமுறை இந்திரன் செண்பகமலரால் பூஜித்து முக்தியடைந்தான் என்றும் தல புராணம் இருந்தது. அந்தப் புராணத்தையொட்டி ஊருக்குச் செண்பகத்தோட்டம் என்று பெயர் வந்ததேயொழிய, செண்பகத்துக்கும், செண்பகத் தோட்டத்திற்கும் எவ்விதச் சம்பந்தமும் கிடையாத, ஊரில் பாதி இலுப்பைக்காடு. இலுப்பை மலர்களின் வாசனைதான் அதிகம். ஊருக்கு வெளியே எருக்கஞ் செடிகள் அதிகமாதலால் அவற்றிலும் பூக்கள் உண்டு.

இப்படியிருந்த போதிலும் சிவசங்கரம் பிள்ளை செண்பகத் தோட்டத்தைத் தமது உயிரினும் மேலாக மதித்து வந்தார். சென்ற பத்து வருஷ காலங்களில் அந்த ஊர் பலவிதத்திலும் மாறியிருந்தாலும் விவசாயியான சிவசங்கரம் பிள்ளை மட்டும் சிறிதும் மாறவில்லை. குழந்தையில் வைத்த குடுமியைக்கூட காலத்தை முன்னிட்டு அவர் களைந்தெறிய வில்லை. கட்டாகப் பின்னால் முடியப்பட்டிருந்த குடுமி கரையக்கூடாதென்பதற்காகக் கன்னுக்குடுமியைச் சுற்றிலும் சிருஷ்டித்து வேலி கட்டிப் பாதுகாத்து வந்தார். பயிர் பச்சைகள் விஷயத்தில் தவிர வேறு எந்த விஷயத்திலும் அவர் பழைமையை மாற்றிக் கொள்ளவில்லை. தமது சொந்த வீட்டை அவசியத்தை முன்னிட்டுச் சில இடங்களில் விருத்தி செய்தாரேயொழிய, வீட்டு முகப்பை மட்டும் பழைய நிலையிலேயே இருக்கச் செய்தார். தட்டோடு போட்ட தாழ்வாரமும் மண்ணலும் கட்டிச் சாணத்தாலும் கரியாலும் குழவியைக் கொண்டு தேய்க்கப்பட்ட இரு வாயில்

திண்ணைகளும் அவரது முன்னோர்கள் காலத்தில் இருந்ததுபோலவே இருந்தன.

மண்ணில் ஆசை வைத்திருந்த சிவசங்கரம்பிள்ளை கொஞ்சம் வேதாந்த மனோபாவமுள்ளவர். அந்த வேதாந்தப் பித்து அவர் மனைவி காலமான பிறகு சற்று அதிகமாகவே ஆகிவிட்டது. அந்த வேதாந்தமும் வைதிகமும் அவரைப் பயிர் பராமரிப்போடு கால்நடைப் பராமரிப்பிலும் சிக்கவைத்தன. பசுக்களைப் பராமரித்தல் பெரும் புண்ணியம் என்பதால் நிறைய மாடுகளை வாங்கி வைத்துப் போஷித்து வந்தார். சென்பகத் தோட்டத்தின் நாலைந்து வீதிகளிலும் சரி, வெளியேயிருந்த ஊரிலும் இவரிடம் உள்ள பசுக்களைப் போலவோ காளைகளைப் போலவோ யாரிடமும் கிடையாது. அந்தப் பசுக்களையும் காளைகளையும் அவர் சொந்தப் பார்வையிலேயே குளிப்பாட்ட வேண்டும்; அவர் மேற்பார்வையிலேயே தீனி வைக்க வேண்டும்.

அன்று பொங்கல் நாளாதலால் சிவசங்கரம்பிள்ளை மாட்டுக்காரனைக் கூப்பிட்டுக் காலையிலேயே பசுக்களையும், காளைகளையும் மேலைக் குளத்தில் குளிப்பாட்ட ஓட்டிச் செல்லச் சொல்லி மேற்பார்வை பார்ப்பதற்காகத் தாமும் சென்று விட்டார். அவர் வீட்டிலிருந்த அவரது சகோதரி செல்லத்தம்மாளும் குளிப்பதற்காகக் கீழைக் குளத்திற்குப் போய்விட்டாள். பிள்ளையின் ஒரே மகளான மோகனா மட்டும் வாசலில் பெரிதாகக் கோலம் போடப் புள்ளிகளை வைத்துக் கொண்டிருந்தாள்.

சிவசங்கரம்பிள்ளை உள்ளத்தழகு எத்தன்மையது என்பதை மேலே விவரித்தோம். அந்த உள்ளத்துக்கெல்லாம் உருக்கொடுத்ததுபோல் விளங்கினாள் மோகனா. பதினேழு வயதாகிப் பருவத்தின் செழுமையெல்லாம் ஒருங்கே திரண்டது போலிருந்த மோகனாவின் வசீகர எழில் அந்தக் கிராமத்திலிருந்த

அத்தனை பேர் உள்ளங்களையும் கொள்ளை கொண்டிருந்தது. அடியோடு குறுகிக் கிடந்த அவள் இடையும் அதற்குக் கீழே விசாலமாக அமைந்து, நடக்கும்போது அசைந்து அசைந்து பார்ப்பவர் கண்களைக் கொள்ளை கொண்ட பேரெழிலும், கருவண்டுகளைப்போல் சுழலும் விழிகளும் கீழைக் குளத்துத் தாழம்பூவைப்போன்று மஞ்சளோடிய வழவழப்பான அவள் சரீரமும், அவளுக்கிணையான அழகி அந்தப் பிராந்தியத்தில் இருக்க முடியாதென்பதை நிரூபித்தன. கோலம் போடுவதற்காக அவள் இழுத்து இடையில் செருகியிருந்த புடவை மார்பகத்தில் கெட்டியாகப் பாய்ந்தோடினாலும் அந்த பகுதியை அசைக்க முடியாமல் தத்தளித்தது, அவள் குனிந்து கோலம் போட்டபோது கருநாகம்போல் நீண்டு தொங்கிய அவள் ஜடை கீழேயிருந்த கோலத்தில் வீழ்ந்து புரண்டு எத்தனை தடவை அவள் பழையபடி முதுகில் தள்ளிவிட்டாலும் நிற்காமல் மீண்டும் தரைக்கு நழுவி, கோலமாவை ருசி பார்த்துக்கொண்டிருந்தது.

கோலம் போடுவதில் மோகனா மிகவும் கவனம் செலுத்தியிருந்தாளாகையால் பக்கத்துத் தெருவிலிருந்து எழுந்த கோயில் மணிச் சத்தமோ வாய்க்கால் கடையிலிருந்து கிளம்பிய மாடுகளின் கனைப்புச் சத்தமோ அவள் காதில் விழவில்லை; ஆனால் அவள் கவனத்தையும் கவரக்கூடிய கூச்சலொன்று திடீரென விழுந்தது.

''டேய்! தள்ளு! தள்ளு! உம்...விடாதே'' என்று பல கிராமவாசிகள் கூச்சல் போட்டார்கள். கிராமத்துப் பையன்களும் 'ஹோ' என்று கத்திக்கொண்டிருந்தார்கள். கோலம் போடுவதை நிறுத்திய மோகனா சத்தத்துக்கு என்ன காரணம் என்பதை அறியத் தலையைத் தூக்கிப் பார்த்தாள். சற்றுத் தூரத்தில் நாலைந்து கிராமவாசிகள் தலையில் கட்டிய முண்டாசுகளுடன் ஒரு பழைய மோட்டாரைத் தள்ளிக் கொண்டு சென்றார்கள். மற்ற கிராமவாசிகள் அவர்களை உற்சாகப்படுத்தினார்கள். குழந்தைகளுக்கு அது வேடிக்கையாயிருந்தபடியால் கூச்சல் போட்டார்கள்.

கார் ஊருக்குப் புதிது என்பதில் சந்தேகமில்லை. அந்த ஊருக்கு, அதுவும் வடுவச்சி வாய்க்காலில் தண்ணீர் பூர்ணமாகப் பிரவகிக்கும் அந்தக் காலத்தில் மாட்டு வண்டி வருவதே பிரம்மப் பிரயத்தனமாயிருக்க கார் வருவதென்றால் ஆச்சரியமா யிருக்காதா? ஆகவே, மிகுந்த ஆச்சரியத்துடன் மோகனா அந்தக் காரைப் பார்த்தாள்.

அந்தச் சமயத்தில் அந்தப் பக்கம் வந்த மாரிமுத்துவைப் பார்த்து: ''மாரிமுத்து, அது யாரது ஊருக்கு வந்திருப்பது?'' என்று கேட்டாள்.

''மாடி வீட்டு முதலாளி'' என்றான் மாரிமுத்து.

''என்ன? மாடி வீட்டு முதலாளியா?'' என்று ஆச்சரியத்துடன் வினவினாள் மோகனா.

''ஆமாம், கொளந்தை. புதுசா அந்த வீட்டை இந்த மோட்டார் ஐயாதான் வாங்கியிருக்காங்க!''

''அந்த வீட்டையா? அங்கேயாகுடியிருக்கப் போறாங்க?',

''ஆமாம், கொளந்தை.''

''ஏன்? அவருக்கு மாடி வீட்டு விஷயம் தெரியாதா?''

''தெரிஞ்சா வாங்கு வாங்களா அந்த வீட்டை?''

''யாரும் சொல்லலை போலிருக்கு.''

''வீட்டு விவகாரம் பட்டணத்திலேயே முடிஞ்சு போச்சு. அந்த வீட்டைத் தலையிலே கட்டறவங்க உள்ளதைச் சொல்லுவாங்களா கொளந்தை?''

இதைக்கேட்ட மோகனாவின் அழகிய விழிகளில் பரிதாபம் பூரணமாகத் துளிர்த்து நின்றது.

'ஐயோ, வருகிற மனிதன் கதி என்ன ஆகுமோ?' என்று கலங்கினாள் அந்தக் கட்டழகி. அதை நினைத்த போது அவள் பூவுடல் ஒரு முறை நடுங்கவும் செய்தது.

2. வந்த வாலிபன்

மாடி வீட்டின் கதை இன்னதென்றறியாமல் அதை வாங்கிக் குடியேற வந்துள்ள அந்தப் புது மனிதன் மீதுள்ள அநுதாபத்தால் உள்ளத்தே துக்கம் ஊடுருவ, பூவுடல் உள்ளுறச் சற்று நடுக்கம் கொடுக்க, கீழே போட்ட கோலத்தைப் பூர்த்தி செய்யாமலே கையில் கோலப்பொடி கொண்ட மரவையுடன் எழுந்து நின்ற மோகனா சற்று தூரத்தில் தள்ளப்பட்டுக் கொண்டிருந்த கார்மீதே கண்களை நாட்டி அசைவற்று நின்று விட்டாள். அவள் கேள்விகளுக்கு அதுவரை பதில் சொல்லிக் கொண்டிருந்த மாரிமுத்துவும் அவள் முகத்தில் படர்ந்த துயரத்தைப் பார்த்துப் பரிதாபப்பட்டு, ''கொளந்தை, இதுக்கெல்லாம் நாம் வருத்தப்பட்டால் சரிப்படுமா? வீட்டை வாங்கறவன் அதை ஒரு தடவைகூட வந்து பாக்காமே, அதைப்பத்தி யாரையும் ஒரு வார்த்தையும் கேட்காமே வாங்கினான்னா அதுக்கெல்லாம் நாமா பொணை?'' என்று சமாதானம் சொன்னான்.

மோகனாவின் அழகிய கண்கள் அவனை நோக்கித் திரும்பின. அத்துடன் அவள் கொவ்வை இதழ்களிலிருந்து சொற்களும் உதிர்ந்தன; ''மாரிமுத்து! இந்தக் கிராமத்துக்கு வரவங்களெல்லாம் நம்ம சொந்தம் மாதிரின்னு அப்பா சொல்வாங்களே, உனக்குத் தெரியாதா? தெரியாமே ஒருவர் தப்புச் செஞ்சா அதைத் தெரியப்படுத்தி எச்சரிக்கிறது நம்ம கடமையில்லையா?', என்று கேட்டாள் மோகனா.

மோகனாவின் வார்த்தைகளைக் கேட்ட மாரிமுத்து மெல்ல நகைத்தான். பயிரை அறுக்கக் கையில் வைத்துக் கொண்டிருந்த அரிவாளையும் லேசாகத் தன் கையில் ஒரு முறை தீட்டிக்கொண்டான். ''இப்போ என்ன செய்யணுங்கறே கொளந்தை? நான் வேணும்னா அந்த மோட்டார் ஐயாகிட்டே

போய், மாடி வீட்டுக்குள்ளே நுழையாதேன்னு சொல்லட்டுமா?'' என்று கேட்டான்.

அவன் சிரிப்பிலிருந்த கேலியை மோகனா நன்றாக உணர்ந்து கொண்டாள். வீட்டை வாங்கிவிட்டுக் குடியேறுவதற்காக இல்லாத பாடெல்லாம் பட்டு செண்பகத் தோட்டத்துக்கு வந்திருக்கும் மனிதனிடம் போய், 'இந்தாங்கய்யா உங்க வீட்டுக்குள்ளே நுழையவேண்டாம்' என்று சொன்னால் அவர் கேலியாகத்தானே நினைத்துக் கொள்வார் என்று எண்ணினாள். இருந்தாலும் தன் மனத்தில் எழுந்த எண்ணத்தை வெளியில் காட்டாமல் வார்த்தையை வேறு மார்க்கத்தில் திருப்பி, ''ஏன் மாரிமுத்து! வந்திருக்கிற ஐயா, தனியாக வந்திருக்காங்களா?'' என்று கேட்டு மீண்டும் காருக்காகக் கண்களை ஓட்டினாள்.

அவள் மாரிமுத்துவைக் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லும் முறையில் அந்த ஐயாவே காருக்குள்ளிருந்து கதவைத் திறந்துகொண்டு கீழே இறங்கிக் கதவைப் பட்டென்று அடித்துச் சாத்தினார். மாடி வீட்டு ஐயாவின் கைவலு காரணமாகவோ அல்லது அந்தக் கதவின் வயதின் காரணமாகவோ தெரியாது, கதவு பயங்கரமாகச் சப்தித்ததன்றிக் காரின் ஸ்பிரிங்குகளும் ஒரு முறை ஏறி இறங்கி வண்டியைக் குலுக்கி விட்டன. இறங்கிய மனிதனைப் பார்த்த மோகனாவுக்குப் பெரிதும் ஆச்சரியமாகப் போய்விட்டது. இறங்கிய மாடிவீட்டு முதலாளி மிகவும் வாலிபன். என்ன ஓடஓடக் கணக்குப் போட்டாலும் இருபத்து ஐந்து வயதுக்கு மேல் அவனுக்குப் போடவே முடியாது. காலில் நிஜார் போட்டுக்கொண்டு மேலேயிருந்த ஷர்ட்டை அந்த நிஜாருக்குள் செருகியிருந்த அந்த வாலிபன், காலிலிருந்த சேறுபடிந்த பூட்ஸை ஒரு முறை உதறிவிட்டுக் கொண்டு சற்றுநேரம் 'ஸ்டை'லாக நின்று சுற்றுமுற்றும் பார்த்தான். அதுவரை மோட்டாரைத் தள்ளித் தள்ளிக் கை சளைத்த கிராமவாசிகள் நால்வரும் முதலாளி இறங்கி நின்றதால்

அவகாசத்தை வீணாக்காமல் தங்கள் கை கால்களை முறித்து விட்டுக்கொண்டும், கை விரல்களைச் சொடுக்கிக் கொண்டும் சிரம பரிகாரம் செய்து கொண்டார்கள்.

மாடி வீட்டுக்கு மோட்டாரைத் தள்ளிச் செல்வதென்பது அவ்வளவு சுலபமான வேலையல்ல. அந்த வீட்டைக் கட்டியவர் அந்த ஊரிலிருந்த மேட்டு நிலத்தில் அதைக்கட்டி வைத்திருந்தார். வீட்டுக்குச் செல்லும் பாதை அவ்வளவு மோசமல்லா விட்டாலும் கூடியவரை செங்குத்தாக இருந்தபடியால் அதில் வண்டிகளை மாடு இழுப்பதே கஷ்டம். மனிதன் தள்ளி வண்டியை அதில் ஏற்றுவதென்றால் அவ்வளவு சுலபமான வேலையல்ல. மோட்டாரைத் தான் வாங்கியுள்ள வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பது அவ்வளவு சுலபமல்லவென்பதை அந்த வாலிபனும் புரிந்து கொண்டிருக்க வேண்டும். மோட்டாருக்குள் உட்கார்ந்து ஸ்டியரிங்கைப் பிடித்ததிலேயே தனக்கு உண்டான ஆயாசத்தைக் கவனித்த அந்த வாலிபன், தன்னையும் சேர்த்து மோட்டாரைத் தள்ளிய அந்தக் கிராம வாசிகளின் அவஸ்தை எத்தன்மையது என்பதை அறிந்து கொண்டிருக்க வேண்டும். ஆகவே, சற்று நேரம் அவர்களுக்கு வேலை கொடுக்காமலும் தானும் ஏதும் செய்யாமலும் அடியோடு குழம்பிப் போய் நின்றுகொண்டிருந்தான். பிறகு ஏதோ யோசித்தவன் போல் காருக்குப் பக்கத்தில் தானும் ஒரு கையைக் கொடுத்து மற்றவர்களையும் தள்ளச் சொல்லிக் காரை மேட்டின்மேல் மெல்ல ஏற்றும் பணியில் முனைந்தான்.

போகும் காரை உற்றுப் பார்த்துக்கொண்டே நின்றாள் மோகனா. வந்திருப்பவன் வாலிபன் என்பதைக் கண்டதும் அவள் ஆச்சரியம் மட்டுமின்றிப் பரிதாபமும் பன்மடங்கு பெருகலாயிற்று. ஏனென்றால் அந்தக் கிராமத்துக்குப் புதிதாக வந்து வீடுகளை வாங்கியவர்களெல்லாம் அநேகமாக வயதானவர்கள்தான். அந்திம காலத்தை அமைதியாகக் கழிக்க இஷ்டப்படுபவர்கள்தான் அந்த ஊரில் வீடு வாங்குவது

வழக்கம். மற்றவர்கள் பரம்பரையாக அங்கேயே இருப்பவர்கள். ஆகவே, மாடி வீட்டை யாரோ வாங்கிவிட்டார்கள் என்றதுமே வாங்கியவர் வயோதிகராகத்தான் இருக்க வேண்டுமென்று மோகனா தீர்மானித்திருந்தாள். அவன் வாலிபன் என்றதும் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'இந்த வாலிபன் இந்தக் கிராமத்தில் எப்படி காலத்தை ஓட்டுவான்?' என்று யோசித்துப் பார்த்து, எந்த விதத்திலும் ஓட்ட முடியாது என்ற தீர்மானத்துக்கு வந்தாள். கிராமத்தின் பெரிய மனிதர்களெல்லாம் அவள் கண்முன்னே ஒரு முறை சுழன்றார்கள். அவர்களுக்கும் இந்த வாலிபனுக்கும் எத்தனைவித்தியாசம்!

சென்பகத் தோட்டம் கிராமமாயிருந்தாலும் அதில் நாலைந்து வீதிகள் இருந்தன. ஒவ்வொரு வீதியிலும் சாதாரணக் குடிமக்களைத் தவிர ஓரிரு விநோதப் பிரகிருதிகளும் இருந்து வந்தார்கள். ஏன், அந்தக் கீழைத்தெரு வராஹாச்சாரியைத்தான் எடுத்துக் கொள்வோமே! என்ன விசித்திர மனிதர்! கீழைத்தெரு வராஹாச்சாரியை அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் மட்டுமல்ல, அக்கம் பக்கத்துக் கிராமத்திலுள்ளவர்கள் எல்லோருமே நன்றாக அறிவார்கள். அவரை அறியாமலும் இருக்க முடியாது. அவ்வளவு பட்டையாகப் பன்னிரண்டு நாமங்களை உடல் பூராவும் சாத்தியவர்கள் அந்தப் பிராந்தியத்தில் யாருமே கிடையாது. பெருமாள் கோயில் பட்டாச்சாரிகூட நெற்றியில் மட்டும் தான் திருமண் காப்பைச் சாத்திக் கொண்டு வருவார்; ஆனால், வராஹாச்சாரி துவாதச ஊர்த்வ புண்ட்ரத்தை (பன்னிரண்டு திருமண காப்புகளை) உடல் பூராவும் வளைய இழுக்காமலிருக்க மாட்டார்.

உண்மையில் வராஹாச்சாரி வைதீகரல்லர்; முக்கால் லௌகீகம். சர்க்காரில் போலீஸ் இலாகாவில் உதவிக் கமிஷனராக உத்தியோகம் பார்த்தவர். ரிடையரானதும் ஏதாவது ஒரு கிராமத்துக்குப்போய் நிம்மதியாகக் காலங்கழிக்க வேண்டுமென்பதற்காகச் சென்பகத் தோட்டத்தில் ஒரு வீட்டை

வாங்கிக்கொண்டு வந்து சேர்ந்தார். உத்தியோகக் காலத்தில் அதிகாரத்தின் காரணமாகப் பலருக்கு விளைவித்த கொடுமை களால் ஏற்பட்ட பாவத்தையெல்லாம் வயோதிக காலத்தில் வைதிக வாழ்க்கையை நடத்தித் தீர்த்துக்கொள்ள முயன்று கொண்டிருந்தார். விடியற்காலையில் ஸ்நானம் செய்து பன்னிரண்டு நாமங்களையும் நன்றாகச் சாத்திக் கொண்டு வீட்டில் பெருமாளுக்குத் திருவாராதனத்தைப் பிரதி தினமும் செய்து வந்தார். அவர் திருவாராதனம் செய்து வந்த சமயத்தில் அடிக்கும் மணி செண்பகத் தோட்டம் கிராமம் முழுவதிலும் கண கணவென்று பெரிதாக ஒலிக்கும். அடுத்தபடியாக வராஹாச்சாரி பெருமாள் கோயிலுக்குப் போய் பெருமாளைச் சேவித்து விட்டு, சிவன் கோயில் பக்கம் போகாமல், குறுக்கே வரப்பு வழியாக நடந்து தமது வீட்டிற்குப் போய் விடுவார். வராஹாச்சாரிக்கு வைஷ்ணவத்தில் இத்தனை பக்தி இருந்த போதிலும், சைவத்தில் அடியோடு வெறுப்பு இருந்ததாகச் சொல்ல முடியாது. அவர் சிவன் கோயிலுக்குப் போக மாட்டாரேயொழியப் பகல் வேளையில் சீட்டாட அரன் அடியாரான சிவன் கோயில் குருக்கள் வீட்டுக்குப் போகத் தவறுவதில்லை. சிவபிரானும் தம்மிடம் பக்தியில்லா விட்டாலும், தமது அடியாரிடம் பக்தி செலுத்திய காரணத்தால் அவருக்கு எந்தத் தொல்லையையும் கொடுக்காமல் சுபிட்சமாகவே வைத்திருந்தார்.

வராஹாச்சாரி இத்தனை வைதீகமாயிருந்த போதிலும் பூர்வ வாசனை, மட்டும் போகாமலிருந்தது. உதவிக் கமிஷனராயிருந்த காலத்தில் ஏற்பட்ட நாய் ஆசை மட்டும் அந்த வயோதிக வயதிலும் அவரை விடாமல் வாட்டியதால், எத்தனையோ விஷயங்களைத் தியாகம் செய்த அவர் தமது பழைய அல்ஸேஷியன் நாயின் குட்டியை மட்டும் விடாமல் வளர்த்து வந்தார். நாய்க்கும் வைதீகத்துக்கும் பொருத்த மில்லையென்பதை அவர் படித்திருந்தாலும் அந்த விஷயத்தில் மட்டும் சாஸ்திரம் சொல்லுவது சரியில்லையென்று

வராஹாச்சாரி திட்டமாகக் கருதினார். அவர் தீர்த்தமாடிவிட்டுத் திருமண் இட்டு ஆசாரமாயிருந்த சமயத்திலும் அல்ஸேஷியனிடம் கொஞ்சுவதை மட்டும் நிறுத்துவதில்லை. ராக்ஷஸன் மாதிரி வளர்ந்திருந்த அந்த அல்ஸேஷியனும் ஆசாரமாயிருக்கும் அவரைத் தொடக்கூடாது என்பதை அறியாமல் அவர் பஞ்சகச்சத்தைப் பிடித்துக் கொண்டு எழுந்து வயிற்றிலிருந்த திருமண்ணுக்கு எதிரில் மிகப் பயங்கரமாக விழித்துக் கொண்டு நிற்கும். வராஹாச்சாரியும் அதன் தலையைச் செல்லமாகத் தடவிக் கொடுத்து "போடா டைகர்" என்று அனுப்பி விட்டுத் தர்ம சாஸ்திரப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு படிக்கப் போய் விடுவார்.

வராஹாச்சாரி மிகவும் நல்லவர். கையில் ரொக்கமாகப் பணம் சேர்த்து வைத்திருந்தார். ஆனால், பணத்தை விரயம் செய்யக் கூடாதென்பதற்காக யார் கேட்டாலும் ஒரு வட்டிக்குக் குறையாமல் வாங்கிக் கொண்டே கடன் கொடுத்து வந்தார். அப்படி அவர் கிராமவாசிகளுக்குக் கடன் கொடுத்து எழுதி வாங்கிய பத்திரங்களெல்லாம் காணாமல் போகக்கூடாதென்பதற்காக அத்தனையையும் அவர் திருவாராதனத்துக்கு வைத்திருந்த சாளக் கிராமத்தின் 'கோயிலாழ்வார்' பெட்டிக் கடியிலேயே ஒரு மரப் பெட்டியை அமைத்து, அதில் பத்திரப்படுத்திப் பெருமாளிடம் ஒப்படைத்தார். வராஹாச்சாரியாரின் பாரபக்ஷமற்ற தன்மையை அறியாதவர்கள் அந்தக் கிராமத்தில் யாருமே கிடையாது. எந்தப் பெருமாள் கோயில் பட்டாச்சாரியாரிடம் அவர் வேதாந்த சாஸ்திரங்களில் பாடம் கேட்டுப் பணம் 'அநித்யம்' என்று அறிந்து கொண்டிருந்தாரோ அந்தப் பட்டாச்சாரியின் பெண் கலியாணத்துக்கு ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தபோது கூட, மற்றக் கிராமவாசிகளுக்குக் கொடுத்துவந்த அதே ஒரே வட்டிக்குத்தான் கொடுத்திருந்தார். இப்பேர்ப்பட்ட வராஹாச்சாரியார் ஆசாரச் சீலர்; பகல் வேளையில் படுப்பதற்காக வீட்டில் போட்டிருந்த பழைய

சோபாவின் மீது எப்பொழுதும் ஒரு மான்தோலை விரித்திருந்தார். ஆசாரம் கெடமால் படுத்துத்தான் பகல் வேளையில் சிறிது கண் அயர்வார்!

இவர் ஒரு வழியென்றால், இவருடைய நண்பர் சிவன் கோயில் குருக்கள் வேறொரு ரகம். வராஹாச்சாரிக்கு மெல்லிய தேகம்; சிவப்பு நிறம்; நல்ல உயரம்; தலை சிறிது வழுக்கை. ஆனால், குருக்கள் நல்ல கட்டுமஸ்தான தேகமுள்ளவர். கறுப்பு நன்றாக ரங்கு ஏறிக்கிடந்ததால் அவர் நெற்றியிலும் உடலிலும் பூசிய விபூதி பளிச்சென்று பிரகாசித்தது. அவர் புருவத்துக்கு நடுவே இடும் அம்மன் குங்குமம் அவருடைய குரூரமான முகத்தை அதிகக் குரூரமாக அடித்தது. குருக்களைக் கண்டு அந்த ஊரில் பயப்படாத ஆசாமிகளே கிடையாது. கிராமத்தில் எல்லோரும் கண்டு நடுங்கி வந்த அழகண்ணலுக்கே குருக்களையாவிடம் குலை நடுக்கமென்றால், மற்றவர்களைப் பற்றிச்சொல்ல என்ன கிடக்கிறது?

இத்தனைக்கும் அழகண்ணல் அப்படியொன்றும் சோப்பாளாங்கியல்லர்; அவர் உறுதியான கொள்கைகளை உடையவர். எப்படியாவது நாட்டிலிருந்து ஆரியத்தை விரட்டும் உறுதியுடன் முழு மீசையை லேசாகக் குறைத்துக் கொண்டு கிராப்பையும் முண்டாக முன்னால் தொங்கும்படி பயங்கரமாக வைத்துக் கொண்டிருந்தார். நல்ல உடல் கட்டும், பார்ப்பவர் நடுங்கும் பயங்கர நடையும் கொண்டவர். பெற்றோர் வைத்த பெயர் சுந்தரநாதன் என்பது. அந்தச் சொற்களிலிருந்து வந்த வட மொழிவாசனை கூடாது என்பதற்காகச் 'சுந்தர்' என்பதை 'அழகு' என்றும், 'நாதன்' என்பதை 'அண்ணல்' என்றும் மொழி பெயர்த்து இணைத்து அழகண்ணலாகத் திகழ்ந்து வந்தார். இதன்றித் தமிழ் எப்படி எல்லாவற்றையும்விட உயர்ந்தது என்பதை உலகுக்குக் காட்ட 'அகர' வரிசையிலேயே பேசவும் பழகிக்கொண்டதன்றி, ஆங்காங்கு மேற்கோள்காட்டத் தெய்வத் திருவள்ளுவரின் குறள்களில் அவசியமான சிலவற்றை

மனப்பாடம் செய்தும் வைத்திருந்தார். அழகண்ணலுக்கு வராஹாச்சாரியையும் குருக்களையும் காணும்பொழுதெல்லாம் எரிச்சல் பற்றிக்கொண்டு வரும். ஆனால் அந்த எரிச்சலில் பரஸ்பரம் இருந்தது. வராஹாச்சாரியிடமிருந்த அல்ஸேஷிய னும் அதைவிடக் குரூர சுவாபமுள்ள குருக்களின் பார்வையுமே அழகண்ணலை ஓரளவு அடக்கிவைத்திருந்தன.

சிவன் கோயில் குருக்களையாவையும் வராஹாச் சாரியையும்விட அழகண்ணலின் எரிச்சலுக்கு இலக்கான இன்னொரு மனிதரும் அந்தக் கிராமத்தில் இருந்தார். அவர்தான் உத்திராதிப் படையாச்சி. சரியாக ஆறடிக்குமேல் வளர்ந் திருந்ததன்றி வைரம் பாய்ந்த கைகால்களையும் இரும்பைப் போன்ற மார்பையும் உடையவராயிருந்தபடியாலும், அவர் க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவரானதால் கண்களில் தாண்டவ மாடிக் கொண்டிருந்த வீரத்தின் காரணத்தாலும் அவரை எதிர்த்துப் பேச யாரும் துணிவுடன் முன்வந்ததில்லை. அழகண்ணலும் ஓரளவு ஒதுங்கியே இருந்தார். உத்திராதிப் படையாச்சியிடம் அழகண்ணலுக்கு விரோதம் ஏற்பட்டதற்குக் காரணம் இலக்கிய சம்பந்தமானது. உத்திராதிப் படையாச்சி தமிழில் நல்ல ஞானம் படைத்தவர். இலக்கண முறையாக இலக்கியம் பயின்றவர். அப்பேர்ப்பட்டவருக்குக் கம்பராமாயணத்தில் ஈடுபாடு உண்டாகிப் பிரசங்கத்தில் வந்து முடிந்தது. ஆனால் அழகண்ணலோ கம்பரை இராமகாதை கூறும் ஆரிய அடிமை என்று எண்ணி வந்ததால், கம்பனை வெறுத்ததன்றிக் கம்ப காவியத்தைப் படித்து வந்த உத்திராதிப் படையாச்சியையும் அறவே வெறுத்தார். வெறுப்பைக் காட்டுவதில் உத்திராதிப் படையாச்சியும் சிறிதும் சளைத்தவரல்லர். தாம் கம்பராமாயணத்தைப் பிரசங்கம் செய்யும் நேரத்தில் அழகண்ணல் தம் வீட்டுப் பக்கமிருக்கும் தெருவில் போய்க்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டால் உத்திராதிப் படையாச்சி இரைந்த குரலில் கம்பராமாயணப் பாடல்களைப்

பாடுவார். அவர் சத்தம் ஓங்க ஓங்க அழகண்ணலுக்கு அவரிடமிருந்த வெறுப்பும் ஓங்கி வந்தது. உத்திராதிக்கும் அழகண்ணலிடம் வெறுப்பு வளர்ந்ததால் வாரம் இருமுறை நடத்தி வந்த கம்பராமாயணப் பிரசங்கத்தை வாயில் திண்ணைக்கும் கொண்டுவந்து விட்டார். இரவு சாப்பிட்டானதும் சுமார் ஒன்பது மணிக்கு வாயில் திண்ணையில் குத்துவிளக்கைக் கொண்டு தொடங்கும் உபந்நியாசத்தை இரவு பதினொரு மணிவரையில் நடத்தினார். உபந்நியாசத்துக்கு நாலைந்து சிகையற்ற பாட்டிகள் மாத்திரமின்றி, சிவன் கோயில் குருக்களையாவும் வருவார்கள். உபந்நியாசம் ஆரம்பித்த சில விநாடிகளுக்கெல்லாம் குருக்கள் திண்ணையிலிருந்த தூணில் சாய்ந்து கண்களை மூடிக்கொள்வார். அவர் உபந்நியாசத்தை ரசித்து அகக்கண்ணில் ராமனைக் காணவே புறக்கண்களை மூடிக்கொண்டிருப்பதாக நினைக்கும் உத்திராதிப் படையாச்சி கம்பராமாயணப் பாக்களை உரத்த குரலில் ஓதுவார். இடி இடித்தாலே அசையாத குருக்களின் உறக்கம் படையாச்சியின் உரத்த குரலுக்கா அசைந்துவிடும்?

செண்பகத் தோட்டத்தின் கிராமத்தில் இன்னும் எத்தனையோ விசித்திர மனிதர்கள். எந்த நகை செய்யும் போதும் பொன்னைச் சுவீகரிக்கும் துரைசாமி பத்தர், மாரியம்மன் கோயில் திண்ணைப் பள்ளிக்கூட வாத்தியாரய்யா, உடுக்கடிப்பதிலும் ஆவேசம் வந்து ஆடுவதிலும் வேப்ப மரத்திலிருந்து இலையைப் பிடிப்பிடியாகத் தின்பதிலும் பெயர் பெற்ற பூசாரி பொன்னம்பலம், இப்படியாகப் பலபேர். பரம்பரையாகப் பலவிதமாக வந்த பழக்கவழக்கங்களில் சிக்கி உழன்று கொண்டிருந்த செண்பகத் தோட்டக் கிராமவாசிகளுக் கிடையிலும், புதிதாக வந்துள்ள வராஹாச்சாரி போன்ற பெரிய மனிதர்களுக்கிடையிலும் இந்த நாகரிக வாலிபன் எப்படி காலத்தை ஓட்டுவான் என்பதை நினைத்துப் பார்த்து வெகு நேரம் நின்றுவிட்ட மோகனாவைப் பார்த்து ஆச்சரியப்பட்ட

மாரிமுத்து, ''என்ன கொளந்தை! அப்படியே கல்லுப்போல நிண்ணுட்டே?'' என்று கேட்டான்.

''ஒண்ணுமில்லை, மாரிமுத்து! நீ வயலுக்குப்போ'' என்று விடை கொடுத்துவிட்டுக் கோலத்தைப் பூர்த்தி செய்யக் குனிந்தாள் மோகனா. எத்தனை நேரம் அவள் கோலம் போட்டிருப்பாளோ தெரியாது, நினைவுச் சுழலிலே நீந்திக் கிடந்த அவளை ''அம்மா! உங்களைத்தானே'' என்ற குரல் சட்டென்று நிமிர வைத்தது. சற்று முன்பாகக் காரைத் தள்ளிச் சென்ற அந்த மாடி வீட்டு முதலாளி அவள் முன்னே நின்றுகொண்டிருந்தான்.

3. அத்தையம்மாளின் உத்தரவு

திடும்பிரவேசமாய்த் தன் எதிரில் வந்து நின்ற அந்த வாலிபனை ஒருகணம் ஏறெடுத்துப் பார்த்த மோகனா அடுத்த விநாடி வெட்கத்தால் கண்களைத் தரையில் சாய்த்துக் கொண்டு, சற்று விலகியிருந்த தாவணியையும் இழுத்துப் போர்த்திக் கொண்டு இரண்டடி பக்கவாட்டில் எடுத்து வைத்துக் கோலம் போட்ட இடத்தை விட்டுக் கொஞ்சம் தள்ளி நின்றாள். மீண்டும் அவள் புறக் கண்களுக்கு அவன் முகத்தை நோக்கும் துணிவில்லையே தவிர, அகக் கண்கள் அந்த வாலிபனின் தோற்றத்தை எடை போட்டுக்கொண்டிருந்தன. விநாடி நேரம் கண்கள் பார்த்த மாத்திரத்திலேயே அந்த வாலிபனுடைய தோற்றம் முழுவதையும் தீர்மானிக்கக் கூடிய அத்தனை திறன் தனக்கு எப்படி வந்தது என்று மோகனா தனக்குள்ளேயே ஆச்சரியப்பட்டுக் கொண்டாள்.

அவள் எதிரே நின்ற அந்த வாலிபனுக்கு வயது இருபத்துஐந்துக்கு மேலிராது. உயரமான, ஒல்லியான, கம்பீரமான சரீரத்தைப் படைத்த அவன் மாநிறந்தான்.

இருந்தாலும் முகத்திலிருந்த களை, நிறக் குறைவைப் பெரிதும் ஈடுபடுத்தியிருந்தது. விசாலமான அவன் கண்கள் பார்ப்பதற்கு மிக அழகாயிருந்தாலும் அவற்றில் ஏதோ ஒரு சோகம் மட்டும் தொக்கி நின்றது. அவன் கிராப்பை வெட்டிச் சிறிது நாட்கள் ஆகியிருந்தபடியால் மயிர் சற்று அதிகமாக வளர்ந்திருந்தது. அப்படியிருந்தும் அவன் முகம் சில சினிமா நாடகக் காரர்களைப் போல் மட்டமாயிராமல் பார்ப்பதற்குக் கண்யமாகவே இருந்தது. பெரிய குடியில் பிறந்தவன் என்பது அவன் முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. அவன் அணிந்திருந்த உடைகள் பெரிய குடியில் பிறந்தவனானாலும் அந்தச் சமயத்தில் அவன் மிகவும் ஏழ்மை நிலையை அடைந்திருந்தான் என்பதை நிரூபித்தன. அவன் மேலே போட்டுக்கொண்டிருந்த ஷர்ட் நன்றாகத் தைக்கப் பட்டிருந்தாலும் தோள் பட்டையில் சற்றுக் கிழிந்து சிறிது ஒட்டும் போடப்பட்டிருந்தது. கால் நிஜார் நல்ல ரெட்டுப் போன்ற முரட்டுத் துணியில் தைக்கப்பட்டிருந்ததைப் பார்த்த மோகனா துணியின் விலையும் கஜம் முக்கால் ரூபாய்க்கு மேலிருக்க முடியாது என்பதைத் தீர்மானித்துக் கொண்டாள். அவன் பூட்சும் நல்ல சர்வீஸைக் கண்டு ரிடையராகும் ஸ்திதியில் இருந்தது. அந்தப் பழைய பூட்ஸைச் செண்பகத் தோட்டத்துச் சேறும் நன்றாகப் பதம் பார்த்திருந்த படியால் ஓரங்களிலெல்லாம் சேறு ஒட்டி, பூட்ஸ் பார்ப்பதற்கு மகா கோரமாயிருந்தது. அந்தச் சேறு நிஜாரையும் கவனித்துவிடப் போகிறதே என்ற அச்சத்தால் அந்த வாலிபன் நிஜாரின் அடிப்பாகத்தை இரண்டு மூன்று தடவை மடித்து மேலுக்காக உயர்த்தியிருந்தான். அந்த மடிப்புக்கும் பூட்ஸுக்கும் இடையிலே தெரிந்த அவன் கால்கள் ஒல்லியாயிருந்தாலும் மிக உறுதியாகப் பலமாக இருப்பதை மோகனா கவனித்தாள்.

இதையெல்லாம் மனத்திற்குள் ஆராய்ந்து எடை போட்ட மோகனா, 'எதற்காக இத்தனை தூரம் ஒரு புருஷனை அலசுகிறோம்' என்று எண்ணிப் பார்த்ததால் ஓரளவு வெட்கமும்

கொண்டவளாய்க் கையிலிருந்த கோலப்பொடி மரவையை இடது கையால் இறுக்கிப் பிடித்தும் வலது கை விரல்களால் கோலப்பொடியை நிமிண்டி அளைந்தும் நாணத்தால் இம்சைப் பட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் அப்படி நாணி ஒதுங்கி நிற்பதைப் பார்த்த வாலிபன் பெரிதும் ஆச்சரியப்பட்டான். அந்த அழகியைப் பார்த்ததும் அவளுடன் பேச்சுக் கொடுக்கலாமா கூடாதா என்று ஒரு நிமிஷம் தத்தளித்த அவன், அவளுடைய நாகரிக உடைகளைக் கண்டு அவள் முழுவதும் பட்டிக்காடு அல்லவென்று தீர்மானித்துக் கொண்டு அவளை அணுகினான். மோகனா கட்டிய மெல்லிய சிற்றாடை கோலத்தில், புரளாதிருப்பதற்காக ஒதுக்கப் பட்டிருந்த படியால் உள்ளேயிருந்த வெள்ளை உள்பாவாடை, உதடுகள் அசைந்தால் தோன்றும் வெண்பற்களென லேசாக வெளியே எட்டிப் பார்த்து நகைத்தது. தாவணி விலகித் தொங்கிய சமயத்தில் மெல்லிய ரவிக்கைக்குள் நாடாக்களைப்போல் தெரிந்த வெண் பட்டைகள் இரண்டு உள்ளே 'பாடி' இருக்கும் உண்மையையும் வெளிப்படுத்தின. தலையில் கருமயிர் களுக்கிடையில் அவள் செருகியிருந்த ஸ்லைடுகள் நாகரிகத்தின் உச்சியைக் காட்டின. இவற்றையெல்லாம் கவனித்த அந்த வாலிபன், 'அப்பா! பட்டணத்தைவிட கிராமங்களில் நவநாகரிகம் எத்தனை துரிதமாகப் பரவுகிறது!'' என்று தனக்குள் ஆச்சரியப் பட்டுக் கொண்டான். இத்தகைய நாகரிகப் பெண் தன்னைக் கண்டதும் எழுந்து நாணி அகன்று நின்றது அவன் ஆச்சரியத்தை அதிகப்படுத்தியது. 'நாகரிகத்துக்கும் நாணத்துக் கும் வெகு தூரமாயிற்றே? என்று யோசித்தான் அந்த வாலிபன். அவளது நாகரிகத்துக்குக் காரணம் மட்டும் அவன் புரிந்து கொண்டிருந்தால் அவ்வளவு ஆச்சரியத்துக்கு அவசியமே இருக்காது.

பலவகைச் சிந்தனைகளால் அலைக்கழிக்கப்பட்டு அந்த வாலிபன் சற்றுநேரம் மௌனமாக நின்றுவிட்டுப் பிறகு

பேச்சைத் தொடங்கி, ''இதுதானே சிவசங்கரம்பிள்ளை வீடு?'' என்று கேட்டான்.

மோகனா பதில் சொல்லவில்லை. 'ஆம்' என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள்.

''அவர் இருக்கிறாரா?'' என்று மீண்டும் கேட்டான் வாலிபன்.

''இல்லை'' என்று மெள்ளப் பதில் சொன்னாள் மோகனா, சற்றுத் துணியை வரவழைத்துக்கொண்டு.

''எங்கே போயிருக்கிறார்?''

''அறுவடைக்கு ஆட்களை அனுப்ப அசனக்குடிக்குப் போயிருக்கிறார்.''

''வீட்டில் வேறு யாருமில்லையா?''

''இல்லை.''

''நீங்களும் உங்கள் தந்தையும் மட்டுந்தான் இருக்கிறீர்களா? தாயார்.....?''

இந்தக் கேள்விக்கு அவள் பதில் சொல்லவில்லையே தவிர, அவள் முகத்தில் தோன்றிய விசனக் குறியிலிருந்து பதிலை ஊகித்துக் கொண்ட வாலிபன். ''ஓகோ! அப்படியா! மன்னிக்க வேண்டும்; தெரியாமல் கேட்டு விட்டேன். சரி, நான் வருகிறேன்'' என்று சொல்லிக்கொண்டு திரும்ப முயன்றான். ''மோகனா! யாரம்மா அது?'' என்ற குரல் சட்டென்று அவனை நிற்கவைத்தது.

வீட்டுக்குப் பக்கத்திலிருந்த ஆடு தொடா (ஆடா துடை என்று தற்காலத்தில் அழைக்கப்படுகிறது) இலைச் செடிகளின் மறைவிலிருந்து நடுத்தர வயதுள்ள ஓர் அம்மாள் இடுப்பில் பூர்ணமாக நீருள்ள செப்புக் குடத்துடனும் ஈரப்புடவையுடனும் வெளிவந்தாள்.

''யாருமில்லை. அத்தை இவங்கதான் அந்த மாடி வீட்டை வாங்கியிருக்காங்கன்னு மாரிமுத்து சொன்னான்'' என்றாள் மோகனா.

''அடடே! அதற்குள் என்னைப்பற்றிய தகவல் கிராமத்தில் பரவிவிட்டதா?'' என்று வின வினான் அந்த வாலிபன்.

''கிராமத்தில் நியூஸ் பேப்பர் ஏது தம்பி? அதனால் ஜனங்களே நியூஸ் பேப்பர்தான். வம்பு, கிராமத்திலே பரவுகிற வேகத்தில் பட்டணத்தில் பரவாது'' என்ற அத்தையம்மாள், ''அடடே! சொட்டச் சொட்ட நின்னுக்கிட்டுப் பேசறேனே'' என்று கொஞ்சம் மேலாடையை இழுத்து விட்டுக் கொண்டாள்.

அத்தனைக்கும் அந்தப் பாழும் துண்டம் அத்தையம்மாளின் பாதி உடலைக்கூட மறைக்க மறுத்தது. நாலரை முழத்துக்கு மேலிருந்த அந்தப் பெருந்துண்டம் அத்தையம்மாளின் செழுமையான உடலில் நன்றாக வளைத்துச் சுற்றப்பட்டிருந்தாலும், இடுப்புச் சுற்றளவு இரண்டரை அடிக்கு மேலிருந்ததால் மேல் பக்கத்துக்கு முழுதும் போதாமல் யௌவன காலத்தில் மிக அழகாயிருந்த அவயவங்களை முழுதும் மறைக்கச் சக்தியற்று அரையும் குறையுமாகத் தன்பணியைச் செய்து கொண்டிருந்தது. அத்தையம்மாள் எவ்வளவோ சிரமப்பட்டு அந்தத் துண்டத்தை இடுப்பில் சுற்றி நுனியை இறுக்கச் செருகியிருந்தாள். மேல் துண்டைத்தை அகல விரித்துப் போர்த்தி மற்றொரு நுனியைக் கழுத்தை வளைத்துச் சுற்றி இழுத்து விட்டிருந்தாள். ஆனால், மனித முயற்சியெல்லாம் பலிக்கிறதா?

துண்டம் செய்த சக்தியாக்கிரகத்துக்கு இடுப்பிலிருந்த குடமும் உதவியாயிருந்தது. தளும்பித் தளும்பி அது தெளித்துவிட்ட தண்ணீர் அத்தையம்மாளின் இடது இடுப்பை அடியோடு நனைத்து விட்டிருந்தது. இவற்றால் ஏற்பட்ட அநீதிகளை வயதேறிய காரணத்தால் அறவே அலட்சியம் செய்த அத்தையம்மாள், அந்த ஈரத் துண்டத்துடனும் பாதி தெரிந்த

உடலுடனும் தாஷ்டீகமாக நின்று, மேலாடையைப் பாவனைக்கு இழுத்துவிட்டுக்கொண்டு, ''ஏன் தம்பி நிக்கறே? வந்து திண்ணை மேலே உட்காரேன்'' என்று அவனுக்கு அழைப்பு விடுத்து, ''ஏட்டி! மோகனா! தம்பிக்கு உள்ளாற இருந்து ஒரு பாயைக் கொண்டாந்து போடு'' என்று மருமகளைப் பார்த்து உத்தரவிட்டாள்.

மோகனா இதுதான் சாக்கென்று உள்ளே ஓடப் பார்த்தாள். ஆனால், அந்த வாலிபன் அவளைத் தடுத்து, ''வேண்டாம்; நான் உட்கார வரலை'' என்றான்.

''என்ன தம்பி? ஊருக்குப் புதுசு; வீடு தேடி வந்திருக்கே. உட்காராதே போகலாமா?'' என்றாள் அத்தையம்மாள், பரிவாக.

''அப்புறம் சாவகாசமாக வர்ரேன். இப்போது ஓர் உதவிக்காகத்தான் இங்கே வந்தேன்'' என்றான் வாலிபன்.

''எது வேணாலும் கேளு தம்பி! இல்லேன்னு சொல்ற பழக்கம் இந்த வீட்டிலே இல்லை'' என்றாள் அத்தையம்மாள்.

''இரண்டு தாம்புக் கயிறு வேணும்.''

''எதுக்குத் தாம்புக் கயிறு?''

மோகனா 'களுக்' கென்று சிரித்தாள். ''ஏட்டி என்னா இது? ஏதுக்குச் சிரிக்கிறே?'' என்று அதட்டினாள் அத்தையம்மாள்.

''இல்லே அத்தே! அவங்க கார் அங்கே நின்னு போயிட்டுது. தள்ளிப் பார்த்தாங்க... ...'' என்ற மோகனாவின் பேச்சை மீறி, ''முடியலை; அதுக்காகத்தான் காரைக் கட்டி இழுக்கலாமுன்னு தாம்புக் கயிறு கேட்டேன்'' என்றான் வாலிபன்.

''ஏட்டி மோகனா! இத்தனை வயசாயும் உன் குறும்பு போகலையே. தம்பி கஷ்டப்பட்டான்னா பார்த்துச் சிரிக்கலாமா?'' என்று அத்தையம்மாள் கண்டித்தாள்.

''அது சகஜந்தாம்மா! ஓடுகிற வரையிலுந்தான் காருக்கு மதிப்பு. நின்னு தள்ளினா கேலிதான். படாடோபமான

வஸ்துக்கள் எல்லாமே இப்படித்தான். ஒழுங்காயிருந்தால் மதிப்பு; ஒழுங்கு கெட்டால் ஊருக்கு நகைப்பு'' என்றான் அந்த வாலிபன்.

இவன் பதிலைக் கேட்ட அத்தையம்மாள் புன்முறுவல் செய்தாள். அவன் பதிலில் அடங்கியிருந்த புத்திசாலித் தனத்தையும் நொடிப் பொழுதில் புரிந்து கொண்டு, ''தம்பி! நீ நல்லாப் பேசறையே!'' என்றாள்.

''மற்றதெல்லாம் பூஜ்யம். அதைப் பேச்சால் சரிப்படுத்திக் கொள்கிறேன்'' என்றான் வாலிபன்.

''சரி தம்பி! உன்னை அதிக நேரம் நிக்க வச்சுட்டேன். மோகனா! தம்பியைப் பின் பக்கம் மாட்டுக் கொட்டகைக்கு அழைச்சுக்கிட்டுப் போய்க் கொட்டகையிலே பனை வாரை இருக்கு பாரு, அதுலே தாம்புக் கயிறு இருக்கு; எடுத்துக் கொடு'' என்று சொல்லிவிட்டு அத்தையம்மாள் உள்ளே சென்றாள்.

மோகனா, 'என்னுடன் வாருங்கள்' என்பதற்கு அடையாளமாக ஒரு கடைக்கண் அம்பை அந்த வாலிபன்மீது வீசி விட்டு, ஆடு தொடா இலைச் செடிகள் பக்கமாக நடந்து கொல்லைப்புறம் சென்றாள்.

சிவசங்கரம்பிள்ளை மாட்டுக் கொட்டகையைப் பெரிதாகப் போட்டிருந்தார். அதன் உத்திரத்திலிருந்த தாம்புக் கயிறுகளை எடுக்கக் கையை நீட்டினாள் மோகனா. எட்டாததால் ஒரு குதி குதித்துக் கயிற்றைப் பிடித்து இழுத்தாள். அத்தனை கயிறுகளும் தலையில் விழுந்து உடலைச் சுற்றிக் கொண்டன. கயிறுகளுக்கிடையில் சிக்கி அவற்றை எடுக்க முடியாமல் தத்தளித்த மோகனாவின் உதவிக்கு வந்த வாலிபன், அவள் தோளை ஒரு கையால் லேசாகப் பிடித்துக் கழுத்தில் மாட்டியிருந்த கயிற்றை லாவகமாகப் பிரித்தான். மோகனா பலவித உணர்ச்சிகளால் தத்தளித்தாள். முதன் முதலாக ஏற்பட்ட அந்த புருஷ ஸ்பர்சம் அவள் உடலில் எண்ணற்ற இன்ப அலைகளைப் பாய்ச்சிச் சென்றது.

4. அவன் வாழ்வில் ஒரு மர்மம்

கொட்டகையின் குறுக்கு வாரையிலிருந்து சரசரவென விழுந்து மோகனாவின் பூவுடலைச் சுற்றிக் கொண்ட தாம்புக் கயிற்றை மிகச் சாமர்த்தியமாகப் பிரித்து எடுத்தான் அந்த நாகரிக வாலிபன். அவசியத்தை முன்னிட்டுத் தன் தோளை அவன் தொட நேரிட்டாலும் உடலின் வேறு எந்த இடங்களிலும் கை படாமல் என்ன கண்ணியமாக அவன் அந்தக் கயிற்றைப் பிரித்து எடுத்தான் என்பதை நினைத்துப் பார்த்த மோகனாவின் இதயத்தில், அவனைப்பற்றிய மதிப்பு முன்னைவிடப் பதின்மடங்காயிற்று. அப்படி மதிப்பு உயர்ந்ததாலும் அத்தகைய ஒரு நல்ல வாலிபன் மாடி வீட்டின் விவகாரம் தெரியாமல் வாங்கிவிட்டானே என்ற பரிதாபத்தாலும் ஆரம்பத்தில் நாணிக்கோணி அவஸ்தைப்பட்ட மோகனா, கயிற்றைப் பிரித்தெடுத்தபின் அவன் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்னதோடு நில்லாமல், மாடி வீட்டைப் பற்றியும் ஓரளவு எச்சரித்தாள்.

மெல்ல மெல்லக் கயிற்றின் பிணைப்பிலிருந்து அவளை நீக்கிவிட்ட வாலிபன், ''கைக்கெட்டாததற்கு நீங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டாம். நானே எடுத்திருப்பேன்!'' என்றான், சிரித்துக்கொண்டே.

மோகனாவும் நன்றாக விஷமமாகப் பேசக்கூடியவள் தான். 'கைக்கெட்டாததை அடைவதில்தான் இன்பமிருக்கிறது' என்று பதில் சொல்ல அவள் உள்ளம் துடித்தது. ஆனால், நாணம் தடைப்படுத்தியதால் அந்தப் பதிலைச் சொல்லாமல், ''நல்ல உயரமாயிருப்பவர்கள் பின்னால் 'நான் செய்திருப்பேனே' என்று சொல்வதைவிட முன்னாடியே செய்திருந்தால் இந்தக் கஷ்டத்தைத் தவிர்த்திருக்கலாம்'' என்றாள்.

''தவறுதான். ஆனால், தவறு பூராவும் என் மேலில்லை'' என்றான் வாலிபன்.

''உங்கள் மேல் இல்லையா? பின் யார்மேல்?''

''உங்களுக்கும் அதில் பங்கு உண்டு.''

''நீங்கள் சொல்லுகிறது புரியவில்லையே.''

''நீங்கள் கயிறு எடுக்க முனைந்ததை நான் கவனிக்க வில்லையே.''

''ஏனாம்?''

''உங்களையே பார்த்துக்கிட்டிருந்தேன்.''

இதைக் கேட்ட மோகனாவின் கண்களில் சராலெனக் கோபம் உதயமாவதைக் கண்ட வாலிபன். ''தவறாக நினைக்கக்கூடாது. நான் இந்த ஊருக்கு வந்து சேருமுன்பே உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டேன்'' என்று இழுத்தான்.

அதுவரை தரையிலும் பக்கவாட்டிலும் சஞ்சரித்து கொண்டிருந்த மோகனாவின் அழகிய கண்கள் அவனை ஏறெடுத்து நோக்கின, 'பார்வைக்குக் கண்ணியமாயிருக்கும் இவன் ஒருவேளை சுத்தக் காலியாயிருப்பானோ' என்ற சந்தேகமும் அவள் மனத்தில் எழுந்தது. எத்தனையோ காலிகள் நவநாகரிக உடைக்குள் மறைந்திருப்பதை அவள் பள்ளிக் கூடத்தில் படித்த நாட்களில் பார்த்திருக்கிறாள். அத்தையம்மாளுடன் தங்கிக் கான்வெண்டில் படித்த நாட்களில் நிஜார் போட்ட எத்தனை நாகரிகப் பையன்கள் தன்னைப் பார்த்துச் சிரித்துச் சீட்டியடித்திருக்கிறார்கள். அப்பொழுது எல்லாம் அவர்கள் முகத்தில்தான் எத்தனை அசட்டுக்களை! பூட்ஸையும் சராயையும் அணிந்திருந்த அந்தக் காலிகளின் நடையில் எத்தனை தளர்ச்சி! முகங்கள் எத்தனை கேவலம்! இதையெல்லாம் நினைத்துப் பார்த்த அவள், இந்தப் பட்டணத்துச் சீமானும் அந்த ரகந்தானா என்று நினைத்தாள்.

அவள் எண்ணங்களைப் பூராவும் அறிந்துகொண்ட வனைப்போல் அந்த வாலிபன் சொன்னான்: ''மன்னிக்க

வேண்டும். நான் பேரளம் ஸ்டேஷனில் இறங்கி வருகிறேன். காரை முன்னதாகவே ஸ்டேஷனுக்கு அனுப்பியிருந்தேன். எனக்கு மாடிவீட்டை விற்றவருடைய ஏஜெண்டு ராமலிங்கமும் எங்களைப் பேரளத்திலேயே சந்தித்து என்னுடன் காரில்தான் வந்தார். அவர்தான் உங்களைப்பற்றியும் உங்கள் தந்தையைப் பற்றியும் சொன்னார்'' என்று விளக்கினான்.

''யார்? ராஜபார்ட் ராமலிங்கமா?'' என்று கேட்டாள் மோகனா.

''ராஜபார்ட்டா?''

''ஆமாம்! உக்கடைக் கூத்திலே அவர்தான் ராஜபார்ட் போடுவார். அதனால் அவரை இந்தப் பக்கத்திலே ராஜபார்ட் ராமலிங்கம்னு சொல்றாங்க.''

''அப்படியா? நடிகரா!''

''ஆமாம்; அவர் என்ன சொன்னார்?''

''உங்கப்பா பெரிய பணக்காரர்னு சொன்னார். அப்படியிருந்தாலும் நீங்க அப்படிச் சுத்தக் கர்நாடக மில்லேன்னும் சொன்னார்.''

''ஓஹோ!''

''ஆமாம்! உங்களை உங்க அத்தையம்மாதான் வளர்த்தாங்களாம். அத்தையம்மாளிடம் பட்டணத்திலே வளர்ந்ததாலே நல்ல 'அப்டுடேட்' பொண்ணுன்னு சொன்னார்.''

''நல்ல சர்ட்டிபிகேட்தான்'',

''நீங்க சமீபத்திலேதான் இந்தப் பட்டிக்காட்டுக்கு வந்து சேர்ந்ததாகவும், இருந்தாலும் பட்டணத்துப் பழக்கம் போகலேன்னும் சொன்னார்.''

''எந்தப் பழக்கம் போகலையாம்?''

''நீங்க சைக்கிள் விடுவிங்களாமே?''

''விடுவேன். விட்டா என்ன?''

''பட்டணத்திலே இந்தக் காலத்திலே பொம்பிளைங்க மோட்டார் விட்டாக்கூடத் திரும்பிப் பார்க்கிறவங்க கிடையாது. ஆனா, இந்தமாதிரிப் பட்டிக் காட்டுக்கு இதெல்லாம் புதிசுதானே?''

''அதனாலே?''

''கொஞ்சம் ஆட்சேபணையாப் பேசினார்''

''அதை நீங்க கேட்டுக்கிட்டு வந்தீங்களாக்கும்''.

''கேக்காமெ நான் என்ன செய்ய முடியும்? காரிலே உட்கார்ந்த நிமிஷத்திலிருந்து மனுஷன் இந்தக் கிராமத்தைப் பற்றிய சகல சமாசாரங்களையும் சொல்லிப் பிராணனை வாங்கிட்டானே.''

''நல்ல வேளை, வாங்கிய உசிரைத் திரும்ப எடுத்துக்கிட்டு வந்தீங்களே!''

''என்மேலே கோபிச்சுப் பயனில்லை. ஒரு மனுஷன் விடாமே பேசினா எப்படிக் கேக்காதிருக்கிறது? கேட்டேன். ஆனால், கேட்டதற்கும் பார்த்ததற்கும் மலைக்கும் மடுவுக்குமா யிருக்கு வித்தியாசம்.''

மோகனா இதற்குப் பதில் சொல்லவில்லை. மீண்டும் தரையை நோக்கினாள். வாலிபன் சொன்னான்; ''அவர் சொன்னதைப் பார்த்தா, நீங்க பெரிய பாஷனாயிருப்பீங்கன்னு நினைச்சேன். உடையைத் தவிர மத்ததெல்லாம் சாதாரணமாகத் தான் இருக்கு.''

''எதைச் சொல்றீங்க?'' மெள்ள எழுந்தது மோகனாவின் கேள்வி.

''நீங்க நடந்துக்கிற முறையும், அடக்கமும், பேச்சும்...''

''சரி, சரி; போதும். இத்தனை புகழ்ச்சி வேண்டாம். உங்க கயிறை எடுத்துக்குங்க. கார் காத்துக் கிடக்கு. எங்கே நின்னுதோ என்னமோ! பாவம் அந்த நாலு பேரும் எத்தனை நாழியா தள்ளுறாங்களோ?'' என்று சிரித்தாள் மோகனா.

காரைப்பற்றி இப்படிச் சொன்னதும் வாலிபனுக்குக் கோபம் வந்தது.

''அந்தக்கார் பழைய மாடல் போர்டு தெரியுமா?'' என்றான்.

''என்ன! தள்ளுமாடல் போர்டா?''

''உங்களுக்குக் கேலியாயிருக்கலாம். இப்ப வர்ர மோட்டாருக்கெல்லாம் இந்த மாதிரி எஞ்சின் கிடையாது; ஆமாம்!''

''தாத்தா பேசற மாதிரிப் பேசறீங்களே.''

''என்ன!''

''ஆமாம் வயசானவங்க பழைய சாமானையெல்லாம் பெருமையாய்ப் பேசறது வழக்கம். கார் நகரலே, தள்றதுக்கு நாலு ஆள் தேவையாயிருக்கு. கட்டியிழுக்க தாம்பக் கயிறுக்கு வந்திருக்கீங்க. எஞ்சின் பஸ்ட்கிளாஸாம். பஸ்ட்கிளாஸாக இருந்தால் ஏன் ஸார் வண்டியை இழுக்கலே?'' என்று மோகனா மிகக் குறும்பாகக் கேட்டாள்.

''எஞ்சின் நிற்கிறது எந்தக் காருக்கும் சகஜம்'' என்றான் வாலிபன்.

''உங்க காருக்கு ரொம்ப சகஜம் போலேயிருக்கு!'' என்று சொல்லி அவள் புன்முறுவல் செய்தாள்.

அந்த வாலிபனும் கோபத்தை விட்டு நகைத்தான்.

''நல்ல வேளை! இந்த ஊரிலே நீங்க இருக்கீங்க'' என்றான்.

''அதிலென்ன விசேஷம்?'' என்றாள் அவள்.

''இந்த குக்கிராமத்திலே நாகரிகமாக யாரையாவது பார்க்க முடியுமோ என்று சந்தேகப்பட்டேன்'' என்றான் அவன்.

''அதற்கு இங்கே பஞ்சமேயில்லை. சினிமா நட்சத்திரங்கள் மாதிரி தலைமயிரை வெட்டிக்கொள்ளும் வாலிபர்கள் இருக்கிறார்கள். கிர்தா சீமான்கள் இருக்கிறார்கள். சினிமா நடிகைகள் மாதிரி கொண்டை போட்டு உடை அணியும் பெண்கள் ஏராளம். கிராமத்தில் புகுந்த அளவு நாகரிகம் வேறெங்கும் புகவில்லை. இந்த ஊர் குமாரசாமி கடையிலே புளியைவிடப் பவுடர் டப்பாவும், ஸ்னோவுந்தான் அதிக விற்பனை!'' என்று மோகனா சொன்னாள்.

''அந்த நாகரிகத்தை நான் சொல்லலை. உண்மையான நாகரிகத்தைப் பத்தித்தான் சொன்னேன். நாகரிகம் பண்பின் உயர்வைக் காட்டணும்; பவுடரின் செலவை அல்ல!'' என்றான் அந்த வாலிபன்.

அந்தச் சந்தர்ப்பத்தில் உள்ளேயிருந்து, ''ஏ குட்டி! மோகனா!'' என்று அழைக்கும் குரல் கேட்டது.

''இதோ வந்துட்டேன் அத்தை'' என்று கொட்டகை யிலிருந்தே கூச்சல் போட்ட மோகனா, ''உங்களை ஒரு கேள்வி கேட்கணும்; கேட்கலாமா?'' என்றாள் வாலிபனை நோக்கி.

'தாராளமாகக் கேளுங்க.'

''இத்தனை சொல்லி ஊரைப்பத்தியெல்லாம் கண்டபடி வம்பளந்தானே ராஜபார்ட் ராமலிங்கம், மாடிவீட்டுச் சமாசாரத்தைப் பத்தி மூச்சு விட்டானா?''

''அதைப்பத்தி என்ன சமாசாரம்?''

''அதை அவ்வளவு சுலபமா சொல்ல முடியாது. ஆனால், ஒரு விஷயம்; எந்தக் காரணத்தைக் கொண்டும் இரவிலே

மாடிக்குப் போகாதீங்க. என்ன சத்தங் கேட்டாலும் காதிலே வாங்கிக்காமே படுத்திடுங்க''.

வாலிபன் சற்று நேரம் யோசித்தான். பிறகு மெல்ல நகைத்தான். ''இதைப்பற்றி நான் பட்டணத்திலேயே கேள்விப்பட்டேன்'' என்றான்.

''அப்ப ஏன் வீட்டை வாங்கினீங்க?'' என்ற மோகனாவின் விழிகளில் ஆச்சரியமும் பரிதாபமும் கலந்து நின்றன.

''என்னை எந்தப் பிசாசும் ஒன்றும் செய்யமுடியாது''.

''ஏன்?'' அவனை ஏறெடுத்து நோக்கிய மோகனாவின் கண்களில் இந்தக் கேள்வியுடன் ஏக்கமும் துளிர்த்து நின்றது.

''அதைப்பற்றிக் கேட்காதீர்கள்!'' என்று சொல்லிய வாலிபன் உதடுகள் துடித்தன. விசனத்தின் சாயை அவன் முகத்தில் படர்ந்தது. மேற்கொண்டு ஏதும் பேசாமல், ''உங்கள் உதவிக்கு நன்றி'' என்று வெடுக்கென்று கூறிவிட்டுக் கீழே கிடந்த தாம்பக் கயிற்றைச் சுருட்டி எடுத்துக்கொண்டு விடுவிடு என வேகமாக நடந்து போய்விட்டான்.

அவன் போன திக்கையே பார்த்துக் கொண்டிருந்தாள் மோகனா. கொட்டகைக் கோடியில் கட்டப்பட்டிருந்த எருமைக் கன்றுக்குட்டி சற்றுக் கனைக்கவும் செய்தது. 'அந்தக் கேள்வியைக் கேட்டு அவனை ஏன் துன்புறுத்தினாய்? என்று கேட்கவே எருமைக் கன்றுக்குட்டி அப்படிக் கனைத்ததாகத் தோன்றியது மோகனாவுக்கு.

அந்த வாலிபன் வாழ்க்கையில் மிகவும் துக்ககரமான சம்பவம் ஏதோ ஏற்பட்டிருக்கிறது என்பதில் மட்டும் அவளுக்குச் சந்தேகமில்லை. அது என்னவாயிருக்கும் என்ற ஆராய்ச்சி யிலிறங்கியபடியே கொட்டகையின் கோடிக்குச் சென்று எருமைக் கன்றுக்குட்டியின் தலையில் ஒரு தட்டுத் தட்டிவிட்டு, வீட்டின் புழக்கடைத் கதவை நோக்கி மெல்ல நடந்தாள் சிவசங்கரம் பிள்ளையின் மகள்.

5. திருமணப் பேச்சு

மாடி வீட்டில் இரவு நேரத்தில் மாடிக்குப் போக வேண்டாம் என்று சொன்னதால் அந்த வாலிபன் நடவடிக்கைகளில் ஏற்பட்ட மாறுதல்களை நினைத்து நினைத்து ஏதும் புரியாமல் தீவிர யோசனையுடன் வீட்டிற்குள் நுழைந்த மோகனாவுக்கு அத்தையம்மாள் காப்பி சாப்பிடக் கூப்பிட்டது கூடக் காதில் விழுவில்லை. அந்த வாலிபன் வாழ்க்கையில் ஏதோ மர்மமான துக்ககரமான சம்பவம் நிகழ்ந்திருக்கிறது என்பது மட்டும் அவன் பேச்சிலிருந்தும் போக்கிலிருந்தும் புரிந்து கொண்ட மோகனா அது என்னவாயிருக்கும் என்பதை ஆராய்வதில் அன்று முழுவதுமே ஈடுபட்டிருந்தாள். அப்படிப் புத்தி எங்கேயோ சஞ்சரித்ததால் அன்று அத்தையம்மாள் இரண்டொருமுறை கடிந்து கொள்ளும்படியான நிலைமையும் ஏற்பட்டது.

''ஏ குட்டி மோகனா, உன்னைத்தானே! காப்பி ஆறிப் போகுது, வாடி'' என்றாள் அத்தையம்மாள், மோகனா அன்று காலை உள்ளே வந்ததும்.

மோகனாவுக்கு அத்தையம்மாள் அழைத்தது உடனே காதில் விழுவில்லையாதலால் அவள் பதில் சொல்லவில்லை. ''உன்னைத்தானே மோகனா! என்ன, காது செவிடாப் போயிடுச்சா?'' என்று கடுப்பாகக் கூப்பிட்டாள்.

அப்பொழுதுதான் விழித்துக்கொண்ட மோகனா, ''இதோ வர்றேன் அத்தே'' என்று சொல்லிக்கொண்டு உள்ளே சென்றாள், கிழக்குளத்தில் குழைவு மண்ணைப் போட்டு அத்தையம்மாள் பளபளவென்று துலக்கியிருந்த பூனா டபரா டம்ளரில் காப்பி பிரமாதமாய்ப் புகைந்து கொண்டிருந்தது. எங்கோ நினைவுடன் காப்பியை ஓர் ஆற்று ஆற்றிச் சாப்பிட்ட மோகனா காப்பியில்

கொஞ்சம் மேலாடையில் சிந்திக் கொண்டாள். அதற்கும் அத்தையம்மாள் கடிந்து கொண்டு, ''ஏட்டி குட்டி! எங்கேடி யோசனை? இப்படியே வளர்ந்தா புருஷன் வீட்டுக்குப் போய் எப்படிக் குப்பை கொட்டறதா உத்தேசம்?'' என்று சொல்லி விட்டு, ''சரி சரி, போய் சமையலுக்கு அரிசியைப் பொறுக்கு'' என்று உத்தரவும் இட்டாள்.

சாணியைப் போட்டு நன்றாக மெழுகப்பட்டிருந்த முறத்தில் அன்றையச்சமையலுக்கு வேண்டிய அரிசியை அரிசிப் பானையில் இருந்து அளந்து கொட்டிக் கொண்டு மோகனா வாயிலுக்குச் சென்றாள். சாதாரணமாக முற்றத்து முகப்பில் உட்கார்ந்து அரிசி பொறுக்கும் மோகனா எதற்காக வாசலுக்குப் போகிறாள் என்பது அத்தையம்மாளுக்கு விந்தையாக இருந்தாலும் அதைப்பற்றி அவள் ஏதும் கேட்கவில்லை. வாசலுக்குச் சென்ற மோகனா முறத்தில் இருந்த அரிசியைப் பொறுக்கியபடியே தூரத்தே கயிறு கட்டி இழுக்கப்பட்டுக் கொண்டிருந்த அந்த பழைய மாடல் போர்டு காரைக் கவனித்துக் கொண்டிருந்தாள். கவனம் காரின் மேல் இருந்தபடியால் ஓரிரு முறை முறத்தில் இருந்த அரிசியிலிருந்து நெல்லையும், கல்லையும் பொறுக்கி எறிவதற்குப் பதில் அரிசி மணிகளைப் பொறுக்கி எறிந்துவிட்டாள்!

தூரத்தே தள்ளப்பட்டுக் கொண்டிருந்த கார் அவள் கவனத்தைப் பூராவும் கவர்ந்து நின்றது. அதைவிட அதைப் பின்பக்கத்திலிருந்து ஆட்களோடு தானும் ஓர் ஆளாகத் தள்ளிக்கொண்டிருந்த மாடிவீட்டு வாலிபன் அவள் கருத்தைக் கவர்ந்து நின்றான், முன்னே இருவர் தாம்புக் கயிற்றைக் கட்டிக் காரை இழுத்துச் சென்றார்கள். பின்னால் மூவர் பிடித்துத் தள்ளிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் நிஜார் போட்டுக்கொண்டிருந்த வாலிபன் மிகவும் நன்றாகத் தள்ளினான்.

அந்தக் காட்சியைக் கண்ட மோகனாவுக்கு, துக்கத்தோடு துக்கமாக,

"முன்னே கடிவாளம் மூன்றுபேர்
தொட்டிழுக்க,
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள..."

என்ற காளமேகப் புலவரின் பாட்டொன்றும் நினைவுக்கு வரவே, அவள் உதடுகளில் புன்னகை ஒன்றும் அரும்பியது. இத்தகைய நினைப்புக்கள் ஏதேதோ உண்டானதால் உள்ளம் நெகிழ்ந்தும் மலர்ந்தும் நின்ற மோகனாவின் சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்துடன் மோட்டார் மெல்ல அவள் கண்களில் இருந்து மறைந்தது. மாடிவீட்டின் வாசல் கேட்டு திறக்கப் பட்டதையும், கார் அதற்குள் நுழைந்து விட்டதையும் பார்த்த மோகனாவிற்கு அதற்கு மேல் திண்ணையில் வேலையில்லைதான். இருப்பினும் அந்த இடத்திலேயே நின்று அரிசியில் கையளைந்த வண்ணம் இருந்தாள். இருமுறை அவளை உள்ளே அழைத்தும் பதிலேதும் வராததால் வெளியே வந்த அத்தையம்மாள், "ஏ குட்டி, உலை கொதிக்குது. இங்கு என்னதான் செய்து கிட்டிருக்கே?" என்று அதட்டலுடன் கேட்டாள். அத்துடன் கீழே கிடந்த அரிசி மணிகளையும் பார்த்து ஏ குட்டி என்ன இது?' என்றும் வினவினாள்.

"எது அத்தே?" என்று கனவிலிருந்து விழித்தவள் போல் கேட்டாள் மோகனா.

"உன்னைக் கல்லையும் நெல்லையும் பொறுக்கி எறியச் சொன்னேனா? அரிசியை இறைக்கச் சொன்னேனா?'; என்றாள் அத்தையம்மாள்.

மோகனா கீழே விழுந்திருந்த அரிசி மணிகளைப் பார்த்துப் பிறகு அத்தையம்மாளையும் பார்த்து, "இல்லை அத்தே..." என்று ஏதோ சொல்லப் போனாள்.

''என்ன இல்லை?''

''நெல்லை. பொறுக்கும்போது...''

''உம்?''

''அரிசி ஒண்ணு ரெண்டு கீழே விழுந்தது.''

''ஒண்ணு ரெண்டா விழுந்திருக்கு? சரியா பாரு! அரிசினையத் தெளிச்சுவிட்ட மாதிரி இருக்கு. உன் அப்பன் பார்த்தான்னா நரசிம்மாவதாரம் எடுக்க மாட்டானா? பணத்தைக் கொட்டினா அவன் லட்சியம் செய்ய மாட்டான். அரிசினையச் சிந்தினா அவன் பிராணனே போயிட்ட மாதிரி கத்துவானே.''

மோகனாவுக்கும் அது தெரிந்தே இருந்தது. சிவசங்கரம் பிள்ளைக்கு பயிர் என்றால் உயிர். விளைபொருள்களே அவர் பொக்கிஷம். அரிசினையச் சிந்தினால் லட்சுமினையச் சிந்திவிட்ட மாதிரி என்று சண்டைக்கு வருவார். வேறு எதற்கும் கோபிக்காத பிள்ளை இந்த ஒரு விஷயத்தில் உக்கிர மூர்த்தியாக மாறுவார் என்பதை மோகனா நன்றாக உணர்ந்தே இருந்தாள். ஆகவே, அத்தையிடம் முறத்தைக் கொடுத்துவிட்டு, 'அரிசினையப் பொறுக்கிடறேன், அத்தே'' என்று உட்கார்ந்து பொறுக்க ஆரம்பித்தாள். அத்தை பெருமூச்சு விட்டுக் கொண்டு உள்ளே சென்றாள்.

பிற்பகலிலும் இதே கதிதான். அத்தையம்மாள், சீடைக்கு மாவு அரைக்க ஏந்திரத்தைப் பூட்டினாள். மருமகளையும் எதிரே உட்கார்த்தி ஒரு கை பிடிக்கச் சொன்னாள். மருமகள் அச்சில் கையை ஒப்புக்கு வைத்துக் கொண்டிருந்ததையும் அவள் கை அழுந்தாததையும் அவள் யோசனை எங்கோயிருப்பதையும் கண்ட அத்தையம்மாள் ஏந்திரத்தைத் தன் கை பலத்தாலேயே சுழற்றலானாள். அத்துடன் மருமகளுடைய போக்கின் காரணத்தையும் ஓரளவு ஊகித்துக்கொண்டாள். அந்த மாடி வீட்டு வாலிபன் வந்தது முதலாக மோகனா ஒரு நிலையில்

இல்லாததைக் கவனித்த அத்தையம்மாள் உள்ள நிலையைச் சற்று அதிகமாகவே அர்த்தம் செய்து கொண்டாள். பருவக் காலத்தின் துடிப்பை அத்தையம்மாளும் ஒரு காலத்தில் உணர்ந்திருந்த வளாகையால் மோகனாவின் மறதிக்கும் அந்த வேட்கைதான் காரணமாயிருக்கும் என்று நினைத்தாள். வயது வந்த பெண்ணைக் காலாகாலத்தில் கலியாணம் செய்து கொடுக்க வேண்டுமென்று எத்தனை சொல்லியும் தன் அண்ணன் கவனிக்காததன் விளைவு இது என்று தீர்மானித்தாள் செல்லத்தம்மாள். அன்று இந்த விஷயத்தை எப்படியும் பேசித்தீர்த்து விடுவது என்று தீர்மானித்துக்கொண்டு இரவில் பிள்ளையவர்கள் தமது கோரைப்பாயை விரித்துக் கொண்டு படுத்ததும் செல்லத்தம்மாள் தன் வியாபாரத்தை மெள்ளத் தொடங்கினாள்.

''ஏன் அண்ணா! தூங்கப் போறியா?'' என்றாள் அத்தையம்மாள்.

''இல்லை; முழிச்சுக்கிட்டிருக்கப் போகிறேன். ராவேளை பாரு'' என்றார் பிள்ளை.

''ராவேளையிலே உனக்குத் தூக்கம் வருது. பகலெல்லாம் உழைக்கிறே, ராவிலே தூங்கறே. வருத்தம் ஏதும் இல்லை பாரு.''

''வருத்தத்துக்கு நமக்கு என்ன இருக்கு? காலாகாலத்திலே மழை பெய்யலையா? நம்ம வயல் தரிசா கிடக்குதா? இல்லே தோட்டத்திலே கறிகாய்தான் காய்க்கலையா? இந்த வருஷம் காய்ப்புப் பிரமாதம்! அதைத்தவிர செல்லம்மா, கால் நடைகளும் கிராமத்திலே நல்லாப் பெருகிப் போச்சு. இந்த வருஷம் கால்நடை - கறிகாய்க் கண்காட்சியை இந்தக் கிராமத்திலேயே ஏற்பாடு செய்யலாம்னு இருக்கேன்.''

''செய்! செய்! அதிருக்கட்டும்; ஏன் அண்ணா, நீ வய வரப்பிலேயாவது தோட்டத்திலேயாவது படுத்துக்கறது தானே?''

''ஏன் செல்லம்?''

''உனக்குக் குழந்தை குட்டிகள் ஆடும், மாடும்தான். மீதிக்குக் கறிகாய் இருக்கும்; உனக்கு வீடுன்னு தனியா எதுக்கு?''

''எதுக்கு இந்தப் பீடிகை செல்லம்?''

''பீடிகை ஒண்ணுமில்லை. அங்கே போய் ஆட்டையும் மாட்டையும் வளர்க்கிறேங்கறியே; இங்கே ஒரு பொண்ணு வாட்டசாட்டமாக வளர்ந்து இருக்கே, அதைப்பத்தி யோசனையே இல்லையே உனக்கு?''

''என்ன யோசனை பண்ணணுங்கறே?''

''அதை எவன் கையிலாவது பிடிச்சுக் கொடுக்க வேணாமா? பெரிசான பொண்ணை வச்சுக்கிட்டு எத்தனை நாள் கட்டிக் காக்கறது?''

''அவளுக்கு ஒருத்தன் தானே வரான்?''

''ஆகாசத்திலேருந்து குதிப்பானா? நாம் பார்த்தாத்தானே உண்டு?''

''பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன்,''

''எங்கே பார்த்துக்கிட்டிருக்கே? வயலையும் தோட்டத்தையும் தான் நீ பார்க்கிறே!''

''இல்லை செல்லம்மா; நேத்திக்குக்கூட நம் ராமலிங்கத்துக்கிட்டே இதைப்பற்றிப் பேசிக்கிட்டிருந்தேன்.''

''யார், ராஜபார்ட் ராமலிங்கமா? அந்தக் கூத்தாடிப் பயகிட்ட என்ன பேச்சு குழந்தையைப் பத்தி?''

''அவனுக்கு ஒரு மகன் இருக்கான், தெரியுமில்லே?''

''தெரியும். மாயவரத்திலே படிக்கிறானாம்.''

''பய, இப்போ நல்லா வளர்ந்து ராஜா மாதிரி இருக்கான்.''

''படிச்சிருக்கானா?''

''எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சைக்கு இந்த வருஷம் போயிருக்கான்''.

''வயசு என்னப்பா?''

''இருபது இருபத்திரண்டு இருக்கும்''.

''ஓஹோ! பையன் நல்ல சூடிகைதான் போலிருக்கு. இருபத்திரண்டு வயசிலே எஸ்.எஸ்.எல்.ஸி. யை எட்டிப் பார்த்துட்டானா?''

''கேலி பண்ணாதே, செல்லம்மா, பரீட்சை சமயத்திலே பையன் இரண்டு மூணு கிளாசிலே சுரமாப் படுத்துட்டானாம்''

''பையனுக்குப் பரீட்சையை நெனச்சா சுரம் வந்துடும் போலிருக்கு!''

தமது தங்கையின் பேச்சு சிவசங்கரம் பிள்ளையின் கோபத்தைப் பெரிதும் கிளறிவிடவே அவர் சொன்னார்:

''இதோ பார், செல்லம்மா! இந்தக் கிராம வாழ்க்கைக்குப் படிப்பு எதுக்கு? படிச்சவனெல்லாம் ரொம்பப் புத்திசாலியா இருக்கானா? இந்தப் பய ஏதோ எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படிச்சிருக்கான். ராமலிங்கம் நிலமும் நம்ப நிலமும் அக்கம் பக்கம். ராமலிங்கத்துக்கு வேறே சந்ததி இல்லை. எங்கள் காலத்துக்குப் பிறகு இரண்டு குடும்பத்து நிலமும் இந்த ஊரிலேயே பெரிய சதுரமா நிற்கும். வடுவச்சி வாய்க்கால் பக்கத்திலே அப்புறம் ஒரு பயல் வர முடியாது. இதெல்லாம் யோசனை பண்ண வேண்டாமா?''

அத்தையம்மாளுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. ''அண்ணா! அந்தக் கூத்தாடிப் பய மகன் எஸ்.எஸ்.எல்.ஸி. எட்ட முடியாத முட்டாளுக்கு ஒரு நாளும் குழந்தையைக் கொடுக்கமாட்டேன். இதுக்கா அவளை நான் படிக்கவச்சேன்! என்ன சூடிகை அவ! பதினைந்தாவது வயசிலேயே எஸ்.எஸ்.எல்.ஸி. தேறியிருக்கா. உன் வயலும் அந்த

ராஜபார்ட்டான் வயலும் ஒண்ணாகிறதுக்காக இந்தக் கிளியை அந்தப் பூனையிடம் கொடுக்கமாட்டேன்'' என்று திட்டமாகச் சொல்லி விட்டாள் செல்லத்தம்மாள்.

தங்கையின் பிடிவாதம் சிவசங்கரம் பிள்ளைக்கு நன்றாகத் தெரிந்திருந்ததால் அவர் அதற்குமேல் எதுவும் பேசாமல் இருந்தார். அத்தையம்மாள் நன்றாகச் சதைப்பிடித்திருந்த தனது கழுத்தை மணைக் கட்டையின் மீது ஓர் உருட்டு உருட்டித் திரும்பிப் படுத்தாள்.

இந்தச் சம்பாஷணையை கேட்டுக்கொண்டு காமிரா உள்ளே படுத்துக்கொண்டிருந்த மோகனாவின் உள்ளத்தில் ஏதேதோ எண்ண அலைகள் எழுந்து ஊசலாடிக் கொண்டிருந்தன.

ராஜபார்ட் ராமலிங்கத்தின் பிள்ளையை அவள் நன்றாக அறிவாள். அந்த மக்குக்கு வாழ்க்கைப் படுவதைவிடத் தூக்கு மாட்டிக்கொண்டு தொங்குவது நலம் என்று நினைத்தாள். அத்துடன் அவள் மனத்தில் அந்த மாடிவீட்டு வாலிபனின் துயரம் தோய்ந்த முகத் தோற்றம் எழுந்து நின்றது. அவன் கம்பீரமான வதனத்தையும் ராஜபார்ட்டானின் பிள்ளையின் அசட்டு முகத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துப் பெருமூச்சொன்று விட்டாள். இன்னும் எத்தனை எத்தனையோ நினைவுகள்; கனவுகள்! இத்தனைக்குப் பிறகு அவள் கண்களும் மூடின.

காலையில் அவளை அத்தையம்மாள் அவசரமாக, ''ஏ குட்டி எழுந்திரு.'' என்று தட்டி எழுப்பினாள்.

மெள்ளக் கண் விழித்த மோகனா ''ஏன் அத்தை? என்ன அவசரம்?'' என்று கேட்டாள்.

''இன்னிக்கு வியாழக்கிழமை யில்லையா?''

''ஆமாம்.''

''பேரளம் சந்தையாச்சே கண்ணு.''

''ஆமாம் அத்தே.''

"போகாப்போனா உங்கப்பன் விடுவானா? போய் நம்ப வியாபாரம் எப்படி வலுக்குதுன்னு பார்க்க வேணாமா?"

மோகனா அவசர அவசரமாகவும் சந்துஷ்டியுடனும் எழுந்தாள். பேரளம் சந்தைக்குப் போகும் பாதை மாடி வீட்டு வழியாகத்தானிருந்தது. வெகு சீக்கிரம் பல் துலக்கிக் காபி குடித்துவிட்டு ரேழியிலிருந்த சைகிளை எடுத்துக் கொண்டு மோகனா கிளம்பினாள். சைகிளில் ஏறி உட்கார்ந்த அவள் முகத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி தாண்டவமாடியது. உள்ளத்தில் உவகை துள்ளி விளையாடியது.

சைகிளில் தாவி உட்கார்ந்த மோகனா கனவேகமாகப் பெடலை அழுத்தினாள். அவள் கால்கள் சைகிள் சக்கரங்களை விட அதிகமாகச் சுழன்றன. இரண்டு வீதிகளையுந் தாண்டி மாடி வீட்டுப் பாதைக்காகச் சைகிள் பறந்தது. அந்தப் பாதையருகே இருந்த சரிவில் மோகனா மிகவும் உல்லாசமாகப் போய்க் கொண்டிருந்தாள். அவள் ஏதோ கனவுலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்ததால் அக்கம் பக்கத்து வயல்களில் அறுவடை செய்து கொண்டிருந்தவர்களைக்கூட அவள் கவனிக்கவில்லை. தென்றலின் இன்ப கீதம் அவள் செவிகளில் உராய்ந்து சென்றது. மனம் எங்கோ பறந்தது. அந்தச் சொப்பனத்தைத் திடீரென உடைத்தன சில குரல்கள்.

"அம்மா! அம்மா! ஆபத்து." என்று வயல் ஆட்கள் கூவினர். திரும்பிப் பார்த்தாள் மோகனா. முரட்டுக்காளை யொன்று முகத்தைத் தாழ்த்திக் கொண்டும் அவள் சைகிளை நோக்கிப்பறந்து வந்தது. மோகனா சைகிள் பெடல்களை வேகமாக அழுத்தினாள். என்ன வேகமாகப் போயும் பயனில்லை. முரட்டுக் காளைக்கும் சைகிளுக்கும் இருந்த இடைவெளி குறைந்து கொண்டு வந்தது. வயலில் வேலை செய்தவர்கள் பெரும் கூப்பாடு போட்டார்கள். காளை கடைசியில் மிகப் பயங்கரமான அலறலுடன் சைகிள்மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்துவிட்டது!

6. வரதப்பிள்ளையின் சங்கடம்

பாய்ந்த காளை மட்டும் தீனியைத் தினம் ஒரு முறை 'ஸாம்பிள்; பார்த்து மற்ற வேளைகளில் ரோடில் திரிந்து காகிதம் பொறுக்கும் பட்டணத்துக் காளையாயிருந்தால் யாருக்கும் எந்தவிதமான ஆபத்தும் நேர்ந்திராது. நன்றாக இரண்டு வேளை பருத்திக் கொட்டையும் பிண்ணாக்கும் தவிடும் கலந்த ஆகாரத்தை உண்டும், பகல் வேளை பூராவும் பச்சை வயல்களில் மேய்ந்தும், ஊட்டம் வாட்டமாக உள்ளே ஏறியதால் கொழுத்துக் கிடந்த அந்த கிராமத்துக் காளை பாய்ந்ததால், அடுத்த விநாடி மோகனாவின் சைகிள் ஆகாயத்தில் பறந்தது. நிகழ்ச்சிகள் வெகு துரிதமாக நடந்தேறியதால் மோகனாவுக்கு என்ன நேர்ந்தது என்பது கூடச் சரியாகப் புரியவில்லை. காளையின் தாக்குதலால் சைகிள் ஒரு புறம் பறக்க, மோகனா சற்று நேரம் தேவமங்கையைப் போல் ஆகாயத்தில் சஞ்சாரம் செய்து பிறகு பக்கத்திலிருந்த மண்சரிவில் உருண்டாள். வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்களெல்லாம் கூச்சல் போட்டுக்கொண்டு ஓடிவந்தார்கள். அந்தப் பக்கமாக போய்க் கொண்டிருந்த அழகண்ணல் கூட ஓடி வந்து கும்பலோடு கும்பலாக நின்று கொண்டு, ''டேய்! யாராவது காளையைப் பிடியுங்கள். முறைக்கிறது பாருங்கள்'' என்று அதிகார தோரணையில் கூவினார்.

ஆனால் யாருக்கும் அந்தக் காளையிடம் நெருங்கக் கூடத் தைரியமில்லை. காளை கொம்புகளை ஆட்டிக் கொண்டு எல்லோரையும் ஒரு முறை பார்த்துத் தீவிழி விழித்து உறுமத் தொடங்கியது. அழகண்ணலைப் பார்த்ததும் காளை பெரிதாக ஒரு சத்தமும் போடவே, அழகண்ணல் சற்றுப் பின்னுக்கு நகர்ந்துகொண்டார். மகாசூரரென்று சொல்லிக் கொண்ட அழகண்ணலே பின்னடைவதைப் பார்த்த மற்ற குடியானவர்

களும் காளைய அணுகப் பயந்தார்கள். தமிழ் நாட்டைச் சீர்திருத்த வேண்டுமென்றும், தமிழர்களிடம் பழைய வீரம் மீண்டும் துலங்க வேண்டுமென்றும் அடிக்கடி கூட்டங்களில் பேசியதல்லாமல், பழைய வீரத் தாய்மார்களின் கதைகளையும் மேற்கொள் காட்டும் தமிழ்க் காளையான அழகண்ணனே அந்த முரட்டுக் காளையைக் கண்டு அஞ்சி நடுங்கி பின்னால் நகர்ந்ததைக் கண்ட மற்றக் குடியானவர்களும் காளையிடமிருந்து பத்தடி விலகியே நின்றார்கள். அழகண்ணனுக்கு உள்ளூறப் பயம் இருந்தாலும் தம் கெடுபிடியை மட்டும் அந்தச் சமயத்தில் சிறிதும் விடாமல், ''ஏண்டா நிக்கிறீங்க? பிடியுங்கடா காளையை? என்று மற்றவர்களை மிரட்டினார்.

''காளை ஒரே முறையா முறைக்குதுங்களே'' என்றான் ஒரு குடியானவன்,

''மஞ்சவிரட்டலும் மாடு பிடிச் சண்டையும் நடந்த தமிழ் நாட்டில் பிறந்த நீயா இந்தக் காளைக்குப் பயப்படுவது? பிடி அதை!'' என்று ஊக்கப்படுத்தினார் அழகண்ணல்.

''தாங்களும் அந்தத் தமிழ்நாடு தாங்களே! அதை நீங்கள் தான் கொஞ்சம் பிடியுங்களேன்'' என்றான் கூட்டத்திலிருந்த ஒருவன்.

இந்த மாதிரி தன் பலவீனத்தை அம்பலப்படுத்திய குடியானவனைக் காளையைவிடக் கொடூரமாகப் பார்த்தார் அழகண்ணல். ஆனால், குடியானவன் காளைக்குப் பயந்தானே யொழிய, அழகண்ணலுக்குப் பயப்படுவதாகக் காணோம். அழகண்ணனை அவனும் முறைத்துப் பார்க்கவே, அழகண்ணல் கண்ணை வேறு பக்கம் திருப்பிக்கொண்டார். 'இந்தப் பயங்கொள்ளிப் பயல்களிடம் நமக்கென்ன பேச்சு?' என்பது போலிருந்தது அவர் பார்வை.

காளை சிறிது நேரம் மேட்டின் மேலேயே உறுமிக் கொண்டு நின்றது. பிறகு முன்னங்கால்களால் தரையை

இருமுறை பிராண்டியது. சரிவில் உண்டு கிடந்த சைகிளையும், கீழேயிருந்த சர்வேக்கல்லில் தலை மோதியதால் இரத்தம் பிரவகித்துக் கொண்டிருந்த மோகனாவின் முகத்தையும் கவனித்தது. அந்தச் சரிவில் மீண்டும் பாய எத்தனித்து அதற்குப் பூர்வாங்கமாக அழகண்ணலைப் பார்த்து ஒரு முறை உறுமவும் செய்தது. தமிழ் நாட்டில் பிறந்த அந்தக் காளை தமிழர்கள் உயர்வுக்காக பாடுபடும் தன்னைப் பார்த்து எதற்காக உறும வேண்டும் என்பது அழகண்ணலுக்குப் புரியவில்லை.

''யாரைய்யா? உங்களைத்தானே! சீக்கிரம் கழற்றுங்கள் உங்கள் சட்டையை. மாடு உங்களைப் பார்த்து உறுமுகிறதே தெரியவில்லையா?'' என்று ஒரு குரல் அழகண்ணலுக்கு மட்டுமின்றிக் கூட்டத்தார் அனைவருக்கும் உண்மையைப் புரிய வைத்தது.

அன்று அழகண்ணலும் பேரளம் சந்தைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அந்த மாதிரி பொது இடங்களுக்குப் போகும்போது அவர் தமது தமிழபிமானத்தை நிரூபிக்கக் கறுப்புச்சட்டை போட்டுக் கொண்டு போவது வழக்கம். அந்த மாதிரியே அன்றைக்கும் கறுப்புச் சட்டையைப் போட்டுக் கொண்டு வந்திருந்தார். சாதாரணமாகக் குடையைப் பார்த்தாலே மருளும் கிராமத்துக்காளை குடைத்துணியைப் போன்ற கறுப்புத்துணியில் சட்டை தைத்துப் போட்டுக் கொண்டிருந்த அழகண்ணலைக் கண்டு மிரண்டுதான் ஓட ஆரம்பித்தது. இப்படி ஓட ஆரம்பித்த காளை வேகமாக ஒரு சைக்கிள் போவதைப் பார்த்ததும் அதைத் துரத்த ஆரம்பித்தது. அதனால் நேர்ந்ததுதான் அந்த ஆபத்து.

சட்டையைக் கழற்றும்படி கிடைத்த உத்தரவால் மாடுமிரண்ட காரணத்தைப் புரிந்துகொண்ட அழகண்ணல் தன்னைப் பார்த்து அந்தக் கிராமத்தில் அத்தனை அதிகாரத்துடன் பேசக் கூடியவன் யார் என்று உற்றுப் பார்த்தார். அவர் எதிரே நின்று கொண்டிருந்தான் புதிதாக வந்த மாடிவீட்டு முதலாளி.

அழகண்ணலும், அந்த மாடிவீட்டு முதலாளியும் ஒருவரை யொருவர் சிறிது நேரந்தான் பார்த்துக் கொண்டார்கள்.

"உம்! கழற்று உன் சட்டையை!" என்று மீண்டும் கூறினான் மாடிவீட்டு முதலாளி.

அழகண்ணல் பதிலேதும் பேசாமல் முறைக்கவே அந்த வாலிபன் சரசரவென்று அவர் முன்பாக வந்து "ஏன் ஐயா! உமக்குப் புத்தியில்லை? உம் சட்டையைக் கண்டுதானய்யா மாடு மிரளுது" என்று கூறிக்கொண்டு அழகண்ணல் கைகளிரண்டை யும் மேலே தூக்கி, இரண்டு நிமிஷங்களில் அவர் சட்டையைப் பலவந்தமாகக் கழற்றித் தூர எறிந்தான். மேற்கொண்டு அவர் பேசுவதற்காகக் காத்திராமல் சரசரவென்று சரிவில் ஓடி அங்கிருந்த சைகிளை இருகைகளாலும் மேலே தூக்கி உயரப் பிடித்துக்கொண்டு காளையை நோக்கி வந்தான். காளையும் அவனுடன் சண்டைக்குத் தயாராகியது.

சைகிளைத் தூக்கிப் பிடித்து தனக்கு அரணாகச் செய்து கொண்ட அந்த வாலிபன் காளையின், கண்களை உற்றுப் பார்த்துக்கொண்டே அதை அணுகினான். காளையும், அவனை முறைத்துக் கொம்புகளை நீட்டிக்கொண்டு சற்றுப் பின்னடைந்து அவன் மேல் பாய முற்பட்டது. வாலிபன் மிக ஜாக்கிரதையாகக் காளையின் ஒவ்வொரு போக்கையும் கவனித்துக்கொண்டு மெள்ள அதை நோக்கி நகர்ந்தான். சுற்றிலுமிருந்த குடியானவர் கள் விளைவு என்ன ஆகுமோ என்று வாலிபனையும் காளையையும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். காளை ஒரு முறை தலையை பயங்கரமாக ஆட்டிக்கொண்டு கொம்பைத் தாழ்த்தித் திடீரென வாலிபன் மேல் பாய்ந்தது. குடியானவர்கள் மிகுந்த திகிலால் மூச்சைப் பிடித்துக் கொண்டார்கள். வாலிபனின் கதி அதோகதிதானென்று தீர்மானித்தார்கள். காளையின் அந்தப் பாய்ச்சல் வாலிபனைச் சரிவில் உருட்டிவிடுமென்றே எதிர்பார்த்தார்கள்.

ஆனால், வாலிபன் பெரிய மலையைப்போல் அசையாது நின்றான். காளையின் முதல் பாய்ச்சலைக் கையில் தூக்கிப் பிடித்திருந்த சைக்கிளால் தடுத்தான். அது இரண்டாம் முறை பாயுமுன்பாகப் பக்கவாட்டில் நகர்ந்து அதன் போக்கைச் சற்றே திருப்பினான். காளை ஒரு சுழல் சுழன்று கொம்பால் தரையைக் கிறிவிட்டு உறுமிக்கொண்டே மீண்டும் பாய்ந்தது. வாலிபன் அதற்கும் மசியவில்லை. கையிலிருந்த சைக்கிளை அதன் கொம்புகளில் மாட்டிக் காளையின் தலையைப் பலமாகத் திருப்பினான். காளை திமிறித் திமிறிப் பயங்கரமாக அலறியது.

வாலிபனும் சிறிதும் அஞ்சாமலும் உறுதி கலையாமலும் மாட்டின் கொம்பில் மாட்டியிருந்த சைக்கிளை மேலும் அழுத்தி, சைக்கிள் சக்கரமொன்றை மாட்டின் முகத்தின் பக்கத்தில் பதியவைத்து பலங்கொண்ட மட்டும் அழுத்தி அதன் கழுத்தைத் திருப்பினான் மாடும் உக்கிரமாகப் போரிட்டது. அது என்ன தலையை சுழற்றியும் காலை உதைத்தும் ரகளை செய்தபோதிலும் வாலிபன் முதலில் பிடித்த பிடியை விடாமல் அதைச் சமாளித்தான், அது தலையைச் சுழற்றியதால் ஓரிரு முறை தரையிலும் விழுந்தான். விழுந்தபோதிலும் தரையில் புரண்டானே தவிர, காளை மீதிருந்த பிடியை விடவில்லை. இந்தப்போர் 'சுமார்' ஐந்து நிமிஷங்கள் தான் நடந்தது. ஆனால், அதைப் பார்த்துக் கொண்டு நின்றவர்களுக்கு அது ஒரு யுகமாகத் தெரிந்தது. மெள்ள மெள்ள மாடு படிந்தது. அதன் வாயில் நுரை தப்பியது. மிக உக்ரத்துடன் போராடிய அந்தக் காளையின் கழுத்தைத் திருப்பிக் கடைசியாக அதைத் தரையில் வீழ்த்திய அந்த வாலிபன் அதன்மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு, "யாரிடமாவது கயிறு இருக்கிறதா?" என்றான். குடியானவர்கள் ஓடிப்போய்ப் பனைநார்க் கயிறுகளைக் கொண்டு வந்தார்கள். அவற்றை வாங்கி மாட்டின் கொம்பிலும் கழுத்திலும் கட்டி வாயையும் இறுகப் பிணைத்தான் மாடிவீட்டு முதலாளி. பிறகு சைக்கிளை எடுத்துப் பரிசோதித்தான்; குறுக்கு எம்குச் சட்டம் டில்லி எருமையின் கொம்பு மாதிரி முறுக்கிட்டுக் கிடந்தது.

''இதை எடுத்துக்கொண்டு போய் என் வீட்டில் வையுங்கள்'' என்று உத்தரவிட்ட அந்த வாலிபன், அடுத்த விநாடி சரசரவென்று சரிவில் ஓடி, கீழே இரத்தம் ஆறாக ஓடப் படுத்திருந்த மோகனாவைக் குழந்தையைத் தூக்குவது போல் இரு கைகளாலும் தூக்கிக்கொண்டு தன் வீட்டை நோக்கி நடந்தான். காளையைப் பிடித்துக் கொண்டு போன இரண்டு குடியானவர்களையும் அழகண்ணலையும் தவிர மற்ற குடியானவர்கள் அந்த வாலிபனைத் தொடர்ந்து மாடிவீட்டிற்குச் சென்றார்கள்.

வீட்டின் முன்புறக் கதவுகளைக் காலால் உதைத்துச் சென்ற வாலிபன் ஆரம்பத்திலிருந்த பெரிய கூடத்தின் மத்தியிலிருந்த பெரிய இரட்டைப் பெஞ்சியிலேயே மோகனாவைப் படுக்கவிட்டான். பிறகு அந்தக் கூடத்தின் ஜன்னல்களையெல்லாம் நன்றாகத் திறந்துவிட்டுத் தாராளமாகக் காற்று உள்ளே வருவதற்கு வழி செய்தான். அடுத்தபடியாக வாயிற்படியை அடைத்து நின்றவர்களை பார்த்து, ''நீங்கள் இனிமேல் போகலாம். இந்தப் பெண்ணை நான் பார்த்துக்கொள்கிறேன். உங்களில் யாராவது ஒருவர் சிவசங்கரம் பிள்ளையின் வீட்டுக்குப் போய்த் தகவல் சொல்லுங்கள்'' என்றான்.

''சரி எசமான்! அப்படியே சொல்கிறோம். குழந்தைக்கு இரத்தம் ஏராளமாகப் போவுதுங்களே. பக்கிரியை வேணும்னா வரச் சொல்லலாங்களா? என்று கேட்டாள் ஒருவன்.

''பக்கிரியா! யாரது?'' என்று விசாரித்தான் வாலிபன்.

''அவங்கதான் இந்த ஊர் வைத்தியரய்யா.''

''வைத்தியர் தேவையில்லை'' என்றான் வாலிபன்.

''அப்பொ வைத்தியம்?''

''நானே செஞ்சுக்கிறேன்.''

''தாங்கள் வைத்தியருங்களா?''

இதற்கு வாலிபன் பதில் சொல்லவில்லை. நாட்டுப்புறத் தான் கேள்வி கேட்க ஆரம்பித்தால் முடிவேயிருக்காதென்பதை அவன் அறிந்திருந்தபடியினாலும், மோகனாவை உடனே கவனிக்கவேண்டிய அவசியமிருந்தபடியாலும் அவன் மேற்கொண்டு பேச்சில் ஈடுபடாமல் கூடத்திலிருந்த இரட்டைப் பெஞ்சில் படுக்க வைக்கப்பட்டிருந்த மோகனாவின் காயத்தைக் கவனிக்கச் சென்றான், நீண்ட நேரம் காயம் வந்த இடத்தைப் பரிசோதித்த அவன் தன் வேலைக்காரனான முருகனைக் கூப்பிட்டு, ''முருகா! முருகா! கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா. அத்துடன் என் தோற்பெட்டியையும் எடுத்து வா'' என்று உத்தரவிட்டான்.

தோற்பெட்டி வந்ததும் அதனுள்ளிருந்த பஞ்சை எடுத்து முருகன் டபராவில் கொண்டுவந்த தண்ணீரில் நனைத்து மோகனாவின் தலையிலிருந்த காயத்தை மெள்ளக் கழுவினான். அதுவரை ஸ்மரணையற்றிருந்த மோகனா காயத்தை அவன் கழுவத் தொடங்கியதும் லேசாக முகத்தைச் சுளித்தாள். ''அப்பா! அத்தை!'' என்ற வார்த்தைகளும் தீனஸ்வரத்தில் வெளிவந்தன. மாடி வீட்டு முதலாளி மட்டும் அவள் முகம் சுளித்ததை லட்சியம் செய்யாமல், அவள் காயத்தை நன்றாகக் கழுவிவிட்டுப் பரிசோதித்தான். காயம் பலமாகப் பாயவில்லையென்பதையும், காயம் பரவலாகவே இருப்பதையும் கவனித்த வாலிபன் முகத்தில் மகிழ்ச்சிக்குறி லேசாக உதயமாயிற்று. பக்கத்தில் டபராவைக் கையில் வைத்துக் கொண்டிருந்த முருகனைப் பார்த்து, ''முருகா! டபராவை இப்படி வைத்துவிட்டுப் போய்ச் சூடாக ஒரு கப் காபி போட்டுக் கொண்டு வா'' என்றான்.

''சரிதாங்க எசமான்'' என்று சொல்லிவிட்டு முருகன் உள்ளே சென்றதும் மாடிவீட்டு முதலாளி காயத்துக்கு

மேற்கொண்டு சிகிச்சை செய்யத் துவங்கினான். காயத்தைச் சுத்தமாகக் கழுவிவிட்டு, தோற் பெட்டியிலிருந்த பென்ஸாயினைப் பஞ்சில் ஊற்றிக் காயத்தில் அழுத்தினான். சற்று நேரம் பொறுத்து அதன்மீது பெரும் அளவில் பஞ்சை வைத்து, பாண்டேஜ் துணி ஒன்றையும் கத்தரியால் கத்தரித்துத் தலையைச் சுற்றி ஒரு கட்டும் போட்டான். அதற்குப் பிறகு மோகனாவின் முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்து கண்களையும் துடைத்து விட்டான். அத்துடன் நில்லாமல் கூடத்தின் மூலையிலிருந்து விசிறியையும் எடுத்து வந்து விசிறவும் தொடங்கினான்.

இந்தச் சைத்தியோபசாரங்களால் மோகனா மெள்ளக் கண்களை விழித்தாள். தலையை ஒரு புறமாகத் திருப்ப முயன்றாள். ஆனால் சுரீலென வலித்ததால் முகத்தைச் சுளித்தாள். பிறகு எதிரேகவரி வீசிக் கொண்டிருந்த வாலிபனைப் பார்த்து ஏதும் புரியாமல் மிரள மிரள விழித்தாள்.

மருண்ட அவள் விழிகளில் தொக்கி நின்ற கேள்வியைப் புரிந்துகொண்ட மாடிவீட்டு முதலாளி சொன்னான், ''சர்வே கல்லில் தலை அடிபட்டுக் காயம் பலமாயிருக்கிறது. அசைய வேண்டாம். உங்கள் தகப்பனாருக்குச் சொல்லியனுப்பி யிருக்கிறேன்'' என்று.

''காளை சைகிளைத் தூக்கி எறிந்தது தெரியும்; அப்புறம் என்ன நடந்தது?'' என்று மெல்லக் கேட்டாள் மோகனா.

''ஒன்றும் நடக்கவில்லை, காளையைப் பிடித்துக் கட்டியாகி விட்டது. உங்களுக்குக் காயம் பட்டிருந்ததால் இங்கு கொண்டு வந்தோம்'' என்றான் வாலிபன், நடந்த விஷயங்களை ஓரளவு மறைத்து. தான் தூக்கிக்கொண்டு வந்தாகச் சொன்னால் அந்தக் கிராமத்துப் பெண் சங்கோஜப்பட்டால் என்ன செய்வது என்பதற்காக, 'தூக்கிக்கொண்டு வந்தோம்' என்று பொதுப்

படையாகச் சொன்னான். காளையை அடக்கிய விஷயத்திலும் பெருமை கொள்ள விரும்பவில்லை அவன். நடந்தது என்ன என்பதைப் பூராவாகப் புரிந்துகொள்ளாத மோகனாவும் மேற்கொண்டு எதுவும் பேசாமல் மௌனம் சாதித்தாள். அதற்குள் முருகனும் காப்பி கொண்டு வந்தான்.

''அதைக் கொஞ்சம் சாப்பிடுங்கள்'' என்று உபசரித்தான் வாலிபன்.

''என்ன அது?'' என்று கேட்டாள் அவள்.

''காப்பி.''

''காப்பியா?''

''ஆமாம்.''

''எனக்குச் சாப்பிட்டுப் பழக்கமில்லையே.''

''ஒரு முறை சாப்பிடுங்கள்; பழக்கமாகிவிடும்.''

''எங்கப்பா கோபிப்பாரே... ...''

''நான் சொல்லிக் கொள்கிறேன்.''

''வேண்டாமே.''

''நீங்கள் காப்பி சாப்பிட்டுத்தானாக வேண்டும். இரத்தம் நிரம்பப் போயிருக்கிறது. களைப்பு அதிகமாயிருக்கும் மருந்தென்று நினைத்துச் சாப்பிடுங்கள்'' என்றான். மாடி வீட்டு வாலிபன்.

வேறு வழியின்றிக் காப்பியைக் கையில் வாங்கிக் கொண்ட மோகனா எழுந்திருக்க முடியாததால் தத்தளித்தாள். அவள் உதவிக்கு வந்த வாலிபன் ''அவள்'' பக்கத்தில் பெஞ்சில் தானும் உட்கார்ந்துகொண்டு, காப்பியை இப்படிக் கொடுங்கள்'' என்று டம்ளரைக் கையில் வாங்கிக் கொண்டான். பிறகு அவளை

மெள்ளத் தன் இடது கையால் தூக்கினான். தூக்கின அதிர்ச்சிகூட அந்தச் சமயத்தில் அவளுக்குத் தாங்காததால், அவள் தலை துவண்டு அவன் மார்பில் சாய்ந்தது. அவளைத் தேற்றி மீண்டும் சுய நிலைக்குக் கொண்டு வர வாலிபன் முருகனை விசிறச் சொல்லிவிட்டு அவளை மார்பு மீது சாத்திய வண்ணம் காப்பி டம்ளரை அவளுடைய வாயில் வைத்து காப்பியை லேசாக உதடுகளில் சாய்த்தான். உதடுகள் மெள்ள மெள்ளக் காப்பியை உறிஞ்சின. காப்பி டம்ளரைக் கீழே வைத்த வாலிபன் அவள் முகத்தை தன்னிடமிருந்த கர்ச்சீப்பினால் லேசாகத் துடைத்தான். அவளை மார்புமீது சாத்திக்கொண்டு அவன் சைத்யோபசாரம் செய்து கொண்டிருந்த சமயத்தில் சிவசங்கரம் பிள்ளையும் அத்தையம்மாளும் பல கிராமவாசிகள் புடை சூழக் கூடத்திற்குள் ஓடிவந்தார்கள்.

குழந்தை பிழைத்ததா என்பதில் கருத்துள்ளவராயிருந்த சிவசங்கரம் பிள்ளையும், அத்தையம்மாளும் வேறு எதையும் கவனிக்கவில்லை. ஆனால், அவர்களுக்குப் பின்னால் வந்த ராஜபார்ட் ராமலிங்கமும் அவர் பிள்ளை வரதப் பிள்ளையும் மாடிவீட்டு வாலிபன் மார்மீது சாய்ந்திருந்த மோகனாவைக் கண்டு திடுக்கிட்டுப் போனார்கள், ''அப்பா! அப்பா! அதோ பாரப்பா'' என்று சுட்டிக் காட்டினான் வரதப்பிள்ளை.

''பார்த்தேண்டா பயலே! இப்ப சும்மா இரு. இந்த மாடி வீட்டுப் பயலை பின்னாடி கவனிச்சுக்கிறேன்'' என்று கறுவினார் ராஜபார்ட் ராமலிங்கம்.

ஆனால், அப்பனின் சொற்கள் வரதப் பிள்ளைக்கு எத்தகைய ஆறுதலையும் அளிக்கவில்லை. மிகுந்த பொறாமையுடன் மாடிவீட்டு வாலிபனை அவன் கவனித்துக் கொண்டிருந்தான். அதே சமயத்தில் கண் திறந்த மோகனா மாடி வீட்டு வாலிபனைப் பார்த்து புன்னகையும் செய்தாள். உயிரே போய்விட்டது போலிருந்தது வரதப்பிள்ளைக்கு.

7. ஊர் வம்பு

மிகுந்த கவலையுடனும் பரபரப்புடனும் மாடிவீட்டு முன் ஹாலுக்குள் நுழைந்த சிவசங்கரம் பிள்ளையும் அத்தையம்மாளும், மோகனா இருந்த பெஞ்சுக்கருகாமையில் ஓடி வந்தார்கள். காப்பி உள்ளே சென்றதால் சிறிது சுரணை வந்த மருமகளைப் பார்த்து, ''அடி என் கண்ணே! உனக்கு என்னடி வந்துவிட்டது!'' என்று அத்தையம்மாள் அலறினாள். சிவசங்கரம்பிள்ளை மிகுந்த பதற்றத்திலிருந்தாலும் ஆண் பிள்ளையாகையால் ஓரளவு தமது உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு, மகளுக்கருகில் நின்றுகொண்டு, ''இப்பொழுது எப்படியம்மா இருக்கிறது?'' என்று மெள்ளக் கேட்டார்.

மாடிவீட்டு வாலிபன் அத்தையம்மாளைப் பெஞ்சின் நுனியில் உட்காரச் சொல்லி, அவளுடைய விசாலமான மார்பின்மீது மோகனாவைச் சாத்திக்கொள்ளச் செய்து, தான் எழுந்து நின்றான். அத்தையம்மாள் மிகந்த வாத்ஸல்யத்துடன் தனது மருமகளை மார்மீது சாத்திக் கொண்டு, உடம்பை மெல்லத் தடவிக் கொடுத்ததன்றி, தலையில் கட்டுப் போடாத இடத்தில் தறிகெட்டு விளையாடிக் கொண்டிருந்த ஓரிரு கேசங்களைக் கோதி விட்டாள்.

அத்துடன், ''என்னம்மா தாயே! குழந்தையை எப்படியாவது பிழைக்க வைத்துவிடு! உனக்கு அபிஷேகம் செய்து வைக்கிறேன்'' என்று மாரியம்மனையும் வேண்டிக் கொண்டாள். அத்துடன் நில்லாமல் சங்கிலி வீரனுக்குப் பொங்கலிடுவதாகவும், பெருமாள் கோயிலுக்கும் சிவன் கோயிலுக்கும் முறையே திருமஞ்சனமும் அபிஷேகமும் செய்வதாகவும் வேண்டிக் கொண்டாள். இன்னும் கொஞ்சம் நேரம் அத்தையம்மாளை இஷ்டப்படி விட்டிருந்தால் அக்கம் பக்கத்து ஊர்களிலுமுள்ள தெய்வங்களுக்கும் வேண்டுதல்

நடந்திருக்கும். ஆனால், மாடிவீட்டு வாலிபன் மெள்ளக் குறுக்கே பாய்ந்து. அத்தைம்மாளின் பிரார்த்தனைகளைச் சற்றுத் தேக்கினான். ''அம்மா! நீங்கள் வேண்டிக்கொள்ளு முன்பே தெய்வங்கள் கருணை புரிந்து விட்டன. தலையில் காயம் சற்று அதிகமாகப் பட்டிருக்கிறதே யொழிய உயிருக்கு ஏதும் ஆபத்தில்லை. ஏதோ உங்கள் மருமகளைப் பிடித்த நல்லகாலம், சர்வே கல் சரிவில் சற்றுத் தள்ளியிருந்தது. நேரே இருந்திருந்தால் என்ன ஆகியிருக்குமென்று சொல்ல முடியாது. இப்பொழுது நீங்கள் கவலைப்பட ஏதுமில்லை. இன்னும் பத்து நாட்கள் கட்டுப் போட்டால் காயமும் குணமாகிவிடும்'' என்று விளக்கிய மாடி வீட்டு வாலிபனைப் பார்த்த அத்தையம்மாள், ''தம்பி, ஏதோ எங்க குலதெய்வம் மாதிரி வந்திருந்து குழந்தையைக் காப்பாத்தினிங்க! இத்தனை சின்னப் பிள்ளையாயிருந்தாலும் உங்களுக்கு எத்துணை துணிச்சல்! அந்தக் காளையைப் பிடிச்சுப் அடக்கினதைப் பத்தி இங்கே எல்லோருமே ஆச்சரியப் படறாங்க'' என்று அத்தையம்மாள் உபசார வார்த்தைகள் சொன்னாள்.

கூடத்தில் அதுவரை மௌனமாயிருந்த கிராமவாசிகள் தங்கள் சரக்கை அவிழ்த்து விடலானார்கள். ''ஆச்சரியப்படாம என்ன செய்றது? காளை என்ன, சாமான்யக் காளைங்களா!'' என்றான் ஒரு குடியானவன்.

''எத்தனை பேர் கும்பல் கூடி விரட்டிப் பார்த்தோம்! மசிஞ்சுதுங்களா அது? மகா எடக்குங்க!'' என்றான் மற்றொரு குடியானவன்.

''தலையைக் குனிஞ்சு கொம்பைக் காட்டிக்காட்டி என்ன பாய்ச்சல் பாய்ஞ்சுதுங்க! விடுங்க களுதைப் பேச்சை'' என்று அலுத்துக் கொண்டான் மற்றொருவன்.

''நம்ம அழகண்ணல் இருக்காருங்களே, அவரே கண்டு பயந்தாருங்கண்ணா சாமானியப்பட்ட காளைங்களா அது?'' என்றான் இன்னொருவன்.

காளையினுடைய பிரதாபத்தை இப்படிப் பல பேர் வர்ணிக்கக் கேட்ட சிவசங்கரம் பிள்ளை ஆச்சரியம் மிகுந்த கண்களை மாடிவீட்டு வாலிபன் பக்கம் திருப்பி, 'இத்தனை முரட்டுக் காளையைத் துணிஞ்சு எப்படிங்க பிடிச்சு அடக்கினீங்க தம்பி?'' என்று அன்பும் மரியாதையும் கலந்த குரலில் கேட்டார்.

இந்தச் சம்பாஷணையை வளரவிட்டால் மாடிவீட்டு வாலிபன் மகிமை அதிகமாகிவிடும் என்பதைக் கண்ட ராஜபார்ட் ராமலிங்கம் பேச்சில் கலந்து கொண்டு, ''இதென்ன பிரமாதம் சிவசங்கரம்' மாட்டுக்குக் கொம்பிலேதான் பலம்னு பெரியவங்க சொல்லுவாங்க. அதைப் பிடிச்சா தானா அடங்குமில்லே?'' என்று சமாதானம் சொல்ல முயன்றார்.

சிவசங்கரம் பிள்ளை அத்தனை லேசில் அதை விடச் சம்மதிக்கவில்லை. அத்துடன் மாடிவீட்டு வாலிபன் செய்த மாபெரும் உதவியையும் மட்டமாகச் செய்ய அவர் இஷ்டப்படவில்லை. ஆகவே செசன்னார்; ''மாட்டுக்குக் கொம்பிலே பலம்னு எல்லோருக்கும் தெரியும் ராமலிங்கம்; காளை முரண்டி நிற்கிறபோது அதைப் பிடிக்கிறது யாரென்றுதான் பேச்சு'' என்று.

ராஜபார்ட் ராமலிங்கமும் சும்மா இராமல், ''மாடி வீட்டுத் தம்பி கஷ்டப்பட்டுத்தான் காளையை அடக்கியிருக்கு. இதே மாதிரிதான் போன வருஷம் - உனக்கு நினைப்பு இருக்கில்ல? மேலைக்குளத்துக்கிட்ட ஒரு மாடு மிரண்டபோது நம்ப வரதன் பய...?'' என்று ஏதோ பழைய சம்பவத்தை நினைப்பூட்டுகிறமாதிரி தமது மகன் வரதப் பிள்ளையினுடைய சாமர்த்தியத்தைப் பறைசாற்ற முயன்றார்.

''ஆமாம்! ஏதோ ஒரு காளையைத் தம்பி வீறு வீறுன்னு வீறிவிட்டதாகக் கேள்விப்பட்டேன்'' என்று சிவசங்கரம் பிள்ளையும் ஒப்புக்கொண்டார்.

இதைக் கேட்டதும் வரதப்பிள்ளை ஓர் அசட்டுச் சிரிப்பால் தனது ஆனந்தத்தை தெரிவித்துக்கொண்டு அரும்பு மீசையையும் தடவிவிட்டுக் கொண்டான். ஆனால், அத்தையம்மாள் விஷயத்தை அவ்வளவு சுலுவில் விடுவதாக இல்லை. ''யார், நம்ம தம்பி காளைகிட்ட மாட்டிக்கிட்டானே, அந்தக் கதையைச் சொல்றீங்களா?'' என்றாள்.

''தம்பி மாட்டிக்கிட்டானா!'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார் சிவசங்கரம்பிள்ளை.

''தம்பியைத்தான் கேளேன். மாடு துரத்த, தம்பி வேர்க்க விறுவிறுக்க ஓடுஓடுன்னு ஓடினான். பாவம், நல்ல வேளை! வயலிலேயிருந்து ஆளுங்க வந்து பிடிச்சு அடக்கிக் குளத்தங்கரை அரச மரத்திலே கட்டினாங்க. பிறகு ஆத்திரந்தீர வெளுத்தான் தம்பி. அப்பதானே நான் குளிச்சிட்டு வீட்டுக்குக் கிளம்பினேன்'' என்று அத்தையம்மாள் விவரித்தாள்.

இதைக்கேட்டதும் சுற்றிலுமிருந்த விவசாயிகள் முறுவல் செய்தார்கள். ராஜபார்ட் ராமலிங்கம் ஆத்திரத்துடன் வரதப் பிள்ளையைப் பார்த்து, ''பயலே! இது நிஜந்தானாடா? என்று வினவினார்.

வரதப்பிள்ளை ஆடு திருடிய கள்ளன்போல விழித்தான். அவன் பேசாமலிருந்தாலும் நிலைமையைச் சமாளித்திருக் கலாம்; ஆனால், வரதப்பிள்ளை தன் அசட்டுத் தனத்தை மேலும் காட்டத் தொடங்கி ''இல்லேப்பா! முதல்லே கொஞ்சம் ஓடினேன். ஆனால், அப்புறம் தைரியம் வந்திடுச்சு. ஒரே திரும்பாகத் திரும்பினேன். அதுக்குள்ளே என்னைக் கேட்காமெ ஆளுங்க காளையைப்பிடிச்சுக் கட்டிட்டாங்க'' என்று விளக்கினான்.

வந்திருந்த குடியானவர்கள் கொல்லென்று சிரித்தார்கள். வரதப்பிள்ளையின் அசட்டுத் தனத்தை அம்பலப்படுத்திய அத்தையம்மாளின் முகத்தில் பரிபூர்ண சந்தோஷம்

குடிகொண்டது. சிவசங்கரம் பிள்ளை நல்ல பண்பு வாய்ந்தவராதலால் வரதப்பிள்ளைக்கோ ராஜபார்ட்டாருக்கோ அதிக வருத்தம் கொடுக்க இஷ்டப்படாமல் புன்சிரிப்பாகச் சிரித்து, ''அதைப்பற்றி இப்பொழுதென்ன? ஏதோ குழந்தை பிழைத்தாள். நீங்களெல்லோரும் போய் வாருங்கள். குழந்தை கொஞ்சம் திடப்பட்டதும் வீட்டுக்கு அழைத்துப் போகிறேன்'' என்றார்.

''என் வண்டியை வேண்டுமானால் அனுப்பட்டுமா?' என்று கேட்டார் ராஜபார்ட் ராமலிங்கம், மெள்ள வரதப்பிள்ளையுடன் நழுவிக்கொண்டே.

''வேண்டாம் ராமலிங்கம்' என் வில்வண்டியைக் கொண்டுவரச் சொல்லியிருக்கிறேன்'' என்றார் சிவசங்கரம் பிள்ளை.

சிவசங்கரம் பிள்ளையிடம் விடை பெற்றுக் கொண்டு வந்திருந்த கிராம வாசிகளெல்லாம் வெளியேறினார்கள். வெளியே வந்த ராமலிங்கம் மற்றவர்களெல்லாம் போகு மட்டும் காத்திருந்தார். எல்லோரும் கண்ணுக்கு மறைந்ததும் வரதப்பிள்ளையின் காதைப் பிடித்து நன்றாகத் திருகி, ஏண்டா, காளையை அடிச்சேன்னு பொய்தானே சொன்னே?'' என்று மிரட்டினார்.

''பொய்யில்லையப்பா? அடிச்சேம்பா!'' என்று கதறினான் வரதப்பிள்ளை, வலிதாங்காமல்.

''மத்தவங்க பிடிச்சுண்டப்புறம் அடிச்சேன்னு சொன்னையா?'' என்று காதை இன்னும் அழுத்தித் திருகினார்.

''சொல்லலையப்பா! ஐயோ விடுப்பா'' என்று கத்தினான் வரதப்பிள்ளை.

''எலே கத்தினே உன்னைப் பலி போட்டுடுவேன்''

''கத்தாதே என்னப்பா செய்யறது? வலிக்குதே.''

''என்னைப் பத்துபேர் எதிரே மானபங்கப் படுத்தச்சே எப்படிடா இருந்தது?''

''நானா உன்னை அதைப்பத்திச் சொல்லச் சொன்னேன்? ஐயோ விடுப்பா!'' இந்த முறை வரதப்பிள்ளை பெரிதாகக் கத்தினான். உள்ளே இருப்பவர்களுக்குக் காது கேட்டால் என்ன செய்வது என்ற பயத்தால் ராமலிங்கம் அவனை அத்தோடு விட்டுவிட்டு, வீட்டைநோக்கி விடுவிடு என்று நடந்தார்.

வரதப்பிள்ளை சற்றுத் தூரத்தில் அவரைப் பின் தொடர்ந்தான். ராஜபார்ட் ராமலிங்கத்தின் மனம் பெரிய எரிமலையாயிருந்தது. ஏதாவது துளி விஷயம் கிடைத்தாலும் சென்பகத் தோட்டத்தில் வம்பு பலமாக இருக்கும் என்பதை அறிந்த ராமலிங்கம், தமது பெயரும் தமது மகன் பெயரும் அன்று சாயந்தரத்திற்குள் ஊர் முழுதும் அடிபடும் என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டிருந்தார். அதற்கு விதை விதைத்த அத்தையம்மாளை நினைத்துப் பெரிதும் மனதுக்குள் சீறிய அவர், 'தாலியறுத்தவளுக்கு வாய் எத்தனை! ஆண் பிள்ளைகள் இருப்பதை துளி லட்சியம் செய்தாளா? ஆனாலும் சிவசங்கரம் இத்தனை தூரம் இடங்கொடுத்திருக்கக் கூடாது' என்று சிவசங்கரம் பிள்ளையைக் கண்டித்தார்.

ஆனால், அத்தையம்மாள் அத்துடன் சும்மா இருக்கவில்லை. ராஜபார்ட் ராமலிங்கத்தின் தலை மறைந்த உடனே, ஏம்பா! இந்த அசட்டுக்கா நம்ம குழந்தையைக் கொடுக்கணும்னே?!' என்று ஆரம்பித்தாள்.

இதைக் கேட்ட மாடிவீட்டு வாலிபன் கண்களும் மோகனாவின் கண்களும் ஒரு முறை சந்தித்தன. மாடிவீட்டு வாலிபன் பார்வையில் தொக்கி நின்ற கேள்வியை மோகனா புரிந்துகொண்டாள். அவள் வீசிய புன்முறுவலொன்று அவன் கேள்விக்குப் பதிலளித்துவிட்டது. மாடி வீட்டு வாலிபன் ஓரளவு மனச்சாந்தியடைந்ததும், ''கலியாணத்தைப் பற்றி இப்பொழு

தென்ன? முதலில் குழந்தையை கவனிப்போம்'' என்று அத்தையம்மாளை அடக்க முயன்ற சிவசங்கரம் பிள்ளையை மீறி, ''அதுக்கில்லையப்பா, ராஜபார்ட்டான் மகன் குடிக்கிறான்னு வேறே கேள்வி'' என்று வரதப்பிள்ளையின் குணாதிசயங்களை மேலும் விசாரிக்கத் தொடங்கினாள். அவளை அதிகமாகப் பேசவிடக் கூடாதென்ற உறுதிக்கு வந்த சிவசங்கரம் பிள்ளை, ''சரி சரி! அவனைப்பத்தி என்ன நமக்கு? குழந்தையை அழைச்சிக்க; போகலாம்'' என்றார்.

அத்தையம்மாள் மாடிவீட்டு வாலிபனைப் பார்த்து ''ஏன் தம்பி! மோகனா எழுந்து நடக்கலாமா? என்று கேட்டாள்.

''நடக்கலாமம்மா. இனிமே ஒண்ணுமில்லை'' என்றான் மாடிவீட்டு வாலிபன்.

''ஏம்ப்பா! தம்பி இன்னும் சில நாளைக்குக் கட்டுப் போடணும்னு சொல்லுதே. பக்கிரியைக் கட்டுப்போடச் சொல்லுவோமா?'' என்று வினவினாள் அத்தையம்மாள், சிவசங்கரம் பிள்ளையே நோக்கி.

''பக்கிரியா! அது யார்?'' என்று கேட்டான் மாடிவீட்டு வாலிபன்.

''இந்த ஊர் நாட்டு வைத்தியர், தம்பீ! நல்ல அனுபோகஸ்தர், பச்சிலையை வச்சுக் கட்டுவார்'' என்றார் சிவசங்கரம் பிள்ளை.

மாடிவீட்டு வாலிபன் முகத்தில் கிலி பரவலாயிற்று. ''பச்சிலையா! எதுவும் வைத்துக் கட்டாதீர்கள். காயம் ரொம்ப அதிகம். கட்டுத்தான் போடணும்'' என்றான் அவன்.

''யார் போடறது தம்பீ கட்டு? பேரளம் நாலு மைல் இருக்கு. தினப்படி ஆஸ்பத்திரி போயிட்டு வரதுன்னா சுலபமா?'' என்றார் சிவசங்கரம் பிள்ளை.

''எங்கேயும் போக வேண்டாம். நானே உங்க வீட்டுக்கு வந்து கட்டுப் போடறேன்'' என்றான் மாடி வீட்டு வாலிபன்.

''ஏன் தம்பீ! நீங்க டாக்டரா?'' என்று அத்தையம்மாள் கேட்டாள்.

''டாக்டருக்குப் படிச்சிருக்கேன்.''

''எத்தனை தூரம் படிச்சிருக்கீங்க?''

''எம்.பி.பி.எஸ்.''

''அப்ப பெரிய படிப்புத்தான். மருந்தைக் கையிலே வச்சிண்டு பேரளத்திற்குப் போவானேன்? என்னவோ தம்பி. மோகனாவை நீங்கள்தான் கவனிச்சிக்கணும்!''

அத்தையம்மாளுடைய வார்த்தைகள் மாடி வீட்டு வாலிபன் காதுகளில் அமிருத மயமாகப் பாய்ந்தன. ''அதுக்கென்ன, கண்டிப்பா பார்த்துக்கிறேன் ஒண்ணும் கவலைப்படாதீங்க'' என்றான். இதற்குள் சிவசங்கரம் பிள்ளையும் அத்தையம்மாளும் மாடிவீட்டு வாலிபனுக்கு நன்றி தெரிவித்து விட்டுக் கிளம்பினார்கள். போகும்போது சிவசங்கரம்பிள்ளை, திடீரெனத் திரும்பி, ''ஏன் தம்பீ! உங்க பேர் என்னன்னு சொல்லலையே'' என்று கேட்டார்.

''சுந்தரம்'' என்றான் வாலிபன்.

''தகப்பனார் பெயர்?''

''அருணாசலம் பிள்ளை.''

''எந்தப் பக்கமோ?''

''பூர்விகம் இந்தப் பக்கம்தான்.''

''இந்தப் பக்கம்னா எனக்குத் தெரிஞ்சிருக்கணுமே''.

வாலிபன் மேற்கொண்டு பேச்சை வளரவிடாமல், ''உங்களுக்குத் தெரியக் காரணமில்லை. நாங்கள் இந்தப் பக்கத்திலே இருந்து போய் ரொம்ப நாளாச்சு'' என்றான்.

பேச்சின் நுட்பங்களை வெகு எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய சிவசங்கரம் பிள்ளை, வாலிபன் மேற்கொண்டு தகவல் சொல்ல மறுக்கிறானென்பதை அறிந்துகொண்டு, ''சரி, வரேன் தம்பீ. நம்ம வீட்டுக்கு வந்து போக மறக்காதீங்க'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார். மோகனா ஏதும் பேசாமல் அவன்மீது நன்றியும் அன்பும் ததும்பிய பார்வை யொன்றை வீசிவிட்டுக் கிளம்பினாள்.

''தம்பிகிட்ட சொல்லிவிட்டு வாம்மா'' என்றாள் அத்தையம்மாள்.

மோகனா வெட்கத்தால் அவஸ்தைப்பட்டாள். அவள் நிலையைப் புரிந்துகொண்ட சுந்தரம், ''எதற்கு இந்த உபசாரமெல்லாம்? போய் வாங்கம்மா. நாளைக்குக் கட்டுப் போட வரேன்'' என்று சொல்லி வாசல் மட்டும் வந்து வழியனுப்பினான். பெரிய பண்ணை வீட்டு வில்வண்டி மிகப் பிரமாதமாயிருந்தது. சாதாரணமாகவே கீழே வைக்கோலைப் போட்டு மேலே ஜமக்காளம் விரித்துப் பக்கவாட்டில் தலையணைகளைச் சார்த்தும் வண்டிக்காரன் அன்று மோகனா அடிபட்டு விட்டாளென்ற காரணத்தால் வைக்கோலை அதிகமாகவே போட்டும், தலையணைகளைக் கூட வைத்தும் வண்டியை மெத்தைபோல் செய்திருந்தான். சிவசங்கரம் பிள்ளை அத்தையம்மாளையும் மோகனாவையும் வண்டியில் அனுப்பிவிட்டுத் தாம் மட்டும் நடந்து சென்றார்.

அன்று முழுதும் மோகனா வீட்டில் படுத்த படுக்கையா யிருந்தாள். தலையில் கட்டுப் பலமாகப் போட்டிருந்ததால் ஒரு பக்கமாகவே அவள் படுக்க வேண்டியிருந்தது. தலைவேறு 'விண் விண்' என்று தெறித்துக் கொண்டிருந்தது. அத்தனை அவஸ்தையிலும் அவள் மனம் மட்டும் அந்த மாடி வீட்டு வாலிபனைப் பற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவனுடைய துயரம் தோய்ந்த அழகிய விழிகளில், தான்

காயமடைந்திருந்தபோது எத்தனை அனுதாபம் சொட்டியது என்பதை எண்ணிப் பார்த்தாள். அவன் காளையுடன் சண்டையிட்டதை அவள் பார்க்கவில்லையானாலும் மாடிவீட்டு ஹாலில் நடந்த சம்பாஷணையிலிருந்து அவன் தன் உயிரைத் திரணமாக மதித்துத் தன் உயிரைக் காப்பாற்றியிருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்டாள். மானான் வீட்டுக் காளையைப் பற்றி அவளுக்கு நன்றாகத் தெரியும். 'அத்தனை முரட்டுக் காளையை அவர் எப்படி அடக்கினார்? அந்த மெல்லிய கரங்களில் அவ்வளவு வலு இருக்கிறதா?' என்று நினைத்து ஆனந்தத்தில் ஆழ்ந்து போனாள். 'என்னை அவரே தூக்கிக்கொண்டு போனாராமே' என்ற நினைப்பு அந்த ஆனந்தத்தோடு வெட்கத்தையும் அதிகமாகக் கலந்து விடவே அவள் மேற்கொண்டு அதைப்பற்றி நினைப்பதைத் தடுக்க முயன்றாள். ஆனால், நாம் சொல்கிறபடி மனம் கேட்கிறதா என்ன? அவளையும் மீறிக்கொண்டு அவள் மனம் மாடிவீட்டு வாலிபனை வட்டமிட்டுக் கொண்டிருந்தது; 'சுந்தரம்' எத்தனை அழகான பெயர்! அவரை வீட்டில் எப்படிக் கூப்பிடுவார்கள். 'சுந்தர்' என்று கூப்பிடுவார்களா...!'' என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

மாடிவீட்டு முதலாளியைப் பற்றியும் காலை நிகழ்ச்சிகளைப் பற்றியும் திரும்பத் திரும்ப நினைத்தது மோகனாவின் மனம் மட்டுமல்ல; கிராமத்திலுள்ள அத்தனைப் பேர் எண்ணங்களும் உதடுகளும் காலை நிகழ்ச்சிகளைப் பற்றிய சிந்தனையிலும் பேச்சிலும் ஈடுபட்டு நின்றன. பிற்பகலில் மூன்று மணிக்குக் குருக்கள் வீட்டுக்குச் சீட்டாடப் போன வராஹாச்சாரி கூட இதைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். அங்கு அகஸ்மாத்தாக வந்திருந்த கம்பராமாயணப் பண்டிதர் உத்திராதிப் படையாச்சியும் சம்பாஷணையில் கலந்து கொண்டார்.

''ஏன் ஐயா குருக்களே! விஷயத்தைக் கேள்விப்பட்டீரா?'' என்று தொடங்கினார் வராஹாச்சாரி.

''சிவசங்கரம் பிள்ளை மகளை மாடு விரட்டித்தாமே, அதைப் பத்தித்தானே? கேள்விப்பட்டேனே! புதுசா வந்திருக் கானே, மாடி வீட்டிலே, அவன்தான் காப்பாத்தினானாம். பய னதரியசாலி போல இருக்கு!'' என்றார் குருக்கள்.

''காளை மானாங்காளைங்க, குருக்களய்யா! அதை அடக்கணும்னா தைரியம் ரொம்ப வேணுங்க'' என்றார் உத்திராதிப்படையாச்சி.

''காளையை அடக்கின்து இருக்கட்டும்; மேலே நடந்தது தெரியுமா?'' என்றார் வராஹாச்சாரி.

''என்ன நடந்தது?'' குருக்கள் ஆவலுடன் கேட்டார்.

''அந்தப் பெண்ணை அந்தப் பய தொட்டுத் தூக்கிண்டு உள்ளே போனானாம்'' என்று வராஹாச்சாரி சொல்லிவிட்டுக் குருக்களை விஷமமாகப் பார்த்தார்.

வராஹாச்சாரியின் வார்த்தைகளிலிருந்த சூட்சுமத்தைப் புரிந்துகொண்ட குருக்களும், ''அப்படியா! அந்தக் குட்டியைத் தொட்டா தூக்கினான்? என்ன அக்கிரமம், என்ன கிராமம்!'' என்றார்.

''காலம் கெட்டுப் போச்சுங்காணும், குருக்களே, நம்ம சிறு வயசிலே இந்த மாதிரி நடந்திருந்தா பொண்ணைத் தொட்டிருப்போமோ?'' என்று வராஹாச்சாரி பெருமையாகச் சொன்னார்.

உத்திராதிப் படையாச்சிக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது. ''நம்மைப் போல இருக்கிறவங்க காளைகிட்டேயே போயிருக்க மாட்டோமுங்களே'' என்றார் விஷமமாக.

''வாஸ்தவம்! வாஸ்தவம்!'' என்று குருக்கள் சிரித்தார்.

''என்னய்யா வாஸ்தவம்!'' என்று எரிந்து விழுந்தார் வராஹாச்சாரி.

இந்த மாதிரி வம்புப் பேச்சு அன்று பூராவும் நடந்து கொண்டிருந்தது. சிலர் வாலிபனைப் பாராட்டினார்கள் சிலர் ஏசினார்கள். சிலர் நடுவாந்தரமாகப் பேசினார்கள். சிலர் அழகண்ணலைக் கேலி செய்தார்கள். சிலர் வரதப்பிள்ளையைப் பற்றிப் பேசிச் சிரித்தார்கள். இந்தக் 'காளை பிடி' நிகழ்ச்சியின் வம்பு அத்துடன் நிற்கவில்லை. இந்த வம்பு விடாமல் நீடிக்கக்கூடிய நிகழ்ச்சிகள் பல அடுத்த சில தினங்களில் நடந்தேறின. அவற்றுக்கு முதல் படியாக அமைந்தது ஆரம்ப நாள் இரவு நடந்த ஒரு நிகழ்ச்சி.

8. ஜ்வர வேகம்

மோகனாவின் தலையில் பட்ட அடிக்குக் காலா காலத்தில் சிகிச்சை நடந்திருந்தாலும், அந்த அடியினால் ஏற்பட்ட அதிர்ச்சி அன்று பிற்பகலில் தன் சொரூபத்தைக் காட்டத் தொடங்கியது. காலையில் அத்தையம்மாள் கொடுத்த ஆகாரம்கூட உள்ளே செல்ல மறுத்தது. ஆனால், அத்தையம் மாளின் கண்டிப்பினாலும் அன்பினாலும் மறுக்க முடியாமல் உணவை மென்று விழுங்கினாள் மோகனா. உணவை உண்டதும் சற்றுத் தெம்பாகத்தான் இருந்தது மோகனாவுக்கு. ஆனால் காயம் ஏற்பட்ட அதிர்ச்சியின் பலம் அந்தத் தெம்பை அரை மணி நேரத்தில் உடைத்தெறிந்து, உடல் பூராவும் வலியையும் பகலுக்குமேல் லேசான ஜ்வரத்தையும் கிளப்பி விடவே, மோகனா படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தாள். கூடத்திலிருந்த கோரைப் பாயில் புரண்டு அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்த மோகனாவின் நெற்றியில் கையை வைத்துப்

பார்த்த அத்தையம்மாள், ''இந்தாப்பா! இங்கே கொஞ்சம் வந்து பார்'' என்று தனது சகோதரனைக் கூப்பிட்டாள்!

வாசலில் உட்கார்ந்து மோகனாவைப் பற்றி விசாரிக்க வந்தவர்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்த சிவசங்கரம் பிள்ளை உள்ளே ஓடி வந்து, ஏம்மா! எதுக்குக் கூப்பிட்டே?'' என்று விசாரித்தார்.

''கொஞ்சம் மோகனாவைத் தொட்டுப் பார்'' என்றாள் அத்தையம்மாள்.

கையை வைத்து மோகனாவின் நெற்றிக் கட்டைத் தொட்டுப் பார்த்த சிவசங்கரம் பிள்ளையின் முகத்தில் திகில் படர்ந்தது. கவலை தோய்ந்த முகத்துடன் சகோதரியைத் திரும்பிப் பார்த்த பிள்ளை, ''உடம்பு பொறி பறக்கிறதே செல்லம்மா'' என்றார்.

''ஆமாமப்பா! நான் அப்பவே சந்தேகப்பட்டேன். காலையிலே சாப்பிடச்சேயே சாதத்தை மென்னு விழுங்கினா, படுத்துண்டதிலேயிருந்து புரண்டு புரண்டு முனகறா. இப்ப என்ன செய்யலாம்?''

''பக்கிரிக்குச் சொல்லியனுப்பட்டுமா?

பக்கிரிதான் வேண்டாம்னு மாடி வீட்டுத் தம்பி சொல்லீச்சே.''

''தம்பி இங்கிலீஷ் படிச்சவன், செல்லம்மா! அவங்க அப்படித்தான் சொல்லுவாங்க. இங்கிலீஷ் வைத்தியம் கிடைக்காத நாட்டுப் புறத்திலேயிருக்கிறவங்களுக்கு வியாதி வரதில்லையா? இல்லே அவங்க பிழைக்கிறதுதான் இல்லையா? பக்கிரியை நம்பித்தான் இந்த ஊர் இருந்துக்கிட்டிருக்கு?''

''பக்கிரியை நம்பி ஊர் இருக்கட்டும்; நமக்கு வேண்டாம் அந்தப் பக்கிரி. அவன் மீசையையும் முழியையும் பார்க்கச்சேயே பயமாயிருக்கப்பா'' என்று கண்டிப்பாகச் சொன்னாள் செல்லத்தம்மாள்.

சிவசங்கரம் பிள்ளை தன் சகோதரியை ஆச்சரியம் ததும்பும் கண்களுடன் பார்த்தார். அவரும் பி.ஏ. பட்டதாரியானாலும் நவநாகரிகத்தில் ஓரளவு நம்பிக்கையிருந்தவரானாலும் சகோதரியின் போக்கு அவருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஆகவே, ''ஏன் செல்லம்மா! பக்கிரியை நம்பி இந்த ஊரிலே இத்தனை பேர் வாழலையா? அவர்களையெல்லாம் பக்கிரி கொன்று விட்டானா?'' என்று சற்று உஷ்ணமாகக் கேட்டார்.

தஞ்சாவூர் ஜில்லாவின் குறும்புத்தனம் சிவசங்கரம் பிள்ளையைவிட அத்தையம்மாளிடம் பூர்ணமாக இருந்ததால், ''அவனவனுக்கு ஆயுசு கெட்டியாயிருந்தா பக்கிரி மருந்து எப்படி வேலை செய்யும் அண்ணா? எதுக்கும் நீ அந்த மாடிவீட்டுத் தம்பிக்கு ஆள் அனுப்பு!'' என்றாள்.

சிவசங்கரம் பிள்ளை மிகவும் பிடிவாதக்காரர். 'இவளுக்கென்ன இத்தனை அந்தப் பக்கிரியிடம் வெறுப்பு' என்ற சீற்றத்தில் பக்கிரிக்கு முதலில் சொல்லியனுப்பி விட்டுப் பிறகு மாடிவீட்டு முதலாளிக்கு தகவல் கொடுத்தார். தகப்பனாரின் சுபாவத்தை நன்கு அறிந்திருந்த மோகனாவுக்கு ஜுரம் இருந்த அவஸ்தையைவிடப் பக்கிரி வந்துவிடப் போகிறானே என்ற பயம்தான் அதிகமாயிருந்தது. 'அவன் வருவதற்கு முன் அவர் வரமாட்டாரா?' என்றும் ஏங்கினாள். ஆனால், அவள் அதிருஷ்டம் வைத்தியப் பக்கிரியே முதன் முதலாக வந்து சேர்ந்தான்!

மாலை நெருங்கிவிட்டதால் அத்தையம்மாள் பூஜை அறையில் குத்துவிளக்கை ஏற்றி வைத்துவிட்டு வாசலில் ஹரிக்கேன் லாம்பைக்கொண்டு போய் மாட்டினாள். கூடத்திலிருந்த வால் லாம்பும் கொளுத்தப் பட்டது. உள் காரியங்களைச் செய்வதற்கு வழக்கப்படி சிம்னி விளக்கை ஏற்றிக்கையில் பிடித்துக்கொண்ட அத்தையம்மாள் கூடத்தி லிருந்து சமையல் கட்டுக்கும் சமையல் கட்டிலிருந்து

கூடத்துக்கும் திரிந்துகொண்டிருந்தாள். அவள் அப்படித் திரிந்துகொண்டிருந்த சமயத்தில்தான், தன் பெரிய முண்டாசுடனும் மேலே போட்ட சிறு பட்டுத் துண்டுடனும் கையில் பட்டு கச்சையுடனும் வைத்தியப் பக்கரி உள்ளே நுழைந்து, ''முருகா!'' என்று ஒரு தடவை பெரிதாக முழக்கிவிட்டு உட்கார்ந்தான். அவனை அழைத்து வந்த சிவசங்கரம் பிள்ளையும் கூடத் தாழ்வாரத்தில் உட்கார்ந்து, தாழ்வாயிருந்த முற்றத்தில் கால்களைத் தொங்கப் போட்டுக் கொண்டார்.

வைத்தியப் பக்கிரி வந்ததும் வைத்தியத்தைக் கவனிக்காமல் லோகாபிரமமாகப் பேசத் தொடங்கி கூடத்தில் நடமாடிக் கொண்டிருந்த அத்தையம்மாளைப் பார்த்து, ''ஏன் செல்லம்மா, கொளந்தையை மாடு முட்டித் தள்ளிடுச்சாமில்ல?'' என்று ஏதோ புதிதாக விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்தான்? சும்மா இருப்பது அழகல்லவென்று தீர்மானித்த அத்தையம்மாளும் கூடத்துத் தூண்மேல் சாய்ந்து கொண்டு மார்பில் விலகியிருந்த துணியைச் சற்று இடது பக்கமாகத் தள்ளி விலாப் பக்கத்தில் அடைத்துக் கொண்டு, ''ஆமாம் வைத்தியரய்யா! தலையிலே குழந்தைக்குப் பலமான காயம்'' என்றாள்.

''கேள்விப்பட்டேன், கேள்விப்பட்டேன். யாரோ பட்டணத்துப் பய அதுக்குக் கட்டுக்கூட போட்டதாகக் கூடச் சொன்னாங்க'' என்று, கட்டுப்போட்டது ஏதோ பெரிய தவறான செய்கை போலக் கறுவினான், பக்கிரி.

''இல்லை வைத்தியரய்யா. அந்தச் சமயத்திலே அங்கே யாருமில்லை. இரத்தம் ஆறாக ஓடிச்சு'' என்று சிவசங்கரம் பிள்ளை பேசினதை இடையிலே தடுத்த பக்கரி, ''ஓடட்டுமே களுதே!'' என்றான்.

பக்கிரியின் பேச்சு அத்தையம்மாளுக்குப் பொறுக்காது போகவே, ''இரத்தம் பூரா ஓடிட்டா குழந்தை பிழைக்குமா?'' என்று விசாரித்தாள்.

''ஏன் பொழைக்காது? அப்படி என்ன இரத்தம் ஓடிடும்? அட, அப்படியே ஓடிச்சு; பக்கிரியைக் கூப்பிட சத்திரத்துக்கு ஆளைவிட்டா நொடியிலே வரமாட்டேனா?'' என்று விடாப்பிடியாகக் கோபித்துக் கொண்டான் பக்கிரி.

''அது கிடக்கட்டும், வைத்தியரய்யா! இப்போ குழந்தைக்கு ஜ்ரம் வந்திருக்கே'' என்றார் சிவசங்கரம் பிள்ளை.

''வராமெ என்ன செய்யுமாம்? அடிபட்ட அதிர்ச்சியில்லே? அதிர்ச்சி வாதத்தைக் கிளப்பாது?'' என்று வாதம் கிளம்பினதற்குச் சிவசங்கரம் பிள்ளைதான் பொறுப்பாளிபோல் அவரை உஷ்ணமாகப் பார்த்தான் பக்கிரி.

''கிளம்பும் பக்கிரி ஐயா! அதுக்கு இப்போ என்ன செய்யச் சொல்றீங்க?'' என்று அத்தையம்மாள் எரிச்சலுடன் கேட்டாள்.

''அந்தக் களுதையை அப்பவே அடக்கிப் போட்டிருக்கணும்'' என்றான் பக்கிரி.

''எந்தக் களுதையை?'' என்று அத்தையம்மாள் ஏளனமாகக் கேட்டாள்.

''அதான் வாதத்தைச் சொல்றேன். அப்பவே ஒரு மாத்திரை, ஒரு சொரஸம் கொடுத்திருந்தா தலையைக் காட்டியிருக்குமா அது?''

''தலையைத்தான் காட்டியிருக்கே, இப்பதான் ஏதாவது செய்யுங்களேன்.''

''செய்றோம் செய்றோம், செய்யாமெயா போயிடறோம்? கோடி வீட்டுக் குப்பம்மாவை மாடுமுட்டித் தள்ளினது நினைப்பிருக்கா?''

''ஓ! நினைப்பிருக்கே.''

''அங்கேயும் வாதந்தான் கிளப்பிக்கிச்சு.''

''அவளுக்கு நீங்கதானே வைத்தியம் செஞ்சீங்க. ஒரு மாத்திரை ஒரு சொரஸத்திலே அடிச்சுப் போட்டேன்னீங்க.''

''அடிச்சுத்தான் போட்டேன்.''

''குப்பம்மாளையே அடிச்சுப் போட்டாப்பலே கேள்வி.''

''என்ன சொல்றீங்கம்மா?''

''குப்பம்மாதான் பொழைக்கவே யில்லையே!''

''செத்துப் போன காரணம் வாதம் இல்லை!''

''பின்னே பித்தமா?''

''ஊம்... சிலேஷ்பம் இல்லே கிளம்பிச்சு? காலையிலே ஐய நாடில்லே தலை தூக்கிச்சு களுதே!''

''ஓகோ!''

''காலையில் வாத நாடி, நடுப்பகல் பித்தநாடி, மாலையில் ஐயநாடி மாறியடிக்குமேயானால்...'' என்று ஏதோ பாட்டை துவக்கினான் பக்கிரி.

''புரிஞ்சுது, வைத்தியரய்யா! போதும். குழந்தையைப் பார்க்கறீங்களா?'' என்றாள் அத்தையம்மாள் கடைசியாகப் பக்கிரியுடன் மேற்கொண்டு பேசப் பிடிக்காமல்.

சிவசங்கரம் பிள்ளைக்குத் தமது சகோதரியின் போக்கு நன்றாகப் புரிந்தது. குப்பம்மாள் செத்துப் போனதற்குப் பக்கிரிதான் காரணமென்பதை நிரூபிப்பதற்கே அவள் இத்தனை கேள்விகளைக் கேட்டிருக்கிறாள் என்பதைப் பிள்ளை நன்றாக அறிந்துகொண்டார். அத்துடன் பக்கிரி சொன்ன பதில்களும் அவருக்கு எரிச்சலைக் கொடுத்தன. பக்கிரியைப் பேசவிட்டால் அன்று இரவு முழுவதும் பேசியே காலத்தைத் தீர்த்து விடுவானென்பதைச் சந்தேகமறத் தெரிந்து கொண்டிருந்த

பிள்ளை தமது சகோதரியை நோக்கி, ''மோகனாவை வரச்சொல்'' என்று இரண்டே வார்த்தைகளில் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

அத்தையம்மாள் கூடத்துக்குச் சென்று மோகனாவை மெள்ளப் பிடித்துத் தாழ்வாரத்துக்கு அழைத்து வந்து கீழே உட்கார வைத்துத் தன் மார்புமீது சாத்திக் கொண்டாள். அதற்குப் பின்பும் பக்கிரி உடனே வைத்தியத்தை ஆரம்பிக்காமல், ஜுரத்தினிடம் தனக்குள்ள அலட்சியத்தையும், அதை நிமிட நேரத்தில் அடக்கிவிடத் தனக்குள்ள சாமர்த்தியத்தையும் நிரூபிக்க, மோகனாவிடம் பேச்சுக் கொடுத்தான்.

''ஏன் கொளந்தை! மாட்டை முட்டிட்டியாமல்ல?'' என்று ஹாஸ்யத்தைக் காட்டினான் பக்கிரி.

அத்தனை வலியிலும் ஜுரத்திலும் வயிற்றெரிச்சல் தாளாமல் புன்முறுவல் செய்தாள் மோகனா. அதைக் கண்ட பக்கிரி வெற்றிக் குறியுடன் சிவசங்கரம்பிள்ளையை ஒருமுறை பார்த்துவிட்டுப் பிறகு மோகனாவுக்காகத் திரும்பி, ''ஏன் சிரிக்க மாட்டே கொளந்தை? பக்கிரி வந்துட்டானல்ல?' என்று தன்னைத் தானே புகழ்ந்து கொண்டு ''உடம்பிலே வலி எப்படியிருக்கு?'' என்று கேட்டான்.

''ரொம்ப வலி'' என்று மெல்லச் சொன்னாள் மோகனா.

''இருக்காது? மாட்டையில்லே முட்டியிருக்கே? கிடக்கு களுதை, வலியை அரை நாழியிலே அடக்கிப் போடுவோம்! இந்தா, இடது கையை காட்டு'' என்றான் பக்கிரி.

நன்றாகக் கையை மூடியிருந்த மேலாக்கைச் சற்று விலக்கி முழங்கை வரையில் தெரியும்படியாகக் கையை நீட்டினாள் மோகனா. பக்கிரி உடனே கையைப் பிடித்துப் பார்க்கவில்லை. மடியிலிருந்த பொடி டப்பியிலிருந்து ஒரு சிட்டிகைப் பொடியை எடுத்து வாணக்குழாய் போன்ற மூக்கில் வைத்து ஓர் உறிஞ்சு

உறிஞ்சினான். பிறகு தோள் மேல் கிடந்த பட்டுத் துண்டை இரு கைகளாலும் மடித்து மூக்கில் இப்புறமும் அப்புறமும் இழுத்து மூக்கைத் துடைத்துக் கொண்டான். அந்தப் பட்டையை ஓர் உதறு உதறி நாடி பார்க்க மோகனாவின் கையிலும் போட வந்ததால், வெறுப்பு மேலிட்டுக் கையை வெடுக்கென்று பின்னுக்கு இழுத்துக்கொண்டாள் மோகனா. அத்தையம்மாளுக்கும் அது சகிக்காததால், ''வைத்தியரய்யா! அந்தப் பட்டு வேண்டாம். உள்ளாறே வேறெ பட்டு இருக்கு, தரேன்'' என்று சொல்லிவிட்டு அண்ணனைப் பார்த்து, ''அண்ணா உள்ளாறேயிருந்து அந்தச் சின்னப் பட்டைக் கொண்டுவா'' என்றாள்.

சிவசங்கரம்பிள்ளை பட்டைக் கொண்டு வந்தார். அந்தப் பட்டை வாங்கி மோகனாவின் கைகளிலே போட்டு மூடிய பக்கிரி அவள் விரல்கள் ஒடியும்படியாக ஒரு முறை முரட்டுத் தனமாகச் சொடுக்கிவிட்டு அவள் பூங்கரத்தில் தன் விரல்களை வைத்து ஏதோ நாதசுரம் வாசிப்பவர் போல் வெகுநேரம் ஒரு விரல் மாற்றி ஒரு விரலைத் தூக்கியும் அழுத்தியும் ஜாலவித்தை செய்து கொண்டிருந்தான்.

கடைசியாக அவன் கையை விட்டுவிட்டு ஏதோ பெரிதாகக் கண்டுபிடித்து விட்டவன் போல், ''நெனைச்சேன் அப்பவே.'' என்றான் பக்கிரி.

''என்ன வைத்தியரய்யா?'' என்று கவலையுடன் விசாரித்தார் சிவசங்கரம் பிள்ளை.

''ஒண்ணும் பயமில்லீங்க, வாதந்தான். அந்தக் களுதைக்கு இடங்கொடுத்தா எப்பவும் இப்படித்தான்'' என்று வாதத்திற்கு சிவசங்கரம் பிள்ளையே இடங்கொடுத்ததுபோல் பேசிவிட்டுத் தன் பட்டுக் கச்சையை அவிழ்த்து அதில் வரிசையாகச் செருகப்பட்டிருந்த இரு சின்னஞ்சிறு சீசாக்களை எடுத்து, வெளிச்சத்தில் சிறிது நேரம் நோட்டம் பார்த்த பக்கிரி, ''ஏம்மா? பொட்டலம் மடிக்கக் காயிதம் கொண்டாரீங்களா?' என்றான்.

அத்தையம்மாள் மெள்ள மோகனாவை அழைத்துப் போய்க் கூடத்தில் படுக்க வைத்துவிட்டு, குமரசாமி மளிகைக் கடையிலிருந்து மிளகாய்க் கட்டிக்கொண்டு வந்திருந்த தமிழ் பத்திரிகைக் காகிதமொன்றை எடுத்து வந்து பக்கிரி முன்பாக எறிந்தாள். பக்கிரி அதை எடுத்து நன்றாக விரல்களால் 'பட் பட்' என்று சத்தம் வரும்படி தட்டி, சீராக எட்டாகக் கிழித்து இரண்டு சீசாக்களிலும் இருந்த செந்தூரங்களைப் பாதி பாதியாகக் கலந்து நான்கு பொட்டலங்கள் கட்டினான். அந்த நான்கையும் சிவசங்கரம் பிள்ளையிடம் கொடுத்து. ''இந்த ராவேளைக்கு ஒரு பொட்டலம் தேனிலே இழைச்சுக் கொடுங்க; நாளைக்கு மூணு பொட்டலம்'' என்றான்.

சிவசங்கரம் பிள்ளை பொட்டலங்களை வாங்கிக் கொண்டு ''செல்லம்! ஐயாவுக்குத் தட்டுக் கொண்டாரியா?'' என்றார்.

செல்லத்தம்மாள் தட்டில் வெற்றிலை சீவல்கொண்டு வந்து வைக்க, சிவசங்கரம் பிள்ளை தமது இடுப்பிலிருந்து ஓர் ஒற்றை ரூபாய் நாணயத்தை எடுத்துத் தட்டில் வைத்தார். தாம்பூலத்தையும், ரூபாயையும் மடியில் கட்டிக்கொண்ட பக்கிரி, ''ஜுரம் நிக்கட்டும்! பின்னாடி கொளந்தைக்கு ஒரு கூஷ்மாண்டம் செஞ்சு கொடுக்கிறேன்'' என்று சொல்லித் தன் வைத்தியம் அத்துடன் நிற்காது என்பதையும் சுட்டிக் காட்டிவிட்டுச் சென்றான்.

அவன் வாயிற்படியைத்தாண்டும் வரையில் அத்தையம்மாள் சும்மாயிருந்தாள். அவன் தலை மறைந்ததும், ''தொலைஞ்சான் சனியன்'' என்று சற்று உரக்கவே சொல்லிவிட்டு, ''ஏன் அண்ணா! மாடி வீட்டுத் தம்பிக்குச் சொல்லியனுப்பினையா?'' என்று விசாரித்தாள்.

''சொல்லியனுப்பினேன். தம்பி வீட்டிலே இல்லையாம்; வந்ததும் வரச் சொல்லியனுப்பியிருக்கேன். அதிருக்கட்டும்

செல்லம்மா, தேனை எடுத்து வாயேன்?' என்றார் சிவசங்கரம் பிள்ளை.

''எதுக்கப்பா தேன்?''

''செந்தூரம் கொடுக்க.''

''அந்தச் செந்தூரத்தை உடைப்பிலே போடு. நான் இந்தப் பக்கிரியைக் கூப்பிடாதேன்னு அப்பவே சொன்னேன்.''

''கூப்பிட்டதிலே என்ன முழுகிப் போச்சு? செந்தூரம் கொடுத்திருக்கானே.''

''செந்தூரத்தை அவன் தலையிலே கொட்டு. வந்ததும் வைத்தியத்தைப் பார்க்காமெ ஜுரத்தைக் களுதை குதிரைங் கிறான். தன் பிரதாபத்தை அளக்கிறான். இந்தச் செந்தூரத்தைக் கொடுத்துத்தான் கோடி வீட்டுக் குப்பம்மாவைக் கொன்னான். இதைக் குழந்தைக்கு நான் கொடுக்க மாட்டேன்'' என்று திடமாகச் சொல்லிவிட்ட அத்தையம்மாள் செந்தூரப் பொட்டலங்களை அண்ணனிடமிருந்து பிடுங்கிக் கொண்டு ''அண்ணா! தம்பி வரபோது வரட்டும். நீ எதற்கும் சிவன் கோயிலுக்குப் போய் நவக்கிரகத்துக்கு எண்ணெய் போட்டுட்டு வா'' என்று உத்தரவிட்டுவிட்டுச் சமையற்கட்டுச் சென்று கிண்ணத்தில் கொஞ்சம் எண்ணெயும் கொண்டுவந்து கொடுத்தாள். அதை வாங்கிக் கொண்ட பிள்ளை சிவன் கோயிலுக்குக் கிளம்பிச் சென்றார்.

சிவசங்கரம்பிள்ளை சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் அத்தையம்மாளும் குடத்தை எடுத்துக் கொண்டு தண்ணீர் கொண்டுவரப் பெருமாள் கோயிலுக்கருகிலிருந்த மேலைக் குளத்திற்குக் கிளம்பினாள். அவள் குடத்தை இடுப்பில் எடுத்து வைத்ததும் வைக்காததுமாக ''அம்மா!'' என்ற குரல் வாசலில் கேட்டது. அந்தக் குரலைத் தொடர்ந்து கையில் வைத்தியச் சாதனங்கள் கொண்ட தோல்பையுடனும், தோளில் தொங்கும்

ஸ்டெதாஸ்கோப்பு'டனும் மாடி வீட்டு வாலிபன் உள்ளே நுழைந்தான்.

அவனைக் கண்ட அத்தையம்மாளின் முகத்தில் மகிழ்ச்சி பூராவாகத் தாண்டவமாடியது. ''வா தம்பி! உங்களுக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கோம். மோகனாவுக்குப் பகல்லேயிருந்து நல்ல ஜ்ரம். குழந்தை தவிக்கிறா'' என்று அத்தையம்மாள் அவனை வரவேற்று விஷயத்தை ஒரே மூச்சில் கூறினாள்.

''நான் வேலையாக வெளியில் போய் இப்பொழுதுதான் திரும்பினேன். ஜ்ரத்துக்காகப் பயப்பட வேண்டாம். அடிபட்டால் அதிர்ச்சியில் ஜ்ரம் வருவது சகஜம். எங்கே அவங்க?'' என்று வாலிபன் வினவினான்.

''அவங்க என்ன தம்பி அவங்க! சின்னக் குட்டி அவ. சும்மா மோகனான்னு கூப்பிடுங்க தம்பி!'' என்றாள் அத்தைம்மாள்.

''நீங்க மாத்திரம் என்னை மரியாதையா கூப்பிடலாமா? நானும் உங்களுக்குச் சின்னவன்தானே'' என்றான் சுந்தரம்.

''இருந்தாலும் நீங்க ஆண்பிள்ளை தானே.''

''ஆண் பிள்ளையாயிருந்தா? என் வயசிலே உங்களுக்கு ஒரு மகன் இருந்தால் நீங்க அவனை எப்படிக் கூப்பிடுவீங்க''

இதைக் கேட்ட அத்தையம்மாள் புன்முறுவல் செய்தாள். ''சரி, தம்பி! நீ என் பிள்ளைதான்னு வச்சிக்கிறேன். உன் மாதிரி குணசாலியான பிள்ளை கிடைக்கணுமே'' என்று சொன்ன அத்தையம்மாள், ''வா தம்பி! மோகனா கூடத்திலே படுத்திருக்கா'' என்று சொல்லிக் கூடத்துக்கு அவனை அழைத்துச் சென்று கூடத்துச் சுவரில் மாட்டப்பட்டிருந்த வால் லாம்பின் திரியை உயர்த்தி, வெளிச்சத்தைச் சற்று அதிகப்படுத்தினாள்.

கூடத்திலே விரிக்கப்பட்டிருந்த கோரைப்பாயின்மீது சாபத்தால் பூமியில் விழுந்துவிட்ட அப்சரஸ் போல் மோகனா படுத்திருந்ததைக் கண்ட சுந்தர் அவள் உடம்பின் நெளிவால் ஏற்பட்ட எழில் பிரதேசங்களின் பெருக்கைப் பார்த்து ஒரு கணம்

அசைவற்று நின்றான். பிறகு அவளருகில் சென்று தாராளமாக உட்கார்ந்து கொண்டு, கையிலிருந்த தோல் பெட்டியைத் திறந்து அதிலிருந்த தர்மா மீட்டரை எடுத்து, ''அம்மா! இந்தப் பக்கம் திரும்புகிறாயா?'' என்று மோகனாவைக் கேட்டான்.

அவன் வந்ததும், அவனுக்கும் அத்தையம்மாளுக்கும் பேச்சு நடந்ததும் ஆகிய அனைத்தையும் கவனித்ததால் வெட்கம் பிடுங்கித் தின்னக் கண்களை மூடித் தூங்கும் பாவனையில் படுத்திருந்த மோகனா அவன் கூப்பிட்டதற்குப் பதிலேதும் சொல்லவில்லை. அப்புறமிருந்த முகத்தைத் திருப்பவும் இல்லை. ஆகவே சுந்தரமே அவள் சுந்தர முகத்தைத் தன் கையால் தொட்டு மெள்ளத் தன் பக்கத்துக்காகத் திருப்பினான். அவள் விழிகளை மலர விழித்து, அவன் வந்ததை அப்பொழுதுதான் அறிபவள்போல் பார்த்தாள். ''நான்தான் அம்மா! கொஞ்சம் வாயைத் திறவுங்கள்'' என்று சொல்லிய சுந்தர், அவள் வாயைத் திறந்தவுடன் தர்மா மீட்டரை நாக்குக்கடியில் வைத்து மூடிக்கொள்ளச் சொன்னான். அரை நிமிடத்திற்கெல்லாம் தர்மா மீட்டரை எடுத்து விளக்கு வெளிச்சத்தில் பார்த்த சுந்தரின் முகத்தில் கவலை படர்ந்தது.

''ஏன் அப்பா! ஜ்ரம் அதிகமோ?'' என்று கவலையுடன் கேட்டாள் அத்தையம்மாள்.

''கொஞ்சம் அதிகந்தான். இருந்தாலும் பாதகமில்லை. என்னிடம் மருந்து இருக்கிறது. முதலில் பரீட்சையை முடித்துக்கொள்கிறேன். நீங்கள் கொஞ்சம் தீப்பெட்டி கொண்டு வாருங்கள்'' என்றான் சுந்தர்.

அத்தையம்மாள் தீப்பெட்டி கொண்டுவர உள்ளே சென்றதும் தனது இடது கையால் மோகனாவைத் தன் பக்கம் நன்றாகப் புரட்டிக் கொண்டான். பிறகு ஸ்டெதாஸ்கோப்பைக் காதில் பொருத்திக்கொண்டு அவள் மார்பு ரவிக்கையை ஸ்டெதாஸ்கோப்பின் நுனியாலேயே அகற்றி இதயத்துக்கு அருகில் வைத்தான்.

மோகனாவின் இதயம் வெகுவேகமாக அடித்துக் கொண்டது. அது அப்படி அடித்துக் கொண்டது ஜுரத்தின் வேகத்தாலா, ஸ்டெதாஸ்கோப்பைப் பிடித்துக் கொண்டிருந்த சுந்தரத்தின் கையின் கடைசி இரண்டு விரல்கள் மார்பகத்தில் அழுந்திக் கிடந்ததாலா என்று அவளால் தீர்மானிக்க முடியவில்லை. மோகனா மோகனாவஸ்தையால் நெளிந்தாள். சுந்தரம் எந்த உணர்ச்சிக்கும் இலக்காகாமல் வைத்தியப் பரிசோதனையை நீண்ட நேரம் நடத்தினான். அவன் பரீட்சை முடிவதற்குள் அத்தையம்மாளும் தீப்பெட்டியைக் கொண்டு வந்தாள்.

தன் தோற் பெட்டியிலிருந்த ஸ்பிரிட் விளக்கை எடுத்து தீப்பெட்டியால் அதை பற்றவைத்த சுந்தரம், இஞ்செக்ஷன் சிரெஞ்ஜையும் எடுத்துக் கொண்டான்.

அதைப் பார்த்த அத்தையம்மாள், ''ஏன் தம்பி! ஊசி போடப் போறாயா?'' என்று கவலையுடன் வினவினாள். ''ஆமாம் அம்மா! ஊசி போட்டால் நாளைக் காலையில் ஜுரம் இறங்கிவிடும். ஊசி மருந்தும் என்னிடமே இருக்கிறது'' என்று சொல்லிவிட்டு, சிரெஞ்சையும் ஊசியையும் பெட்ரோல் போட்டுக் காய்ச்சிச் சுத்தம் செய்து, மருந்தையும் எடுத்து ஊசி மூலம் சிரெஞ்சில் இழுத்துக் கொண்டான்.

ஊசியைப் பார்த்ததும் மோகனாவின் முகத்தில் பயக்குறி தோன்றியது. அதைக் கவனித்த சுந்தரம். ''பயப்பட வேண்டாம்! வலிக்காமல் செய்துவிடுகிறேன்'' என்று கூறி, அவள் கை ரவிக்கையை உயர்த்திவிட்டு ஸ்பிரிட்டைத் தடவி ஊசியைக் குத்தி, மருந்தை ஏற்றினான். பிறகு ஊசியை இழுத்து அந்த இடத்தில் மீண்டும் ஸ்பிரிட் தோய்ந்த பஞ்சை வைத்து அழுத்தித் துடைத்துவிட்டான்.

இஞ்செக்ஷன் ஆனதும் அத்தையம்மாளுக்கு ஏதோ பெரிய சுமை விட்டமாதிரி இருந்தது. அவள் சுந்தரத்தைப் பார்த்துக் கேட்டாள், ''ஏன் தம்பி? நீ சீக்கிரம் வீட்டுக்குப் போகணுமா?''

''இல்லேம்மா! இஞ்செக்ஷன் எப்படி வேலை செய்கிறதுங்கறதைப் பதினைந்து நிமிஷம் பார்த்துவிட்டுத்தான் போகணும். சிலபேருக்கு இந்த இஞ்செக்ஷன்னாலே 'அல்லர்ஜி' அதாவது உடம்பில் வாரிக் கொட்டுதல் போன்ற விளைவுகள் ஏற்படுவதுண்டு. அதைப் பார்த்து விட்டுப் போகணும்...'' என்றான்.

''அப்போ நீ மோகனாவைப் பார்த்துக்கோ. நான் குளத்துக்குப் போய் ஒரு குடம் தண்ணி கொண்டாந்துடறேன்'' என்று சொல்லிவிட்டு, அத்தையம்மாள் குடத்தை எடுத்துக் கொண்டு சகல சதைகளும் ஆட வெளியே சென்றாள்.

இப்படித் தனிமையில் விடப்பட்ட இருவருக்கும் பரம சங்கடமாயிருந்தது. மோகனா சுந்தரம் இருந்த இடத்துக்கு மறுபுறமாகத் திரும்பிப் படுத்துக்கொண்டாள். அப்படித் திரும்பிப் படுத்துக் கொண்டதாலும் அவள் காலை மடக்கிக்கொண்டு முடங்கியதாலும் சுந்தரத்தை நோக்கி நகர்ந்த அவளுடைய பின் உடற் பகுதிகள் அவன்மீது நன்றாக உராய்ந்து கொடுக்கவே அவன் எத்தனை எத்தனையோ இன்ப வேதனைக்குள்ளாகித் தவித்தான். அவற்றிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளத் தனது இடது கையை அவளுக்குக் குறுக்காகச் செலுத்தி, ''மோகனா, இந்தப் புறம் திரும்பிப்படு. ஜுரம் எப்படியிருக்கிறதென்று பார்க்கிறேன்'' என்று அவளை மெள்ளத் திருப்பினான். அவள் பதில் சொல்லாமல் வளைந்து திரும்பினாள். அவளைத் திருப்பச் சென்ற அவன் இடக்கை அவள் பூவுடலைத் தனக்காகப் பூரணமாக இழுக்கவும் செய்தது. அடுத்தபடி ஜுரத்தைப் பார்க்க அவள் கழுத்துக்காகச் சென்றபின் கீழ் இறங்கிய அவன் வலக்கையை மோகனாவின் கரம் பற்றித் தடுத்தது. அவள் விரல்கள் அவன் விரல்களோடு பின்னிக்கொண்டன. பின்னிக் கொண்ட இரு கரங்களும் மெல்ல மெல்லக் கீழே நகர்ந்தன.

9. தாழைக் காட்டுப் பாம்பு

அந்த வாலிப டாக்டரின் விரல்களோடு தன் விரல்கள் பின்னிக் கிடந்ததால் பெருத்த ஆறுதலையே அடைந்தாள் மோகனா. புயலில் சிக்கித் தவித்த மரக்கலத்தைக் கரை சேர்த்துவிட்ட கப்பல் தலைவனின் அமைதியை அடைந் திருந்தது அவள் மனம். தலையில் பட்ட அடியின் விளைவாக அதுவரையில் 'விண்விண்' னென்று தெரித்துக்கொண்டிருந்த காயத்தின் வலி கூடப் பெரிதும் குறைந்துவிட்டதுபோல் தோன்றிற்று அவளுக்கு. அதுவரை அவளைப் புரட்டி எடுத்துக்கொண்டிருந்த ஜ்ர வேகம்கூடச் சற்றுத் தணிந்து தானிருக்க வேண்டும். ஆடாமல் அசங்காமல் படுத்துக் கிடந்தாள் மோகனா. ஆனால் அத்தனை அமைதியிலும் அவஸ்தையும் கலந்திருக்கும் என்பதையும் புரிந்து கொண்டாள் அவள்.

அருகிலிருந்த வாலிபனின் கை விரல்கள் அவள் விரல்களுடன் பின்னியதால் ஒருபுறம் சாந்தியும், வியாதியைப் பற்றிய அலட்சியமும் ஏற்பட்டிருந்தாலும் மற்றொருபுறம் பல இன்ப வேதனைகள் பல அவளை வதைத்துக் கொண்டிருந்தன. அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்ததால் அந்தக் கோரைப் பாய்கூட அம்ச தூளிகா மஞ்சமாகத் தோன்றியது அவளுக்கு. அவன் அருகிலிருந்தாலும் அவன் உடம்பின் சில பாகங்கள் தன்மீது உராய்ந்ததாலும் உணர்ச்சிகள் அவள் உடலெல்லாம் பாய்ந்து இன்ப அலைகளை வாரி இறைத்தன. உள்ளம் விரிந்தது. ஆனால் நாணம் அவள் உடலைக் குறுக்கியது. அவன் கை விரல்கள் தன் விரல்களோடு பின்னிக் கிடந்த போது ஏற்பட்ட அசைவுகளைப் பலவிதமாக அர்த்தம் செய்து கொண்டாள் மோகனா. கற்பனை வரம்பை மீறி ஓடியதால் அவள் அவஸ்தை ஆயிரம் மடங்கு அதிகரித்தது. அனால், அந்த வாலிபனின் அடுத்த நடவடிக்கை அவள் மனம் ஏற்படுத்தியிருந்த கற்பனைக்கும் உடலில்

ஊடுருவியிருந்த அவஸ்தைக்கும் முற்றுப்புள்ளி வைத்தது. திடீரென்று அந்த வாலிப டாக்டர் அந்த அழகியின் பூ விரல்களிலிருந்து தன் விரல்களைக் கழற்றிக்கொண்டு பாயில் சிறிது நகர்ந்தும் உட்கார்ந்தான்.

அவன் அப்படித் தன்னைவிட்டு விலகியது வேம்பாகத் தானிருந்தது மோகனாவுக்கு. ஆனால், 'ஏன் நகர்ந்து விட்டீர்கள்?' என்று எப்படிக் கேட்பாள்? நாணம் அணை போட்டதால் அவள் ஏதும் கேட்க முடியாமல் தவித்தாள். அந்தத் தவிப்பு ஒரு முனகலாகவும் வெளி வந்தது.

அந்த முனகல் அவனை மீண்டும் அவள் பக்கம் இழுத்தது. அவள் தோள்மீது கையை வைத்த சுந்தர், ''ஏம்மா! காயத்தில் இன்னும் வலியிருக்கிறதா?'' என்று கேட்டான்.

''அங்கு வலிக்கவில்லை'' என்றாள் மோகனா.

''பின் எங்கே வலிக்கிறது?'' என்று மீண்டும் வினவினான் சுந்தர்.

''நீங்க ஊசி போட்டீங்களே, அங்கே அந்த இடம்தான் கடுக்கிறது.''

''அதற்கென்ன செய்கிறது? ஊசி போட்டால் கடுக்கத்தான் கடுக்கும். கொஞ்சம் அந்த இடத்தில் எழும்பினாலும் எழும்பும். நாளைக்கு எல்லாம் சரியாகி விடும்'' என்று சொல்லிய சுந்தர், ''எங்கே, இஞ்செக்ஷன் செய்த இடத்தைக் காட்டுங்கள்'' என்று அவள் கை ரவிக்கையைத் தள்ளி அந்த இடத்தைக் கவனித்தான்.

''கை கொஞ்சம் எழும்பித்தானிருக்கிறது. அதனால் பரவாயில்லை'' - ஆறுதல் சொல்லிக் கொண்டே சிறிது அந்த இடத்தைத் தடவியும் கொடுத்தான்.

''அப்பா! இப்படித் தடவினால் வலி கொஞ்சம் குறைவாயிருக்கு'' என்றாள் மோகனா.

வாலிபன் சிரித்தான். மோகனா அதுவரையில் கண்களை மூடிக்கொண்டே பேசிக் கொண்டிருந்தவள் கண்களைத் திறந்து அவனைப் பார்த்து, ''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்று கோபத்துடன் கேட்டாள்.

கூடத்திலிருந்த அந்த 'வால் லாம்' பின் ஒளியில்கூட அவள் கண்கள் ஜொலிப்பதைக் கண்ட சுந்தர் அந்தக் கண்களில் கட்டுண்டு சிறிதுநேரம் பேசாதிருந்தான். ஆனால் மோகனா விடவில்லை. ''என் வலியைக் கண்டு உங்களுக்குச் சிரிப்பாயிருக்கு, இல்லையா?'' என்று மீண்டும் கேள்வியைத் திருப்பினாள்.

''அதற்காகச் சிரிக்கவில்லை. அம்மா.''

''பின் எதற்காகச் சிரித்தீர்கள்?''

''டாக்டர் ஊசி போடறதும் போதாதுன்னு அந்த இடத்தைத் தடவிக் கொடுத்தும் வலியை ஆத்த வேண்டியிருக்கேன்னு சிரிச்சேன்.''

''இதிலே சிரிக்க என்ன இருக்கிறது?''

''பட்டணத்திலே நீ டாக்டர்களைப் பார்த்ததில்லை. கவர்னரைக்கூட வீட்டுக்குக் கொண்டுவந்து விடலாம். ஆனால் டாக்டரைக் கொண்டு வருவது கஷ்டம்; கொண்டு வந்தாலும் வைத்தியம் செய்யச் சொல்றது கஷ்டம். வைத்தியம் செஞ்சாலும் அவர் வாயிலிருந்து வார்த்தையை வரவழைக்கிறது கஷ்டம். அப்படியே இரண்டு வார்த்தை முத்து மாதிரி உதிர்ந்தாலும் வியாதியஸ்தனுக்குப் புரிகிறது கஷ்டம்.''

'டாக்டர்னா அவ்வளவு மோசமா?''

''பொதுவாக அப்படித்தான்; ஆனால் அத்தி பூத்த மாதிரி ஒருத்தர் ரெண்டுபேர் தங்கமானவர்களும் இருக்காங்க.''

''உங்க மாதிரி!''

''ஆமாம்.''

''தற்புகழ்ச்சி பலமாயிருக்கே!''

''தற்புகழ்ச்சி இல்லை; உண்மை. இல்லாமெபோனா டாக்டர் ஊசிபோட்டு ஆறுதல் சொல்லி வலியாறத் தடவிக் கொடுத்து இத்தனை வேலை செய்வானா?''

''உங்களை யார் செய்யச் சொன்னது?''

''உங்கப்பாதான்.''

''எங்கப்பாவா!''

''ஆமாம். அவர்தானே என்னைக் கூப்பிட்டனுப்பினார்.''

''ரொம்ப கெட்டிக்காரர்! செஞ்ச வேலைக்கெல்லாம் பழியை அப்பா மேலேயே தள்ளறதைப் பாரு!''

இதைச் சொன்ன மோகனா சிரித்தாள். சுந்தரும் சிரித்தான். அந்தச் சமயத்தில் இடுப்பில் குடத்துடன் அத்தையம்மாளும் உள்ளே நுழைந்தாள். கூடத்தில் சிரித்து விளையாடிக் கொண்டிருந்த அந்த இருவரையும் பார்த்ததும் அத்தையம்மாளுக்கு எத்தனையோ சந்தோஷமாயிருந்தது. அவர்கள் நெருங்கியிருந்த நிலையைக் கண்டதும் அந்த இரு குழந்தைகளையும் ஆண்டவன் ஜோடி சேர்த்துவிட்டால் எத்தனை நன்றாகயிருக்கும் என்று நினைத்தாள் அத்தையம்மாள். ஆகவே அவர்கள் இருந்த நிலையைக் கண்டும் காணாதது போல் குடத்தை எடுத்துக்கொண்டு சமையலறைக்குச் சென்றாள்.

அத்தையம்மாளைக் கண்டதும் ஏற்கெனவே சற்று தள்ளி உட்கார்ந்திருந்த சுந்தர் நன்றாகத் தள்ளி உட்கார்ந்திருந்தான். மோகனாவும் சற்று நகர்ந்து படுத்துக்கொண்டாள். உள்ளே குடத்தை வைக்கச் சென்ற அத்தையம்மாள் மீண்டும் வெளியே வந்தாள். இனி எந்தக் காரணத்தைச் சொல்லியும் அங்கு உட்கார

முடியாதென்பதைத் தீர்மானித்துக் கொண்ட சுந்தர் வீட்டுக்குக் கிளம்ப எழுந்திருந்தான்.

''ஏன் தம்பி. அதுக்குள்ளாற கிளம்பிட்டே? கொஞ்சம் இருந்துதான் போயேன்'' என்று உபசரித்தாள் அத்தையம்மாள்.

''இல்லையம்மா; வீட்டிலே ரொம்ப வேலையிருக்கு'' என்று சால்ஜாப்பு சொன்னான் சுந்தரம்.

''ஆமாம்; நீ டாக்டரோ இல்லையோ, யாராவது வந்து கிட்டு போய்கிட்டு இருப்பாங்க.''

''டாக்டர் தொழிலை நான் இந்த ஊரிலே வச்சிக்கலை; உங்கவீட்டுப் பெண்ணுக்கு மாத்திரந்தான் வைத்தியம் செய்தேன். அந்தத் தொழிலை முன்னிட்டு யாரும் வரமாட்டாங்க.''

''வேறே என்னப்பா வேலையிருக்கும் வீட்டிலே? அதுவும் நீ ஒண்டிக்கட்டை!''

அத்தையம்மாளின் இந்த வீண் விசாரணை மோகனா வுக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்காததால் அவள் இடைமறித்து, ''ஏன் அத்தே! அதென்ன அப்படிக் கேக்கறே? அவர்களுக்கு எத்தனையோ வேலையிருக்கும்'' என்றாள்.

''பார், தம்பி! மோகனா உனக்குப் பரிஞ்சுகிட்டு வரதை. சரி, உனக்குப் போய்தான் ஆகவேணாம்னா போய் வா'' என்று வேண்டா வெறுப்பாக விடை கொடுத்தாள் அத்தையம்மாள்.

சுந்தர் போகக் கிளம்பினான். அவன் வாயிற்படியை அடைந்ததும் அத்தையம்மாளுக்குச் சந்தேகம் வரவே, ''ஏன் தம்பி! நாளைக்கு ஊசி கீசி போடணுமா?'' என்று கேட்டாள்.

''அதெல்லாம் ஒண்ணும் தேவையிருக்காது. தேவை யிருந்தா சொல்லியனுப்புங்க. நான் வந்து பார்க்கிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான் சுந்தர்.

அடுத்த இரண்டு மூன்று நாட்கள் தொடர்ச்சியாக வந்து மோகனாவின் உடல் நிலையைப் பரிசோதித்தான் அந்த வாலிப டாக்டர். மறுநாளே மோகனாவின் உடல்நிலை சீர்பட்டுவிட்டது. முதல் நாள் குத்தின பெனிஸிலினிலேயே அவள் ஜ்ரம் இறங்கிவிட்டது. நெற்றிக் காயத்துக்கும் இரண்டு நாள் கட்டுப் போட்டு விட்டு, மூன்றாம் நாள் அவிழ்த்து வெறும் பிளாஸ்திரியை ஒட்டிவிட்டான். அந்த ஒரு பிளாஸ்திரிச் சின்னத்தை தவிர மற்றபடி மோகனா பழைய மோகனாவாகி விட்டாள். அவன் ஒவ்வொரு நாள் வரும் போதும் காலையில் பலகாரமும் காப்பியும் தயாராகக் காத்திருந்தன அவனுக்கு. அவன் வேண்டாமென்று எத்தனையோ சொல்லியும் கேட்காத அத்தையம்மாள் அவன் வயிற்றில் தோசை மாற்றி இட்லியும், இட்லி மாற்றித் தோசையுமாகத் திணித்துக் கொண்டிருந்தாள் அவற்றைக் கொண்டு வரும் மோகனாவின் அழகிய கரங்களும், அவள் வெட்கப் புன்னகையும் பலகாரங்களை அவன் வயிற்றில் பல வந்தமாக இறக்கிவிட்டன.

காயம் சில நாட்களில் பூரணமாகக் குணப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு அந்த மாடிவீட்டு வாலிபனும் அங்கு வருவதை நிறுத்திவிட்டான். வைத்தியம் நின்ற பிறகு அவன் போக்கே வேறுவிதமாக மாறிவிட்டதை அத்தையம்மாள் மட்டுமின்றி மோகனாவும் கவனித்தாள். மோகனா பூர்ணமாகக் குணமடைந்துவிட்ட பிறகு அவனை வீட்டுக்கு வந்து போகும்படி அத்தையம்மாள் பலமுறை சொல்லியனுப்பினாள். ஆனால் சுந்தர் அந்த நெட்டு திரும்பவில்லை. அவனது வேலைக்காரன் முருகன் மட்டும் ஓரிருமுறை வந்து "ஐயாவுக்கு வேலை அதிகமாயிருக்கிறது. இன்று வருவதற்கில்லை" என்று சொல்லி விட்டுச் சென்றான்.

இதுமட்டுமல்ல; குளக்கரையில் அவன் நடந்து சென்று கொண்டிருகையில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்திருந்த

மோகனா அவனை இரண்டு மூன்று முறை சந்தித்தாள். ஆனால், அவன் நிற்கவும் இல்லை; அவளுடன் பேசவும் இல்லை. அவளைப் பார்த்துப் புன்முறுவல் செய்துவிட்டு நேராக நடந்துவிட்டான். அவன் தன்னை அசட்டை செய்வதைக் கண்டு மோகனா உள்ளூற அணு அணுவாய்ச் செத்துக் கொண்டிருந்தாள். அவனுடன் தனித்து எப்படியாவது ஒருமுறை சந்தித்துப் பேசி, அவன் நடத்தைக்குக் காரணம் கேட்க வேண்டுமென்று மட்டும் அவள் உள்ளம் துடித்தது. ஆகவே முருகனை அவள் சந்தித்த சமயங்களில் சுந்தரைப் பற்றிய தகவல்களை மெள்ள விசாரிக்கலானாள்.

ஒருநாள் மாடி வீட்டில் மாடு உதைத்து விட்டதால் முருகன், பிள்ளை வீட்டில் பால் வாங்கிக்கொண்டு போக வந்திருந்தான். செம்பில் பாலை ஊற்றிக்கொண்டு வந்து கொடுத்த மோகனா மெள்ள அவனுடன் பேச்சுக் கொடுக்கத் தொடங்கி, ''ஏன் முருகா! உங்க எசமான் எங்கே, ஊரிலே இல்லையா?'' என்றாள்.

''இருக்காங்களே.''

''பின்னே, எங்கேயுமே காணுமே?''

''அவர்தான் அநேகமாக வீட்டைவிட்டு வரதில்லீங்களே.''

''வீட்டிலே நாள் பூராவும் குந்திக்கிட்டு என்னப்பா செய்யறாரு?''

''நாள் பூரா வீட்டிலே இருக்கிறதில்லீங்க. சாயங்காலம் கழனிப் பக்கம் போய்ப் பயிரைப் பார்த்து வர்றாரு.''

''என்ன? பயிரா! அவருக்கு இந்த ஊரிலே நிலம் இருக்கா என்ன?''

''கொஞ்சம் வாங்கியிருக்காருங்க.''

''யார் நிலத்தை வாங்கியிருக்காரு?''

''நம்ப ராமாயணம் சொல்ற ஐயா இல்லீங்க...?''

''யார், உத்திராதிப் படையாச்சியா?''

''ஆமாங்க, அவர் ஒரு வேலி கொடுத்திருக்காருங்க.''

''எப்ப வாங்கினாரு?''

''இப்பத்தான் பத்திரம் ரிஜிஸ்தராகி ரெண்டு நாளாச்சு.''

''ஊஹூம்... கழனி வெளியைப் பார்க்கிறதைத் தவிர உங்க எசமானுக்கு வேறே வேலையில்லைன்னு சொல்லு.''

''ஏன் இல்லீங்க? காலையிலே உலாவப் போவாரு. நம்ப கீழைக்குளத்துத் தாழங்காடு இல்லை...''

''ஆமாம்.''

''அதுக்கெதிரே உட்கார்ந்து தாழங்காட்டையே பார்த்துக்கிட்டிருப்பாரு.''

''ஏம்ப்பா, தாழாங்காட்டிலே என்ன இருக்கு?''

''அவரைத்தாங்க கேக்கணும்.''

அவரைக் கேட்டு விடுவதென்று மோகனா தீர்மானித்தாள். முருகனை அத்துடன் அனுப்பிவிட்டு மறுநாள் சூரியோதயத்திற்கெல்லாம் கீழைக்குளத்துத் தாழங்காட்டை நோக்கி நடந்தாள். தாழங் காட்டுக்கு எதிரேயிருந்த வாய்க்காலின் வரப்பில் சுந்தர் உட்கார்ந்துகொண்டு அந்தத் தாழங்காட்டை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்படிப் பார்த்த அவன் கண்களில் சோகம் ததும்பி நிற்பதைக் கவனித்து, அந்தச் சோகத்துக்குக் காரணம் எதுவாயிருக்கும் என்று நினைத்து, ஏதுமறியாமல் தவித்தாள் மோகனா. பிறகு மெள்ளச் சென்று அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள். அவள் வந்ததையோ உட்கார்ந்ததையோ சுந்தர் கவனிக்கவேயில்லை. அவன்

கண்களும், புத்தியும் தாழங்காட்டில் பதிந்து கிடந்தன. நீண்ட நேர மௌனத்தைத் தாங்க முடியாத மோகனா சற்று நகர்ந்து தன் உடலை அவன்மீது உராய விட்டாள்.

அந்த ஸ்பரிசம் அவனை இந்த உலகத்துக்கு இழுத்து வந்தது. அந்த அதிர்ச்சியில் திடீரெனத் திரும்பிய அவன், மோகனாவைச் சற்றுப் பலமாகவே இடித்து விட்டதால் அவள் வரப்பில் விழுந்தாள். அவள் விழுந்ததைப் பார்த்ததும் அவளைப் பிடித்துத் தூக்காமலே, ''மோகனா! நீயா?'' என்றான் மாடி வீட்டு வாலிபன்.

விழுந்த மோகனாவின் உடலெல்லாம் இன்ப அலைகள் பாய்ந்து சென்றன. அவன் 'நீங்கள்' என்று அழைக்காமல் 'மோகனா' என்று கூப்பிட்டது ஒரு புது உரிமையை ஸ்தாபித்து விட்டது போலிருந்தது அவளுக்கு. அவள் உள்ளத்தில் பெருமகிழ்ச்சி வெள்ளமெடுத்தது. ஆனால், அதை வெளியில் காட்டிக் கொள்ளாமலே, ''ஆமாம்; நான்தான்!'' என்றாள் மோகனா. பொய்க் கோபம் தொனித்த குரலில்.

''அடே அப்பா! ரொம்பக் கோபம் போலிருக்கிறதே'' என்றான் அந்த வாலிபன்.

''கோபம் உங்களுக்குத்தான்.''

''எனக்கா? எனக்கென்ன கோபம்?''

''இல்லாவிட்டால் ஏன் வீட்டுப் பக்கம் வரவில்லை?''

''வேலை இருந்தது.''

''என்ன வேலை? இந்தத் தாழங்காட்டை உற்றுப் பார்க்கும் வேலையா?''

அவன் உடனே பதில் சொல்லவில்லை. சிறிது நேரம் பூமியைப் பார்த்துக்கொண்டு மௌனமாக இருந்தான். பிறகு

தலையைத் தூக்காமலே சொன்னான், ''ஆமாம்; இதுவும் ஒரு முக்கியமான வேலைதான்'' என்று.

''அந்தத் தாழங்காட்டில் என்ன இருக்கிறது?''

''தாழம் பூ இருக்கிறது.''

''அது எல்லோருக்கும் தெரிந்ததுதானே!''

''ஆமாம்; அந்தப் பூவிற்குள் நாகம் இருக்கிறது.''

''அதுவும் எல்லோருக்கும் தெரிந்ததுதான்!''

''ஆமாம்; ஆனால், எல்லாப் பூவிலும் நாகமிருப்பதில்லையே.''

''இல்லை.''

''நாகம் எந்தப் பூவில் இருக்குமென்று யாரால் சொல்ல முடியும்?''

''முடியாது.''

''அதுதான் ரகசியம்'' என்று சொல்லிய வாலிபன் சரேலென்று எழுந்திருந்து அவளுடன் ஏதும் பேசாமல் 'சரசர'வென்று தன் வீட்டை நோக்கி நடந்தான்.

''இந்தாருங்கள்; இப்படி வாருங்கள்'' என்று கூவினாள் மோகனா.

அவன் திரும்பிப் பார்க்காமலே விடுவிடு என்று நடந்தான். மோகனா பிரமை பிடித்தவள்போல் நின்றாள். அவளுக்குப் பின்னால் யாரோ 'கடகட'வென்று சிரித்த ஒலி கேட்டது. மோகனா திரும்பினாள். வரதப்பிள்ளை தன் மீசை மேல் இடது கையைப் போட்டுக்கொண்டு நின்றிருந்தான்! அடுத்த வினாடி வலது கையை எடுத்து அவள் தோள்மேலும் போட்டான்.

10. ''ஐயா இல்லீங்க!''

அந்தக் காலை வேளையில் வரதப்பிள்ளை அவ்வளவு துணிச்சலுடன் தன் தோள்மேல் கையை வைத்ததைக் கண்ட மோகனாவுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வரவே, அவள் அவன் கையைத் தன் இடது கையால் எடுத்து விட்டெறிந்தாள். அவளுடைய இந்தச் செய்கை வரதப் பிள்ளைக்குக் கோபத்தைக் கிளறிவிடவே அவன் ஆத்திரத்துடன் கேட்டான். ''ஏன் மோகனா! உன் புருஷன் கை உம்மேலே பட்டா கோவம்; அந்தப் பய கை பட்டா கோவமில்லையோ?'' என்று.

மோகனா அவனை எரித்துவிடுவதுபோல் ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சொன்னாள்: ''யார் நீ! என் புருஷனா? எப்ப நமக்குக் கலியாணம் ஆச்சு தம்பி?''

''இதோ பார்! மோகனா, என்னைத் தம்பி கிம்பின்னு கூப்பிடக் கூடாது; தெரியுமா?''

''அண்ணேன்னு கூப்பிடட்டுமா?''

''அதுவுங்கூடாது. நான் உன் புருஷன்.''

''அட சீ! உளறாதே!''

''உளறலே மோகனா! உங்கப்பாவே உன்னை எனக்குக் கட்டிக் கொடுக்கணும்னு எங்கப்பாவைக் கேட்டாராம்!''

''ஹாம்...அதுக்கு உங்கப்பா என்ன சொன்னாராம்''.

''சரி! அப்படியே செய்யலாம்னாராம்''.

''ஒத்துக்கிட்டாரா பெரிய மனுஷரு?''

''ஏன்? ஒத்துக்காமெ என்ன?''

''ஒத்துக்காமெ என்ன! உன்னைப்போல மொகரக் கட்டைக்கு எவன் பெண்ணைக் கொடுக்கிறேன்னு வந்தாலும் உங்கப்பன் துள்ளித்தான் குதிப்பாரு,''

''ஏன், எனக்கென்ன குறைச்சல் மோகனா?''

''ஒரு குறைச்சலுமில்லை; வாட்ட சாட்டமாதான் வளர்ந்திருக்கே.''

''பாத்தியா! நீயே ஒத்துக்கிறே''.

''ஆமாம், ஒத்துக்கிறேன். இந்தாங்க வரதப் பிள்ளை...''

''ஐயோ! என் பேரைச் சொல்லிட்டையே'',

''ஏன் உன் பேரைச் சொன்னா நாக்குச் சுட்டுடுமோ? இதோ பாருய்யா, இனிமே எங்கிட்ட வந்து புருஷன் பெண் சாதின்னு கலியாண விஷயத்தைப் பேசினே உன்னை என்ன பண்ணுவேன் தெரியுமா?''

''என்ன பண்ணுவே?''

''புளியம் மிலாறு இல்லே, புளியம் மிலாறு?''

''ஆமாம்; இருக்கு.''

''அதை எடுத்து வீறு வீறுன்னு வீறிப்பிடுவேன்.''

வரதப்பிள்ளைக்கு என்ன செய்வதென்று விளங்காததால் விழித்தான். பிறகு கேட்டான், ''உனக்கு என்மேலே ஏன் அத்தனை கோவம் மோகனா? நான் உன்னை என்ன செஞ்சேன்?'' என்று.

''காலை வேளையிலே இத்தனை வெளிச்சத்திலே வயசான ஒரு பெண்ணு மேலே கையை வைக்கலாமா? மாட்டை ஓட்டிக்கிட்டுப் போற மாட்டுக்காரப் பயங்க கூடல்ல சிரிப்பான்!'' என்றாள் மோகனா.

''ஆமாம்! உன்னை அந்தப் பய தள்ளினானே, அது மாத்திரம் தேவலாமா?''

''அவன் தள்ளலையய்யா. நானால்லெ விழுந்தேன்.''

''தள்ளாம போனா போறான். நீ ஏன் அவன் பக்கத்திலே இந்தக் காலை நேரத்திலே உட்கார்ந்தே?''

அதை நீ யார் கேக்கிறது? என் இஷ்டம் இதோ பார். வரதப் பிள்ளை! நீ குட்டிக்கரணம் போட்டாலும் நான் உன்னைக் கட்டிக்கமாட்டேன், அந்த எண்ணம் ஏதாவது இருந்தா விட்டுவிடு. இனிமே என் வழிக்கு வந்தே, ஆமாம்...'' என்று குரலிலேயே எச்சரித்து விட்டு அந்த இடத்தைவிட்டுப் போக முயன்றாள் மோகனா.

அவளை வரதப்பிள்ளை தடுத்தான். ''இந்தா மோகனா! மீண்டும் போகறத்துக்குள்ளாற உனக்குத் தெரியாத ஒரு விஷயம் சொல்றேன்; கேட்டுட்டுப் போ'' என்று கூறினான்.

இரண்டடி எடுத்து வைத்த மோகனா மீண்டும் திரும்பி, ''என்ன வரதப்பிள்ளை?'' என்று வினாவினாள்.

''அந்த மாடி வீட்டுப் பயல் சம்பந்தத்தை விட்டு விடு,''

''ஏன்?''

''உன் நன்மையை உத்தேசித்துச் சொல்றேன்.''

''ஏன், அவருக்கென்ன. போக்கிரியா சாக்கிரியா?''

''அது என்னமோ, எனக்குத் தெரியாது. ஆனா ஊர் முழுக்க அவனைப்பத்திப் பேச்சா இருக்கு.''

''என்ன பேசிக்கிறாங்க?''

''சிலபேர், அவன் கடனுக்குப் பயந்து இந்த ஊரிலே வந்து ஒளிஞ்சுக்கிட்டிருக்கிறதாப் பேசிக்கிறாங்க. இன்னும் சிலபேர் அவன் ஏதோ குற்றத்தைச் செஞ்சிட்டு இங்கே வந்து தலைமறைவா யிருக்கிறதாச் சொல்றாங்க'',

''இந்த ஊரிலே வம்பைத் தவிர வேறென்ன இருக்கு?''

''வெறும் வம்பில்லே, மோகனா! அவன் ஒழுங்கான வன்னா ஏன் வந்து பொதுவிலே கலந்துக்கிலேன்னு நேத்து

அழகண்ணல்கூடக் கேட்டாரு. அதைத் தவிர எங்கப்பாகூட அவன் மேலே ஒரு கண் வைச்சிருக்காரு.''

''அடப் பாவமே! உங்கப்பா கண் வச்சு உருப்பட்டவன் இந்த ஊரிலேயே கிடையாதே.''

''ஆமாம், மோகனா! அதனாலேதான் சொல்றேன். அப்பா ஊரிலே இல்லே தெரியுமா? பட்டணம் போயிருக்காரு''.

''எதுக்கு?''

''கொஞ்சம் பயிருக்கு உரம் 'புக்' பண்ணிட்டு வர, அதோட இந்தப் பயல் சமாசாரத்தையும் விசாரிச்சுட்டு வரப்போறாரு.''

''ஓ! அப்படியா!''

''ஆமாம் மோகனா!''

''இந்தாங்க...''

''ஹாம்...அப்படிக் கூப்பிடு.''

''நீங்க எனக்கு ஓர் உதவி செய்வீங்களா?''

நல்லா செய்றேன். நீ தலையாலே இட்ட வேலையை நான் காலாலே... இல்லை இல்லை, நீ காலாலே இட்ட வேலையை நான் தலையாலே...''

''செய்றீங்களா?''

''ஹம், சொல்லு.''

''அந்தப் புது ஆள் இருக்காரே...அந்த மாடி வீட்டு ஆசாமி-''

''ஹம்?''

''அவரைப்பத்தி உங்கப்பா தகவல் ஏதாவது கொண்டு வந்தா எனக்குச் சொல்றீங்களா?''

''ஓ! சொல்றேன், உன்னை எங்கே பார்க்கிறது?''

''என் வீட்டுக்கு வாங்களேன்''.

''வரட்டுமா? வரட்டுமா? மோகனா, உன் வீட்டுக்கா வரச் சொல்றே? ஹே!''

''ஆமாம்.''

''சரி, மோகனா! இப்பத்தான் என் மனசு குளிர்ந்தது. நான் வரேன்.''

''போய் வாங்க.''

'அத்துடன் வரதப்பிள்ளை வெட்கத்தால் தன் உடலை அஷ்ட கோணலாக்கிக் கொண்டும் அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டும் போய்விட்டான். மிகுந்த யோசனையுடன் மோகனா வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். அன்று முழுவதும் அவள் வெறும் இயந்திரம் போலவே இயங்கி வந்தாள். மேலைக் குளத்துக்குக்கூட அன்று குளிக்கப் போகாமல் வீட்டிலேயே கொஞ்சம் வெந்நீர் வைத்துக் குளித்துவிட்டு அன்று காலைச் சம்பவங்களை எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தாள். மாடி வீட்டு வாலிபனின் விநோத சம்பாஷணை, அவன் நடந்து கொண்டே விசித்திர முறை எல்லாவற்றையும் நினைத்து நினைத்துப் பார்த்து மனசுக்குள்ளேயே விஷயங்களை அலசிப் பார்த்து ஏதும் தெரியாமல் திண்டாடினாள்.

'அவர் தாழங்காட்டை எதற்காக உற்றுப் பார்க்கிறார்? அந்தக் காட்டில் எதைக் காணப் பிரயத்தனப்படுகிறார்? தாழம்பூவிலிருக்கும் பாம்பைப்பற்றி ஏதேதோ பேசினாரே, அதற்கெல்லாம் என்ன அர்த்தம்?' என்று தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டாள்.

அவன் தாழங்காட்டைப் பற்றிப் பேசியபோதும் மலருக்குள் நாகம் இருப்பதைப் பற்றிப் பிரஸ்தாபித்த போதும் அவன் முகத்தில் இருந்த சோகமும் வெறுப்பும் அப்பொழுதும்

அவள் மனக்கண் முன்பு நின்று கொண்டிருந்தன. 'அவர் சோகத்துக்குக் காரணம் எதுவாயிருக்கும்' என்று நினைத்துப் பார்த்தாள். தாழை மலருக்குள் விஷப்பாம்பு இருக்கும் விஷயத்தை வேறொரு சம்பவத்தைச் சுட்டிக் காட்டவே அவன் கூறியிருக்கிறானென்பதை அவள் சந்தேகமறப் புரிந்து கொண்டிருந்தாலும், அது எதுவாயிருக்க முடியும் என்பதற்கு விளக்கம் தெரியாமல் தவித்தாள் மோகனா. 'அவரையே விளக்கம் கேட்டிருக்கலாம். அதற்குள் தான் சரேலென்று நடந்து விட்டாரே. அப்பா! என்ன அவசரம்! அந்தச் சமயத்தில் என்ன பதற்றம்' என்று நினைத்து மோகனாவே வியந்தாள்.

அவனைக் கண்ட அந்தச் சில நாட்களில் அவள் அவனுடைய நடத்தையில் எந்தவிதப் பதற்றத்தையோ அவமரியாதையையோ காணவில்லை. ஆகவே அன்று காலையில் அவன் போக்கு அவளுக்குப் பெரும் புதிராகவே யிருந்தது.

சாந்தமான ஒரு மனிதனுக்குக் கோபம் வரவேண்டு மானால் காரணம் பலமாக இருக்கவேண்டுமென்று மட்டும் அவள் தீர்மானித்துக் கொண்டாள். ஆழமான நீர்நிலை அலையாது. அது அலையவேண்டுமானால் அதில் பெரிய கல்லைத் தான் எடுத்துப் போட வேண்டும். இயற்கையில் சாந்த சுபாவமுள்ள அந்த வாலிபன் வாழ்க்கையில் பெரிய கல்லை யாரோ எடுத்துப் போட்டிருக்க வேண்டுமென்று மோகனா தீர்மானித்தாள். 'அத்தகைய ஒரு செய்கையால் வாழ்க்கையை வெறுத்துத்தான் அவர் இந்தக் கிராமத்துக்கு வந்து விட்டாரா? அப்படித்தானிருக்க வேண்டும்' என்று மோகனா நினைத்துப் பெருமூச்சு விட்டாள்.

இந்த நினைப்புகளோடு மற்றொரு நினைப்பும் அவள் இதயத்தை வாட்டிக் கொண்டிருந்தது. அன்று காலையில் வரதப்பிள்ளை சொன்ன விஷயங்கள் அவள் மனத்தைப் பெரிதும்

கலக்கின. வரதப்பிள்ளையின் தகப்பன் ராஜபார்ட் ராமலிங்கம்; மாடிவீட்டு வாலிபன் விஷயத்தில் விரோதம் கொண்டு புலன் விசாரிக்க ஆரம்பித்திருக்கிறானென்பதைக் கேட்டதிலிருந்து அவள் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தத்தளித்துக் கொண்டு இருந்தது. 'ராமலிங்கம் சுத்த அயோக்கியனாயிற்றே. அவரைச் சும்மா விடமாட்டானே' என்று நினைத்து ஏங்கினாள் அவள். இந்த விஷயத்தைப் பற்றிச் சுந்தரை எச்சரிக்க வேண்டுமென்றும் அவள் மனம் துடித்தது.

'அவரை எப்படிப் பார்ப்பது? அவர் வீட்டுக்குப் போவதை யாராவது பார்த்தால் கிராமத்தில் கண்டபடி பேச்சுக் கிளம்பிவிடுமே' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். கடைசியாக ஒரு யோசனை தோன்றவே அவள் முகம் மலர்ந்தது. 'அசனகுடி மாட்டு மந்தை இருக்குமிடம் மாடி வீட்டுப் பக்கத்தில் இருக்கிறது. அதைப் பார்ப்பதுபோல் போய்விட்டு அப்படியே அவரையும் பார்த்துவிட்டு வந்தால் என்ன?' என்று நினைத்தாள். அப்படியே செய்யவும் நிட்டம் போட்டாள். பகலும் வெகு விரைவில் ஓடி மாலை நெருங்கியது.

கொஞ்சம் மஞ்சள் வெயில் இருக்கும்போதே புது ஆடைகளைத் தரித்துக்கொண்டு நன்றாக அலங்காரம் செய்து கொண்டாள் மோகனா. முகத்தை இருமுறை கண்ணாடியில் பார்த்துக்கொண்டு, பின்னால் போட்டிருக்கும் பிச்சோடா சரியாக இருக்கிறதா என்பதைப் பார்க்க இன்னொரு கண்ணாடியையும் எடுத்து இரு கண்ணாடிகளையும் முன்னும் பின்னுமாக வைத்து அழகு பார்த்தாள்.

அவள் ஏற்பாடுகளைப் பார்த்த அத்தையம்மாள், ''ஏன் மோகனா! எங்கே போக இத்தனை ஏற்பாடு?'' என்று கேட்டாள்.

''அசனகுடி மாட்டு மந்தைக்குப் போறேன் அத்தே'' என்று பதில் சொன்னாள் மோகனா.

''ஏன்! என்ன விசேஷம்?''

''ஏதோ நாலு மாடுகளுக்கு உடம்பு சரியில்லேண்ணு மானான் வந்து சொன்னான்''.

''எப்ப வந்தான்?''

''நீ குளத்துக்குத் தண்ணியெடுக்கப் போயிருக்கச்சே.''

''சரி; போய்ப் பார்த்துட்டு வா. அதுக்கு எதுக்கு இத்தனை அலங்காரம்?''

''வெளியிலே போகணும்னா நல்லா போக வேணாமா?''

''ஆமாம்; போகணும், இத்தனை நாளா நான் தலைபின்னக் கூப்பிட்டா நீ என்ன பாடு படுத்துவே! அம்மாளுக்கு இப்ப சொந்தமா அலங்காரம் செஞ்சுக்க வேண்டியிருக்கு.''

''போ அத்தே.''

அத்தையம்மாள் உள்ளுக்குள் நகைத்துக் கொண்டாள். மோகனா அசனகுடிக்குப் போகிறேன் என்று சொன்ன உடனேயே விஷயத்தைப் புரிந்துகொண்டாள் அவள். அத்துடன் அவளது அலங்காரத்தையும் பார்த்தவுடன் சந்தேகம் அடியோடு தீர்ந்தது அத்தையம்மாளுக்கு. உள்ளே எழுந்த அபிப்பிராயங்களை வெளியில் காட்டாத அத்தையம்மாள் மோகனாவைப் பார்த்து, ''ஏன் மோகனா! அசனகுடிவரைக்குத் தான் போறது போறே; ஒரு காரியம் செய்யேன்'' என்றாள்.

''சொல்லு அத்தே.''

''அந்த மாடி வீடு பக்கத்திலேதானே இருக்கு?''

''ஆமாம்''.

''அங்கே போய் டாக்டர்கிட்டே காட்டிட்டு வாயேன்.''

''காட்டறதுக்கு என்ன இருக்கு?''

''உன் தலையிலே தான் காயம் இருக்கே.''

''ஆறிப் போச்சு அத்தே.''

''இருந்தாலும் முழுக்க ஆறிப் போச்சான்னு கேட்டுட்டு வாயேன்.''

''நான் எப்படி அத்தே ஒண்டியா அந்த வீட்டுக்குப் போவேன்?''

''அட! டாக்டர் வீட்டுக்குப் போறதுக்கு எதுக்குத் துணை? நீ என்ன, அவனைக் கட்டிக்கவா போறே?'' என்று சொல்லி அத்தையம்மாள் புன்முறுவல் செய்தாள். அவளைத் திரும்பிப் பார்த்த மோகனாவும் புன்முறுவல் செய்தாள். ஒருவர் மனத்திலோடிய எண்ணங்களை இன்னொருவர் நன்றாகப் புரிந்து கொண்டார்கள். மானான் அந்தப் பக்கமே வரவில்லை யென்பதும், எந்த மாட்டுக்கும் எந்த வியாதியும் கிடையா தென்பதும் அத்தையம்மாளுக்கு மிக நன்றாகத் தெரியும். ஆனால், தான் அருமையாக வளர்த்த குழந்தையின் ஆசையைக் கெடுக்கக் கூடாதென்ற காரணத்தால் அந்தப் பொய்யை நம்புவது போல் நடித்தாள் அத்தையம்மாள்.

அத்தையம்மாளிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு அசனகுடிக்குப் போன மோகனா வெகு நேரம் மாடுகளுடனும் கன்றுகளுடனும் காலங் கழித்தாள். அங்கிருந்த மானான் சம்சாரத்துடனும் சம்பந்தமில்லாமல் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாள். அன்றைய மாலை வேளை மிக ரம்மியமாகத் தானிருந்தது. மந்தையிலிருந்த கன்றுக் குட்டிகளும், ஆட்டுக் குட்டிகளும், துள்ளி விளையாடிக் கத்திக் கொண்டிருந்தன. அவற்றின் கழுத்துக்களிலிருந்த மணிகளின் சத்தம் இன்பமாகக் கேட்டது. மாட்டுக்காரப் பையன்கள் இருவர் மந்தையிலிருந்து விலகியோடிய கன்றுக்குட்டிகளை விரட்டி மந்தையில் கொண்டுவந்து சேர்த்துக் கொண்டிருந்தார்கள். இவையெல்லாம் கண்கொள்ளாக் காட்சியாகத் தானிருந்தன, மனோநிலை சரியாயிருந்தால் மோகனாவும் இவற்றை யெல்லாம் நன்றாக

ரசித்திருப்பாள். ஆனால் அன்று அவள் மனத்தில் இயற்கைக் காட்சிகளுக்கு இடமில்லை. இடம் பூராவையும் மாடிவீட்டு வாலிபன் குத்தகை எடுத்துக் கொண்டிருந்தான்.

மாலை மறைந்து இருளும் கவிய ஆரம்பித்தது. மானான் மனைவியிடம் விடைபெற்றுக் கொண்ட மோகனா மெள்ள நடந்து மாடிவீட்டை அடைந்து கதவைத் தட்டினாள். கதவைத் திறந்த முருகன் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப் போய், ''வாங்கம்மா! உள்ளே வாங்க!'' என்று அழைத்துக் கூடத்தில் உட்கார வைத்து, ''எங்கேம்மா வந்தீங்க!'' என்று விசாரித்தான்.

''ஐயாவைப் பார்க்கத்தான் வந்தேன் முருகா!'' என்றாள் மோகனா.

''ஐயா இல்லீங்களேயம்மா!'' என்று பதில் சொன்னான் முருகன்.

''அவர்தான் எங்கேயும் போறதில்லேண்ணையே.''

''ஆமாம் அம்மா. ஆனால் இன்னைக்குச் சாயந்தரம் ஏதோ அவசரச் செய்தி வந்ததுன்னு புறப்பட்டுப் பேரளம் போனாரு.''

''எப்ப வருவாரு?''

''தெரியாதுங்களே.''

''வந்தா நான் வந்துட்டுப் போனேன்னு சொல்றியா?''

''சொல்றேம்மா.''

''சரி! நான் வரேன்'' என்று சொல்லிவிட்டு மோகனா வீட்டுக்குக் கிளம்பினாள். அவள் வெளியே சென்றதும் வாயிற் கதவைத் தாழ்ப்பாள் போட்டான் முருகன்.

ஆனால் முருகன் நினைத்தபடி அவள் உடனே வீட்டுக்குச் செல்லவில்லை. கூடத்தில் உட்கார்ந்திருந்தபோது மாடிமீது மனிதர் உலாவும் சத்தம் அவள் காதுகளில் விழுந்திருந்தபடியால், அவள் வாசலில் சிறிது நேரம் நின்றாள். பிறகு மெள்ள நடந்து

மாடி வீட்டுக்கெதிரிலிருந்த பாதையிலிருந்த சரிவினின்றும் திரும்பி மாடியறையைக் கவனித்தாள். மாடியறையில் விளக்கு பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் அங்கு பேசிக்கொண்டிருந்த இரு உருவங்கள் நன்றாகத் தெரிந்தன மோகனாவின் கண்களுக்கு. அவர்களில் ஒருவன் மாடி வீட்டுக்குச் சொந்தக்காரனான அந்தச் சுந்தர்தான்.

11. மாரியம்மன் அலறல்

மாடி அறையில் விளக்கொளியில் நின்ற சுந்தரைக் கண்ட மோகனா சிறிது நேரம் பாதையிலேயே நின்று அவனை உற்றுக் கவனித்தாள். விளக்கொளி அவன் முகத்தை நன்றாகக் காட்டியபடியால் அந்தச் சுந்தர் முகத்திலே பிரதிபலித்த கவலைக்குறி அவளுக்குத் தெள்ளெனத் தெரிந்தது. அத்துடன் அவன் எதிரேயிருந்த மனிதனுடன் பேசியபோது ஓரளவு பதற்றமும் இருந்ததையும் மோகனா கவனித்தாள். இத்தனையையும் கவனித்த அவள் வேறொரு சமயமாயிருந்தால் சுந்தரைப் பற்றி மனமுருகித் தவித்திருப்பாள். ஆனால், அன்று அவள் மனம் பாராங்கல்லாக இறுகிவிட்டது.

மாடியறையில் சுந்தர் இருந்தபொழுதே இல்லையென முருகன் பொய் சொல்லியது அவள் மனத்தைச் சுக்குநூறாக வெடிக்கும்படிச் செய்து கொண்டிருந்தது. அந்தப் பொய்யை முருகன்தான் வேண்டுமென்று சொன்னானா, இல்லை அது சுந்தரின் உத்தரவாயிருக்குமா என்பதை எண்ணிப் பார்த்தவள், அது சுந்தரின் கட்டளையாகத்தானிருக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். சுந்தர் தன் வீட்டுக்கு வருவதைச் சட்டென்று நிறுத்திவிட்டதையும், வழியில் பார்க்கும் சமயங்களிலும் தன்னுடன் பேசாமல் போய்க் கொண்டிருந்ததையும், அன்று காலையில் தான் வலியப் பேசச் சென்றபோதும் ஏதோ

தாறுமாறாகப் பதிலைச் சொல்லிவிட்டு ஓடிப்போய் விட்டதையும் எண்ணிப் பார்த்த அவள் 'என்னை எந்தக் காரணத்தாலோ கிட்டே சேர்க்க அஞ்சுகிறார். ஆகையால்தான் முருகனுக்கு இப்படி உத்தரவிட்டிருக்கிறார்' என்று நினைத்தாள்.

இத்தகைய நினைப்புகள் நெஞ்சில் அலைமோத பாதையில் சற்று நேரம் நின்ற மோகனா மீண்டும் ஒருமுறை மாடியறைக்காகக் கண்ணைச் செலுத்திவிட்டு 'விடுவிடு' என்று வீட்டை நோக்கி நடந்தாள். போகும்போது நேர் வழியாகப் போகாமல் அசனகுடிக்கு மீண்டும் போய்த் தயிர்க்கார ஆதியிடம் சிறிது நேரம் மன ஆறுதலுக்காகப் பேசிவிட்டு வீட்டுக்குக் கிளம்பினாள்.

அசனகுடியில் மோகனா ஆதியுடன் பேசினாளே தவிர பேச்சில் தொடர்பில்லை, உணர்ச்சியுமில்லை ஆதி ஏதோ கேட்க அவள் ஏதோ பதில் சொன்னாள். சில கேள்விகளுக்குப் பதில் சொல்லாமலே பட்டியிலிருந்த ஆடுகளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். மோகனாவைக் குழந்தைப் பருவத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த ஆதி அவள் மனச் சஞ்சலத்தைக் கண்டு பெரிதும் ஏங்கி, ''ஏன் கொளந்தை...! ஏதாச்சும் வீட்டிலே...' என்று சூசகமாக அவள் மனக்கலக்கத்திற்குக் காரணத்தை விசாரித்தாள்.

மோகனா ஒரு விநாடி பதில் சொல்லவில்லை. கடைசியாகப் பெருமூச்செறிந்து விட்டுச் சொன்னாள்: ''இல்லை ஆதி! வீட்டிலே ஒண்ணும் தகராறு இல்லை. என்னை யார் என்ன சொல்லப் போறாங்க? அப்பாரு சொல்வாரா, இல்லே அத்தைத்தான் சொல்வாங்களா?''

''அதானே கேட்டேன். அப்பாரு உம்மேலே உசிரையே வச்சிருக்காரு. நீ உக்காந்திருந்தே நகத்தி வச்சிட்டு விளக்குவாங்க அத்தையம்மா'' என்று ஆதியும் கூடப் பாடினாள்.

மோகனா அத்தனை செல்லப் பெண்ணாயிருக்க வீட்டில் யாரும் எதையும் சொல்லியிருக்க மாட்டார்களென்பது ஆதிக்குத் தெரியும். ஆனால், உண்மைக் காரணத்தை அறியவே அப்படிச் சம்பாஷணையைத் துவக்கினாள். ஆனால் சம்பாஷணையில் அதிக முன்னேற்றம் ஏற்படவில்லை ஆதிக்கு. மோகனா அவ்வப்பொழுது பேச்சைத் துண்டித்தாள். ஆதிக்கு மோகனாவின் மனோநிலை ஓரளவு புரிந்தேயிருந்தது. காலையில் நடந்த குளத்தடி நிகழ்ச்சி ஊர் பூராவும் அடுத்த சில வினாடிகளில் பரவியிருந்தது.

குளத்துக்குக் குளிக்க வரும் பெண்கள், வயற்காட்டில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த மாட்டுக்காரப் பையன்கள் எல்லோரும் தாழைக் காட்டருகில் நடந்த காலை நாடகத்தைக் கவனித்துக் கொண்டுதானிருந்தார்கள். மாடிவீட்டு வாலிபன் பக்கத்தில் மோகனா தானாகப் போய் உட்கார்ந்து, பேசியது, கடைசியாக அவளைத் தள்ளிவிட்டு அவன் சென்றது, பிறகு நடைபெற்ற வரதப்பிள்ளை படலம் ஆகிய எல்லாம் ஒன்றுக்குப் பத்தாகச் சமையலறைகளிலும், வாய்க்காங்கரையிலும் கிசுகிசுவென்று மிக ரகசியமாகப் பேசப்பட்டன. காதுக்குக் காது வைத்து அத்தனை ரகசியத்துடனேயே ஊர் முழுக்கப் பரவிய அந்த ரகசியம் தயிர்க்கார ஆதிக்கு மட்டும் தெரியாமலா போகும்?

அந்தத் தகவல்களை அறிந்திருந்த ஆதி, மோகனா அசனகுடிக்கு வந்த காரியத்தை ஒரு விநாடியில் புரிந்து கொண்டாள். படிக்காதவளானாலும் மிகச் சூட்சும புத்தியுடைய ஆதி, மோகனா வந்தது மாடி வீட்டு வாலிபனைச் சந்திக்கவே என்பதையும், அங்கு ஏதோ தகராறு நேரிடவே தன்னிடம் ஆறுதலுக்காக வந்திருக்கிறாளென்பதையும் சந்தேகமறத் தெரிந்துகொண்டாலும் அதை வெளியில் காட்டாமல், வேறு துறைகளில் பேச்சைத் தொடங்கினாள். அந்தப் பேச்சு பயன்படாமற் போகவே நேராக விஷயத்துக்கும் வந்தாள்.

''ஏம்மா! மோகனா! நான் ஒண்ணு கேக்கறேன்; கோவிச்சுக்க மாட்டியே?''

''இல்லை ஆதி! உம்மேலே ஏன் கோவிச்சுக்கணும்?''

''கண்ணு! உங்கம்மா உன்னைச் சின்ன வயசிலே விட்டு விட்டுப் போய்ட்டாங்க; பின்னாடிதான் அத்தையம்மா வந்தாங்க. அதுவரைக்கும் நீ என் பாலைக் குடிச்சுதான் வளர்ந்தே.''

''அது தெரியுமே ஆதி எனக்கு.''

''நீ பாலைக் குடிச்சிட்டுப் பாதியிலே வாயை இளுத்துக்கிட்டு என்ன அளகாச் சிரிப்பே தெரியுமா? வாயிலே பால்வளியும் கண்ணு!''

''ஆதி! எனக்கு அம்மாவைத் தெரியாது; உன்னைத் தெரியும். அதுக்கப்புறம் அத்தையைத் தெரியும்.''

''அதனாலேதான் கேக்கறேன் கண்ணு! சந்தேகப்படாதே சொல்லு. உங்கம்மாயிருந்தா சொல்லமாட்டியா?''

''எதைச் சொல்லணும்?''

''ஊர் முளுக்க ஏதோ பேசிக்கிறாங்களே?''

''என்னைப் பத்தியா?''

''ஆமாம், கண்ணு!''

''என்ன பேசிக்கிறாங்க?''

''நீயும் அந்த மாடி வீட்டு எசமான் இருக்காங்களே அவரும்...''

''சொல்லு ஆதி!''

''தாழங்காட்டுப் பக்கத்திலே உட்கார்ந்து பேசிக்கிட்டிருந்தீங்களாமே.''

''ஆமாம் ஆதி!''

''கண்ணு! நீ இப்படிச் செய்யலாமா? இந்த ஊர் விஷயம் உனக்குத் தெரியாதா?''

''இதிலே என்ன தப்பு ஆதி! அவர் எனக்கு வைத்தியம் செஞ்சாரு. அதைப்பற்றிப் பேசிக்கிட்டிருந்தேன்.''

''நீயோ வயசு வந்த பொண்ணு கண்ணு! வயசு வந்த ஆம்பிளையோடெ பேசினா கிராமம் சும்மா இருக்குமா?''

''கிராமத்துக்கு என்னைப்பத்தி என்ன கவலை?''

''மத்தவங்களைப் பத்திதாம்மா இந்த ஊர்லே இருக்கிறவர்களுக்குக் கவலை. சொல்றேன்னு கோவிச்சுக்காதே; நீ அவர் இருக்கிற நெட்டு நாடாதே. இப்போகூட அங்கே தானே போய் வர்றே?''

''ஆமாம்.''

''உனக்கே நல்லா இருக்கா?''

''அத்தையம்மாதான் போய்த் தலையைக் காட்டிவிட்டு வரச் சொன்னாங்க.''

''நல்ல அத்தையம்மா!'' என்று அலுத்துக்கொண்டாள் ஆதி. அவள் அலுத்துக்கொண்டதன் காரணமும் மோகனாவுக்கும் முழுக்க முழுக்க விளங்கிவிட்டதால் அவள் ஏதும் பதில் சொல்லாமலே வீட்டுக்குப் போக எழுந்து, ''நான் வர்றேன் ஆதி'' என்றாள்.

''இரு கொளந்தே! குடுவையிலே கொஞ்சம் பால் தரேன்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்று, ஒரு மண் குடுவை நிறைய ஆட்டுப்பாலை எடுத்துக் கொண்டு வந்து, ''இதைக் கொண்டு அப்பாருக்குக் கொடு. அவங்களுக்கு ஆட்டுப்பால்னா பிடிக்கும்'' என்று சொல்லிக் கொடுத்தாள்.

மோகனா அதை வாங்கிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள். அசனகுடிக்கும் அவள் வீட்டுக்கும் அதிகத் தூரமில்லை. ஆனாலும் நடுவிலுள்ள ஒரு சிறு தென்னந் தோப்பைச் சுற்றி வளைத்துச் செல்லும் ஒரு பாதை வழியாகப் போய்க் கண்ணப்பிள்ளையின் கருப்பட்டிக்கடைக்காகத் திரும்பிச் செல்ல வேண்டும். அந்தப் பாதையில் ஏதேதோ யோசித்துக் கொண்டே மோகனா நடந்தாள். விளக்கு வைத்து, பொழுது நன்றாக ஏறிவிட்டதால் கீழ்க் குளத்தில் குளித்து விட்டுச் சேரிக்குப் போய்க்கொண்டிருந்த மானான் அவளைக் கண்டு, ''என்னா கொளந்தை! நான் துணைக்கு வரட்டுமா?'' என்று குரல் கொடுத்ததுகூட அவள் காதில் விழவில்லை. அப்படி எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் சென்ற அவள் காதிலும் ஒரு சத்தம் விழத்தான் செய்தது. அந்தச் சத்தம் சாதாரணச் சத்தமல்ல; அந்தச் சத்தத்தில் ஒலித்து உதிர்ந்த சொற்கள் அவள் அதுவரை கேட்டிராத சொற்கள். அவளென்ன, தஞ்சை ஜில்லாவிலேயே யாருமே கேட்டிராத சொற்கள்!

மோகனா அந்தச் சிறு தென்னந்தோப்பைத் தாண்ட வில்லை. தென்னந்தோப்பு முடிந்து கண்ணப்பிள்ளையின் கருப்பட்டிக் கடைக்காகத் திரும்பும் வழிக்குத்தான் வந்திருந்தாள்.

''ஏ பொண்ணு! நில்லு!'' என்றது ஒரு முரட்டுக் குரல். திரும்பிப் பார்த்த மோகனா திடுக்கிட்டாள். தென்னந்தோப்பின் நிழலிலிருந்து புறப்பட்டது ஒரு பயங்கர உருவம். நிழலைவிட்டு வெளிச்சத்தில் வந்ததும் அதை ஏற இறங்கப் பார்த்த மோகனா அசந்து போனாள். வந்தவன் வேறு யாருமல்ல; மாடியறையில் சற்றுமுன் சுந்தருடன் பேசிக் கொண்டிருந்த அதே மனிதன்தான். அவன் உருவத்தைப் பார்க்கவே குலை நடுங்கிற்று மோகனாவுக்கு.

வந்தவன் பரம தடியனாயிருந்தான். நல்ல உயரங் கூட; அவன் உதடுகள் சதா சிகரெட் குடித்ததால் கறுத்துக் கிடந்தன. தினசரி குடிக்கும் பழக்கமுள்ளவனாதலால் கண்கள் செக்கச் செவேலென்று கோவைப் பழங்களைப் போல் காட்சியளித்தன. அவன் தடி உருவத்தை ஒரு 'கட் பனியன்' மட்டுமே 'பிட்' டாகப் பிடித்துக் கொண்டிருந்ததால், உடலில் மார்புப் பிரதேசத்திலும் பக்கவாட்டிலும் மண்டிக் கிடந்த ரோமங்கள் ஒரு பெருங்காட்டையே சிருஷ்டித்திருந்தன. தலைக்கிராப்பிலும் மயிர் மண்டி, திண்டு திண்டாக இரண்டு மூன்று இடங்களில் சுருண்டு கிடந்தது. அந்த உருவத்தின் கோரத்தை அவன் இடையிலிருந்த லுங்கி இன்னும் பயங்கரமாக்கியது. அந்த லுங்கியை அவன் பாதம் வரையில் தொடங்கவிடாமல் எடுத்து முழங்காலுக்கு மேல் இரட்டையாகக் கட்டியிருந்தபடியால் அவனைச் சுற்றியிருந்த லுங்கி ஆடை முனிசிபாலிடி குப்பைத் தொட்டிபோல் சக்கரவட்டமாகத் தெரிந்தது. அவன் பக்கா பட்டணத்து ரௌடியென்பதை அவன் முகம், நடை உடை பாவனைகள் அனைத்தும் மிகத் தெளிவாகத் நிரூபித்தன. இத்தனைக்கும் சிகரம் வைத்ததுபோல் அவன் கக்கத்திலே ஒரு சிறு பிரம்பையும் அடக்கியிருந்தான்.

அவனைப் பார்த்ததும் பயத்தினால் 'சரசர'வென்று நடக்கத் தொடங்கிய மோகனாவை அவன்சட்டென்று முன்னால் இரண்டடி எடுத்து வைத்து மடக்கி நின்றான்.

''விடு வழியை!'' என்று சீறினாள் மோகனா. சீறல் மேலுக்கு இருந்ததேயொழிய உள்ளூறத் கொஞ்சம் குலை நடுக்கமிருந்ததால் குரல் சற்றே நடுங்கத்தான் செய்தது.

''என்னா பொண்ணு! நம்மக்கிட்டேயே ராங் பண்றே? ஸொம்மா நில்லு'' என்றான் அந்த ரௌடி.

''டேய்! விலகி நில்'' என்றாள் மோகனா மீண்டும்.

''என்னம்மா கண்ணு! ஐயாவையே சதாய்க்கிறே! ஐயா கேக்கிறதுக்குப் பதில் சொல்லிவிட்டு நவுரு. இல்லே?''

''இல்லாட்டி என்ன செய்வியாம்?''

''அப்படியே உன்னை சுத்திக்குவேன். கண்ணு. உன் பேரும் நல்லாத்தான் கீது மோவுனா இல்லை மோவுனா? ஸ்டார் பேரு மாதிரி கீது? இல்லே? அந்தக் கயிதே மாட்டிக்குவானா உங்கிட்டே?''

இந்தப் பேச்சைக் கேட்ட மோகனா அடியோடு திகைத்துப் போனாள். தனக்கும் சுந்தருக்குமுள்ள நேசம் இவனுக்கு எப்படித் தெரியும் என்று திகைத்த அவள், மெள்ள அவனைத் தாண்டிப் போய்விட வேண்டும் என்ற எண்ணத்தால், ''சரி, சரி! உன்னுடன் பேச இஷ்டமில்லை. வழியை விடு'' என்று போக முற்பட்டாள். அந்தப் பட்டணத்து ரௌடி அவளைத் தாண்டவிடாமல் மறித்ததன்றி, அவள் மேல் தன் முரட்டுக் கை ஒன்றையும் வைத்தான்.

''ஐயோ! மானான்! மானான்! வாயேன்'' என்றலறினாள் மோகனா. அந்தப் பட்டணத்து ரௌடியின் முகம் அவளுக்கு வெகு அருகில் வந்தது. அவன் வாயிலிருந்து எழுந்த குடியின் துர்நாற்றம் அவள் மூக்கைப் பிளந்து மதியையும் மயக்கும் நிலைமைக்குக் கொண்டு போயிற்று. அவள் கால்களில் தன் கைகளில் ஒன்றைக்கொடுத்துத் தூக்கவும் முற்பட்டான் அந்த ரௌடி. மோகனா, ''ஐயோ ஐயோ'' என்று மேலும் மேலும் அலறினாள். அவள் அலறல் தென்னந்தோப்பை ஊடுருவிச் சற்று தூரத்திலிருந்த மாரியம்மன் கோயில் மதில்மீதும் தாக்கி, 'ஐயோ, ஐயோ' என்று பலமாக எதிரொலியும் கிளப்பி, அந்த அபலைக்காக மாரியம்மனே அலறுவது போன்ற பிரமையைக் கிராமம் முழுவதும் சிருஷ்டித்தது.

12. மனத்தில் பெரும் திகில்

மாரியம்மனே அலறியது போல் வீறிட்டெழுந்த மோகனாவின் அபயக் குரலைக் கேட்டுக் கிராமமே திரண்டெழுந்து ஓடிவந்தது. தென்னந்தோப்பிலிருந்து அலறல் எழுந்ததை அப்பொழுதே குடிசைக்குள் நுழைந்த மானான் கூடக் கேட்டுச் சேரியிலிருந்து ஓடிவந்தான். கருப்பட்டிக் கடைக் கண்ணப்பிள்ளையும் கூடக் கடையை விட்டிறங்கி, தொந்தி குலுங்கப் பெருநடை நடந்து வந்தார். ஆனால், இத்தனை பேரும் வருவதற்கு முன்பாகத் தென்னந் தோப்புக்கருகில் விஷயங்கள் வெகு துரிதமாக நடந்தேறி விட்டன. மோகனாவின் மேல் கையை வைத்துத் தூக்க முயன்ற பட்டணத்து ரௌடி பலமான ஒருகையால் பின்னுக்கு இழுக்கப்பட்டான். அடுத்த விநாடி அவன் தலையிலும், கழுத்திலும் இறங்கிய சில குத்துக்கள் அவனைத் தரையில் சாய்த்து விட்டன. ஏற்கெனவே குடியால் நிதானத்தை இழந்திருந்த பட்டணத்து ரௌடி அந்த இரண்டடியில் பிரக்ஞையை அடியோடு இழந்து விட்டதில் ஆச்சரியமில்லை. ஆனால். அவன் கடைசியாகத் தரையில் சாயுமுன்பு தன்னை அடித்தவனைப் பார்த்த பார்வையில் ஆச்சரியம் கலந்திருந்தது. ''நீ...நீயா!'' என்று குளறிக்கொண்டே 'தடா' லென்று பூமியில் விழுந்தான்.

ஒரு பெண்ணை வழி மறித்துப் பலவந்தம் செய்ய முன் வந்த சம்பவத்தை அந்தக் கிராமத்தில் அதுவரை யாரும் கேள்விப்பட்டதில்லை. அத்தகைய சம்பவங்கள் நடக்கும் அளவுக்கு அந்தக் கிராமம் முன்னேறவில்லை. ஆகவே மோகனாவுக்கு பேரதிர்ச்சியாகத்தான் இருந்தது, அன்றைய நிகழ்ச்சி. அந்த அதிர்ச்சியிலிருந்து நீங்கிச் சுயநிலை வந்து ஆடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு தனக்குச் சமயத்தில் உதவியது யார் என்று ஏறெடுத்துப் பார்த்தாள். அழகண்ணல் எதிரே நின்று கொண்டிருந்தார்!

''அண்ணா! நீங்களா!'' என்றாள் மோகனா ஏதோ சொல்லவேண்டும் என்பதற்காக. அவள் குரல் துக்கத்தாலும் பயத்தாலும் நடுங்கிக் கொண்டிருந்தது.

அழகண்ணல் மனம் பனிக்கட்டி போல் கரைந்தது. உண்மையில் அழகண்ணல் வெளித் தோற்றத்துக்குப் பயங்கரமான ஆளேயொழிய, சுபாவமாகக் கெட்டவரல்லர். கழகத்தில் சேர்ந்து சில பித்துக்குளி அபிப்பிராயங்களைக் கொண்டவரே யொழிய அவர் மனசு தங்கம். 'கலியாணத்தில் தாலி கட்ட வேண்டியது அவசியமா? இல்லை, யாரையாவது வைத்துப் பிரசங்கம் செய்யச் சொன்னால் போதுமா? ஆரியர்களுக்குப் பூணூல் அவசியமா? அவற்றை அறுக்கலாமா வேண்டாமா? என்பன போன்ற வீண் பிரச்சினைகளில் மனத்தைக் குழப்பிக் கொள்வாரே தவிர, மனிதன் உண்மையில் தங்கக் கம்பி. இழுத்த இழுப்புக்கு வருவார். யாருக்காவது ஆபத்து என்றால் மனம் தாளாதவர். அவர் இளகிய மனத்தைப் பார்த்த பல கழகச் சகோதரர்களுக்கு அழகண்ணலைக் கழகத்தில் வைத்துக் கொள்வது நல்லதுதானா என்பதில்கூடச் சந்தேகம் உண்டு.

அழகண்ணல் தம் வாழ்க்கையைப் பல வழிகளில் கட்டுப்படுத்தி வைத்திருந்தார். அமாவாசை தினங்களிலும் இதர புண்ணிய தினங்களிலும் அந்நிய பதார்த்தங்களைக் கையால் தொடக்கூட மாட்டார். ஆரியரால் சிருஷ்டிக்கப்பட்ட அமாவாசை முதலிய தினங்களை ஆரியர்போல் அநுஷ்டிப்பது சரியா என்று அவரை யாரும் கேட்கக்கூடாது, கேட்டால் உதைத்துப் பிய்த் தெறிந்து விடுவார். அவர் கழக சகோதரர்கள் கூட அவர் கோபத்துக்கும் உதைக்கும் பயந்து அவரை எந்தக் கேள்வியும் கேட்டது கிடையாது. அவருடைய வாழ்க்கை வெளியே கழகமாகவும், வீட்டில் ஆரியமாகவும் திகழ்ந்ததற்குக் காரணம் அவரது பிடிவாதத்தைத் தவிர வேறொன்றுமுண்டு. வீட்டில் இருந்த அவர் மனைவியார் ஆரியர்களைவிட

மோசமான பழக்கங்களை உடையவர். மகா ஆசாரம். வராஹாச்சாரியைப் போல அரை ஆசாரமல்ல; முழுக்க முழுக்க ஆசாரம். வெளியிலே எல்லோரையும் மிரட்டிவந்த அழகண்ணலின் ஜம்பம் வீட்டில் மாத்திரம் என்றும் சாய்ந்ததில்லை. மனைவியிடம் அதிக அன்பும் பயமும் கொண்டவர்.

இத்தகையக் குடும்ப வாழ்க்கையும் பழக்கவழக்கங் களுமுள்ள அழகண்ணலின் இதயம் மோகனாவின் கஷ்டத்தைக் கண்டு கரைந்ததில் விந்தையென்ன இருக்கிறது? ஆகவே அவர் கேட்டார், ''தங்கச்சி! இந்தப் பய உன்னை ரொம்ப இம்சை செய்துட்டானோ?'' என்று.

''இல்லையண்ணா தோளைப் பிடித்தான்; என்னைத் தூக்க முயன்றான். கத்தினேன். அதற்குள் நீங்களே வந்து விட்டீர்களே'' என்று பதில் சொன்னாள் மோகனா.

''ஏன் தங்கச்சி! இத்தனை நேரம் கழிச்சுப் பொம்பளைங்க வெளியிலே உலாவலாமா?'' என்று சற்றுக் கடிந்துகொண்ட அழகண்ணல், மீண்டும் ஒரு முறை தரையில் சாய்ந்து கிடந்த ரௌடிமீது கண்களை ஓடவிட்டார். பிறகு சிறிது நேரம் யோசித்துவிட்டுத் திரும்பிப் பார்த்தார். தூரத்துக் குடிசைகளி லிருந்தும் மாரியம்மன் கோயிலுக்குப் பக்கத்திலிருந்த தெருவிலிருந்தும் பலர் ஓடி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்குச் சற்று முன்னால் கண்ணப்பிள்ளையும் தொந்தியைச் சமாளிக்கக் கால்களை அகலப் போட்டு நடந்து வந்து கொண்டிருந்தார்.

அவர்களை நோக்கிய அழகண்ணல் 'சட்'டென்று மோகனாவை நோக்கி, ''தங்கச்சி எனக்கு ஓர் ஒத்தாசை செய்வியா?'' என்று கேட்டார்.

''என்னண்ணா அப்படிக் கேக்கிறீங்க? சொல்லுங்க செய்கிறேன்.''

''தங்கச்சி! இவன் எனக்குத் தெரிஞ்சவன். கண்ணப் பிள்ளையெல்லாம் வந்து கேட்டால் இவன் என்ன செஞ்சாங்கறதைச் சொல்லாதிருக்கையா?'' என்று கெஞ்சினார் அழகண்ணல்.

மோகனாவின் புருவங்கள் ஆச்சரியத்தால் முகத்தில் சற்று மேலே ஏறி இறங்கின. கடைசியில் பெருமூச்சொன்றை விட்டு, ''சரியண்ணா! உங்கள் இஷ்டம்'' என்றாள்.

அப்பொழுதுதான் அழகண்ணலுக்கு உயிர் வந்தது. ''தங்கச்சி! இந்த உதவியை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன்'' என்று குரல் குழையச் சொன்னார். அதற்குள்ளாகக் கண்ணப் பிள்ளை தலைமையில் ஊராரும் மானான் தலைமையில் சேரியாரும் வந்து சேர்ந்தனர். கண்ணப்பிள்ளை அருகில் வந்து கீழே கிடந்த ரௌடியையும் மோகனாவையும் அழகண்ணலையும் மாறிமாறி நோக்கிவிட்டு, வாயிலிருந்த வெற்றிலையைக் குதப்பிக் கொண்டே ''என்னம்மா இது? ஏன் கூச்சல் போட்டே? இவன் ஏதாச்சும் தொந்தரவு செஞ்சானா?'' என்று கீழே கிடந்த ரௌடியைச் சுட்டிக்காட்டிக் கேட்டார்.

''இல்லீங்க! இந்தப் பய யாரோ தெரியலை. குடிச்சுட்டுக் கிடந்திருக்காரு. தங்கச்சி அசனகுடியிலேயிருந்து வரச்சொல்ல இவன் மேலே தடுக்கி விளுந்திருக்கு. ஏதோ பொணம்னு கூச்சல் போட்டுது. நான் ஓடியாந்து, 'இது பொணமில்லை, குடிச்சுட்டு மயக்கத்திலே கிடக்கிறான்'னு சமாதானப் படுத்தினேன்'' என்று மோகனாவுக்குப் பதில் அழகண்ணலே பேசினார்.

''ஆமாம் தாத்தா'' என்று கண்ணப்பிள்ளையைப் பார்த்து மோகனாகவும் சொன்னாள்.

கண்ணப்பிள்ளை தன் வாயிலிருந்த வெற்றிலையை மீண்டும் ஒருமுறை குதப்பி, தலையை இப்படி.யும் அப்படியும் அர்த்தமில்லாமல் ஆட்டிவிட்டு, ''ஹாம்; பொணத்தைக் கண்டு

செண்பகத் தோட்டத்துக் கொளந்தை பயப்படுது...!''என்று, அது ஏதோ பெரிய குற்றம் போல் பேசினார்.

செண்பகத் தோட்டத்துக்கு அகஸ்மாத்தாக வந்திருந்த சத்திரத்து வைத்தியலிங்கம்கூட அதை ஆமோதித்துச் சிரித்தார். அந்தச் சிரிப்பினால் இன்னும் உற்சாகமடைந்த கண்ணப் பிள்ளை, ''ஏன் கொளந்தை! நம்மூர்லே பொணம் என்ன புதுசா? வருசா வருசம் வைசூரியிலேயே அஞ்சு பத்து போவுது. பொணத்தைக் கண்டா பயப்படறே? வெட்கமாயில்லை உனக்கு? ஒரு பொணத்துக்காக ஊரைக் கூட்டிட்டையே'' என்று ஒரு பிணம் ரொம்பக் குறைச்சல் போலவும் நாலைந்தாவது கிட்டாவிட்டால் தமது மனம் சமாதானம் அடையாது போலவும் கடிந்து கொண்டார். பிறகு மற்றவர்களைப் பார்த்து, ''சரி போகலாம், வாங்க!'' என்று சொல்லி விட்டுத் திரும்பினார். போகும்போது, ''இந்தாப்பா சுந்தரநாதா!...' என்று அழகண்ணனைப் பார்த்து ஆரம்பித்தார். அழகண்ணனுக்குக் கோபம் தாங்க முடியவில்லை, ''என் பேர் அழகண்ணன்!'' என்று உறுமினார்.

கண்ணப்பிள்ளை இதற்கெல்லாம் மசியவில்லை. ''நீ வச்சுக்கிட்ட பேரை யார்ரா சொன்னது களுதை? உங்கப்பன் வச்ச பேரைச் சொன்னேன். அநாவசியமாகப் பேச்சை வளர்க்காதே, அந்தக் கொளந்தையை அதும் வீட்டிலே கொண்டுபோய் விட்டுட்டுப் போ'' என்று உத்தரவு போட்டுவிட்டுச் சென்றார்.

கருப்பட்டிக்கடை கண்ணப்பிள்ளை ஊரில் எல்லோருக்கும் மூத்தவர். வயது தொண்ணூறை எட்டிக் கொண்டிருந்தாலும், அறுபது வயது உடற்கட்டு இருந்தது. வயதின் காரணத்தாலும், நல்ல சுபாவத்தாலும் அவரைச் செண்பகத்தோட்டத்தில் எதிர்த்துப் பேசுபவர் யாருமே கிடையாது. உதவிக் கமிஷனராயிருந்தபடியால் சற்று

அகம்பாவமுள்ள வராஹாச்சாரிகூட அவரிடம் அடங்கியே பேசுவார். இதற்குக் கண்ணப்பிள்ளை நல்லவர் என்பது மட்டும் காரணமில்லை. பிரதி அமாவாசை தர்ப்பணம் செய்ததும் சாப்பிடுவதற்கு வாழை இலை யாசகம் செய்ய வராஹாச்சாரி கண்ணப்பிள்ளையை அணுகுவதும் ஒரு முக்கிய காரணம். நிறையப் பணம் இருந்தாலும் வராஹாச்சாரியின் பிச்சைக்காரப் புத்தி அசனகுடி ஆதி விற்று வந்த வாழை இலையைக் காலணாக்கொடுத்து வாங்க மறுத்தது. வராஹாச்சாரியின் அற்பப் புத்தி கண்ணப்பிள்ளைக்கும் நன்றாகத் தெரிந்தாலும் பிள்ளை அதை வெளியில் காட்டாமல் வாழை இலை உதவியைத் தொடர்ந்து நடத்தி வந்தார்.

யாசகத்துக்கு வரும் வராஹாச்சாரி மிகச் சாமர்த்தியமாகப் பேச்சை ஆரம்பிப்பார். வாசலில் நின்று கொண்டே, ''என்ன! பிள்ளைக்கு இன்னும் சூரியோதயம் ஆகலை போலிருக்கு. ஸுப்ரபாதம் சொல்லணும் போலிருக்கு!'' என்று இரைவார் வராஹாச்சாரி.

உள்ளே கட்டிலில் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கும் கண்ணப்பிள்ளை கையில் பாக்கு வெட்டியில் கொட்டைப் பாக்கைச் சீவிக் கொண்டே, ''தூங்கலீங்க! வாங்க!'' என்று சொல்லிக் கொண்டே வெளியில் வருவார்.

''என்ன கண்ணப்பிள்ளை! எங்கே கண்ணிலேயே காணும்?'' என்று அவரைக் காணாததால் ஏதோ தனக்குப் பெரிய நஷ்டம் ஏற்பட்டு விட்டதுபோல் கேட்பார் வராஹாச்சாரி.

வராஹாச்சாரியாரைப் பார்ப்பதால் தனக்குத்தான் வாழை இலை நஷ்டம் என்பதை அறிந்திருந்த கண்ணப்பிள்ளை பதிலுக்குச் சிரித்துக்கொண்டே, ''எங்கேங்க? கடை வேலை சரியாயிருக்கல்ல'' என்று கடையில் வியாபாரம் வாரிக்கொண்டு

போவது போல் பேசிவிட்டு, ''யார்ரா மாரிமுத்து! ஐயா வீட்டிலே விசேஷமில்லே! நம்ம அசனகுடித் தோட்டத்திலிருந்து ரெண்டு வாழலை கொண்டாந்தியா?'' என்று கூச்சல் போடுவார். காரியம் முடிந்ததென்று கண்டு கொண்ட வராஹாச்சாரியும் கண்ணப் பிள்ளையை ஒன்றுக்குப் பத்தாக ஸ்தோத்திரம் செய்துவிட்டு வீட்டுக்குச் சவாரி விடுவார்.

இப்படி எல்லோருக்கும் தன்னாலான உதவியைச் செய்ததாலும், நல்ல சுபாவத்தாலும் செண்பகத் தோட்டத்தின் மதிப்பைப் பூராவாகப் பெற்றிருந்த கண்ணப்பிள்ளையின் வாக்கை வேதவாக்காகக் கொண்டு, மோகனாவை அழைத்துக் கொண்டு அவள் வீட்டில் கொண்டுபோய் விட்டார் அழகண்ணல்.

மோகனா வருவதற்குள்ளாகவே விஷயம் வீட்டுக்கு எட்டிவிட்டதால் அத்தையம்மாள் அடுப்பில் கரண்டியைப் போட்டுக் கொழுமோர் காய்ச்சிக் கொண்டிருந்தாள். மோகனா வந்ததும் அவள் பயந்தீரக் கொழுமோரை வாயில் ஊற்றி, ஒரு கட்டைத் துடைப்பத்தைக் கொளுத்திச் சுற்றி மூலையிலும் வைத்தாள். கட்டைத் துடைப்பம் நன்றாகக் காய்ந்திருந்ததால் படபடவென்று வெடித்தது. திருஷ்டி பறந்தோடுவதாகவே நினைத்து, சாந்திக்கு அறிகுறியாகப் பெருமூச்சு விட்டாள் அத்தையம்மாள். ஆனால் மோகனாவின் இதயத்தில் மட்டும் சாந்தியில்லை.

'அந்த பயங்கர மனிதன் யார்? அவனுக்கும் சுந்தரத்துக்கும் என்ன சம்பந்தம்? அவனை எப்படி அழகண்ணலுக்குத் தெரியும்?' என்ற கேள்விகள் அவள் மனத்தே எழுந்து அவள் புத்தியைக் குழப்பிக் கொண்டிருந்தன.

அந்தப் புதிய மனிதனைப் பற்றி அடுத்த சில தினங்களில் ஊரில் ஏற்பட்ட அக்கப்போர் மோகனாவின் இதயத்தில் சொல்லவொண்ணாக் கிலியைக் கிளப்பி விட்டது!

13. அவனா தகப்பன்?

அசனகுடியை அடுத்திருந்த தென்னந்தோப்பில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் மோகனாவின் பளிங்கு மனத்தைப் பெரிதும் கலக்கி விட்டிருந்தபடியால், அதில் இயற்கையாக இருந்த தெளிவும் உல்லாசமும் மறைந்து போயின. அடுத்த சில தினங்களில் அவள் கேவலம் உணர்ச்சியற்ற ஒரு மரப்பாவையைப் போலவே உலவி வந்தாள். எதிலும் அவளுக்கு ஒரு மறதியும் அசட்டையும் இருந்து வந்தன. நேராகச் செய்து பழகிய காரியங்களைக் கூட மன விகாரத்தால் விபரீதமாகச் செய்ய முனைந்தாள். அவள் சாதாரணமாக மேலைக் குளத்திலிருந்துதான் தண்ணீர் எடுத்து வருவது சுலபம். ஆனால் அசனகுடி நிகழ்ச்சிக்குப் பிறகு மோகனா சற்றுத் தொலைவில் சிவன் கோயிலுக்கு அருகிலுள்ள கீழைக்குளத்திற்குப் போய்த் தண்ணீர் எடுக்கத் தொடங்கினாள்.

மோகனாவின் கவலை தோய்ந்த முகத்தையும் மாறுபட்ட நடவடிக்கைகளையும் கிராம மக்கள் மிக உன்னிப்பாகக் கவனித்து வந்ததன்றி, அவற்றைப் பற்றிப் பலவிதமான வியாக்கியானம் செய்யவும் தொடங்கினார்கள். கீழைக் குளத்துக்குப் போகும் வழியிலுள்ள பத்தர் துரைஸ்வாமியின் சம்சாரம், பலசரக்குக் கடை கொமரசாமி, உத்திராதிப் படையாச்சி இவர்கள் மட்டுமின்றி, காலை வேளையில் கோயில் பூசைக்கு மகனை அனுப்பிவிட்டு வாசலில் தென்னங் கீத்துகளில் கொப்பரைக் காய்களைக் கீறிப் போட்டு எண்ணெய்க்காக வெயிலில் உலர வைத்துக் கொண்டிருக்கும் குருக்கள் கூட மோகனாவை ஒரு கண்ணால் கவனித்துக்கொண்டுதானிருந்தார். நிதானம் நிரம்பிய அவள் தளர்ந்த நடை, அக்கப்போருக்கே பிறந்த அவருக்கு ஆயிரமாயிரம் கதையைச் சொல்லியது.

இதுமட்டுமல்ல; அவள் கீழைக் குளத்துக்குப் போனதும் நேராகத் தண்ணீர்த் துறைக்குப் போகாமல் சிவன் கோயில்

முகப்பில் குளத்தின் கரையிலிருந்த இலவஞ் செடிகளுக்கு அருகில் உட்கார்ந்து, அந்தச் செடிகளில் சிறிது நேரம் உட்கார்ந்து உட்கார்ந்து பறந்து கொண்டிருந்த பச்சைக் கிளிகளைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுவதையும் குருக்கள் ஓரிரண்டு சமயங்களில் கவனித்திருந்தாராகையால், அவர் அதைப் பற்றித் தீர்க்காலோசனை செய்ததன்றிப் பகல் வேளைகளில் தம்முடன் சீட்டாட வந்த வராஹாச்சாரியிடம் விவாதிக்கவும் முற்பட்டார். அங்கு அகஸ்மாத்தாக வந்த கம்பராமாயணப் புலவர் உத்திராதிப்படையாச்சியும் விவாதத்தில் கலந்து கொண்டார்.

அன்று வெயில் ரொம்ப தீட்சண்யமாயிருந்ததால் வழக்கம் போல் திண்ணையில் சீட்டாட உட்காராமல் உள்முற்றத்துக்குப் பக்கத்திலிருந்த தாழ்வாரத்திலேயே வராஹாச்சாரியும் குருக்களும் சீட்டாட உட்கார்ந்தார்கள். அவர் வரும் வரையில் வாசலில் உலர்த்தியிருந்த கொப்பரைத் தேங்காய்க்குக் காவல் புரிந்து வந்த குருக்கள், ''யார்ரா பட்டு! அண்ணா வந்திருக்கா, நான் ஓர் ஆட்டம் போட்டுட்டு வரேன். இங்கே கொஞ்சம் காவல் இரு... ...'' என்று தமது மகனுக்கு உத்தரவு போட்டு விட்டு, வராஹாச்சாரியுடன் தாழ்வாரத்துக்குப் போய் விட்டார்.

குருக்கள் மிக மும்முரமாகச் சீட்டைக் குலுக்கிக் கொண்டிருந்த சமயத்தில் ஏதோ ஓர் அவசர வேலையாக வருவது போல் உத்திராதிப் படையாச்சியும் உள்ளே நுழைந்து, ''ஏது! சுந்தரக்காண்டப் பாராயணமோ?'' என்று கேலியாகக் கேட்டார். சீட்டாட்டத்தைச் 'சுந்தரகாண்டப் பாராயண' மென்று சொல்வது தஞ்சை ஜில்லாவில் பழக்கம். அந்த 'ஜோக்'கை சந்தர்ப்பம் அகப்பட்டபோதெல்லாம் அடிக்காமல் விடமாட்டார் படையாச்சி.

''ஆமாம்! பாராயணந்தான்; வா உத்திராதி! ஒரு கை உட்கார்ரையா? அவுட்டுக்குப் பதில் முன்னூத்தி நாலே போட்டுடறேன்'' என்று அழைப்பு விடுத்தார் குருக்கள்.

''நமக்கேதுக்குங்க இந்தச் சீட்டுச் சனியன்!'' என்று அலுத்துக் கொண்ட உத்திராதி அந்தச் சனியன் குருக்களைத் தான் பிடித்திருக்கிறது என்பதை மறைபொருளாகச் சுட்டிக் காட்டினார்.

குருக்கள் இதற்கெல்லாம் மசியாமல் சீட்டைக் கனவேகமாகக் குலுக்கிக்கொண்டே, ''நீ பேசுவே உத்திராதி. பௌராணிகனோ இல்லையோ?'' என்று உத்திராதி புராணம் படிப்பது பெரிய பாவம் போலும், தாம் சீட்டாடுவதுதான் சிறந்த பணியென்றும் இடித்துக் காட்டிவிட்டுத் தாம் படையாச்சியைக் குத்திவிட்டதற்கறிகுறியாக ஒரு சிரிப்பும் சிரித்தார்.

சீட்டாட்டமென்றால் குருக்களுக்கு உயிர். சீட்டைக் குலுக்கிப் போட்டு வெற்றிலைத் தட்டைக் கொண்டுவரச் சொல்லிக் கொட்டைப் பாக்கை பாக்கு வெட்டியால் தாமே சீவிப் போட்டு, வெற்றிலை இரண்டையும் கிழித்து உள்ளே தள்ளி புகையிலையிலும் ஒரு முறுக்குக் கிள்ளி வாயில் அடைத்து விட்டால் இரவு மணி பன்னிரண்டானாலும் அசராமல் சீட்டாடுவார் குருக்கள். நடுவில் எப்பொழுதாவது சீட்டுச் சண்டை வரும்போது புகையிலை எச்சில் நிரம்பிய வாயை அரைகுறையாகத் திறந்து மழலையாக இரண்டொரு வார்த்தைகளை உதிர்ப்பார். இல்லையேல் முண்டியடித்து மெள்ள எழுந்திருந்து முற்றத்தில் வெற்றிலையைத் துப்பி உக்கிரமாகச் சண்டைக்கு வருவார். அதுவும் இல்லையேல் இடையில் அடியோடு பேசாமல் போகிற வருகிற சீட்டையெல்லாம் ஒன்று விடாமல் கணக்குப் பார்த்து ஆட்டம் ஆடுவார்.

சீட்டாட்டத்தில் அத்தனைப் பற்றுதலையுடைய குருக்களுக்கு அன்று சீட்டில் புத்தியே போகவில்லை. எதிரே பன்னிரண்டு திருமண்காப்புகளுடன் ஆசாரமாக உட்கார்ந்திருந்த வராஹாச்சாரிக்கு நாலு சீட்டை எண்ணிப் போட்ட உடனேயே, ''என்ன ஐயங்கார் ஸ்வாமிகளே! விஷயத்தைக் கேள்விப் பட்டேங்களோன்னா?'' என்று ஆரம்பித்தார் குருக்கள்.

''எதை ஐயா சொல்கிறீர்?'' என்று ஏதும் தெரியாதது போல் கேட்டார் வராஹாச்சாரி.

''நம்ம சிவசங்கரம் பிள்ளை பெண், அதான் அந்தக் குட்டி மோகனா...'' என்று ஆரம்பித்த வார்த்தையைப் பாதியில் நிறுத்திவிட்ட குருக்கள், ஏதோ ரகசியம் தம்மிடம் சிக்கிவிட்டது போல் ஒரு பார்வை பார்த்தார்.

மீதியை உத்திராதிப் படையாச்சி பிடித்துக் கொண்டார். ''ஆமாங்க, நான்கூடக் கேள்விப்பட்டேன். அசனகுடி தென்னந் தோப்பிலே ஏதோ அமக்களமல்ல?'' என்றார்.

''உத்திராதி! தென்னந்தோப்பு என்னப்பா பண்ணும்? இந்தக் குட்டிக்கு இருட்டு வேளையிலே அங்கே என்ன வேலை என்று விசாரித்தார் வராஹாச்சாரி.

''ஐயங்கார் சுவாமி! காலங்கெட்டுப் போச்சுங்காணும். கொஞ்சநாளைக்கு முன்னாலே இந்தக் கிராமத்திலே இந்த மாதிரி ஏதாவது நடந்திருந்தா ஊர்லே இருக்கிற பெரியவா சும்மா இருப்பாளா?'' என்று அலுத்துக் கொண்டார் குருக்கள்.

குருக்கள் வாதத்தை உத்திராதிப் படையாச்சி தவிடு பொடியாக்கினார். ''ஏங்க குருக்களையா! இது எப்பவும் நடக்கிறதானுங்க. வெங்கடாசலம் ஒரு பெண்ணைத் தூக்கிட்டுப் போயிடலீங்களா?'' என்று கேட்டார்.

''அது அவன் அக்கா மக. அவனே தாய் வீட்டு மாமன்; மொறை உண்டு'' என்றார் குருக்கள்.

''இதுக்கும் மொறை ஏற்பட்டுப் போவுது!'' என்று படையாச்சியும் பதில் சொன்னார் விடாமலே. இந்தப் பதிலைக் கேட்ட வராஹாச்சாரி வாய்விட்டுச் சிரித்தார். அந்தச் சிரிப்பைத் தாள முடியாத குருக்கள் ஏதோ பெரிய அனர்த்தம் நேரிட்டுவிட்டதைப்போல, என்ன ஸ்வாமி சிரிக்கிறகளே?

நம்மூர்ப் பெண்ணு ஒண்ணு கெட்டுப்போனா ஊருக்கே அவமானமில்லையா? பாவட்டக்குடியான் நம்மைப் பார்த்துச் சிரிக்க மாட்டானா?'' என்று சீறினார்.

''ஆமாங்க குருக்களையா சிவசங்கரம் பிள்ளை மக அந்த மாடி வீட்டானைத் தேடிப்போனா நாம் என்னய்யா செய்யறது?'' என்று கேட்டார் உத்திராதி.

''பிள்ளைகிட்ட சொல்லி மகளைக் கட்டுப்பாடு செய்யச் சொல்றது?'' என்றார் குருக்கள்.

அந்தப் பொண்ணு அப்படி என்னதான் செஞ்சுடுத்து?'' என்று விசாரித்தார் வராஹாச்சாரி.

''விஷயம் எல்லாம் முடிஞ்சு போயிருக்கணும் ஸ்வாமி. அந்தப் பய பொண்மேலே கை வச்சுட்டான்னு தோன்றது. பொண்ணை இன்னிக் காலமெதான் பார்த்தேன் சகிக்கலை!'' என்று விளக்கிய குருக்கள், தம் கெட்டிக் காரத்தனத்தைக் காட்ட, ''ஹூம் ஹூம்'' என்று இருமுறை கனைக்கவும் கனைத்தார்.

''அப்படின்னா அந்தப் பயலுக்கே பெண்ணைக் கொடுத்துடச் சொல்லலாமே'' என்றார் வராஹாச்சாரி.

''செய்யலாம்; பையன் ஒழுங்கில்லைன்னு கேள்வி?'' என்றார் குருக்கள்.

''ஒழுங்கில்லாமெ என்னவாம்?'' என்று கேட்டார் வராஹாச்சாரி.

''நேத்தி ஒரு குடிகாரப் பய தென்னந்தோப்பில் கிடந்தானே, அவன் அந்த மாடி வீட்டுப் பயலுக்கு ரொம்ப சிநேகம்னு சொல்லிக்குறா. தென்னந்தோப்பிலே கிடந்தவன் ரொம்ப காலிப் பயலா தெரியறது. அவன் ஒருவேளை அந்த சுந்தரத்துக்கு அப்பனோன்னு கூடச் சந்தேகம் ஏற்படறது'' என்று குருக்கள் கதை கட்டி விட்டார்.

குருக்கள் ஏதோ பேச்சுவாக்கில் விஷமமாகச் சொன்ன பேச்சு ஊரில் அன்று சாயந்தரம் தீயாகப் பிடித்து விட்டது. அந்தத் தீயை வைத்தவர் உத்திராதிப் படையாச்சி. குருக்கள் வீட்டிலிருந்து நேராக வீட்டிற்குச் சென்ற படையாச்சி தம் மனைவியிடம் விஷயத்தை மெள்ளப் பிரஸ்தாபித்தார்.

''ஏன் செல்லாயி! குருக்களையா பெரிய கல்லாகத் தூக்கிப் போடறாங்களே'' என்றார் உத்திராதிப் படையாச்சி.

''என்னாங்க அது?''

''நம்ம சிவசங்கரம் பிள்ளை மக இல்லை...''

''ஆமாங்க.''

''அது ஏதோ மாதிரி இருக்கல்ல...?''

''ஆமாம், பாவம்! அது என்னங்க செய்யும்? காலா காலத்திலே அதை ஒரு புருஷன் கிட்டே ஒப்படைக்கணும். இல்லாட்டி இப்படித்தான்.''

''என்னடீ சொல்றே நீ?''

''சொல்றதுக்கு என்னாங்க கிடக்குது? அது புதுசா வந்திருக்கிற பயலோட குளத்தங்கரையைச் சுத்துதாமல்ல! அந்தப் பயலுக்கே கட்டிப் போட்டாலாவது சரியாயிருக்கும்.''

''பய ஒழுங்கில்லைடீ''

''ஏன், என்ன செஞ்சுட்டானாம்?''

''அவன் என்ன செஞ்சானோ என்னமோ. அசனகுடி தென்னந்தோப்பிலே விளுந்திருந்த காலிப்பய அவனுக்குத் தகப்பனாம்.''

''இருந்தா என்னவாம்?''

''அவன் குடிகாரண்டி!''

''குடிக்கிறது நம்ம ஜாதிகளுக்குப் பழக்கந்தானே? இப்ப ஐயாமாருந்தான் குடிக்கிறாங்களாம். நம்ம பக்கத்து ஊர்ப்பண்ணை ஐயா வூட்டு மகன் பட்டணத்திலே பாட்டில் பாட்டிலா தள்ளுதாம். நீங்க மாத்திரம் என்ன! இந்தக் கம்பராமாயணத்தை கட்டிக்கிட்டு அளுகிறதுக்கு முன்னாடி தெனம் ரெண்டு மொந்தை...'' என்று நீட்டினாள் செல்லாயி.

அதிகமாகப் பேசவிட்டால் மனைவி தன் மானத்தை வாங்கிடப் போகிறாளே என்ற பயத்தால் அவளை இடைமறித்த உத்திராதிப் படையாச்சி, ''பழங்கதை எதுக்குச் செல்லாயி? யார் சம்மதித்தாலும் அந்தக் குடிகாரன் மகனுக்கு மகளைக் கொடுக்கப் பிள்ளை சம்மதிப்பாரா?'' என்றார்.

''ஆமாங்க; இந்தக் காலத்துப் பெண்ணுங்க அப்பனைக் கேட்டுத்தான் ஊர் சுத்துது போங்க...'' என்று அலுத்துக் கொண்ட செல்லாயி அங்குப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி கட்டினாலும், வெளியே பால் வாங்கச் சென்றதும் முற்றுப்புள்ளியை அடியோடு அழித்து விட்டாளாதலால், அசனகுடித் தென்னந்தோப்பில் கிடந்த குடிகாரன் மாடிவீட்டான் தந்தை என்ற பெரும் புளுகு பெரும் நிஜமாக ஊரெங்கும் பரவிவிட்டது. அந்தச் செய்தி மோகனாவின் காதிலும் விழுந்தது.

மோகனா பதறினாள். ''அவருடைய தந்தை அவனா? ஒருகாலும் இருக்காது!'' என்று பல முறை தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். ஆனால், அடுத்த நாளைக்கு மறுநாள் வெளியூரிலிருந்து திரும்பிய ராஜபார்ட் ராமலிங்கம் கொண்டு வந்த புதுத் தகவல் குருக்கள் கிளப்பிவிட்ட அக்கப்போரைவிட மிகப் பயங்கரமாயிருந்ததால் மோகனா புழுவாய்த் துடிக்கலானாள்.

14. ராஜபார்ட்டாரின் தகவல்

அடுத்த நாள் வெளியூரிலிருந்து திரும்பிய ராஜபார்ட் ராமலிங்கம் செண்பகத் தோட்டத்தின் எல்லைக்குள் நுழையும்போதே வெற்றிக் குறியுடன் காணப்பட்டார். வடுவச்சி வாய்க்காலுக்கருகிலேயே அவரைச் சந்தித்த மாட்டுக்காரப் பயல்களைப் பார்த்து அவர் வீசிய புன்முறுவலும், மிடுக்கான நடையும் அவர் ஏதோ பெரிய கோட்டையைப் பிடித்து விட்டுத் திரும்புகிறார் என்பதை அறிவுறுத்தின. அதோடு நில்லாமல், எதிரே தோளில் கலப்பையைச் சாத்திக்கொண்டு உழவுக்குச் சென்று கொண்டிருந்த மாரிமுத்துவைப் பார்த்து, ''எலே மாரிமுத்து: ஏது இண்ணைக்கு விடியற்காலையிலேயே ஏர் கட்டப் போறே'' என்று அர்த்தமில்லாமல் ஏதோ கேட்டார். மாரிமுத்து அவருக்குப் பதிலேதும் சொல்லாமல் தன் கறுப்பு உதடுகளை விரித்து வெளேரென்ற பற்களை மட்டும் காட்டிவிட்டுக் கலப்பையுடன் நடந்தான்.

அன்று ராஜபார்ட்டார் காலை ஐந்து மணிக்கு மங்கநல்லூர் வரும் வண்டியிலேயே வந்து, அங்கிருந்து ஊரைப் பார்த்து வேகமாக நடையைக் காட்டியபடியால், சூரியோதய காலத்துக் கெல்லாம் ஊரையடைந்தார். சாதாரண நாட்களாயிருந்தால் ராஜபார்ட்டார் வழியில் வடுவச்சி வாய்க்காலிலேயே பல் துலக்கிக் காப்பிக்குத்தான் வீடு போய்ச் சேருவார். அன்று தேன் குடித்த நரி மாதிரி வந்திருந்த அவர் அந்தப் பணிகளில் ஈடுபட்டு நேரத்தை வீணாக்க இஷ்டப்படாமல் விடுவிடு என்று நடந்து வீட்டுக்கே வந்து சேர்ந்தார். அவர் வீட்டுக்கு அவ்வளவு துரிதமாக வந்து சேர்ந்தாரேயொழிய, அவர் வீட்டிலிருந்த யாரும் எழுந்திருப்பதில் எந்தத் துரிதத்தையும் காட்டவில்லை யாகையால், வாயிற் கதவு அடைத்தேயிருந்ததன் காரணமாகக் கோபத்துக்கு இடங்கொடுத்த ராஜபார்ட்டார், கதவைத்

'தடதட'வெனத் தட்டி, ''டேய் வரதா!'' என்று ஆத்திரம் தீரக் கத்தினார்.

இந்த அதட்டல் குரலுக்கும் கதவைத் தட்டியதால் ஏற்பட்ட சத்தத்துக்கும் ரேழித் திண்ணையில் படுத்திருந்த வரதப்பிள்ளை, சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. கூடத்தில் படுத்துக் கொண்டிருந்த அவர் மனைவி வள்ளியம்மைதான் மெள்ள எழுந்து வந்து கதவைத் திறந்தாள். வரதப்பிள்ளை வராமல் தம் மனைவி வந்ததும் ராஜபார்ட்டாரின் கோபத்தை அதிகமாகக் கிளறிவிடவே. ''ஏண்டி! என்ன கும்பகர்ணன் பெண்டாட்டியோ! எழுந்திருக்க யானை விடணுமோ?'' என்று அவள்மீது சீறி விழுந்தார்.

அந்தச் சமயத்தில் நின்ற தோரணையும் மீசை அசைந்த விதமும் சாக்ஷாத் ஸ்டேஜில் நிற்கும் ராவணனை நினைவுறுத்தினாலும் அவருடைய நாடகத்தை வீட்டிலும் மேடையிலும் ஆயுள் முழுவதும் பார்த்துச் சலித்துப் போயிருந்த வள்ளியம்மையின் மனத்தில் அவை சிறிதளவு அச்சத்தையும் கொடுக்காததால், ''ஆமாம்! நீங்க கும்பகர்ணனாயிருந்தா உங்க பொண்டாட்டி நான்தான். ஏதோ ரயிலிலே வந்ததாலே ஒருநாள் முளிச்சுக்கிட்டு ஏன் இப்படி அமக்களம் செய்றீங்க? நாளைக் காலையிலே உங்க புள்ளையோட போட்டி போட்டுக்கிட்டு நீங்களும் தூங்கப் போறீங்க'' என்றாள் வள்ளியம்மை.

ராஜபார்ட்டார் அவளை மீண்டும் மேடைப் பாணியில் உற்றுப் பார்த்து, ''நான் தூங்கலாண்டி; நீங்க தூங்கக் கூடாது!'' என்று தமக்குப் பிரத்தியேகமாக உள்ள உரிமையை ஸ்தாபிக்கத் தொடங்கினார்.

''ஏனாம்?'' என்று கேட்டாள் வள்ளியம்மை.

''நான் கலையை வளர்க்கிறவன்.''

''நான் கூடத்தான் கன்னுக்குட்டியை வளர்க்கிறேன். அதுக்காக எட்டு மணி மட்டும் தூங்கணுமா?''

''ஏண்டி, கலையும் கன்னுக்குட்டியும் ஒண்ணா?''- ராஜபார்ட்டாரின் குரலில் ஆத்திரம் துளிர்த்தது.

''என்ன வித்தியாசம்?'' என்று கேட்டாள் வள்ளியம்மை.

''நான் வேஷம் போடறேன்.''

''நம்ம கன்னுக்குட்டிக்குக் கூடத்தான் மாட்டுப் பொங்கலுக்கு ஜல்லி கட்டி, கொம்புக்கு வர்ணம் தடவி வேஷம் போடறோம்.''

''அப்பொ நானும் உன் கன்னுக்குட்டியும் ஒண்ணுதான்னு சொல்லு.''

''யார் சொன்னது அப்படி? அதுக்கு இருக்கிற அறிவு உங்களுக்கு ஏது? காலையிலே எழுந்திருச்சதும் அது வள்ளுன்னா விளுது? என்னைப் பார்த்த உடனே என்ன ஆசையா ஓடி வந்து மூஞ்சி கிஞ்சியெல்லாம் உராய்ந்து கொடுக்கும்?''

''அப்படி நானும்...'' என்று வார்த்தையை முடிக்காமல் விட்ட ராஜபார்ட்டார், வள்ளியம்மையைக் காதல் பார்வையாகப் பார்த்தார். இன்னும் கொஞ்சம் வள்ளியம்மை இடங்கொடுத்திருந்தால் 'காயாத கானகத்தே' பாட்டை ராகமாலிகையில் வெளுத்துவிடுவார் போலிருந்தது.

ஆனால், வள்ளியம்மை அதற்கு இடங்கொடுக்காமல், ''சரி சரி; போதும்! வயசு அம்பது ஆவுது; வெக்கமில்லை, ஐயாவுக்கு வாலிபம் திரும்புதோ! போங்க, பல் துலக்குங்க!'' என்று சீறிவிட்டுக் கொல்லைப் பக்கம் சென்றாள். ராஜபார்ட்டாரும் மனைவி தம்மை அப்படி வெளுத்துக் கட்டியதால் சற்றே வருத்தத்துடன் ரேழிக்குச் சென்று வரதப்பிள்ளையைத் தட்டி எழுப்பினார். 'தட்டி' என்பதைவிட 'அறைந்து' என்று சொல்வதே பொருந்தும்.

ராஜபார்ட்டார் வரதப்பிள்ளையைப் பலமுறை குலுக்கியும் அறைந்தும், முகத்தில் அவன் திரும்பத் திரும்ப

இழுத்துப் போர்த்திய போர்வையை மறுபடியும் இழுத்தெறிந்தும் நடத்திய போரின் காரணமாக வரதப்பிள்ளை மெள்ள எழுந்து உட்கார்ந்து, கண்களைக் கசக்கிக்கொண்டு எதிரேயிருப்பது யாரென்று பார்த்தான். தன் அருமைத் தகப்பனார் எதிரில் நிற்பதைக் கண்டு, ''நீங்களா அப்பா?'' என்று உளறி வாயைத் திறந்து கொட்டாவியும் விட்டான்.

அவன் பல் துலக்காமல் கொட்டாவி விட்டபடியால் அந்த அஸ்திரத்தினின்று தப்ப, சற்றுப் பின்னடைந்த ராஜபார்ட்டார், ''டேய் தடிப் பயலே! எழுந்து போய்ப் பல் துலக்கு'' என்றார். ஆனால், சோம்பேறியான வரதப்பிள்ளை அதற்கெல்லாம் மசியாமல், ''ஏம்ப்பா! போன வேலை என்ன ஆச்சு?'' என்று கேட்டான்.

''சரியாத்தாண்டா ஆச்சு'' என்ற ராஜபார்ட்டார் குரலில் வெற்றி ஒலித்தது.

என்னப்பா சரியாச்சு! சொல்ல மாட்டியா?'' என்று கெஞ்சினான் வரதப்பிள்ளை.

''அந்த மாடி வீட்டுப் பய விசயம் பூராவும் கண்டு பிடிச்சுட்டேன்?''

''கண்டு பிடிச்சுட்டீங்களா?''

''ஊம்.''

''என்னப்பா விசயம்?''

''அதெல்லாம் அப்புறம் சொல்றேன். நீ எழுந்திரு; பல் துலக்கு; நானும் பல் துலக்கிட்டுச் சிவசங்கரம்பிள்ளை வீட்டுக்குப் போறேன்.''

''ஏதுக்கப்பா?''

''உன் மொகரக் கட்டைக்குப் பெண் கேட்க.''

''கொடுப்பாங்களாப்பா?''

''கொடுக்காமெ என்ன செய்ய முடியும்? இந்த ராஜபார்ட்டானை யார்னு நினைச்சுக்கிட்டிருக்கே!''

''எங்க அப்பாருன்னு நினைச்சிக்கிட்டுருக்கேன்!'' வரதப் பிள்ளைதன் ஹாஸ்யத்தை நினைத்துப் பெரிதாக அசட்டுச்சிரிப்பு ஒன்றைச் சிரித்தான்.

அதைத் தாங்க முடியாத ராஜபார்ட் ராமலிங்கம் அந்த இடத்தைவிட்டு விலகி, தலைப்பாகையையும் ஷர்ட்டையும் களைந்துவிட்டுக் கொல்லையில் சென்று பல்லைத் துலக்கி விட்டுச் சிறிது நேரத்திற்கெல்லாம் மனைவி கொடுத்த காப்பியையும் மடமடவெனக் குடித்து ஆயாசம் தீர்த்துக் கொண்டார். பிறகு துண்டை எடுத்துக்கொண்டு ஸ்நானம் செய்ய மேலைக்குளத்துக்குச் சென்றார்.

ராஜபார்ட்டாரின் வீடு கீழைக் குளத்துக்கருகில் இருந்தது. ஆகவே அவர் அதில்தான் குளிப்பது வழக்கம். அன்று மட்டும் அவர் காரணமாகவே மேலைக்குளத்துக்கென்று போகும் வழியில் சிவசங்கரம்பிள்ளை வீட்டுக்குள் நுழைந்து, சிவசங்கரம்பிள்ளை இருக்கிறாரா என்று பார்த்தார். என்றுமில்லாத திருநாளாகப் பிள்ளை அந்தச் சமயத்தில் வீட்டிலேயே இருந்தார்.

அவரை அந்தச் சமயம் வீட்டில் எதிர்பார்க்காத ராஜபார்ட்டார் ஆச்சரியத்தால் பிரமித்துப் போய், ''காலையிலே வயக்காட்டுக்கல்ல போயிருப்பீங்கண்ணு நினைச்சேன்?'' என்று சொல்லிக்கொண்டே, மேலும் ஏதோ பேச வேண்டிய விஷயங்கள் இருக்கின்றன என்பதை வலியுறுத்தத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டார். சிவசங்கரம் பிள்ளையும் அவருக்கு எதிரில் உட்கார்ந்து கொள்ளவே, ராஜபார்ட்டார் மேலும் பேச்சுக் கொடுக்கத் தொடங்கி, ''ஏன்? உடம்புக்கு ஏதாச்சும்...'' என்று கேட்டார்.

''உடம்புக்கு ஒண்ணுமில்லை.'' சுருக்கமாக வந்தது பிள்ளையின் பதில்.

''நான் காலை வண்டியிலேதான் வந்தேன்.''

''ஆமாம், பட்டணம் போயிருந்தீங்க இல்லை?''

''ஆமாம்; கொஞ்சம் சத்திரத்துக் கேஸ் விஷயமாக வக்கீலைப் பார்க்க வேண்டியிருந்தது. முடிச்சுக்கிட்டு வந்தேன். மத்தபடி வீட்டிலே கொளந்தை எல்லாம்...''

''சௌக்கியந்தான்.''

''ராஜபார்ட்டாருக்குப் பிள்ளை 'சட்சட்' என்று சுருக்கமான பதில்களை வீசி மேற்கொண்டு பேச இடங்கொடுக்காம லிருந்தது பெரும் தலை வேதனையாயிருந்தது. இருந்தாலும் மெள்ளச் சமாளித்துக்கொண்டு, ''நான் வர்ரேன். குளிச்சுட்டுக் கொஞ்சம் மாடிவீட்டுப் பக்கம் போய் வரணும்'' என்றார்.

பிள்ளையின் கண்களில் திடீரெனப் பிரகாசம் உண்டாயிற்று. அதுவரை ரேழியைப் பெருக்கிக்கொண்டிருந்த மோகனாகூடச் சட்டென்று நின்றாள். தன் பேச்சில் அவர்களுக்குத் திடீர் உற்சாகம் ஏற்பட்டதைக் கவனித்த ராஜபார்ட்டாரும் தமது விஷ விதையை ஊன்ற முற்பட்டு, ''நம்ப மாடி வீட்டுப் பையன்கிட்ட வக்கீல் ஒரு சேதி சொல்லச் சொன்னாரு'' என்றார்.

''என்ன சேதி?'' என்று கேட்டார் பிள்ளை.

''இல்லை. அவன் பெண்டாட்டியை அவன் அழைச்சுக் கலையாம். இன்னும் தாமசமானால் அவன் மேலே கேஸ் போடப் போறாளாம்'' என்று மெள்ள ஊசியைச் செருகினார் ராஜபார்ட்டார்.

''பெண்டாட்டியா!'' வியப்புடன் கேட்டார் பிள்ளை.

''ஆமாம்''.

''அவனுக்கு கலியாணம் ஆயிடுச்சா?''

''ஆஹா! ஆயிடுச்சு. அவன் மாமனார்கூட இங்கே வந்திருக்கிறதாக் கேள்வி.''

ரேழியில் நின்ற மோகனாவின் இதயம் சுக்கு நூறாக வெடித்துவிடும் போலிருந்தது. அவள் மேற்கொண்டு சம்பாஷணையைக் கேட்க விரும்பாமல் ரேழியை முழுதும் பெருக்காமல் பாதியிலேயே விட்டுவிட்டுத் துடைப்பத்துடன் உள்ளே ஓடிவிட்டாள்.

15. பிள்ளையின் கலக்கம்

ராஜபார்ட்டார் பட்டணத்திலிருந்து சிரமப்பட்டுச் சம்பாதித்துக்கொண்டுவந்த தகவல் மோகனாவின் இதயத்தை வெடிக்கும் நிலைக்குக் கொண்டு வந்துவிட்ட தென்றால் அதைவிட மோசமான நிலையைச் சிவசங்கரம் பிள்ளையின் சித்தத்திலே சிருஷ்டித்தது. மாடி வீட்டுச் சொந்தக்காரனான சுந்தரத்துக்கு விவாகம் ஆகிவிட்ட தென்பதைக் கேட்ட கணத்தில் கல்லாய்ச் சமைந்துவெகுநேரம் பேசாமலே உட்கார்ந்து விட்டார் பிள்ளை.

ஊரில் தன் மகளைப்பற்றியும் மாடி வீட்டு தம்பியைப் பற்றியும் உலாவிய வதந்தி பிள்ளையின் காதிலும் விழாமலில்லை. அவரை இது சம்பந்தமாக நேரில் யாரும் எந்தக் கேள்வியும் கேட்காவிட்டாலும், வயக்காட்டுக்குப் போகும் சமயங்களிலெல்லாம் பெண்கள் குளத்தங்கரையில் பேசிய ஓரிரு சொற்கள் அவர் காதில் விழுத்தான் செய்தன. மோகனாவின் பெயரும் மாடி வீட்டுத் தம்பியின் பெயரும் அடிக்கடி அடிப்பட்டதையும், தம்மைக் கண்டதும் குளத்தங்கரைப் பெண்கள் பேச்சைச் சட்டென்று நிறுத்திக்கொண்டு

பாத்திரங்களைத் துலக்கும் வேலையில் முனைந்ததையும் கண்ட பிள்ளை விஷயத்தை வெகு எளிதில் ஊகித்துக் கொண்டார்.

மிகுந்த சூட்சும புத்தியுடையவரும் ஊர் நிலவரங்களை நன்றாக அறிந்தவருமான பிள்ளைக்கு அத்தகைய வம்பின் விளைவுகள் எவ்வளவு தூரத்துக்குக் கொண்டு போய்விடும் என்பது சந்தேகமறப் புரிந்தே யிருந்தபடியால் அவர் மனம் விவரிக்க இயலாத வேதனைக்கு உள்ளாகியது. எதிர்பாராத விதமாக ஏற்படும் சம்பவங்கள் மனித வாழ்க்கையை எத்தனை தூரம் பாதித்து விடுகின்றன என்பதை நினைத்துப் பிள்ளை பெரிதும் ஏங்கினார்.

சுந்தரின் மோட்டார் என்ஜின் வேலை செய்ய மறுத்தது, அதற்காக அவன் தாம்புக் கயிறு வாங்க வந்து மோகனாவைச் சந்தித்தது, பிறகு மோகனாவைக் காளையிடமிருந்து தப்ப வைத்தது, எல்லாம் எதிர்பாராது ஏற்பட்ட நிகழ்ச்சிகள்தாம். ஆனால் அவை ஒவ்வொன்றும் விதியால் எப்படித் தொகுக்கப் பட்டுத் தன் மகளின் வாழ்க்கையில் எத்தனை பெரிய விபரீதத்தைச் சிருஷ்டித்து விட்டன என்பதை எண்ணிப் பார்த்த சிவசங்கரம் பிள்ளை அந்த ஊர் வம்பிலிருந்தும் அதனால் ஏற்படக்கூடிய கெட்ட பெயரிலிருந்தும் மோகனாவைக் காப்பாற்றும் வழியைப் பற்றி யோசிக்கலானார். யோசித்து ஒரு முடிவுக்கும் வந்தார்.

பிள்ளை சாதாரணமாக எதற்கும் யாரையும் கலந்து ஆலோசிக்கும் சுவாமுள்ளவரமல்லர். தானே விஷயங்களை சீர் தூக்கிப் பார்த்து எது சரியென்று படுகிறதோ அதைத் தைரியத்துடன் நிறைவேற்றி வைக்கக்கூடிய துணிவுள்ளவர். ஆகவே, மோகனாவின் மீது ஏற்பட்டுள்ள வீண் வம்பிலிருந்து அவளைக் காப்பாற்ற வேண்டுமானால் அவளை அந்த மாடி வீட்டு வாலிபனுக்கே மணம் முடித்து வைப்பதே சரியான வழி என்று தீர்மானித்தார் பிள்ளை. இந்தத் தீர்மானத்தை அவர்

சகோதரியிடம் கூடக் கலந்து பேசவில்லை. எப்படியும் அன்று மாலை விளக்கு வைத்த பிறகு, தாமே மாடி வீட்டுக்குச் சென்று விஷயத்தைப் பேசி முடித்துவிடுவதென்று முடிவு செய்து கொண்டார். அந்த முடிவில் கல்லைத் தூக்கிப் போட வந்தார் அன்று விடியற்காலையில் ராஜபார்ட் ராமலிங்கம் பிள்ளை.

மகளின் கதியை ஒரு வழியாகத் தீர்மானித்து அவளுக்குச் சுப வாழ்க்கையை அளித்துவிடலாமென்று மனக்கோட்டை கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த சிவசங்கரம் பிள்ளையிடம் ராஜபார்ட் மெனக்கெட்டு வந்து கோட்டான் மாதிரி கூவிவிடவே, சில விநாடிகள் அசந்து போய் உட்கார்ந்து விட்டார் பிள்ளை.

தான் ஊன்றிய விஷ விதை வெகு எளிதில் முளைவிட்டதைச் சிவசங்கரம் பிள்ளையின் முகத்திலிருந்தே ஊகித்துக் கொண்ட ராஜபார்ட் ராமலிங்கமும் கொஞ்சம் அநுதாப நடிப்பைக் காட்டத் தொடங்கி, ''ஏங்க அப்படிப் பேயறைஞ்ச மாதிரி உட்கார்ந்திட்டீங்க?'' என்று குழைவு தும்பிய குரலில் விசாரித்தார்.

''ஒண்ணுமில்லீங்க...'' ஏதோ பதில் சொல்ல வேண்டும் என்பதற்காகப் பிள்ளை பதில் சொன்னாரே ஒழிய, அவர் மூளை அடியோடு குழம்பிக் கிடந்தது. 'மாடி வீட்டுத் தம்பிக்கு ஏற்கனவே கலியாணமாகியிருந்தால் தமது பெண்ணைக் கொடுக்க முடியாதே. அப்படியானால் மகளின் வாழ்க்கை பாழாக வேண்டியதுதானா' என்று சிந்தித்துச் சித்தம் வெடித்துக் கொண்டிருந்த பிள்ளையை ஆசுவாசப்படுத்தும் நோக்கத்துடன் மேலும் சம்பாஷணையைத் தொடர்ந்த ராஜபார்ட், ''விட்டுத் தள்ளுங்க! மாடி வீட்டுப் பய விசயம் எப்படியிருந்தா நமக்கென்னங்க? அதுக்காக நீங்க ஏன் மனசை அலைய விடணும்'' என்று அலட்சியமாகப் பேசலானார்.

இவ்வளவு பரிவுடன் பேசிய ராஜபார்ட்டாரிடம் முரட்டுத்தனமாக நடந்து கொள்வது முறையல்ல என்ற

காரணத்தால் பிள்ளையும் சற்று மனம் விட்டுப் பேசத் தொடங்கி, ''மாடி வீட்டுத் தம்பி விஷயத்தை அப்படி ஒதுக்கித் தள்ளறதுக் கில்லை, ராமலிங்கம்'' என்றார்.

''ஏன்?''

''நீங்க ஊரிலே இல்லாதபோது ஏதேதோ நடந்துபோச்சு. எல்லாம் என் தலைவிதி.''

''என்னதான் நடந்தது சொல்லுங்க? ராஜபார்ட்டான் இருக்கிறவரைக்கும் நீங்க விசனப்படறதைப் பார்த்துகிட்டு சும்மா இருக்க மாட்டான்!''

''இதுலே யாரும் எதுவும் செய்ய முடியாது ராமலிங்கம். யாரையும் குத்தம் சொல்லியும் புண்ணியமில்லை.''

''அட சும்மா விசயத்தைச் சொல்லுங்க. என்ன அப்படித் தீர்க்க முடியாத சிக்கலாம்? சகுனியோட சூதாடித் தோத்துட்டமா? இல்லை, கைகேயி வரங் கேட்டுட்டாளா?'' என்று ராஜபார்ட்டார் புராணச் சிக்கல்களையெல்லாம் எடுத்துக் காட்டியதன்றி, அந்தப் புராண நாடகங்களிலெல்லாம் தாமும் நடித்திருப்பதை சுட்டிக்காட்ட மீசையையும் தடவிவிட்டுக் கொண்டார்.

''அந்த மாதிரி சிக்கலாயிருந்தாலும் பரவாயில்லை ராமலிங்கம். என் கௌரவத்தைப் பத்தின விஷயம்'' என்றார் பிள்ளை.

''நான் உங்க தம்பி மாதிரி. அதை எங்கிட்டே சொன்னாத்தான் என்ன'' என்று விடாப்பிடியாகப் பிடித்தார் ராமலிங்கம்.

இத்தனை பிடிவாதத்திற்குப் பிறகு பிள்ளையும் சிறிது இணக்கம் காட்டி, விஷயத்தைச் சிறுகச் சிறுக விளக்கினார். ராஜபார்ட்டார் ஊருக்குப் போனதிலிருந்து நடந்ததையெல்லாம் கோடி காட்டினார். எப்பவும் கிருத்திரம புத்தியுள்ள

ராஜபார்ட்டாருக்கும் விஷயம் மெள்ள விளங்கவே, அவரும் தீவிர யோசனையிலாழ்ந்தார். 'வண்டியை விட்டு இறங்கியதும் நேராக ஊருக்குப் போய்ச் சிவசங்கரம் பிள்ளையிடம் சுந்தருக்கு விவாகமாகியிருந்த சேதியைத் தெரிவித்து அவன்மீது பிள்ளைக்கும் அவர் பெண்ணுக்கும் உள்ள அபிமானத்தை உடைத்துவிடலாம். பிறகு நமது பிள்ளைக்குப் பெண் கேட்கலாம்' என்று திட்டமிட்டு அவசர அவசரமாக ஊர் வந்து சேர்ந்த ராஜபார்ட்டாருக்குச் சிவசங்கரம் பிள்ளை தெரிவித்த தகவல் பெரிய இடியாக வந்து விழுந்தது. பிள்ளையின் பெண் தனிமையில் சுந்தரைப் பார்க்கப் போனதால் ஊரில் அக்கப்போர் ஏற்பட்டிருப்பதால், அந்தப் பெண்ணைத் தன் பிள்ளைக்குக் கட்டினால் செண்பகத் தோட்டத்தில் மட்டுமின்றி, பாவட்டக் குடியிலும் வாளூரிலுமுள்ள தமது பந்துக்களும் மற்றவர்களும் கைகொட்டிச் சிரிப்பார்களே என்று யோசிக்கலானார் ராஜபார்ட்டார்.

தான் சொன்ன தகவலைக் கேட்டதும் ராஜபார்ட்டார் தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்துவிட்டதைக் கண்ட பிள்ளை அவரைச் சமாதானப்படுத்தத் தொடங்கி, ''நான்தான் சொன்னேனே, இந்தச் சிக்கலைத் தீர்க்க முடியாதென்று; கேட்டாயா?'' என்றார்.

ராஜபார்ட்டார், ஏதோ பதில் சொல்ல முயன்று முடியாததால், சற்றுத் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ''எதுக்கும் நீங்க கவலைப்படாதீங்க. நான் குளத்துக்குப் போய்விட்டுச் சாயந்தரமா வர்றேன்'' என்று சொல்லிவிட்டுத் திண்ணையிலிருந்து இறங்கிக் குளத்தை நோக்கி நடந்தார். ராஜபார்ட்டாரின் மனம் பெருங் குழப்பத்திலிருந்ததால் அவர் குளத்தில் வேஷ்டியை நனைத்தபடியே கையில் பிடித்துக்கொண்டு சிறிது நேரம் நின்றார். பிறகு தோய்க்கிற கல்லைத் தமது எதிரியாக நினைத்துக்கொண்டு அதன்மீது ஓங்கிச் சாடினார். அவர் அப்படி அசுரத்தனமாகத் தோய்த்ததைப் பார்த்து அங்கு வந்த உத்திராதிப் படையாச்சி பெரிதாக நகைத்தார்.

தம்மைப் பார்த்து நகைப்பவன் யார் என்று ராஜபார்ட்டார் தலையைத் தூக்கி உஷ்ணமாகப் பார்த்தார். பிறகு ''யார்ரா, உத்திராதியா? ஏண்டா சிரிக்கிறே?'' என்றார். உத்திராதியைச் சிறுவயது முதலே ராஜபார்ட்டார் அறிந்திருந்தார் ஆதலாலும், உத்திராதியின் தகப்பனாரும் ராஜபார்ட்டாரும் நெருங்கிய நண்பர்களாதலாலும் உத்திராதியை ராஜபார்ட்டார் ஏக வசனத்தில்தான் பேசுவது வழக்கம். உத்திராதி மட்டும் தன் தகப்பனாருக்கும் ராஜபார்ட்டாருக்கும் இருந்த உறவு முறையையொட்டி மிக மரியாதையாகப் பேசுவாராதலால், ''ஒண்ணும் இல்லீங்க. நீங்க துணி துவைக்கிறது ஏதோ கல்லுமேலே கோவிச்சுக்கிட்டு அறையறாப் போலல்ல இருக்கு? ஏங்க அவ்வளவு கோவம்? பாருங்க, நம்ம அரப்பளீசுர சதகத்திலேகூட, கோவமே பாவங்களுக்கெல்லாம் தாய் தந்தை, கோவமே, குடி கெடுக்கும், கோவமே பொல்லாது, கோவமே சீர் கேடு...'' என்று தனது புலமையைக் காட்ட மேலும் பாட்டை இழுக்கலானார்.

ராஜபார்ட்டாரின் கோபம் எல்லையை மீறியதால் துணி துவைப்பதை நிறுத்தி, ''எலே உத்திராதி, உன் புராணத்தையெல்லாம் எங்கிட்ட அளக்காதே'' என்று சீறினார்.

''ஏங்க, பட்டணத்திலே என்னாங்க விசேஷம்?''

''ஒண்ணுமில்லையடா.''

''இல்லாமெ இருக்காதுங்க!''

''ஏண்டா இருக்காது?''

''இல்லாமெ இருந்தா உங்க மொகம் இப்படிப் பேயறைஞ்சமாதிரி இருக்குங்களா?''

ராஜபார்ட்டார் சிறிது நேரம் அவரைப் பார்த்து விட்டுப் பெருமூச்செறிந்தார். ''ஆமாண்டா, உத்திராதி! விசேஷந்தாண்டா இருக்கு!'' என்றும் சொன்னார்,

குளக்கரையில் நின்றிருந்த உத்திராதி பள்ளத்தில் குதித்து ஜலத்தருகே வந்து, ''என்னாங்க விசேஷம்?'' என்று கேட்டார்.

''யார் கிட்டேயும் சொல்ல மாட்டியே?''

''மூச்சு விடுவேனா?''

''இதோ பார், மாடிவீட்டுப் பய இருக்கானல்ல?''

''ஆமாம்.''

''அவனுக்குக் கல்யாணம் ஆயிடுச்சு!''

''அப்படியா!''

''ஆமாம்.''

''பொண்ணு யாரு?''

''ஒரு சினிமா ஸ்டார்.''

''என்ன! சினிமா ஸ்டாரா? அவ்வளவு பெரிய ஆளா இவன்?''

''அவளை விட்டுவிட்டு இந்தப் பய இங்கே ஓடி வந்து விட்டான்.''

''முட்டாப் பய!''

''ஏண்டா முட்டாப் பயங்கறே?''

''என்னாங்க அப்படிக் கேக்குறீங்க? அவனவன் ஒரு சினிமா ஸ்டாரை நேரப் பார்க்கிறதுக்குத் தவங் கிடக்கிறானுவ. இந்தப் பய என்னடான்னா ஒரு ஸ்டாரையே கலியாணம் பண்ணிகிட்டு விட்டுட்டு ஓடிவந்துட்டான்னா... சுத்த மடப் பயங்க!''

போடா பயித்தியங்குளிப் பயலே. சினிமா ஸ்டாருக்குக் கணவனாயிருக்கிறது ரொம்பப் பெரிய பதவின்னு நினைச்சுக் கிட்டிருக்கையா?''

''சந்தேகமென்னங்க?''

''சீ! சீ! ராமாயணம் படிக்கிற முகரக் கட்டையைப் பாரு. டேய்! உத்திராதி!''

''உம்?''

''சினிமாக்காரிக்குப் புருஷனாயிருந்தா பல விஷயங்களைப் பொறுத்துக்கணும், தெரியுமா?''

''என்னங்க பல விஷயம்?''

''டேய் முட்டாள்! உனக்கு விளக்கிச் சொல்ல என்னாலே முடியாது. அது கிடக்கட்டும், மாடிவீட்டுப் பய விஷயத்தைக் கேளு. அவன் அவளை விட்டுவிட்டுத் தலைமறைவா இங்கே ஓடியாந்துட்டானா?''

''உம்?''

''அவ இவன் மேலே சூட் போடப் போறா.''

''சூட்டா?''

''அதாண்டா வழக்கு!''

''கோர்ட்டுலே கேஸா! எதுக்குங்க கேஸு?''

''தன்னை அவன் விட்டுவிட்டு ஓடக் கூடாதுன்னு.''

''கல்யாணத்திலே இப்படிக்கூட வலுக்கட்டாயம் உண்டுங்களா?''

அசந்து போய் இந்தக் கேள்வியைக் கேட்டார் உத்திராதி. ராஜபார்ட்டார் மேற்கொண்டு பேசவில்லை. தமக்குத் தெரிந்த தகவல்களைச் சொல்வதோடு நிறுத்திக் கொண்டார். உத்திராதி தனக்குக் கிடைத்த தகவல்களுடன் வீட்டுக்குச் சென்றார். சென்றவர் சும்மா இருக்கவில்லை. அன்றிரவு தனது கம்பராமாயணப் பிரசங்கத்திற்கு வருமாறு ஊரிலுள்ள எல்லோரையும் அழைத்தார். அன்று கம்பராமாயணப் பிரசங்கம் நடைபெறவில்லை. அதற்குப் பதில் பெரும்பாலும் மாடி வீட்டுத் தம்பியைப் பற்றியும், அவன் மனைவியான சினிமா ஸ்டாரைப் பற்றியும்தான் பிரசங்கம் பலமாக நடந்தது.

16. சீதா கல்யாணம்

அன்றிரவு உத்திராதிப் படையாச்சி தன் கம்பராமாயணப் பிரசங்கத்திற்கு ஏற்பாடுகளைப் பலமாகச் செய்திருந்தார். வெகு நாட்களாகப் புளியையோ, குளத்தங்கரையில் குழைவு மாவுகளையோ கண்ணில் காணாததால் கறுத்துப் போய்ச் சில இடங்களில் பாசி பிடித்துப் பச்சையும் தட்டிப் போயிருந்த வெண்கலக் குத்துவிளக்குக்கு அன்று யோகம் அடித்தது. படையாச்சியின் பலவந்தத்தாலும் அதட்டலாலும் தூண்டப் பட்ட அவர் மனைவி குத்து விளக்கைக் குளத்துக்கு எடுத்துக் கொண்டு போய்ப் படையாச்சியின் மீதிருந்த ஆத்திரத்தை யெல்லாம் அதன் மீது காட்டி, இருக்கிற மண்ணையெல்லாம் வைத்துச் 'சரசர' வென்று தேய்க்கவே குத்துவிளக்கு 'பளிச்' சென்று வெளுத்தது. மனைவியைப் படையாச்சி அத்துடன் விடவில்லை; திண்ணையையும் வாசலையும் மெழுகி நன்றாகக் கோலமிட்டு வைக்கவும் சொன்னார். ராமாயணப் புத்தகத்தை வைக்கும் சிக்குப் பலகையையும் ஒரு முறைக்கு ஐந்து முறையாக எடுத்துத் தட்டித் துடைத்து வைத்தார். அன்று அவர் சீதா கல்யாணக் கட்டத்தை உபன்யாசிக்கத் தீர்மானித்திருந்ததால் பாலகாண்டப் புத்தகத்தையும் எடுத்து, அதிலிருந்த பாச்சைகளோடும் எழுத்தாணிப் பூச்சிகளோடும் பகல் முழுவதும் யுத்தம் செய்து கொண்டிருந்தார்.

இவ்வளவு ஏற்பாடுகளைச் செய்து கொண்ட உத்திராதிக்குப் பகல் மிக மெதுவாக நகருவதாகவே தோன்றியது. மாடி வீட்டுத் தம்பியைப் பற்றிப் பேச அவகாசம் வரவில்லையே என்று துடித்துக் கொண்டிருந்தார் உத்திராதிப் படையாச்சி. அத்தனை நாள் ராமாயணம் படித்தும் படையாச்சிக்கு வீண் வம்பில் உள்ள ருசி மட்டும் போகவில்லையென்பதை அறிந்த பகலவனும் மெள்ள மேற்றிசையில் மறைந்தான்.

அன்றிரவு வழக்கத்துக்கு விரோதமாகச் சீக்கிரமாகவே ஆகாரத்தை முடித்துக்கொண்டே படையாச்சி, பலகையுடனும் பாலகாண்டத்துடனும் வாயிற் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்டார். சாதாரண நாட்களில் கருமித் தனத்தைக் காட்டும் படையாச்சி, அன்று அதிகத் தாராளபுத்தியுடன் தனது மனைவியை அழைத்து, ''ஏண்டி! உன் தரித்திர புத்தி போகவில்லையே? விளக்கிலே கொஞ்சம் கூடத்தான் எண்ணெயை ஊத்தினா உன் தகப்பன் வீட்டுச் சொத்து முழுகிப் போய்விடுமோ?'' என்று கடிந்து கொண்டார்.

அவர் சுபாவத்தை அறிந்த அவர் மனைவியும் காரணமில்லாமல் தன் கணவனுக்கு இத்தனை தாராள புத்திவராதென்று எண்ணெயை விளக்கில் நிரப்பி ஊற்றினாள்.

விளக்கை ஏற்றி வைத்துக்கொண்ட கம்பராமாயணப் பிரசங்கியார் பிரசங்கம் கேட்க வரும் பேர்வழிகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். மற்றவர்கள் வருமுன்பாக முக்காடிட்ட பாட்டிமார்கள் சிலர் வந்து திண்ணையில் ஒரு கோடியை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். அடுத்தபடி கோயில் குருக்கள் வந்து வழக்கம் போல் தூணில் சாய்ந்து கொண்டு இடுப்பிலிருந்து பொடி மட்டையை எடுத்து ஒரு சிட்டிகைப் பொடியை எடுத்து நாசியில் வைத்து நான்கு வீடுகளுக்குக் கேட்கும்படியாகப் பலத்த சத்தத்துடன் உறிஞ்சினார்.

குருக்கள் வந்ததுமே ஜ்த்திராதியின் மனம் குளிர்ந்து விட்டது. ''ஏங்க குருக்களையா! வரக்கொள்ள நம்ம ஐயங்காரையும் அழைச்சுக்கிட்டு வரக்கூடாது?'' என்று வினவினார்.

''அழைச்சிண்டு வர்லாந்தான். ஐயங்கார் பெருமாள் கோயில் பக்கம் போயிருக்கானாம்'' என்று வராஹாச்சாரியை ஏகவசனத்தில் பேசித் தமக்கு ஐயங்கார்களிடத்தில் உள்ள வெறுப்பைத் தெரிவித்துக் கொண்டார் குருக்கள்.

ஐயங்காரான வராஹாச்சாரியும் குருக்களுக்குச் சளைத்த ஆசாமியல்லர்; உத்திராதி வீட்டுக்கு வருவதற்காகக் குருக்கள் வீட்டுப் பக்கம் போய்க் குரல் கொடுத்த வராஹாச்சாரிக்குக் குருக்கள் வீட்டில் இல்லை என்பதை அறிந்தவுடன் கோபம் மூக்குக்குமேல் வந்துவிடவே, ''இந்த ஸ்மார்த்தப் பயல் எப்பவும் இப்படித்தான்'' என்று இறைந்தே பேசிவிட்டுப் படையாச்சி வீட்டை நோக்கி நடந்தார்.

தமிழ் நாட்டின் பண்பு இப்படித்தான் சீரழிந்து கிடந்தது. தங்கள் ஆசிரம தர்மங்களை எல்லோருமே விட்டிருந்தாலும், உள்ளுக்குள்ளே பேத உணர்ச்சியும் விஷமும் பலமாகப் பரவிக் கிடந்தது. பிராமணனைப் பிராமணரல்லாதவன் திட்டினான்; பிராமணன் பிராமணரல்லாதவனைத் திட்டினான். ஸ்மார்த்தனை வைஷ்ணவன் திட்டினான்; வைஷ்ணவனை ஸ்மார்த்தனை திட்டினான். நாயுடுவைப் பிள்ளை திட்டினான்; பிள்ளையை நாயுடு திட்டினான். எல்லோரிடமும் குணம் சீரழிந்து கிடந்தது. தங்களை மட்டும் உயர்வாக நினைத்துக் கொண்டிருந்த மிகத் தாழ்மையான மக்களைத் தமிழ்த் தாய் தாங்கிக் கொண்டிருந்தாள். அத்தகைய ஒரு நிலைக்குச் செண்பகத்தோட்டம் அத்தாட்சியாக விளங்கியது.

குருக்களை வராஹாச்சாரியும் வராஹாச்சாரியைக் குருக்களும் மறைமுகமாகத் திட்டுவார்களேயொழிய, எதிரே பார்த்தால் இருவரும் கட்டிப் புரளுவார்கள்; ஹாஸ்யமாகப் பேசிக்கொள்வார்கள். ஆனால், அவர்கள் உதட்டுக்கும் உள்ளத்துக்கும் இடையில் பெரும் திரையொன்று இருந்தது. இத்தனையிலும் வம்பு எங்கேயென்று தெரிந்தாலும் குருக்களோ வராஹாச்சாரியோ அந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடுவது கிடையாது. ஆகவே, குருக்கள் வராஹாச்சாரியைப் பற்றிப் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்த சமயத்திலே வராஹாச்சாரி படையாச்சி வீட்டுத் திண்ணைக்கு வந்து சேர்ந்தார்.

அவரைக் கண்ட குருக்களும் திடீரென முகமலர்ச்சியைக் காட்டி, ''ஐயங்கார் ஸ்வாமிகளா? ஏள்ளணும்! ஏள்ளணும்!'' என்று வராஹாச்சாரியின் பாஷையிலேயே அவரை வரவேற்றார்.

வராஹாச்சாரியும் ''ஏன் ஐயா, குருக்களே? கோயில்லே இன்னிக்குப் பூசை புனர்ப்பூசைதானோ? நாழி ரெண்டாகலை; உத்திராதி வீட்டிலே முகாம் போட்டுவிட்டீரே'' என்று குருக்கள் அடிக்கடி கோயில் விஷயத்தில் கடமை வழுவுவதைச் சுட்டிக் காட்டினார்.

இருவருக்குமிடையில் உத்திராதிப் படையாச்சி புகுந்து, ''வராஹசாமி! நீங்கள்தான் நம்ம பிரசங்கத்துக்கு வந்ததில்லேன்னா குருக்களையாவையும் கெடுத்துடுவிங்க போலிருக்கே!'' என்றார்.

''டேய்! உத்திராதி! குருக்களையா உனக்கு ஆள்பலமே தவிர ராமாயணத்தைக் கேக்கிறார்னு நினைச்சுண்டிருக்கையா? மணி எட்டு ஆனால், கண்களை மூடணுமே அவருக்கு'' என்று, சொல்லிக்கொண்டே தமது அங்கவஸ்திரத்தை எடுத்துக் கொசுவி, உடலுக்குக் குறுக்கே பாய்ச்சி யோக வேஷ்டியாகப் போட்டுக் கொண்டு, கக்கத்தில் ஒரு மூலையில் துணியைப் பதுக்கித் திண்ணையின் ஒரு மூலையில் தமது பன்னிரண்டு திருமண் காப்புகளும் வாழைக்காய் வாழைக்காயாய்க் காட்சியளிக்க உட்கார்ந்து கொண்டார்.

வராஹாச்சாரி உட்கார்ந்த சில நிமிட நேரத்திற்கெல்லாம் சிறுகச்சிறுகப் பத்துப் பதினைந்து பேர் கும்பல் சேர்ந்து விடவே, உத்திராதிப் படையாச்சி ராமாயணம் சொல்ல ஆரம்பித்து, முதலில் வராஹாச்சாரியையும் குருக்களையும் நோக்கி, ''ஆரம்பிக்கலாமா?'' என்று கேட்டார்.

''ஆஹா! ராமாயணத்தை ஆரம்பிக்கக் கேட்கணுமா? எப்பேர்ப்பட்ட காவியம்!'' என்று சிலாகித்தார் வராஹாச்சாரி.

''காவியமாவது; வேதம்னா அது! வேதப்பிராசேத ஸாதாஸீத் ஸாகூஷாத் ராமாயணாத்மனா'ன்னு பெரியவாள் சொல்லியில்லையோ!'' என்று குருக்கள் தமது ஞானத்தையும் காட்டினார்.

''சந்தேகம் என்னங்க? தர்மங்களையெல்லாம் அள்ளிக் கொட்டியிருக்கானே கம்பன்'' என்று உத்திராதிப் படையாச்சியும் கலந்து கொண்டார். அதுவரை மௌனமாக ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருந்த துரைசாமிப் பத்தர், ''அதுக்கென்ன உத்திராதி அண்ணேன்? அந்தக் காலத்திலே தர்மம் இருந்தது; எழுதிவைச்சாங்க-'' என்று மெல்லத் தனது அபிப்பிராயத்தைச் சொன்னார்.

''நல்லாச் சொன்னீங்க! இப்போ நம்ப ஊர்லே நடக்கற தர்மம் நடந்திருந்தா கம்பன் எதை எழுதி வைச்சிருப்பான்?'' என்று மளிகைக்கடை குமாரஸ்வாமி கேட்டான்.

இதைக் கேட்டதும் திண்ணைக் கோடியிலிருந்த பாட்டிமார்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் சிரித்துக் கொண்டனர். சிறிது நேரம் மௌனம் நிலவியது. கம்பராமாயணப் பாட்டைப் படிக்க உத்திராதி தொண்டையைக் கனைத்துக் கொண்டார். உத்திராதியைப் பிரசங்கத்தில் விட்டால் வந்த காரியம் கெட்டுப் போகுமென்ற பயத்தால் குருக்கள், தமது தடித்த குரலைக்கிளப்பி, ''சே! நம்ம ஊர் கெட்ட மாதிரி எதுவும் கெடலேன்னா?'' என்றார்.

''கலியோன்னா இது!'' என்று வராஹாச்சாரி காலத்தின் மீது பழியைப் போட்டார். இதைக் கேட்ட உத்திராதிக்கு ஆவேசம் பிறந்துவிட்டது.

''ஏங்க சுவாமி, கலி மேலே பழியைப் போடறீங்க? கலியா அந்த மாடி வீட்டானை நம்ம ஊருக்கு வரச்சொன்னான்? இல்லை சினிமா ஸ்டாரைக் கட்டிக்கச் சொல்லிக் கட்டாயப் படுத்தினானா?'' என்று விஷயத்தை மெள்ள அவிழ்த்தார் உத்திராதி.

''என்ன, சினிமா ஸ்டாரா! மாடி வீட்டானுக்குக் கலியாணம் ஆயிடுத்தா?'' என்று ஏககாலத்தில் கேட்டார்கள் குருக்களும் வராஹாச்சாரியும். மற்றவர்கள் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப் போனார்கள்.

கம்பர் பெருமானுடைய, மாபெரும் காவியத்தை - கேட்கத் திகட்டாத இராம காதையை - சிக்குப் பலகையில் வைத்துக்கொண்டு, அதில் சிறிதும் நாட்டம் செலுத்தாமல் உத்திராதிப் படையாச்சி மாடி வீட்டு வாலிபனின் புராணத்தை அவிழ்க்கத் தொடங்கியதும் அவர் வீட்டுத் திண்ணையில் கூடியிருந்த அனைவரும் ராமாயணத்தை அறவே மறந்து, மாடி வீட்டுத் தம்பியைப் பற்றிய கதையில் கருத்தைச் செலுத்தினார்கள். அந்த வம்பில் எல்லோரையும் விடப் பரம பக்தர்களான வராஹாச்சாரிக்கும் குருக்களுக்கும் ஊக்கம் மிக அதிகமாயிருந்ததால் உத்திராதிப் படையாச்சி மெள்ள விஷயத்தை அவிழ்த்துவிட்டு, மேற்கொண்டு தமக்கு அதில் சிரத்தையில்லாதது போல் கம்பன் பாட்டைப் படிக்கத் தொடங்கியதும், அந்த இரு பக்தர்களும் இரண்டு சுக்கிராச்சாரிகளைப் போல் கம்பராமாயணக் கிண்டியில் அடைத்துக் கொண்டு உத்திராதிப் படையாச்சியின் பிரசங்கப் பிரவாகம் ஒரு துளிக்கூட வெளியே வராமலிருக்க ஏற்பாடு செய்தார்கள்.

தொண்டையைச் சற்றே கனைத்துக் கொண்ட உத்திராதிப் படையாச்சி தமக்கே உரித்தான அபஸ்வரத்தில் கடிமணப் படலத்திலுள்ள பின்வரும் பாட்டைப் படிக்கலானார்:

''வெய்ய கனற்றலை வீரனு மந்நாண்
மையறு மந்திர முற்றும் வழங்கா
நெய்யமை யாவுதி யாவையு நேர்ந்தான்
றைய றளிர்க்கை தடக்கை பிடித்தான்.''

இந்தப் பாட்டை இரண்டு மூன்று தடவை படித்து வாயைக் கோணக் கோண இழுத்து ராக ஆலாபனையும் செய்த உத்திராதிப் படையாச்சி பிறகு பொருளும் சொல்லலானார்: ''வீரன் உம் - சுத்த வீரனான ராமனும், அ நாள் - அந்த நாளில்; மை அறு மந்திரம் முற்று உம் வழங்கா - குற்ற மற்ற மந்திரம் முழுவதையும் கூறி; வெய்ய கனல் தலை - வெவ்விய அக்கினியிடத்திலே; நெய் அமையாவுதியாவை உம் நேர்ந்தான் - நெய்யினா லமைந்த ஆகுதிகளெல்லாவற்றையும் முறைப்படி பெய்து; தையல் தளிர்க்கை தடக்கை பிடித்தான் - அழகிய சானகியினது தளிர் போன்ற மெல்லிய கையை (தனது) பெரிய திருக்கரத்தால் பற்றினான். திருப்பாற் கடலிலிருந்து இறங்கி வந்த சாக்ஷாத் விஷ்ணுவான இராமபிரான் மந்திரங்களைச் சொல்லி, வசிட்டன் சொன்னபடி ஆகுதிகளைச் செய்த பிறகே அன்னை சானகியின் மலர்க்கரம் பற்றினான் என்று கம்பர் பெருமான் இப்பாட்டினால் உணர்த்துகிறார்'' என்று பாட்டின் பொருளை விவரித்த உத்திராதிப் படையாச்சி பொருள் நிரம்பிய பார்வையொன்றை வராஹாச்சாரியின்மீதும், குருக்கள்மீதும் வீசினார்.

அந்தப் பார்வையின் அர்த்தத்தை நன்றாகப் புரிந்து கொண்ட வராஹாச்சாரியும் சிரக் கம்பனம் செய்து குருக்களை நோக்கி, 'பார்த்தீராய்யா குருக்களே? கலியாண முறையை. முதலிலே மந்திரத்தைச் சொல்லி ஆகுதி பண்ணனும். பிறகுதான் கையைத் தொடலாம், உஹூம்!'' என்று மேற்கொண்டு வம்புக்குக் கோடி காட்டினார்.

''அது அந்தக் காலம்னா! இந்தக் காலத்திலே சகலமும் முடிந்தப்புறம்தானே கல்யாணம்! ஆகுதியாவது, மந்திரமாவது!'' என்றார் குருக்கள், வராஹாச்சாரியின் குறிப்பறிந்து.

''அட முன்னாடி சிநேகம் ஆனாலும் பின்னாடியாவது கலியாணம் ஆகும்ங்கிற நிச்சயமில்லையே குருக்களே!'' என்றார் வராஹாச்சாரி.

''அது சங்க காலத்தோடே சரிங்க, சாமி! அப்பொழுதெல்லாம் தலைவனும் தலைவியும் முன்னாடி கூடுவாங்க; ஆனா பின்னாலே கல்யாணம் நடக்குங்க!'' என்று உத்திராதிப் படையாச்சியும் சம்பாஷணையில் புகுந்து, தனக்குச் சங்க காலத்தைப் பற்றியும் நன்றாகத் தெரியுமென்பதை வலியுறுத்தினார்.

''அந்தக் காலத்திலே நடந்ததுடா உத்திராதி. இந்தக் காலத்திலே நடக்கிறதுங்கிறது நிச்சயமில்லையே!'' என்றார் குருக்கள்.

''குருக்களே! ஏங்காணும், உமக்குப் புத்தியிருக்கா?'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டார் வராஹாச்சாரி.

''என்ன அப்படிக் கேக்கறேள் ஸ்வாமிகளே?'' என்று கேட்டார் குருக்கள்.

''பின்னே என்ன ஐயா! நிச்சயமில்லேன்னு சொல்றீரே, நிச்சயம் இருக்கு ஐயா!''

''நிச்சயமிருக்கா?''

''ஆமாம்! முன்னாடி சம்பந்தம் ஏற்பட்டாலும் கல்யாணம் நடக்காதுங்கற நிச்சயம் இருக்கு!'' என்று வராஹாச்சாரி சொன்னதும், அவர் யாரைக் குறிப்பிடுகிறார் என்பதை அறிந்து கொண்ட துரைசாமிப் பத்தரும் குமாரசாமியும் 'கொல்' என்று சிரித்தார்கள். கோடியில் உட்கார்ந்திருந்த பாட்டிமார்கள்கூட ஒருவரையொருவர் வெட்கப் பார்வையாகப் பார்த்துக் கொண்டு நமட்டு விஷமமாகச் சிரித்ததன்றி, மார்பில் தொங்கிக் கொண்டிருந்த புடவையை இழுத்து விட்டுக் கொண்டு தலை முக்காடுகளையும் சரிப்படுத்திக் கொண்டார்கள்.

தமது கம்பராமாயணத்தைவிட வந்திருந்தவர்கள் மோகனாவைப் பற்றிய வம்பை அதிகமாக ரஸிப்பதைப் பார்த்த உத்திராதிக்கும் உற்சாகம் வரம்பு மீறவே, ''குருக்களையா! நீங்க தோத்துட்டீங்க, போங்க!'' என்றார்.

''என்னடா தோத்துட்டேன்?'' என்று குருக்கள் கேட்டு மேலும் வம்புக்குத் தம்மைப் பலப்படுத்திக் கொள்ளப் பொடி மட்டையை எடுத்துப் பலமாக இரண்டு சிட்டிகைகளை உறிஞ்சினார்.

''என்ன, தோக்கலிங்களா வராஹசாமி? வாழைப் பழத்தில் ஊசி ஏத்தறமாதிரியல்ல விஷயத்தை விளக்கிப்பிட்டாரு!'' என்று உத்திராதி சொன்னார்.

''ஏலே உத்திராதி! இதிலே விளக்கறதுக்கு என்னடா கிடக்கு? அந்தக் குட்டிதான் ராவுலே பகிரங்கமா அந்தப் பயலூட்டுக்குப் போய் வறாளே?''

''ஆமாங்க! பாவம், அந்தப் புள்ளைக்கு இவன் அயோக்யன்கிறது எப்படிங்க தெரியும்?''

''தெரியறதுக்கு என்னடா கிடக்கு? வயசு வந்தவள் தனியாகிருக்கிற புருஷன்கிட்டே போகலாமடா!''

''இதுக்கும் துணை வேணுங்கறளோ?'' என்று வராஹாச்சாரியார் கொஞ்சம் முறைகெட்ட வழியிலும் பேசினார்.

''என்னங்க சாமி அப்படிச் சொல்றிங்க? கொளந்தை வைத்தியம் செய்துக்கல்ல அங்கே போச்சாம்!'' என்று உத்திராதி மேலும் வராஹாச்சாரியைக் கிளப்பவும், என்ன வைத்தியம்ப்பா'' என்று கிண்டலாகக் கேட்டார் வராஹாச்சாரி.

''வராஹாச்சாரி ஸ்வாமி! இந்த விஷயங்கள்ளே உம்மோடே பேசி ஜெயிக்க யாராலும் முடியாதய்யா!'' என்று குருக்கள் சிலாகித்து, வராஹாச்சாரி காம விவகாரங்களில் எத்தனைமட்டரகமாகப் பேசக்கூடியவர்என்பதை விளக்கினார்.

குருக்களின் விஷமப் பேச்சைத் தெரிந்து கொண்ட வராஹாச்சாரி, அதனால் மற்றவர்களுக்குத் தவறான அபிப்பிராயம் ஏற்பட்டுவிடப் போகிறதே என்ற பயத்தால்

பக்கத்திலிருந்த தூணில் சாய்ந்து கொண்டு பெருமூச்சுவிட்டு, ''குருக்களே! இதெல்லாம் பேசணும்னு எனக்கென்ன தலைவிதியா? ஊர் கெட்டுப் போகிறதேன்னு மனசிலே தாபம் ஏற்படறது!'' என்று தமது பொதுநல நோக்கத்தை எடுத்துக் காட்டினார்.

குருக்களும் தமது விஷமத்தை விடாமல், ''சரி ஸ்வாமி! இதற்கு ஏதாவது ஒரு மார்க்கம் கண்டுபிடிக்க வேண்டாமா?'' என்றார்.

''எதற்கு?'' என்று கேட்டார் வராஹாச்சாரி.

''இந்தக் குட்டி விசயமாகத்தான்'' என்றார் உத்திராதி.

''அதுக்கு நாமென்ன செய்ய முடியும்'' என்று மளிகைக் கடை குமாரசாமி விசாரித்தான்.

''பிள்ளைகிட்டே சொல்லிப் பார்க்கிறது!'' என்றார் துரைசாமிப் பத்தர்.

''என்ன செய்ய முடியாது? பெண்ணை அவனுக்கே கொடுத்துடறது!'' - குருக்கள் யோசனை இது.

''அந்த மாதிரி யோசனையும் பண்ணதாகத்தான் கேள்வி'' என்றார் வராஹாச்சாரி.

''பிள்ளை ஏன் அதை முடிக்கலை?'' குருக்கள் அக்கறையுடன் விசாரித்தார்.

''அதுக்குள்ளேதான் ராஜபார்ட்டார் தகவல் கொண்டாந்தாருங்க; அந்தப் பயலுக்குக் கல்யாணம் ஆயிடுத்தாம். அதுவும் ஒரு சினிமா ஸ்டாரைக் கட்டிக் கிட்டிருக்கானாம்!'' என்று உத்திராதி அன்றைய சீதா கல்யாண காரியத்தை எடுத்து விவரித்தார்.

இதைக் கேட்டதும், சபையில், ''ஸினிமா ஸ்டாரா?'' என்று பல குரல்கள் எழுந்தன. பிறகு நிசப்தம். அந்த நிசப்தத்தைக்

கடைசியாகக் கலைத்த துரைசாமிப் பத்தர், ''ஏங்க உத்திராதியய்யா? மாடிவீட்டுப் பயல் பெரிய பணக்காரனோ?'' என்று விசாரித்தார்.

''ஏன் கேக்கிறீங்க பத்தரே?''

''ஒண்ணுமில்லை, ஸினிமா ஸ்டாரைக் கட்டிக்கணும்னா பணம் நிறைய இருக்கணுமே!''

''இருக்கும், யார் கண்டது?''

உத்திராதியின் இந்தப் பதிலைச் சகிக்காத குருக்கள், ''எலே உத்திராதி! ஸ்டாராவது இவன் மூஞ்சியைப் பார்க்கிறதாவது! ஏதாவது எக்ஸ்ட்ராவாயிருக்கும்'' என்றார்.

''எக்ஸ்ட்ரான்னா என்னங்க?''-மளிகைக் கடை குமாரசாமி விசாரித்தான்.

''கொமாரசாமி! இதுக்குத்தான் ஒரு தடவை பட்டணம் போயிட்டு வரணுங்கிறது. உலக அனுபவம் வேண்டாமாப்பா?'' என்று அங்கலாய்த்த குருக்களையய்யா, ''இதோ பார்ரா! எக்ஸ்ட்ரான்னா சில்லறை வேஷம் போடறவங்களுக்குப் பேரு!'' என்றார்.

''உங்களுக்கு எப்படிங்க இதெல்லாம் தெரியும்?'' என்று கேட்டார் உத்திராதி.

''போன வாரம் ப்ட்டணம் பெரிய கோயில் உற்சவத்துக்குப் போயிருந்தேனோ இல்லையோ?''

''ஆமாம்; பிரம்மோற்சவம்.''

''அதிலே ஒரு நாள் ராத்திரி மெல்ல ஸ்டூடியோவுக்குக் கம்பி நீட்டினேன்.''

''எலெக்ட்ரிக் வேலை செஞ்சிங்களா?''

''சீ!''

''நீங்கதானே 'கம்பி நீட்டினேன்'னு சொன்னீங்க.''

"அட முட்டாளே! கம்பி நீட்டினேன்னா பட்டணத்துப் பாஷையிலே ஓடிப் போயிட்டேன்னு அர்த்தம்."

"ஓஹோ! ஸ்டூடியோவுக்கு ஓடிப் போயிட்டீங்களா?"

"ஆமாம்."

"போயி?"

"ஷூட்டிங் பார்த்தேன்."

"அப்படியா?"-வாயைப் பிளந்தார் உத்திராதி. ஷூட்டிங் பார்த்திருந்தால் குருக்கள் பெரிய பேர்வழியாகத்தான் இருக்கவேண்டும் என்று தீர்மானித்தார். பட்டணம் கோயில் பிரம்மோற்சவம், ஸ்வாமியின் ரிஷப வாஹன சேவை எல்லாம் இரண்டாம் பக்ஷமாகப் பட்டன, அந்தக் கம்பராமாயணப் பிரசங்கிக்கு. ஆகவே, அவர் பக்தியுடன் குருக்களைப் பார்த்து, "குருக்களையா! அடுத்த தடவை பிரம்மோற்சவத்திற்குப் போகக் கொள்ள நானும் வரேன்" என்றார்.

"பிரம்மோற்சவம் எப்பய்யா குருக்களே?" என்று வினவினார் வராஹாச்சாரி.

"சித்திரையிலேதான்."

"பின்னே என்ன! நானும் இப்போ இருக்கிற கமிஷனரைப் பார்த்து நாளாச்சு. நானும் வரேன்" என்ற வராஹாச்சாரி, தாம் வந்தால் போலீஸ் செல்வாக்குடன் ஷூட்டிங் பார்க்கலாம் என்பதைச் சுட்டிக் காட்டினார்.

"இதென்ன ஒத்தர் ஒத்தரா பிரிச்சுப் பேசுறீங்க? நாம் அத்தனை பேருமே ஒரு செட்டா போவோம்!" என்று கொமாரசாமி தன்னையும் துரைசாமி பத்தரையும் குருக்கள் உத்திராதி, ஐயங்கார் ஸ்வாமி இவர்களுடன் சேர்த்துக் கொண்டான்.

"அது கிடக்கட்டும். நாளிருக்குது. இப்போ இந்தக் குட்டி மோகனாவை என்ன பண்றது?" என்று வருத்தத்துடன் கேட்பதுபோல் பாசாங்கு செய்தார் வராஹாச்சாரி.

''இரண்டாந்தாரமாக அவனுக்கே கொடுத்துட வேண்டியதுதான்!'' என்றார் குருக்களையா.

''அதுக்குச் சட்டம் இடங்கொடுக்காதய்யா!'' என்று வராஹாச்சாரி தமது சட்ட அறிவைக் காண்பித்தார்.

''அப்பொ என்னதான் செய்றது?'' என்று குருக்கள் கேட்டார்.

வெறும் வம்புக்காகவே கூடியிருந்த அந்தக் கிராமக் கும்பலுக்கு மற்றவருடைய வாழ்க்கையில் தலையிட இஷ்டமிருந்தாலும் சிக்கலைத் தீர்க்கும் சக்தியில்லாததால், குருக்கள் கேள்விக்கு யாரிடமும் பதில் கிடைக்கவில்லை. உத்திராதிப் படையாச்சிக்கும் என்ன பதில் சொல்லுவதென்று தெரியவில்லையாகையால், கம்பராமாயணத்தின் அடுத்த பாட்டைப் படிக்கத் தொடங்கினார்.

வம்பிலேயே நாழி அதிகமாக ஏறிவிட்டதாலும் யாருக்கும் உத்திராதியின் கம்ப ராமாயணத்தைக் கேட்க இஷ்டமில்லை யாகையாலும் திண்ணைக் கோடியிலிருந்தவர்கள் ஒவ்வொரு வராகக் கீழே இறங்கலானார்கள். இதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட வராஹாச்சாரியும், ''உத்திராதி! போறுண்டா! அதான் பகவான் பிராட்டி கையைப் பிடிச்சாச்சு. மீதியை நாளைக்கு வச்சுக்கோ!'' என்றார்.

மறுநாளைக்குத் தன்னிடம் அக்கப்போர் ஏதுமில்லாததால் யாரும் வரமாட்டார்கள் என்று நிச்சயமாக அறிந்திருந்த உத்திராதி, ''ஸ்வாமி! ஒரே ஒரு பாட்டுங்க'' என்று கெஞ்சினார்.

''உத்திராதி! கேக்கறவாளைப் பார்த்துக்கோ'' என்று திண்ணைக் கோடிக்காகக் கண்களைச் செலுத்தினார். உள்ள நிலையைப் புரிந்து கொண்ட உத்திராதியும் பாலகாண்டத்தை மூடிக் கண்களையும் மூடி வாழ்த்துப் பாடினார். ஆனால், அவர் அகக் கண் முன்னே எழுந்து நின்றவர்கள் ராமனும் சீதையுமல்ல; மாடி வீட்டுத் தம்பியும் மோகனாவும் தான்!

17. தாழைச் செடியருகில்

உத்திராதி வீட்டில் சீதா கல்யாணம் நடந்து நாட்கள் இரண்டேயானாலும் இரண்டு யுகமாகத் தோன்றியது மோகனாவுக்கு. உத்திராதிப் படையாச்சியின் சீதா கல்யாணம் - இல்லை, மாடி வீட்டுத் தம்பி கல்யாண - உபந்நியாசத்தைக் கேட்ட கிராமவாசிகள் அந்தச் செய்தியை உள்ளூரில் மாத்திரமுமின்றி அக்கம் பக்கத்துக் கிராமங்களிலும் பரப்புவதில் முனைந்ததால், அந்த வட்டாரம் பூராவும் மோகனாவைப் பற்றிய வம்பே பெரிதும் உலாவி வந்தது. இந்த வம்பின் விளைவாக, மானத்தையே பெரிதாக மதித்து வாழ்ந்து வந்த சிவசங்கரம் பிள்ளையின் மனம் அடியோடு நொந்து போயிருந்தது. அவர் மனம் மட்டுமென்ன, அவர் வீடே களையிழந்து கிடந்தது.

வழக்கமாக வாயிற் பிறையில் நன்றாகப் பிரகாசிக்கும் அகல் விளக்குக்கூட அன்று அந்த வீட்டு மனோ வேதனையைப் புரிந்து கொண்டது போலத் தானும் சுடர் குன்றி அழுது கொண்டிருந்தது. சீதா கல்யாணம் நடந்த மூன்றாம் நாளன்று மாலை அது. அப்பொழுதுதான் மோகனா முகம் கழுவி நெற்றியில் குங்குமப் பொட்டும் விபூதியும் இட்டுக் கொண்டு விளக்கை ஏற்றிவிட்டுப் போயிருந்தாள். விளக்கை அவள் ஏற்றிப் பிறையில் கொண்டுவந்து வைத்தாளேயொழிய, அந்த விளக்கை அவள் ஏற்றியதாகவோ, உள்ளேயிருந்து வாயில்வரை நடந்து வந்து பிறையில் வைத்ததாகவோ அவளுக்கு உணர்வே இல்லை. அவள் உள்ளம் ஊர் வம்பு என்ற அணு அஸ்திரத்தால் தூள் தூளாக உடைக்கப்பட்டிருந்ததால், அறிவு எங்கெங்கோ பறந்து கொண்டிருந்ததது. வெறும் நடைப் பிணமாகவே அவள் கூடத்துக்கும் வாயிலுக்கும் உலாவினாள். விளக்கை வாயிலில் வைத்துவிட்டு வந்து கூடத்திலிருந்த முருகன் படத்துக்கு அவள் நமஸ்காரம் செய்தபோதுகூட ஏதோ வழக்கத்தை முன்னிட்டுப்

படத்துக்குக் கைகூப்பினாளே யொழிய, சிந்தனை இறை வழிபாட்டில் இறங்கவில்லை.

வீட்டில் மௌனம் அளவுக்கதிகமாக நிலவிக் கிடந்து. சதா 'வெடுக் வெடுக்'கென்று பேசும் சுபாவமுள்ள அத்தையம் மாள்கூட நாவையடக்கிக் கொண்டு வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள். புழக்கடை மாட்டுத் தொழுவத்திலிருந்து பாலுடன் உள்ளே நுழைந்த அவளது நடையில்கூட அமைதியிருந்தது. ஆடிக் குலுங்கி ஆர்ப்பாட்டம் செய்யும் அத்தையம்மாளின் பெரிய சரீரம்கூட உள்ள நிலையை அனுசரித்து அடங்கியே கிடந்தது.

முருகன் படத்தை வணங்கிய மோகனா உள்ளே சென்று ஒரு முறத்தில் அரிசியை எடுத்துக் கொண்டு வந்து தாழ்வாரத்தில் குத்திட்டு உட்கார்ந்துகொண்டு கல்லையும் மண்ணையும் பொறுக்கலானாள். அவள் தலை அரிசியை நோக்கிக் குனிந்து கொண்டிருந்தது; ஆனால் கண்களுக்குக் கல்லோ அரிசியோ தெரியவில்லை அவளது அழகிய விழிகளிலே நீர் மண்டிக் கிடந்தது. ஓரிரு நீர் முத்துக்களும் முறத்திலிருந்த அரிசியின் மேல் விழுந்தன.

மோகனாவின் இந்த நிலைமையை அத்தையம்மாள் பார்த்துக் கொண்டுதான் சமையலறைக்குள் சென்றாள். சமையலறையை அடைந்ததும் துக்கம் பொறுக்க முடியவில்லை யாகையால், அவள் பால் செம்பைக் கீழே வைத்து விட்டுத் தரையில் குந்தினவாக்கில் உட்கார்ந்து தயிர்கடையும் தூண்மேல் சாய்ந்த வண்ணம் குலுங்கிக் குலுங்கி அழலானாள். அவளுடைய விசும்பல் தாழ்வாரத்தில் அரிசி பொறுக்கிக் கொண்டிருந்த மோகனாவுக்குக் கேட்கவே, மோகனா தன் பணியை விட்டுவிட்டு விடுவிடுவென்று சமையலறைக்குள் ஓடிவந்து, "அத்தே! ஏன் அத்தே அழறீங்க?" என்று வினவினாள்.

அத்தையம்மாள் அழுகையை நிறுத்தாமலே தன் அண்ணன் மகளை ஏறெடுத்து நோக்கியதன்றி, தழுதழுத்த குரலிலும் சொன்னாள்: "கண்ணு! நான் அழாமெ எப்படியிருக்க முடியும்? அழறத்துக்குத்தானே நான் ஜென்மம் எடுத்திருக் கேன்!" என்று.

"ஏன் அத்தே அப்படிச் சொல்றீங்க?" - மோகனாவின் குரல் துக்கத்தால் கம்மியது.

அத்தையம்மாள் புடவைத்தலைப்பால் கண்களைச் சிறிது துடைத்துக் கொண்டு, "கண்ணு, வேறே எப்படிச் சொல்லச் சொல்றே? என்னைத் தாலி கட்டினவர் போனார்; அந்தத் துக்கத்தை உன் முகத்தைப் பார்த்து மறந்தேன். உங்கம்மா போனாள்; அந்தத் துக்கத்தையும் உன் முகத்தைப் பார்த்து மறந்தேன். அந்த மலர் முகம் வாடிப் போச்சே கண்ணு, நான் இனி எதைப் பார்த்து ஆறுவேன்?" என்று சொல்லி மீண்டும் அழலானாள்.

மோகனா மெள்ளத்தன் துக்கத்தையடக்கிப் புன் முறுவல் செய்து, "இதோ பார் அத்தே! சிரிக்கிறேன் பாரு!" என்றாள்.

அத்தையம்மாள் அவள் முகத்தை மீண்டும் ஒரு முறை பார்த்து, "கண்ணு! இந்தச் சிரிப்பை நான் பார்க்க இஷ்டப்படலை" என்று வரட்டுக் குரலில் சொன்னாள்.

"பின் எந்தச் சிரிப்பு அத்தே?"

"நீ உன் புருஷனுடன் மணையிலே நிற்கக்கொள்ள வெட்கச் சிரிப்பு சிரிப்பையே, அதையல்ல நான் பார்க்க ஆசைப்பட்டேன்!"

மோகனா மேற்கொண்டு பேசவில்லை. அத்தையம்மாள் விடாமல் பேசினாள்: "அந்த ஆசையிலே தான் அந்தப் படுபாவி மாடி வீட்டான் மண்ணை அள்ளிப் போட்டுட்டானே. அந்தச் சேதியை கொண்டாரத்துக்கு இந்த நாசமாப்போற

ராஜபார்ட்டான் வந்து சேர்ந்தானே. அவன் தலையிலே இடிவிழ?'' என்றாள்.

''அவர்களைச் சொல்லி என்ன பிரயோசனம் அத்தே? எல்லாம் என் தலைவிதி.'' என்று சொல்லிய மோகனா மீண்டும், கண்ணில் ஊறத் தொடங்கிய நீரை மறைக்க மறுபக்கம் திரும்பினாள். ஆனால் அத்தையம்மாளின் கூரிய விழிகள் நொடிப் பொழுதில் நிலைமையைக் கண்டு கொண்டதால், அவள் எழுந்து வந்து மோகனாவைக் கட்டியணைத்துக் கொண்டு தன் தோள் மீது சார்த்திக் கொண்டு கண்களைத் துடைத்துத் தலை மயிரையும் அன்பாகக் கோதிவிட்டாள். பிறகு எதையோ நினைத்துக் கொண்டவள் போல், ''கண்ணு! இண்ணைக்கு வெள்ளிக்கிழமையில்லே?'' என்று வினவினாள்.

''ஆமாம் அத்தே.''

''அப்படியானா ஒரு வேலை செய்வியா?''

''சொல்லு அத்தே.''

''ஈசுவரன் கோயிலுக்குப் போய்க் கொஞ்சம் எண்ணெயும் போட்டுட்டு அர்ச்சனையும் பண்ணியாறயா?''

''வேண்டாம் அத்தே, நான் வீட்டை விட்டு எங்கேயும் போகலே.''

''சே? அசடே! சும்மாப்போ. மனுஷன் செய்ற கெடுதலை சுவாமி எப்படியாவது உடைச்சுப் போடுவார்!'' என்று சொல்லிய அத்தையம்மாள் ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு, பழம், ஒரு தேங்காய் இவற்றைக் கொண்டு வந்து கொடுத்துக் கையில் ஒரு வெண்கலக் கிண்ணத்தில் எண்ணெயையும் கொடுத்து வலுக்கட்டாயமாகக் கோயிலுக்கு அனுப்பி வைத்தாள்.

அத்தையம்மாள் வாக்கு உண்மையில் தெய்வ வாக்காகவே முடிந்தது. தெய்வம் கண் திறக்கத்தான் செய்தது.

மோகனா அர்ச்சனையை முடித்துக் கொண்டு தாழைக் காட்டுக்காக வந்து கொண்டிருக்கையில் யாரோ அவளைத் தோளைத் தொட்டு நிறுத்திக் கையிலிருந்த தட்டையும் வாங்கிக் கீழே வைத்தார்கள். யாரென்பதை அந்த ஸ்பரிசத்திலிருந்தே மோகனா தெரிந்து கொண்டாள். அவள் மார்பு 'படபட' வென்று அடித்துக் கொண்டது. ''விடுங்கள் என்னை; யாராவது பார்க்கப் போகிறார்கள்!''

மாடி வீட்டுத் தம்பி மெள்ள அவளை அருகிலிருந்த தாழைச் செடியின் மறைவுக்கு இழுத்தான். அது மட்டுமா? ''இங்கு யாருமில்லை, மோகனா!'' என்று குழைந்து பேசவும் ஆரம்பித்தான்.

மாடி வீட்டுத் தம்பியின் கை தன் தோள்மீது பட்ட மாத்திரத்திலேயே பலவித உணர்ச்சிகளுக்கு இலக்கான மோகனா, அவன் தாழைச் செடியை நோக்கித் தன்னை இழுக்க முற்பட்டதும் சொல்லவொண்ணாச் சங்கடத்துக்கு உள்ளானாள். யாராவது பார்த்து விட்டால் என்ன செய்வது என்று அவள் உள்ளத்தே எழுந்த பயமென்னும் நெருப்பை 'இங்கு யாருமில்லை மோகனா'' என்ற அவன் வார்த்தைகள் நன்றாக விசிறி விடவே, அவள் நெஞ்சிலே திகில் நன்றாகச் சுடர்விட்டு எரிய ஆரம்பித்தது. ஆனால், அந்தச் சுடரை மாடி வீட்டுத் தம்பியின் குரலில் இருந்த குழைவென்னும் பன்னீர் அணைக்கவே, தன்னை ஆட்டி வைக்கும் உணர்ச்சி பயமா இன்பமா என்பதை அறியாதவளாய் மோகனா அவன் இழுத்த திக்கில் சென்று கொண்டிருந்தாள்.

மோகனாவைச் சுந்தர் ஸ்பரிசித்த இடத்துக்கும் தாழைச் செடிக்கும் நாலடி தூரம்தான் இருந்தது. அந்த தாழைக் காட்டைச் சுற்றிச்சுற்றி ஓடி ஆயிரம் முறை விளையாடியிருக்கும் மோகனாவுக்கு அந்த நாலடி தூரம் நாற்பதினாயிரம் அடி தூரம்போல் இருந்தது. அவள் இஷ்டத்துக்கு விரோதமாக

எதையும் செய்ய இஷ்டப்படாத சுந்தரம், தாழைச் செடியின் மறைவு கிடைத்ததும், அவள் தோள்மீது தான் வைத்திருந்த கையை எடுத்துவிட்டு, ''மோகனா! இதோ என்னைப் பார், தலையைத் தொங்கப் போடாதே. உன்னிடம் பேச வேண்டிய விஷயங்கள் நிரம்ப இருக்கின்றன'' என்றான்.

மோகனா தலை நிமிரவேயில்லை. சற்று நேரம் பதில் சொல்லவும் இல்லை. அவனைப் பார்த்த நாளாகத் தனக்குக் கிராமத்தாரால் ஏற்பட்ட தொல்லைகள் அவள் மாசற்ற இதயத்தைத் தாக்கிக் கொண்டிருந்தாலும் ஊர் வம்பினால் ஏற்பட்ட அவமானத்தாலும் உடல் குன்றிப் போய்க் கொண்டிருந்த மோகனா மௌனமே சாதித்தாள். அவள் மனோநிலையைப் புரிந்து கொண்ட மாடி வீட்டுத் தம்பி அவள் மீது கண்களை ஓட்டி, சென்ற சில நாட்களில் அவள் உடலிலே ஏற்பட்டிருந்த மாறுதலைக் கண்டு பிரமித்துப் போனான். வாலிபத்தின் எழிலையெல்லாம் திரட்டி வைத்தது போலிருந்த வாளிப்பான அவள் சரீரம் பெரிதும் இளைத்திருந்தது. முகம் பூமியை நோக்கித் தாழ்த்தப்பட்டிருந்தாலும் பக்கவாட்டில் கன்னம் தெரிந்ததால் அதிலும் லேசாக வாட்டம் கண்டிருந்ததைச் சுந்தர் கவனித்தான். சாதாரணமாக உறுதியாய் நிற்கக் கூடிய அவள் கால்கள் உறுதியற்று ஏதோ உடலைச் சுமக்க வேண்டு மென்று நின்றிருந்தவை போலிருந்தன மாடி வீட்டுத்தம்பியின் கண்களுக்கு. உள்ளம் பாகாக உருகவே ''மோகனா! நீ ஏன் இப்படி இளைத்து விட்டாய்?'' என்று விசாரித்தான்.

''இளைத்தாலென்ன? பூமிக்குப் பாரமாகயிருப்பவர்கள் இளைப்பது நல்லதுதானே! பூமிக்குப் பாரம் சிறிது குறையுமல்லவா?'' என்று சொல்லிய மோகனாவின் கண்களில் திரண்ட நீர்த்துளிகள் இரண்டு அவள் பாதத்திலும் விழுந்தன.

அவள் குரலில் தொனித்த துக்கத்தையும் கண்களிலிருந்து நிலத்தில் உதிர்ந்த நீர்த்துளிகளையும் கவனித்த சுந்தர் மீண்டும்

தோள்மீது தன் இடக்கரத்தை வைத்து, அவளைத் தன்னை நோக்கி இழுத்ததன்றி அவள் முகத்தை வலது கையால் நிமிர்த்திப் பார்த்து, அவள் கன்னங்களில் வழிந்தோடிக் கொண்டிருந்த நீரருவிகளை மெள்ளத் துடைக்கவும் செய்தான். பிறகு அவள் கன்னங்களிரண்டையும் தன் இரு கைகளாலும் பிடித்துத் தூக்கி அவள் கண்களைச் சிறிது நேரம் உற்று நோக்கி விட்டு, ''நீ இத்தனை கோழை என்று நான் நினைக்கவேயில்லை!'' என்று கண்டிக்கும் முறையிலும் பேசினான்.

மோகனாவின் கண்களில் மெள்ளக் கோபம் உதயமா யிற்று. ''சில விஷயங்களில் தங்களைப் போன்ற தைரிய சாலியாயிருப்பதை விட எங்களைப் போல் கோழையா யிருப்பதே மேல்'' என்று சொன்னாள் மோகனா, கனல் கக்கும் விழிகளை அவன்மீது திருப்பி.

''நான் எதில் தைரியசாலி மோகனா?'' என்று கேட்டான் சுந்தர். அவன் வார்த்தைகளில் பதற்றமில்லை; வெறுப்பு மட்டும் மண்டிக் கிடந்தது.

''சமூகத்தை நீங்கள் லட்சியம் செய்யவில்லை. எதை வேண்டுமானாலும் பேசிவிட்டுப் போகட்டும் என்ற துணிவுடன் இருக்கிறீர்கள். அந்தத் துணிவு எல்லோருக்கும் வருமா?'' என்றாள் மோகனா.

''சமூகத்தின் சொற்களெல்லாம் உண்மையென்று நீ நினைக்கிறாயா? சமூகமே ஒரு வம்பு மடம். அதுவும் இந்தக் கிராமத்திலிருக்கும் சமுதாயமிருக்கிறதே இதைவிடப் பெரிய வம்பு மடத்தை நான் பார்த்ததே இல்லை. அதன் பிதற்றல்களையெல்லாம் நான் லட்சியம் செய்ய வேண்டுமா?'' என்று கேட்டான் சுந்தர்.

மோகனா மீண்டும் தலையைத் தூக்கி அவனைக் கூர்ந்து நோக்கி, ''அப்படியானால்...'' என்று ஏதோ சொல்ல முயன்று முடியாமல் வார்த்தையைப் பாதியிலேயே நிறுத்தினாள்.

''அப்படியானால்? உள்ளத்தைத் திறந்து பேசு, மோகனா என் உள்ளத்தை உன்னிடம் திறந்து காட்டவே உன்னைத் தேடி நான்கு நாட்களாக அலைகிறேன். சந்தர்ப்பம் இன்றுதான் கிடைத்தது. இனி உன்னைத் தனிமையில் எப்பொழுது சந்திப்பேனோ தெரியாது. ஆகவே, இப்பொழுதே சொல்லிவிடு. பேச வேண்டியதையெல்லாம் பேசித் தீர்த்து விடுவோம்'' என்று சுந்தர் அவள் முதுகைச் சற்று ஆறுதலாகத் தடவியும் கொடுத்தான்.

''அப்படியானால்...'' என்று பேச ஆரம்பித்து மீண்டும் தயங்கிய மோகனா மெள்ளச் சமாளித்துக் கொண்டு, ''அப்படியானால் ஊரில் உங்களைப்பற்றி ஏதேதோ சொல்கிறார்களே, அதெல்லாம்...'' என்றாள்.

''உண்மைதானா என்று கேட்கிறாயா?''

''ஆமாம்!''

''ஊரில் ஏதேதோ பேச்சு நடக்கிறது! அதில் எதைக் கேட்கிறாய் மோகனா?'' என்று சுந்தர் மெள்ள அவளைத் தன்னருகில் மீண்டும் இழுத்துக் கொண்டான்.

அவள் அவனுக்கு வெகு அருகில் நெருங்கினாள். அமாவாசையாகி ஐந்து பிறைகள் ஓடிவிட்டதால் கிளம்பிய ஆறாம் பிறைச்சந்திரன் சின்னஞ்சிறு கிரணங்களை அந்தத் தாழை மரத்தின்மீது தூவினான். அவற்றை வடிகட்டிய தாழையின் நீண்ட மடல்கள், ஓரிரண்டு கிரணங்களை மட்டும் மோகனாவின் உடல்மீது வீசியிருந்ததால் ஏதோ விண்ணிலிருந்து வந்த ஆபரணத்தைத் தரித்தவள் போல் பேரழகுடன் விளங்கினாள் அவள். நெருங்கியதால் அவள் தலையிலிருந்த மல்லிகைப் பூவின் வாசனையும், தாழைக் காட்டில் எங்கோ ஒரு மூலையில் பூத்திருந்த தாழம்பூவின் நறுமணமும் சுந்தரை எங்கேயோ சொர்க்கலோகத்துக்கு இழுத்துக் கொண்டு சென்றதால், அவன் கரங்களிரண்டும் மோகனாவைச் சுற்றிச் சென்று வளைத்துக் கொண்டன. கைகள் இறுகியதன் விளைவாக அவன் உடலுடன்

நெருங்கிய அவள் உடலில் எண்ணற்ற இன்ப அலைகள் பாய்ந்து சென்றதால், அவள் மெள்ள வேறுபக்கம் திரும்பினாள். தன் கரங்களுடன் அவள் கன்னத்தை நோக்கி முகத்தைச் சாய்த்த சுந்தர், மோகனா! உனக்கு என்னைப் பிடித்திருக்கிறதா?'' என்று கேட்டான்.

மோகனா பதில் சொல்லவில்லை. அவன்மீது நன்றாகச் சாய்ந்தாள். அதிலிருந்தே அவளது உள்ளத்தைப் புரிந்து கொண்ட சுந்தர், ''அப்படியானால் மோகனா நீ இந்தக் கிராமத்துக்குப் பயப்படாதே. என் இதயத்தில் உன்னைத் தவிர வேறு யாருக்கும் இடமில்லை'' என்றான்.

மோகனாவும் மெள்ளத் துணிவை வரவழைத்துக் கொண்டு, ''இதயத்தில் மட்டும் இடமிருந்தால் போதுமா?'' என்றாள்.

''போதாதா?''

''போதாது!''

''வேறெங்கு இடம் வேண்டும்?''

''ஒரு பெண் மானத்துடன் வாழ வேண்டுமானால் புருஷன் இதயத்தில் மட்டுமல்ல. வீட்டிலும் இடம் பெற வேண்டும்.''

''கலியாணம் ஆகவேண்டும்?''

''ஆம்; அதற்குப் பிறகுதான் பெண்களுக்குப் பந்தோபஸ்து ஏற்படுகிறது. புருஷன் வீடுதான் பெண்கள் உறையும் கோட்டை. அவன் கட்டும் தாலிதான் பிறரை எட்ட நிற்க வைக்கும் நெருப்பு. தமிழ் நாட்டுப் பெண்களுக்கு இவை இரண்டும் தேவை. இதயத்தில் மட்டும் பெண்கள் இடம் பெற்றுத் திருப்தியடையும் நாடுகள் வேறு.

இதைக் கேட்ட சுந்தரின் இதயத்திலிருந்து ஏக்கம் நிரம்பிய பெருமூச்சொன்று வெளிப்பட்டது. அவள் தன்னிடமிருந்து

போய்விட்டால் என்ன செய்வது என்ற பயத்தாலோ என்னமோ அவளை இறுக அணைத்துக் கொண்டான். அந்த நிலையில் அவன் வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தைகளிலும் உணர்ச்சி ததும்பியே நின்றது. ''மோகனா! நீ விரும்பும் அத்தனையும் உனக்கு அளிப்பதே என் நோக்கம். ஆனால் உடனடியான அந்தச் சௌபாக்கியத்தை உனக்கு அளிக்க முடியாத நிலையில் நான் இருக்கிறேன். என் நிலை தர்மசங்கடமானது. என் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள சிக்கலை உடைக்க முயன்று வருகிறேன். நீ கொஞ்சம் பொறுமையுடனிருக்க வேண்டும்! என்னை நான் விடுவித்துக் கொள்ளச் சிறிது நீ அவகாசமளிக்க வேண்டும்'' என்றான் சுந்தர்.

''எதிலிருந்து விடுவித்துக் கொள்ளப் போகிறீர்கள்!''

''வாழ்க்கையின் பிணைப்பிலிருந்து.''

''உங்களை அப்படிப் பிணைத்து வைத்திருப்பது யார்?''

''ஒரு பெண்.''

''அப்படியானால் ஊரார் பேசுவது உண்மைதான்!''

''என்ன பேசுகிறார்கள்?''

''உங்களுக்குக் கலியாணமாகி விட்டதாக.''

சுந்தர் அடுத்தபடி சொல்லிய பதில் அவளை அப்படியே உலுக்கிவிட்டது. நெருப்பை மிதித்தவள் போல் திடீரென அவனைவிட்டு விலகி நின்றாள்.

''அது உண்மைதான் மோகனா!'' என்றான் சுந்தர். அதைச் சொன்னபோது அவன் குரலில் வெட்கமில்லை; வருத்தமே தேங்கி நின்றது.

''உண்மையா? இதைச் சொல்லவா என்னை இங்கு அழைத்து வந்தீர்கள்?'' என்று கேட்டுத் தடுமாறிப் பேசினாள் அவள்.

சுந்தர், சற்றும் நிதானமிழக்காமலே பேசினான்: "மோகனா! கலியாணம் ஆனதென்னவோ உண்மை. ஆனால், அதற்குப் பின் அவளை நான் பார்க்கவேயில்லை. பார்க்க இஷ்டப்படவும் இல்லை. என் வாழ்வில் ஏற்பட்ட பெரும் விபத்து அந்த மணம். அது ஒரு பெருங்கதை. ஒரு நாள் நீ அதை அறிந்தால்..."

"உங்களைப் பாராட்டுவேன்! இல்லையா?"

"பாராட்டுவாயோ என்னவோ தெரியாது. ஆனால் நிச்சயமாகப் பரிதாபப்படுவாய்!"

"மிஸ்டர் சுந்தர்! இந்த நடிப்பு என்னிடம் வேண்டாம். உங்கள் முதல் மனைவிதான் சினிமாக்காரி, நான் அல்ல, என்று சொல்லிவிட்டுத் திடீரென நாலடி எடுத்து வைத்துத் தரையிலிருந்த பூஜைத் தட்டை எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கிப் போக முயன்றாள்.

சுந்தரும் துரிதமாக அவளை அணுகி அவள் கையைப் பிடித்து நிறுத்திக் கெஞ்சினான். "மோகனா! நான் சொல்வதை முழுதும் கேட்டுவிட்டுப் போ. உண்மையை சரியாக அறியாமல் போகாதே" என்றான்.

"அறிந்த வரையில் போதும், விடுங்கள் கையை!" என்று அவன் கையிலிருந்து தன் கையை வெடுக்கெனப் பிடுங்கிக் கொண்டு விடுவிடு எனச் சென்று விட்டாள் மோகனா.

அவள் போகும் திசையையே பார்த்துக் கொண்டு சுந்தர் சிலையென நின்றான். அதுவரை தாழைக் கொடிக்கு அப்புறத்தில் மறைந்து நின்ற ஓர் உருவம் மறைவிலிருந்து வெளிப்பட்டுச் சுந்தரை நோக்கி வந்தது. வந்ததன்றி அவன் தோளைப் பிடித்து ஓர் உலுக்கு உலுக்கி, இகழ்ச்சியாகவும் பேசவும் முற்பட்டது.

18. ராஜபார்ட்டாரின் திட்டம்

''என்ன தம்பி! தாழைக் காட்டிலேயே நடக்குதோ ரோமன்ஸு!'' என்ற குரல் மாடி வீட்டுத் தம்பியின் ஸ்தம்பித்துப் போயிருந்த புத்தியைச் சுளீரென்று அடித்து இந்த உலகத்துக்கு இழுத்து வந்தது. அவன் கண்களை அகல விரித்து, தன்னைப் பார்த்து அப்படி இகழ்ச்சியாகப் பேசுவது யார் என்று கவனித்தான். எதிரே நமது பயங்கர மீசைமீது கையைப் போட்டுக் கொண்டு நின்றிருந்தார் ராஜபார்ட் ராமலிங்கம். அவர் அங்கு வந்து எத்தனை நேரமிருக்கும். நடந்தவற்றை எத்தனை தூரம் கவனித்திருப்பார் என்றெல்லாம் எண்ணிப் பார்த்த சுந்தரின் முகபாவத்திலிருந்தே உள்ளே ஓடிய எண்ணங்களைப் புரிந்துகொண்ட ராஜபார்ட்டார் இகழ்ச்சிச் சிரிப்பொன்றையும் உதிரவிட்டு, ''என்ன யோசனை பண்றே? எல்லாத்தையுந்தான் கவனிச்சேன். கேட்டேன். ரோமன்ஸ் பிரமாதம் தம்பி!'' என்றார்.

அவர் சொன்னது என்னவென்று புரியாததாலும் அவர் அங்கு நடந்த சம்பவங்களைக் கவனித்துவிட்டாரே என்ற திகிலாலும், ''ரோமன்ஸாவது' ஜெர்மன்ஸாவது! என்னய்யா உளர்றீங்க!'' என்று எரிந்து விழுந்தான் சுந்தர்.

உண்மையில் ராஜபார்ட்டார் ரோமானியர்களையோ ஜெர்மானியர்களையோ குறிப்பிடவில்லை. காதல் விவகாரத்தைக் குறிக்கும் 'ரொமான்ஸ்' என்ற ஆங்கில வார்த்தையை உபயோகப்படுத்த முற்பட்டு; அதைச் சரியாக அறியாததால் ரொமான்ஸை 'ரோமன்ஸ்' ஆக்கிவிட்டார். ராஜபார்ட்டாருக்கு எப்போதுமே ஆங்கில வார்த்தைகளை ஒன்றிரண்டு சேர்த்துப் பேசுவதில் பிரியமுண்டு. உள்ளூர்க் காரர்களிடம் அத்தகைய பேச்சு செல்லாதாகையால் வெளியூர்க்காரர்கள் யாராவது அகப்பட்டால் அவர் இம்மாதிரி சம்பாஷணைகளில் இறங்கத் தயங்குவதில்லை. அதுவும் மாடி

வீட்டுத் தம்பி படித்தவன், பட்டதாரி என்று கேள்விப் பட்டிருந்தாராதலால், அவனுக்குத்தான் மட்டமல்ல என்பதைக் காண்பிக்க மணிப்பிரவாள பாஷையைக் கையாண்டார். அதில் மாடிவீட்டான் தவறு கண்டு பிடிக்கவே, அவர் கொஞ்சம் கோபத்துக்கும் உள்ளாகி, ''உளர்றது நான் இல்லை தம்பி, நீதான்!'' என்றார் பதற்றத்துடன்.

''யார்? நானா உளர்றேன்? நீங்கதானே என்னமோ ரோமன்ஸுன்னீங்க?'' என்றான் சுந்தர்.

''ஹூம்...ஹூம்...! இந்த வார்த்தை இங்கிலீஷ் வார்த்தையாச்சே, இந்தப் பட்டிக்காட்டானுக்கு எப்படி புரிஞ்சுப் போச்சுன்னு ஆச்சரியப்படறே, இல்லையா?''

''என்ன அப்படிப் பேசிவிட்டிங்க ஆச்சரியப் படறத்துக்கு?''

''ரோமன்ஸுன்னு சொல்லலே நான்?''

''அதுக்கென்ன அர்த்தம்?''

''ரோமாபுரியைச் சேர்ந்தவர்கள் என்று அர்த்தம்.''

''தம்பி! இவ்வளவுதானா நீ படிச்சது?''

''ஏன் என் படிப்புக்கென்ன?''

''இப்பல்லாம் படிப்பின் தரம் குறைஞ்சு போச்சு, தம்பி! நாங்க படிக்கச்சே இத்தனை மோசமில்லை.''

''ஓகோ!''

''ஆமாம்; ரோமன்ஸுன்னா காதல் செய்யறதுன்னு எங்களுக்குத் தெரியும்!'' என்றார் அவர்.

இதைக் கேட்ட மாடிவீட்டுத் தம்பியின் எரிச்சல் பன்மடங்கு அதிகமாயிற்று. ''அட எழவே, அதைச் சொல்றீங்களா?'' என்றான் சிறிது நேரத்திற்குப் பிறகு.

''ஆமாம், இப்பதான் புரிஞ்சுது போலிருக்கு ஐயாவுக்கு!'' என்றார் ராஜபார்ட்டார், வெற்றிக் குறி கண்களில் துளிர்விட.

''ஆமாங்க; இப்பதான் புரிஞ்சுது. ஆனால் ராஜபார்ட்டாரே...'' என்று ஆரம்பித்தான் சுந்தர்.

''ஏம்பா?''

''அதுக்குப் பேர் ரோமன்ஸ் இல்லீங்க.''

''பின்னே என்னவாம்?''

''ரொமான்ஸ், ரொமான்ஸ்! புரிஞ்சுதுங்களா?'' என்று இரண்டு முறை அந்த வார்த்தையைத் திருப்பிச் சொல்லி, ராஜபார்ட்டாரின் ஞான சூன்யத்தை விளக்கினான் சுந்தர்.

இதற்குப் பிறகு ராஜபார்ட்டாரின் கோபம் பன்மடங்கு அதிகமாகவே, ''அது கிடக்கட்டும்; அந்நிய பாஷை நமக்கு எதற்கு?'' என்று 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' கதையாகப் பேசியதன்றி, மேற்கொண்டு மோகனாவைப் பற்றிய தகவலைப் பூராவாக அறிய மேலும் தம்பியுடன் பேச்சுக் கொடுத்தார்.

''ஏன் தம்பி! இது உனக்கு நல்லாயிருக்கா?'' என்று பேச்சைத் தொடங்கிய ராஜபார்ட்டாரை நோக்கி, ''எதைக் கேக்கிறீங்க?'' என வினவினான் சுந்தர்.

''அந்தப் பெண் மோகனா இருக்காளே, அவளோடு தனிச்சு நீ பேசலாமா?'' என்று மேலும் கேள்வியை வீசினார் ராஜபார்ட்டார்.

''ஏன் பேசினால் என்ன?''

''இது கிராமம், தம்பி.''

''கிராமமாயிருந்தால்?''

''இங்கே அக்கப்போர் அதிகம். அந்தப் பெண் வீட்டுக்கு வந்து போனதிலிருந்தே ஊர் வம்பு அதிகமாயிருக்கு. இன்னும்

இப்படி நீ தனிச்சு அதோட பேசினதையெல்லாம் யாராச்சும் பார்த்தா என்ன நடக்கும்?''

ராஜபார்ட்டார் இந்தக் கேள்வியைச் சாதாரணமாகக் கேட்டாலும், அதிலிருந்த நியாயத்தைப் பூரணமாகப் புரிந்து கொண்டான் சுந்தர். தன்னால் மோகனாவுக்கு ஏற்பட்ட இழிபெயரை நினைத்து அவன் மனம் எரிமலையெனக் குமுறியது. உணர்ச்சி மேலிட்டதால் தொண்டை அடைக்கப் பேசிய சுந்தர், ''ஐயா! அந்தப் பெண் ஒரு பாவமும் செய்யவில்லை. வீணாக அதன் வயிற்றெரிச்சலை இந்த ஊரார் ஏன் கொட்டிக்கிறாங்க?'' என்று கேட்டான்.

ராஜபார்ட்டார் ஒரு விநாடி ஏதோ யோசித்தார். பிறகு, ''ஏன் சுந்தர்! அவளுக்கும் உனக்கும்.....'' என்று எதையோ கேட்க ஆரம்பித்தவர் வாக்கியத்தை முடிக்காமலே விட்டார்.

''எந்தவிதச் சம்பந்தமுமில்லை. சந்தர்ப்ப விசேஷத்தால் ஏற்பட்ட பரிச்சயந்தான். அவள் பத்தரைமாற்றுத் தங்கம். மாசற்றவள்'' என்றான் சுந்தர், குரலில் உணர்ச்சி ததும்ப.

''அப்படியானால் அவள் எதுக்காக உன்னுடன் பேச இந்தத் தாழைக் காட்டுக்கு வரணும்?'' என்று ராஜபார்ட்டார் கேட்டார் சந்தேகத்துடன்.

''என்னைச் சந்திக்க அவள் வரலே. கோயிலுக்கு வந்தாள். அவளைப் பலவந்தமாக நான்தான் அழைத்து வந்தேன்.''

''எதுக்கு?''

''உண்மையைச் சொல்ல.''

''எதைப் பத்தியப்பா உண்மை?;''

''என் கடந்த கால வாழ்க்கையைப்பற்றி.''

''உன் கலியாணத்தைப் பத்தியா?''

''ஆமாம்.''

''அதுதான் அவளுக்குத் தெரியுமே!''

''அவளுக்கு, ஏன் இந்த ஊருக்கே தெரியாத விஷயங்கள் அதில் பல இருக்கின்றன.''

ராஜபார்ட்டார் மீண்டும் ஏதோ யோசித்துவிட்டு, ''தம்பி! ஒண்ணு கேக்கறேன்! சத்தியமா, அந்தச் சங்கிலி வீரன் மேலே ஆணையா சொல்லுவியா?'' என்று கேட்டார்.

''கேளுங்க, சொல்றேன்!''

''உனக்கும் அவளுக்கும் உறவு ஏற்படலேன்னு சொன்னியே அது நிஜந்தானே?''

''முற்றும் உண்மை.''

''சங்கிலி வீரன் மேலே.....''

''சத்தியமா.''

''அப்படியானா இந்தத் தாழைக் காட்டிலே இன்னிக்கு நடந்ததுபோல் இனிமே நடக்காம பார்த்துக்குவியா?''

''பாத்துக்கிறேன். ஆனால் நீங்க ஒண்ணு செய்யணும்.''

''என்ன செய்யணும்?''

''இங்கே நீங்க கேட்டதை...''

''மூச்சு விடமாட்டேன்!''

''நல்லது, ராஜபார்ட்டாரே! இனிமேல் மோகனா போகிற வழிகூடப் போகமாட்டேன். நீங்கள் மாத்திரம் அவள் பிற்கால வாழ்வு பாழாகாமல் பார்த்துக்குங்க. இந்தக் கிராமத்து வம்புக்கு அவளைப் பலி கொடுக்காதீங்க'' என்று கெஞ்சினான் சுந்தர்.

அவன் பேசும்போதே தீர்க்காலோசனையில் ஆழ்ந்து விட்ட ராஜபார்ட்டார் சரியென்பதற்கு அறிகுறியாகத் தலையை மாத்திரம் ஆட்டிவிட்டு. விடுவிடு என்று அந்த இடத்தைவிட்டு

அகன்றார். சற்று நேரம் அந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்த சுந்தரும் தன் வீட்டுக்காக நடையைக் கட்டினான்.

அங்கிருந்து சென்ற ராஜபார்ட்டார் வேறு எங்கும் போகாமல் நேராக தமது வீட்டுக்குச் சென்று வரதப்பிள்ளை தூங்கும் ரேழித் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு ஒரு கால்மீது ஒரு காலைப் போட்டுக் கொண்டார். பிறகு ''யாரங்கே?'' என்று உள்ளே நோக்கி ஒரு குரலும் கொடுத்தார். அந்தக் குரலைக் கேட்ட வரதப்பிள்ளை புழக்கடை மாட்டுக் கொட்டிலிலிருந்து, ''ஏம்பா?'' என்று கத்திக் கொண்டே ஓடி வந்தான். ''உன்னை இல்லைடா களுதை! உங்கம்மாவைக் கூப்பிடு'' என்று எரிந்து விழுந்தார் ராஜபார்ட்டார்.

ராஜபார்ட்டார் வரதப்பிள்ளையைக் கழுதையென்று அழைத்தது சரியாகவே போய்விட்டது. ''அம்மா!'' என்று அவன் பெரிதாகக் கத்தினான். கழுதை ஒருவேளை 'அம்மா' வென்று கத்த முடியுமானால் சத்தம் இப்படித்தானிருக்குமென்பதை அறிந்து கொண்ட ராஜபார்ட்டார், ''சீ போ! அம்மாவைக் கூப்பிடற அளகைப்பாரு'' என்று இரைந்தார்.

இதைக் கேட்டுக் கொண்டே சமையற்கட்டிலிருந்து கூடத்துக்கு வந்து ரேழியில் தலையை நீட்டிய வள்ளியம்மை, ''ஏன் கொளந்தையை அதட்டுறீங்க?'' என்று பிள்ளைக்குப் பரியலானாள்.

''கொளந்தை! எனக்கு எங்கேயிருந்தோ வந்திருக்கு ஒரு கோட்டான், அது கிடக்கட்டும்; அந்தக் கோட்டானைப் பற்றிப் பேசத்தான் உன்னைக் கூப்பிட்டேன்'' என்று சொல்லிய ராஜபார்ட்டார், ''டேய் களுதை! நீ அந்தாண்டெ போடா'' என்று மகனுக்கு உத்தரவிட்டார்.

அப்பன் சொல்வதைக் கடுகளவும் லட்சியம் செய்யாத வரதப்பிள்ளை அம்மாவின் முகத்தைப் பார்த்தான். வள்ளியம்மையும் அவனைப் போகப் பணித்து, ''கண்ணு,

சமையலறையிலே கோயில்லேயிருந்து சுண்டல் கொணாந்து வச்சிருக்கேன்; போய்த் தின்னு'' என்று மாட்டை அவிழ்த்து வைக்கோல் போரை நோக்கி விரட்டும் முறையில் கூறவே, சமையலறையை நோக்கிச் சவாரி விட்டான் வரதப்பிள்ளை.

அவன் போனதும் மெள்ள விஷயத்தை அவிழ்க்கத் தொடங்கிய ராஜபார்ட்டார், ''ஏன் வள்ளியம்மை! நம்ப சிவசங்கரன் பிள்ளை நிலத்தை நீ பார்த்திருக்கே இல்லை?'' என்று கேட்டார்.

எதற்காக இதைப்பற்றி விசாரிக்கிறார் என்பதை அறியாத வள்ளியம்மை, ''அதைப்பத்தி இப்ப என்னாங்க?'' என்று கேட்டாள்.

''காரணமாகத்தான் கேக்கறேன்; சொல்லு'' என்றார் ராஜபார்ட்டார்.

''அவுங்க நிலத்தைப் பார்க்காமெ என்னங்க? நம்ம நிலத்துக்குப் பக்கந்தானே!''

''ஆமாம்! அதுவும், அத்தனை வேலி நிலமும் ஒரே சதுக்கம்!''

''ஆமாம்.''

''அதுக்குப் பக்கத்துக் சதுக்கம் நம்மது...''

''ஆமாம்.''

''ரெண்டும் ஒண்ணாச்சுன்னா?''

''அதெப்படிங்க ஆவும்? அவுங்க நிலம் அவங்களது நம்ம நிலம் நம்மது.''

''அது சரிதாண்டி, ஆனா சிவசங்கரன் பிள்ளைக்கு மோகனா ஒரே மக...'' என்று மெள்ள ஆரம்பித்தார் ராமலிங்கம்.

வள்ளியின் முகத்தில் கோபம் சுடர்விட்டது. ''ஓகோ! அப்படியாசமாசாரம்? அந்தப் பெண்ணை எம்மவன் கழுத்திலே கட்டப் பாக்கிறீங்களா? ஏங்க, உங்களுக்கு ஏதாச்சும் புத்தியிருக்கா?''

''அதிலே உனக்கென்னடி சந்தேகம்?''

''சந்தேகம் ஒண்ணுமில்லே. நிச்சயந்தான். உங்க மண்டையே என்னிக்கும் களிமண்ணுதான்.''

''சே! சே! என்ன பேச்சு இது?''

''இந்தாங்க! சும்மா விரட்டாதீங்க. நானும் என் மவனும் பிச்சை யெடுத்தாலும் எடுப்போம். அந்தப் பொண்ணை இவன் கட்டமாட்டான்'' என்றாள் வள்ளியம்மை, திட்டமாக.

ஆனால், ஒரு தடவை ஒன்றில் மனம் வைத்து விட்டால் அதை எப்படியாவது முடித்துவிடும் திடச் சித்தமுடைய ராஜபார்ட்டார், ''அடி பைத்தியமே! விஷயம் தெரியாமல் உளறாதே! அந்தப் பொண்ணு பேரிலே எந்தத் தப்பும் இல்லை'' என்றார்.

''அப்படியானா ஊரிலே பேசிக்கிறாங்களே?''

''அதெல்லாம் நான் கிளப்பிவிட்டதடீ. அதுவும் காரியமாகத்தான் கிளப்பிவிட்டேன்'' என்று பாதி உண்மையும் பாரி பொய்யுமாக விஷயத்தைத் திரிக்க ஆரம்பித்த ராஜபார்ட்டார், வள்ளியம்மையின் எதிர்ப்பை அடியோடு குலைக்கவல்ல மற்றொரு கோட்டைப் புளுகையும் எடுத்து வீசினார்.

19. கரைப்பார் கரைத்தால்...

தமக்கும் இஷ்டமான ஒரு காரியத்தில் முனைந்து விட்டால் அதை முடிக்கக் கூடிய சகல வழிகளையும் ராஜபார்ட்டார் கையாளக் கூடியவர் என்பதை வள்ளியம்மை நன்றாக அறிந்திருந்தாளாகையால், அவர் அகத்தே ஓடிய எண்ணங்களைப் புரிந்து கொள்ள முகத்தை ஊன்றிக் கவனித்தாள். அப்பொழுது நன்றாக இருட்டி விட்டதாலும் ரேழிக்கு அப்பால் கூடத்து விசுப்பலகையில் வைக்கப்பட்டிருந்த 'ஷேட்'டும் முழு வெளிச்சத்தையும் ரேழிப் பக்கம் செலுத்த சக்தியற்று இருந்தபடியாலும் ராஜபார்ட்டாரின் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்த உணர்ச்சிச் சாயல்களை வள்ளியம்மையால் பார்க்க முடியவில்லை. மோகனாமீது எந்த விதத் தவறும் இல்லையென்றும், எல்லா வதந்திகளும் தம்மாலேயே கிளப்பப் பட்டனவென்றும் ராஜபார்ட்டார் தெளிவாக எடுத்தச் சொல்லிய போதிலும் அந்த உண்மையைக் கூட வள்ளியம்மை ஒப்புக் கொள்ள மறுத்தது மட்டுமின்றி, தன் அசட்டுப் பிள்ளையின் தலையில் மோகனாவைக் கட்டுவிட்டு, சிவசங்கரன் பிள்ளையின் நிலங்களைத் தங்கள் நிலங்களுடன் சேர்த்துக் கொள்வதற்குத்தான் இல்லாத பொய்யை எல்லாம் தன் கணவர் சொல்லுகிறார் என்ற தீர்மானத்துக்கும் வந்தாளாகையால், ராஜபார்ட்டார் மேற்கொண்டு பேச முற்பட்டபோது முகத்தை வெடுக்கென்று திருப்பிக் கொண்டு உள்ளே போக முயன்றாள்.

ராஜபார்ட்டாரின் கோபக் குரல் அவள் நடையைத் தடுத்தது. ''ஏண்டி! இங்கே உட்கார்ந்திருக்கிறவன் முட்டாப் பயலென்று நினைப்பு போலிருக்கிறது, அறுத்துவிட்டகளுதை மாதிரி ஓடப் பார்க்கிறையே'' என்று சற்று அதட்டலாகப் பேசிவிட்டு, அந்தப் பேச்சுக்கு ஒட்டு வைப்பதுபோல் ஒரு ஹுங்காரத்தையும் கொட்டினார்.

அதுவரையில் சாதாரணமாயிருந்த வள்ளியம்மையும் காளியாக மாறி, ''என்னாங்க சும்மா பேச்சை மேலே ஓட்டுறீங்க!'' என்று சீறி விழுந்தாள்.

''மேலே ஓட்டினா என்னவாம்?'' என்றார் ராஜபார்ட்டார்.

''என்னங்கிறது அப்புறம் தெரியும்! பேசறதை அளந்து பேசுங்க'' என்றாள் வள்ளியம்மை.

''அளந்து பேசாமல் எப்படிப் பேசிட்டேனாம்?''

''களுதை கிளுதைன்னு பேச்சு வளருதே.''

''நீ களுதை இல்லாமே என்னவாம்?''

''நான் களுதையா?''

''ஆமாம்.''

''அப்பக் களுதைக்குப் புருசன் என்ன ஆகும்?''

வள்ளியம்மை இதைக் கேட்டதும் ராஜபார்ட்டாரின் கோபம் உச்ச நிலையை அடையவே, ''ஏண்டி, என்னையே பார்த்துக் களுதேங்கிறியா?'' என்று கூவினார். இந்த வாதத்தைத் தடுக்க மற்றொரு குரல் எழுந்தது. வாயில் சுண்டலைப் பூராவாக அடக்கி மென்று கொண்டே, ''அம்மா!'' என்று எருமைக் கன்றுக்குட்டி போல் கத்தினான் வரதப்பிள்ளை.

அந்தக் குரலைக் கேட்டதும் ஏற்கனவே ராஜபார்ட்டாருக்கு இருந்த எரிச்சல் அதிகமாகவே, ''ஏண்டி! உம்பிள்ளை ஏன் எருமைக் கண்ணுக்குட்டி மாதிரி கத்தறான்? அப்பப்பா! இந்த வீட்டிலே அரை நாழி நிம்மதியாகப் பேச முடியாது போலிருக்கே?'' என்று சீறி விழுந்தார்.

வள்ளியம்மையும் சிறிதும் சளைக்காமலே ''ஏங்க சாதி மாறிப் போச்சுங்களா?'' என்று கேட்டாள்.

''என்ன சாதியடி?''

''இத்தனை நாளு களுதையாயிருந்தோம். இப்போ எருமையாமாறிட்டோமா?''

''என்னடீ உளர்றே!''

''மகன் எருமைக் கண்ணுக்குட்டீன்னா அப்பன் யாருங்கிறேன்?''

இதற்கு மேல் ஏதும் பேச முடியாத ராஜபார்ட்டார் திணறினார். கொஞ்சம் கோபத்தை அடக்கி வள்ளியம்மையைச் சாந்தப்படுத்தினாலொழிய மேற்கொண்டு சரியான பேச்சு நடப்பது சாத்தியமல்ல வென்பதைப் புரிந்து கொண்ட ராமலிங்கம் பிள்ளை குரலில் குழைவைக் காட்டத் தொடங்கி, ''வள்ளி!'' என்று மெல்ல மனைவியை அழைத்தார்.

ராஜபார்ட்டார் அடங்கி வருகிறார் என்பதைத் தெரிந்து கொண்டதால் உள்ளத்தே மகிழ்ச்சி மேலிட்டாலும் அதை வெளியில் காட்டாமல், ''என்னா வந்திட்டுது வள்ளிக்கு?'' என்று கடுப்பாகப் பேசினாள்.

''வள்ளிக்கு யோகம் அடிக்கப் போவுது. யோகம்!'' என்று ராஜபார்ட்டார் கொஞ்சினார்.

''அப்படிங்களா!'' என்றாள் வள்ளி இகழ்ச்சியாக.

''ஆமாம் வள்ளி. நான் சொல்றதை மட்டும் நீ கொஞ்சம் காது கொடுத்துக் கேக்கணும்.'',

''சரி, சொல்லுங்க! ஆனால் அந்த நெறிகெட்ட பொண்ணை மாத்திரம் நம்ம மவன் கழுத்திலே கட்ட நான் ஒப்புக்க மாட்டேன்.''

''நீயா அவளை நெறிகெட்டவள்னா அவள் நெறி கெட்டவளாயிடுவாளா?'' என்று மோகனாவுக்குப் பரிந்து பேசினார்.

''நீங்கதானே சொன்னீங்க அவளுக்கும் மாடி வீட்டுப் பயலுக்கும் சம்பந்தம்னு'' என்று கேட்டுவிட்டு. ''இதெல்லாம் எதுக்குங்க அந்தப் பேச்சை விட்டு வேறே பேசுங்க'' என்றாள் வள்ளியம்மை.

''எத்தனை தடவை திருப்பிச் சொன்னாலும் உன் மண்டையிலே ஏறாது போலிருக்கு! அந்தப் பொண்ணு ஒண்ணும் செய்யலே, எல்லாம் நாம் கிளப்பிவிட்டதுன்னு எத்தனை தடவை சொல்றது உனக்கு?''

''சிவசங்கரம் பிள்ளை நிலத்தைப் பார்த்ததும் பொண்ணு நெறி ஒழுங்காயிடுச்சு போலிருக்கு!''

''போடி பைத்தியமே! அவ மேலே நான் கதை கட்டி விட்டதும் காரணமாகத்தான். சிவசங்கரன் பிள்ளை பயப்படுவான். மானஸ்தன். என்ன?''

''அவர் மானஸ்தர்தானுங்க'' என்று வள்ளியம்மை 'அவர்' என்ற பதத்தைக் கொஞ்சம் அழுத்தமாகவே உச்சரித்து, ராஜபார்ட்டாருக்கு மானம் இல்லையென்பதை விளக்கிக் காட்டினாள்.

ராஜபார்ட்டார் அதைக் கவனிக்காதது போல் மேற்கொண்டு பேச்சைத் தொடர்ந்து, ''சிவசங்கரன் பிள்ளையை அப்படி நெட்டுலே மாட்ட வைக்கணும்னு எனக்கு ரொம்ப நாளா ஆசை. அவன் தனக்கு நிலம் ஜாஸ்திங்கறதனாலே கொஞ்சம் தலைக்கனம் உள்ளவன். படிச்சு வேறே இருக்கானா? அதிலேயும் கொஞ்சம் திமிரு...'' என்றார்.

''அதுக்கென்னாங்க செய்றது? நீங்க படிக்கிறதை அவர் வாணான்னா சொன்னாரு?'' என்ற வள்ளியம்மை, ராஜபார்ட்டார் பள்ளிக்கூடத்தில் பரீட்சையைக் கோட்டைவிட்டு நாடகத் துறையில் இறங்கியதைச் சுட்டிக் காட்டினாள்.

ஆனால் அவள் குத்தல்களையெல்லாம் கவனிக்கும் மன நிலையில் ராஜபார்ட்டார் இல்லை. ''அது கிடக்கட்டும். பழைய கதை; அவன் படிச்சிருந்தான்னா படிச்சிருக்கட்டும். அதுக்காக ஊரிலே இருக்கிறவனெல்லாம் வெட்டிப் பயன்னு நினைக்கக் கூடாது பாரு. படிப்பிலே அடக்கம் வரணும்டீ'' என்று படிக்காத ராஜபார்ட்டார் படித்த சிவசங்கரன் பிள்ளைக்கு இருக்க வேண்டிய குணாதிசயங்களைப் பற்றிச் சுட்டிக் காட்டி, ''அப்பேர்ப்பட்ட கர்வஸ்தனைத் தலைகுனிய வைக்கணுனும் தான் அவன் மகள் பேரில் அக்கப்போரைக் கிளப்பினேன், அது மாத்திரமல்ல...'' என்று மேலே ஏதோ மர்மம் இருப்பதற்கு அறிகுறியாகப் பேச்சைச் சற்று நிறுத்தினார்.

''வேறே எதாச்சம் இருக்குங்களா?'' என்று வள்ளியம்மை கேட்டாள்.

''இருக்குடீ.''

''என்னாங்க அது?''

''மாடி வீட்டுப் பய இருக்கான், பாரு. அவன் இனிமே மோகனா வீட்டுப் பக்கம் தலை வச்சுப் படுக்க முடியாது.

''ஏன்? பிள்ளை கோபத்திலே இருக்காருங்களா?''

''பிள்ளை கோபத்திலே இல்லை. பொண்ணு கோபத்திலே இருக்கு.''

''அப்படீங்களா!'' வியப்புடன் கேட்டாள் வள்ளியம்மை.

''ஆமாம் வள்ளி! இப்பத்தான் கோயில் பக்கத்திலேயிருந்து நான் வர்ரேன். அங்கே மோகனாவைப் பார்த்தேன்! கொளந்தை துரும்பா இளைச்சுப் போயிடுத்துடீ.''

''அதைப் பார்த்து உங்களுக்கு அனுதாபம்.''

''அதில்லே வள்ளி! அந்தப் பொண்ணு வெளியிலே வந்த போது மாடி வீட்டுப் பய கோவில் வாசல்லே நின்னுக் கிட்டிருந்தான்.''

''சரிதான்!''- அர்த்தம் ததும்பிய குரலில் சொன்னாள் வள்ளி.

''அப்புறம் என்ன நடந்தது தெரியுமா?''

''நீங்கதானே பார்த்துக்கிட்டு வந்திருக்கீங்க சொல்லுங்க.''

''அவன் அவளை மறிச்சான்.''

''உம்?''

''அந்தப் புள்ளே அவனை ஒரு மொறை மொறைச்சுப் பார்த்து, 'இந்தாங்க, இது பட்டணம் இல்லை, நாட்டுப்புறம் உங்க வேலையெல்லாம் இங்கே செல்லாது, வழியை விடுங்க'ன்னு எரிஞ்சு விழுந்தது.''

''ஓகோ!''

''அவன் விடலெ; அவ்வளவுதான். அந்தப் பொண்ணு அவன் கன்னத்திலே பளார்னு ஓர் அறை விட்டுட்டு, 'இனிமே நான் நடக்கிற பக்கம் தலையைக் காட்டினா முப்பத்திரண்டு பல்லையும் உடைச்சுக் கீழே வச்சுடுவேன்'னு சொல்லிட்டு உம்...உம்... கடுவேகமாக நடையைக் கட்டிருச்சு.''

''இதெல்லாம் நடந்தது?'' என்று அவநம்பிக்கையுடன் கேட்டாள் வள்ளி.

''ஆமாம்.''

''நீங்க பார்த்தீங்க?''

''நான் மட்டுமா? நம்ப கண்ணப்பிள்ளை பார்த்தாரு.''

வள்ளியம்மை சிறிது யோசித்தாள். கண்ணப்பிள்ளை எதிரில் இது நடந்திருந்தால் இதில் ஓரளவு உண்மையிருக்கு மென்று நினைத்தாள். ராஜபார்ட்டாரும் பெரிய திருடர். கண்ணப்பிள்ளை பேரில் ஊராருக்கு இருந்த மதிப்பு அவருக்கு நன்றாகத் தெரியும். கண்ணப்பிள்ளையே ஒரு காரியத்தைப்

பார்த்தாரென்றால் கடவுளே பார்த்தார் என்பதற்கு அடையாளம். ஆகையால்தான் சாமர்த்தியமாகக் கண்ணப்பிள்ளையைச் சாட்சி போட்டார். அதில் இன்னொரு தந்திரமும் இருந்தது. கண்ணப்பிள்ளை வள்ளியம்மைக்குப் புகுந்த வீட்டு உறவாதலால், அவள் அவருடன் பேசுவதில்லை. ஆகவே நேரிடையாகவும் அவள் விசாரிக்க முடியாது என்ற தைரியத்தில் அந்தப் புளுகை எடுத்து வீசினார்.

அதற்குமேல் ஏதும் சொல்ல முடியாத வள்ளியம்மை தீர்க்கலாலோசனை செய்தாள். ராஜபார்ட்டார் மேலும் கெஞ்சத் தொடங்கி, ''இதோ பார் வள்ளி! எனக்கு மட்டும் நம்ப குடும்பக் கௌரவத்திலே ஆசையில்லையா? சிவசங்கரன்பிள்ளை நல்லவர். மோகனா பேரிலும் எந்தத் தப்புமில்லேங்கிறது எனக்குத் தெரியும். புகாரைக் கிளப்பிவிட்டு அந்தப் பொண்ணுக்குக் களங்கமிருப்பதாகக் காட்டினால்தான் சிவசங்கரன்பிள்ளை மசிவான்னு எனக்குத் தெரியும். அதுக்காகச் செய்தேன். அதுவும் பாவம். மோகனாவை நம்ப வரதனுக்குக் கட்டிட்டா நான் செய்த பாவமும் தீரும். வரதனுக்கு நீரும் நிலமும் சீரும் சிறப்புமா வாழ்க்கை நடத்துவான். என்ன சொல்றே?'' என்று கேட்டார்.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்ற கதையாக வள்ளியம்மையும் வேண்டா வெறுப்பாகச் சம்மதிக்கவே, ராஜபார்ட்டார் அன்றிரவை மிக நிம்மதியாகக் கழித்தார். விடியற்காலையில் எழுந்திருந்து குளத்துக்குப் போய்க் குளித்துவிட்டு வந்து சர்வாலங்கார பூஷிதராய்த் தமது பிள்ளைக்குப் பெண் கேட்கச் சிவசங்கரம் பிள்ளை வீட்டை நோக்கிக் கிளம்பினார் ராஜபார்ட்டார்.

20. ஆபத்தில் உதவும் நேயன்

உள்ளத்திலே மகிழ்ச்சி நிரம்பிக் கிடந்ததால் ராஜபார்ட்டார் அன்று செண்பகத் தோட்டத்தின் வீதிகளில் நடந்தபோது ஏதோ ஸ்டேஜ்மீது நடப்பதாக நினைத்துக் கொண்டு ராஜநடையே நடந்தார்.

அவர் சிவசங்கரம் பிள்ளையின் வீட்டை நோக்கிக் கிளம்பியபோது சூரியன் கிளம்பி, தன் பொன்னிறக் கிரணங்களை அந்த அழகிய கிராமத்தின்மீது வாரி வீசிக் கொண்டிருந்ததால் செண்பகத் தோட்டம் மயனால் சிருஷ்டிக்கப்பட்ட சொர்ணபுரிபோல் காட்சியளித்தது. மேய்ச்சலுக்குச் சென்ற மாடுகளின் கால்களிலிருந்து கிளம்பிய தெருப் புழுதிக்கூடக் கதிரவனின் சொர்ணக் கதிர்களில் கலந்து கொண்டு ஏதோ தங்கப் பொடிகள் கண்ணில் பறப்பதைப் போன்ற பிரமையை ஏற்படுத்தியது. மாட்டுக்காரப் பயல்களில் சிலர் மாடுகளை விரட்டிக் கொண்டு சென்றார்கள். ஓரிருவர் மெதுவாகச் சென்று கொண்டிருந்த எருமைகளின் மீது தாவி ஏறி, எமபிரானைப் போலச் சவாரி செய்தார்கள். பொழுது விடிந்ததுமே வீட்டு வாசலுக்குச் சாணம் தெளித்த கிராமத்துப் பெண்மணிகளில் சிலர் தங்கள் தங்கள் வீட்டு வாசல்களில் கோலம் போட்டுக் கொண்டும், கோலம் போட்டபடியே பக்கத்து வீடுகளில் கோலம் போடுபவர்களிடம் ஊர் வம்பு பேசிக் கொண்டுமிருந்தார்கள். ராஜபார்ட்டார் என்று மில்லாதபடி விடியற்காலையிலே நீராடிய காரணத்தால்தானோ என்னவோ அன்று பெருமாளும் விடியற்காலையில் திருமஞ்சனம் செய்து கொண்டதால், பெருமாள் கோயில் அர்ச்சகர் அடித்த மணி ஊர் பூராவும் கேட்டது. கோயில் மணியடித்ததைக் கேட்டதால் தமக்கு மிகுந்த நற்சகுனம் ஏற்படுவதாக நினைத்த ராஜபார்ட்டாரின் மனச் சந்துஷ்டி உச்ச

நிலையை அடையவே, அவர் நடையில் முறுக்கு அதிகமாகவே ஏறிவிட்டது. விடுவிடுவென்று நடந்த ராஜபார்ட்டார் வெகு சீக்கிரத்தில் சிவசங்கரம் பிள்ளையின் வீட்டையடைந்து வாசலில் நின்ற வண்ணமே, ''ஐயா இருக்காருங்களா?'' என்று குரல் கொடுத்தார்.

ராஜபார்ட்டார் குரல் கொடுத்த சமயத்தில் சிவசங்கரம் பிள்ளை வீட்டுக் கூடத்தில்தான் உட்கார்ந்திருந்தார். ஆனால், ராஜபார்ட்டார் உள்ளத்தில் இருந்த மகிழ்ச்சி பிள்ளையின் மனத்தில் இல்லாததால், முதல் குரல் அவர் காதில் விழவே இல்லை. எங்கோ யோசித்த வண்ணம் வேதனை நிறைந்த மனத்துடன் பிள்ளை உட்கார்ந்திருந்தார்.

ராஜபார்ட்டார் வாசலில் ஒரு கணம்தான் நின்றார். தாம் கொடுத்த குரலுக்குப் பதிலேதும் வராது போகவே, உள்ளே நுழைந்து கூடத்தில் எட்டிப் பார்த்து,... ''யார் நீங்களா! என்னாங்க வீட்டுக்குள்ளாற இருந்துக்கிட்டா குரல் கொடுத்தா பதில் கொடுக்காமெ இருக்கீங்க...?'' என்று கேட்டார்.

அப்பொழுதுதான் யோசனையை உதறி விழித்துக் கொண்ட சிவசங்கரம் பிள்ளை, ''யார், ராமலிங்கமா? வாங்க'' என்று சொல்லி, தாம் உட்கார்ந்திருந்த கோரைப் பாயில் சற்றுத் தள்ளி உட்கார்ந்து ராமலிங்கம் பிள்ளைக்கு இடம் கொடுத்தார்.

ராமலிங்கம் பிள்ளையும் சப்பளம் கொட்டிக்கொண்டு நன்றாக உட்கார்ந்து மேலே போட்டிருந்த சரிகை உருமாலையையும் பக்கத்தில் எடுத்து வைத்துவிட்டுத் தாம் வந்த பேச்சைத் துவக்க ஒருமுறை தொண்டையையும் கனைத்துக் கொண்டார். அத்தனை தைரியப்படுத்திக் கொண்டும் பேச்சை எடுக்க நாவெழாததால் சிவசங்கரம் பிள்ளையின் எதிரிலிருந்த வெற்றிலைச் செல்லத்தை எடுத்து அதிலிருந்த கொட்டைப் பாக்கு ஒன்றை இரண்டு விரல்களுக்கிடையே அழுத்திப் பிடித்துப் பாக்கு வெட்டியால் சீவலானார். பெட்டியில்

வெற்றிலை யில்லையென்பதைக் கவனித்த சிவசங்கரம் பிள்ளை சமையற்கட்டுப் பக்கம் முகத்தைத் திருப்பி, ''மோகனா! பெட்டியிலே கொஞ்சம் வெத்திலை கொண்டாந்து போடு'' என்று உத்தரவிட்டார்.

ஏதோ இயந்திரத்தால் இயக்கப்பட்ட பதுமைபோல் நடந்து வந்து செல்லத்தில் வெற்றிலையை வைத்துவிட்டுப் போனாள் மோகனா. அவள் முகத்தில் தெரிந்ததுயரம், நடையில் இருந்த தளர்ச்சி முதலியவற்றைக் கவனித்த ராஜபார்ட்டார் மனத்திலும் இரக்கம் உதயமாகவே கொட்டைப் பாக்கைச் சீவியபடியே, ''ஏங்க, இந்த குட்டி ஏன் இப்படிக் கன்னிப் போச்சு?'' என்று கேட்டார்.

பதிலுக்குச் சிவசங்கரம் பிள்ளை சோகம் ததும்பிய நீண்டதொரு பெருமூச்சை விட்டார். அத்துடன் நடுங்கிய குரலில், ''காரணம் உனக்குத் தெரியாதா ராமலிங்கம்?'' என்றும் கூறினார்.

ராஜபார்ட்டார் தமக்குத் தெரியாதது ஏதுமில்லை என்பதற்கு அறிகுறியாகத் தலையைக் கீழ்ப்புறமாகச் சுழற்றி ஒருமுறை ஆட்டிவிட்டு, ''நம்ம ஊர் சுத்தக் காலிப்பய ஊர்ங்கிறது உங்களுக்குத் தெரியாதா? இதுக்கெல்லாம் கலக்கப்பட்டா முடியுமா?'' என்று சொல்லிப் பிள்ளையைச் சாந்தப்படுத்த முயன்றார்.

ஆனால், பிள்ளை இதற்கெல்லாம் சாந்தியடைவதாகக் காணோம். ''நம்ம மேலே தப்பை வைச்சுக்கிட்டு ஊர் பேரிலே குத்தம் சொல்லி என்ன புண்ணியம்?'' என்றார் பிள்ளை.

''நல்லா இருக்கு உங்க பேச்சு! இப்போ என்ன தப்பு நடந்து போச்சு? நீங்கதான் என்ன தவறைச் செய்து விட்டீங்க? இல்லே, அந்தப் புள்ளைதான் என்ன தப்பு செஞ்சுடுத்து? என்று கம்பீரமாகக் கேட்ட ராஜபார்ட்டார், அதுவரை சீவிக் கொண்டிருந்த சீவலை வாயில் தள்ளி, வெற்றிலையை எடுத்து

நடுவிரலில் சுண்ணாம்பை அதன் முதுகில் லாகவமாகத் தடவி இரண்டாக மடித்து நரம்பையும் சொகுசாகக் கிழிக்கலானார். அவர் வெற்றிலை இரண்டு மூன்றைக் கிழித்துக் குதப்ப இடங்கொடுத்த சிவசங்கரம் பிள்ளை மேலும் பேசத் தொடங்கி, ''கொளந்தை, அந்த மாடி வீட்டுத் தம்பி இருக்கானே...'' என்று ஏதோ பேச முயன்று முடியாமல் மென்று விழுங்கினார்.

ராஜபார்ட்டார் அந்த விஷயத்தைத் தாம் மிக அற்பமாக மதிப்பதுபோல் பாசாங்கு செய்து, ''சே! அதைப்பத்தியா சொல்றீங்க? கிடக்கு, விட்டுத் தள்ளுங்க களுதையை. கொளந்தைக்கு அடிபட்டபோது வைத்தியம் செஞ்சான் தம்பி. காயம் ஆறிப்போச்சான்னு காட்டப் போயிருக்கும் கொளந்தை. உடனே இந்த ஊரிலேயிருக்கிறவங்களுக்குக் கேக்கணுமா? கதை கட்டிவிடறானுங்க. சுத்த நாகரிகம் தெரியாத பயலுவ!'' என்று செண்பகத் தோட்டத்து மக்கள்மீது சீற்றத்தைக் காட்டினார்.

''நாகரிகத்துக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ராமலிங்கம்?'' என்றார் பிள்ளை.

''ஏன் சம்பந்தம் இல்லீங்க? பட்டணத்திலே பாருங்க, ஒரு புருஷன் ஒரு பொம்பளையைப் பிடிச்சுக்கிட்டு சுத்தினாலும் கேள்வி இல்லை''.

''இது நாகரிகமா ராமலிங்கம்?''

''இல்லாட்டா ஒண்ணுமில்லாததுக்கெல்லாம் கதை கட்டிவிடறதுதான் நாகரிகமா?''

ராஜபார்ட்டாரின் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லத் தெரியாத சிவசங்கரம் பிள்ளை சற்று நேரம் ஏதோ யோசித்து விட்டு, ''பேச்சுக்குச் சொல்லலாம் ராமலிங்கம். ஆனால், எந்த நாகரிகத்தான் என் பொண்ணைக் கட்டிக்குவான்?'' என்று கேட்டார்.

''ஏன் கட்டிக்கிட மாட்டான்? நாகரிகம் தெரிந்த யாரும் கட்டிக்குவான்''.

''சும்மா பேச்சு எதுக்கு ராமலிங்கம்?''

''சும்மா பேச வரலைங்க!''

தூக்கி வாரிப்போட்டது போலிருந்தது சிவசங்கரம் பிள்ளைக்கு. ராஜபார்ட்டாரை ஏறெடுத்துப் பார்த்து, ''நீ சொல்றது புரியலை ராமலிங்கம்'' என்றார்.

ராஜபார்ட்டார் ஒரு முறை தொண்டையைக் கனைத்து விட்டுக் கொண்டு தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டு, ''நீங்க சம்மதிச்சால் புரிய வைக்கிறேன்'' என்றார்.

''சொல்லப்பா.''

''உங்கள் பெண்ணை என் மகனுக்கே கட்டிக்கிடலாம்னு பார்க்கிறேன்.''

சிவசங்கரம் பிள்ளை வெகு நேரம் வரை பதில் சொல்லவில்லை. அவர் புத்தி தீவிரமாக வேலை செய்யத் தொடங்கியது. ஏதேதோ யோசித்த பின்பு ராஜபார்ட்டாரை நோக்கி அவர் உயர்த்திய கண்களில் நீர்த்துளிகள் நிரம்பி நின்றன.

''நெசமாத்தான் சொல்றையா ராமலிங்கம்? இந்தப் பெண்ணுக்கு வாழ்வு அளிக்க உனக்குச் சம்மதம்தானா? உன் பெண்டாட்டியையும் கலந்துக்கிட்டியா?'' என்று நடுங்கும் குரலில் கேட்டார்.

சிவசங்கரம் பிள்ளையின் கண்களில் தேங்கி நின்ற நீரைக் கண்ட ராஜபார்ட்டாரின் இதயங்கூடக் கரைந்தது. அநுதாபத்துக்கு அறிகுறியாக அவரும் நீண்டதொருபெருமூச்சை விட்டு, ''இந்த அற்ப விஷயத்தைப் பெரிசா நினைக்காதீங்க. உங்க வீட்டுக் கொளந்தையாயிருந்தா என்ன? அது இந்தக் கிராமத்திலே

பொறந்த கொளந்தை. அதுக்கு இழுக்கு வந்தா அது நம்ம எல்லோருக்கும் இல்லீங்களா.... ...?'' என்று கேட்டார்.

ராஜபார்ட்டாரின் பெருந்தன்மை சிவசங்கரம் பிள்ளையின் மனோ திடத்தை அடியோடு உடைத்து விட்டது. ''ராமலிங்கம்! இந்த வீட்டுக்கு விளக்கேத்தி வைத்த தெய்வம் அப்பா நீ'' என்றார் பிள்ளை.

''இல்லீங்க; எங்க வீட்டிலே உங்க மகள் அல்ல விளக்கு ஏத்தி வைக்கப் போவுது?'' என்றார் ராமலிங்கம்.

''அது உன்னிஷ்டம். பழம் பாக்கு வெத்திலை என்றைக்கு மாத்திக்கலாம்?''

''ஏன் நாளைக்கே மாத்திக்கலாம். நாள் முதல் தரமாயிருக்குங்க.''

''சரியப்பா ராமலிங்கம்! உன்னைப் போல ஆபத்துக்கு உதவும் நேசனை நான் பார்த்ததில்லை.''

''அது சரீங்க. ஆனால் பெண்ணின் இஷ்டத்தை ஒருமுறை கேட்க வேணாமா?''

''என் இஷ்டந்தான் அவள் இஷ்டம்!'' என்று சிவசங்கரம் பிள்ளை பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.

''ஏ குட்டி மோகனா! இங்கே வா, மாமாவை நமஸ்காரம் செய்'' என்று கூப்பிட்டார்.

மோகனாவும் மெல்ல நடந்து வந்து ராஜபார்ட்டாரை நமஸ்காரம் செய்யக் குனிந்தாள். அதே சமயத்தில் வாசலில் 'டுமீல் டுமீல்' என்று துப்பாக்கிச் சுடும் சப்தம் கேட்டது. ''ஐயோ! ஐயோ!'' என்ற கூக்குரலும் கேட்டது.

சிவசங்கரம் பிள்ளையும் ராஜபார்ட்டாரும் எழுந்து சொல்லவொண்ணாப் பரபரப்புடன் தெருவுக்கு ஓடினார்கள்.

21. வரதப்பிள்ளையின் கை வண்ணம்

துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டு வெளியே ஓடி வந்த ராஜபார்ட்டார், சிவசங்கரம் பிள்ளையின் வீட்டுக்கு எதிரேயிருந்த மூங்கில் படலை ஒட்டி வளர்ந்திருந்த ஆடுதொடா இலைச் செடிகளின் வரிசைக்கு எதிரே ஒரு சிறு கும்பல் கூடி நிற்பதையும், அங்கிருந்தவர்களுக்குள் வார்த்தைகள் தடிப்பாகக் கிளம்பிக் கொண்டிருந்ததையும் கவனித்து, அவ்விடத்தை நோக்கி விரைந்தார். ராஜபார்ட்டார் உருமாலையைக் கையில் பிடித்துக் கொண்டு வெகு வேகமாக வருவதைக் கவனித்த சிலர் அவருக்கு வழிவிட்டு விலகி நின்றனர். அப்படிக் கும்பல் விலகி விட்டதால் எதிரே தெரிந்த காட்சியைக் கண்ட ராஜபார்ட்டார் வெலவெலத்துப் போனார். அவர் கண்ணெதிரே காளைமாடு ஒன்று செத்துக் கிடந்தது. அதற்கு அருகில் கைத்துப்பாக்கியும் கையுமாக வரதப்பிள்ளை நின்று கொண்டிருந்தான்.

ராஜபார்ட்டார் ஒரு கணம் வரதப் பிள்ளையின் முகத்திலிருந்த கிலியையும் சுற்றுமுற்றிலுமிருந்தவர்களின் முகத்தில் தெரிந்த கோபத்தையும் பார்த்து விஷயத்தை ஒருவாறு ஊகித்துக் கொண்டார். ஆனால், அங்கிருந்தவர்கள் பேசிய பேச்சு ஊகத்துக்கு அவசியமில்லாமல் செய்து விட்டது.

''ஏங்க ராமலிங்கம்! பார்த்தீங்களா உங்க மகன் செஞ்சிருக்கிற வேலையை?''என்று, கம்பராமாயணத்தை இரைந்து சொல்லி நன்றாகத் தொண்டை உடைந்து போய் இருந்ததால் கணீரெனக் கிளம்பிய குரலில் கேட்டார் உத்திராதிப்படையாச்சி.

அப்பொழுதுதான் மேலைக் குளத்தங்கரையில் தீர்த்த மாடிவிட்டு இடுப்பில் சின்ன ஈரச் சவுக்கத்துடனும், கையில்

நன்றாகப் பிழிந்து முறுக்கி விடப்பட்டிருந்த பத்து முழம் வேஷ்டியுடனும் அவ்விடம் வந்து கம்பீரமாய் ஆறடி உயரத்துக்குச் செக்கச் செவெலென்று நின்று கொண்டிருந்த வராஹாச்சாரியும், ''ஏம்பா ராமலிங்கம், சின்னப்பயல் கிட்டேயெல்லாம் ரிவால்வரைக் கொடுக்கலாமா? மாடுன்ன தாலே தான் போச்சு. மனுஷன் மேலே பாஞ்சிருந்தா தொல்லை பாரு! நான் சர்வீஸிலே இருக்கச்சே அவசியமிருந்தாலொழிய ரிவால்வரை எடுக்கக் கான்ஸ்டபிளைக் கூட அனுமதிச்சது கிடையாது'' என்று மாட்டின் மரணத்துக்குக் காரணத்தைச் சொன்னதோடு, உத்தியோக காலத்தில் தான் வேலை செய்த பெருமையையும் எடுத்துரைத்தார்.

ராமலிங்கம் சிறிது நேரம் பதில் சொல்லாமல் வரதப் பிள்ளையைக் கொலைப் பார்வையாகப் பார்த்தார். பிறகு வராஹாச்சாரியை நோக்கி, ''தவறுதாங்க ஸ்வாமி! ஆனால் ரிவால்வரை நான் இவன் கண்ணில் படும்படியாகக்கூட வைக்கவில்லை. அதைத் தொடாதே தொடாதேன்னு இந்த மடப்பய மவனுக்கு ஆயிரந்தடவை சொல்லியிருக்கேன் கேக்கறதில்லீங்க'' என்று சொல்லிவிட்டு, என்ன செய்யப் போகிறார் என்பதை மற்றவர்கள் ஊகிக்கும் முன்பே வரதப்பிள்ளையின் மீது பாய்ந்து, 'பளேர் பளே' ரென்று கன்னத்திலும் முதுகிலும் தலையிலும் 'சாத்து சாத்'தென்று சாத்தினார் ராஜபார்ட்டார். அடி பொறுக்காத வரதப்பிள்ளையும் தலையைக் குனிந்தும் நிமிர்ந்தும் இரண்டு விநாடிகள் சமாளித்து விட்டு, முடியாததால் கைத்துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு, ''ஐயோ! ஐயோ!'' என்று கத்திக் கொண்டே ஓடலானான்.

ஆனால், ராஜபார்ட்டாருக்கு இருந்த கோபத்தில் அவர் தமது மூலைக்கச்ச வேஷ்டியை முன்புறத்தில் தொடை வரையில் வழித்துப் பிடித்துக்கொண்டு உருவமாலை கீழே விழுந்ததைக்கூடக் கவனிக்காமல் அவனைத் துரத்தித் துரத்தி

அடித்தார். காலாலும் கையாலும் அவர் மாறி மாறிச் சமர்ப்பித்த உதைகளைத் தாங்காமல் வரதப்பிள்ளை பேய்க் கூச்சல் போட்டான்.

இந்த ஓடுபிடி விளையாட்டையும் உதைப் படலத்தையும் சிறிதுநேரம் கவனித்துக் கொண்டிருந்த சிவசங்கரம் பிள்ளை, ''ராமலிங்கம்! என்ன இது! கொஞ்சம் சும்மா இருங்க! விஷயத்தை விசாரிக்காமெ பையனை அடிச்சுப் புண்ணிய மென்ன?'' என்று வரதப்பிள்ளைக்குப் பரிந்து பேசி, ''ஏம்ப்பா உத்திராதி! என்ன வேடிக்கை பார்க்கறே? ராஜபார்ட்டாரைக் கொஞ்சம் பிடிச்சு நிறுத்து'' என்று உத்தரவு போடவே, உத்திராதியும் கூட்டத்திலிருந்த ஓரிருவருமாக ராமலிங்கம் பிள்ளையைச் சிறிது அடக்கினார்கள். அப்பொழுதும் கோபம் தீராத ராஜபார்ட்டார் வரதப்பிள்ளை மீது சீறி, கூட்டத்தாரின் பிடிகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளத் திணறினார். ஆனால் உத்திராதியின் கடும் பிடியிலிருந்து அவரால் தப்ப முடியாமல் போகவே, ''வீட்டுக்கு வாடாகளுதை! உன் எலும்பை நொறுக்கி நாய்க்குப் போடறேன்'' என்று உறுமினார்.

''என்னப்பா நடந்தது ராமலிங்கம்? ஏன் இந்தப் பதற்றம்?'' என்று விசாரித்தார் சிவசங்கரம் பிள்ளை.

வராஹாச்சாரியே இதற்குப் பதில் சொல்ல முற்பட்டு, ''டேய் விலகி நில்லுங்கடா! நான் தீர்த்தமாடியிருக்கிறது தெரியலே?'' என்று கூட்டத்திலிருந்தவர்களை எச்சரித்து விலக்கிவிட்டுச் சிவசங்கரம் பிள்ளையை அணுகி, ''பிள்ளைவாள்! இந்தக் கைத்துப்பாக்கி ஏது தெரியுமோல்லியோ?'' என்று வினவினார்.

''தெரியாதே ஸ்வாமி!'' என்றார் சிவசங்கரம் பிள்ளை.

''இது நம்ம ராமலிங்கம் பிள்ளைது. நான்தான் வாங்கிக் கொடுத்தேன். ரொம்ப நாளா இது மாதிரி ஒண்ணு வேணும்னு ராமலிங்கம் கேட்டுண்டிருந்தான். போலீஸுக்கு ஒரு மனுப்

போடச் சொன்னேன். ''இப்போ இருக்கிற டி.எஸ்.பி. எங்கிட்ட ஸர்வ் பண்ணினவன். அவனைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னேன்; நடந்துடுத்து'' என்று அந்தத் துப்பாக்கியை வாங்கியதற்குத் தமது செல்வாக்கு எப்படிக் காரணம் என்பதை விளக்கினார். அந்தச் சமயத்தில் மாடு செத்துக் கிடந்ததையோ, மற்றவர்கள் மனத்திலிருந்த ஆத்திரம், குழப்பம் முதலிய வற்றையோ அவர் சிறிதும் லட்சியம் செய்யவில்லை. ரிடையரான ஆசாமிகளுக்கு, இயற்கையான சுயப்பிரதாபத்தை எப்படியாவது சொல்லித் தீர்த்துவிட வேண்டுமென்ற உறுதியுடன் மேலும் சொன்னார்: ''டி.எஸ்.பி.! எங்கிட்டே வேலைக்கு வரச்சே ஒரு சாதாரண எஸ்.ஐ.! சின்னப் பய; இப்போ இருக்கிற சதைப் பிடிப்புக் கூட அப்ப கிடையாது இவனுக்கு. ஒல்லியாகத் தானிருப்பான். 'டேய் ராஜ்கோபால்!'னு ஒரு சத்தம் போட்டேன்னா பய கிடுகிடுன்னு நடுங்குவன். யார் தெரியுமோ அவன்? சிதம்பரம் ப்ளீடர் கோவிந்தராஜன் இல்லே...?'' என்று சொல்லி, உத்திராதியை நோக்கினார்.

உத்திராதிக்கு உதறல் கண்டது. வராஹாச்சாரி இந்த மாதிரி புராணத்தைக் கிளப்பினால் அது ஓயாதென்றும், கம்ப ராமாயணத்துக்கு மேலும் நீளுமென்றும் அவருக்குத் தெரியும். ஒரு முறை இந்த மாதிரித் தகவல்களை அவிழ்க்கச் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டால் வராஹாச்சாரி டி.எஸ்.பி. யின் தந்தை, பாட்டன், அத்தான், அம்மாஞ்சி எல்லோரையும் இழுப்பா ரென்பதையும், அவர்களிடம் தமக்குள்ள செல்வாக்கையும் தெரிவிக்கத் தயங்கமாட்டாரென்பதையும் அறிந்திருந்தாலும், வேறு ஏதும் செய்ய மாட்டாத உத்திராதி, ''ஆமாங்க'' என்று வராஹாச்சாரிக்குச் சம்பிரதாயமான பதிலைச் சொல்லி வைத்தார்.

வராஹாச்சாரி பிடித்துக் கொண்டார்: ''அதே கோவிந்தராஜன் மகன்தான் இவன். எனக்கு அந்த கோவிந்தராஜனை எப்படித் தெரியும்னு கேட்பே!'' என்று, உத்திராதி ஏதும் கேட்காதிருக்கும்போதே அவர் தலைமேல் ஒரு

கேள்விப் பழியைத் தள்ளி, ''சொல்றேன் கேளு! ப்ளீடர் கோவிந்தராஜனும் நானும் ஒரு கேஸ்லே எதிர் எதிரா அப்பியர் ஆனோம். அப்போ நான் பிராசிக்யூடிங் இன்ஸ்பெக்டர். கோவிந்தராஜனும் அவனாலே ஆனதையெல்லாம் ஆர்க்யூ பண்ணிப் பார்த்தான்; பேசாமெ இருந்தேன். கடைசியில் ஒரு சின்ன லா பாயிண்டை எடுத்து விட்டேன். அது என்ன கேஸ் தெரியுமோ?'' என்றார்.

அந்தக் கேஸ் விவரங்களை ஆரம்பித்துவிட்டால் எல்லோரும் நாள் பூராவும் அங்கேயே நின்று கொண்டிருக்க வேண்டியதுதானென்பதை உணர்ந்த சிவசங்கரம்பிள்ளை இடையே புகுத்து, ''அந்தக் கேஸைப் பத்தி இப்ப என்ன ஸ்வாமி? இந்தக் கேஸைக் கவனிங்க!'' என்று சற்று அழுத்தியே சொல்லிவிட்டுப் பதிலைச் சொல்லவும் வராஹாச்சாரிக்கு இடமளிக்காமல் உத்திராதியை நோக்கி, ''ஏன் உத்திராதி? என்ன நடந்தது?'' என்று கேட்டார்.

''இந்தக் காளைங்க...'' என்று ஆரம்பித்த உத்திராதியை இடை மறித்த சிவசங்கரம் பிள்ளை, ''யாருது?'' என்று விசாரித்தார்.

''அழகண்ணலுதுங்க,''

''ஓகோ!''

''ஆமாங்க, இந்தக் காளை படல் ஓரமா மேஞ்சுக்கிட்டு இருந்தது.''

''ஹ்ம்! ஹ்ம்!''

''அதைப் பார்க்காமெ தம்பி துப்பாக்கியோட விளையாடிட்டு ஓடி வந்துகிட்டிருந்ததுங்க...''

''துப்பாக்கியை வச்சுகிட்டு விளையாடிச்சா தம்பி?'' என்று இடைபுகுந்து உறுமினார் ராமலிங்கம்.

''பதற்றப்படாதே, ராமலிங்கம். விஷயத்தை விசாரிப்போம்'' என்று சொல்லிய சிவசங்கரம் பிள்ளை, ''சரி உத்திராதி; அப்புறம்...?'' என்றார்.

''தம்பி குதிரையை அழுத்தியிருப்பான் போலிருக்கு!... ரவை பாஞ்சு மாடு சாஞ்சுதுங்க'' என்று உத்திராதி கதையை முடித்தார்.

''துப்பாக்கிக்கு ரவை போட்டது யாரு?'' என்று கேட்டார் வராஹராச்சாரி.

''நான்தான் ஸ்வாமி போட்டிருந்தேன். காலையிலே கொக்கு சுடப் போகலாம்னு இருந்தேன். அதுக்காகப் போட்டு வெச்சுட்டு வந்தேன். பெட்டியிலே வச்சுப் பூட்டித்தான் இருந்தேன். இந்தக் களுதைப் பய அதை எப்படியோ எடுத்துட்டான்'' என்றார் ராஜபார்ட்டார்.

சிவசங்கரம் பிள்ளை அதைப் பற்றிய சர்ச்சையை அதிகமாக நீடிக்க விடாமல் உத்திராதியை நோக்கி, ''சரி உத்திராதி; நடந்தது நடந்து போச்சு. இனிமேல் அதைப் பற்றிப் பேசி என்ன பிரயோசனம்? தம்பியை அடிச்சா மாடு எழுந்திடுமா? நீ போய் அழகண்ணனைக் கூட்டியா, நான் பஞ்சாயத்துப் பண்ணி மாட்டுக்கு உண்டான கிரயத்தைக் குடுக்கிறேன். ராமலிங்கம்! நீங்க தம்பியை அழைச்சுக்கிட்டு வீட்டுக்குப் போங்க. நான் சாயந்தரமா சந்திக்கிறேன். உத்திராதி! நம்ப மானான் பயலைக் கூப்பிட்டு மாட்டைக் கொண்டு போகச் சொல்லு!'' என்று உத்தரவிட்டதுமின்றி, கூட்டத்தைப் பார்த்து, ''சரி; வேலையைப் பாருங்க'' என்று கண்டிப்பாகச் சொல்லவே, கூட்டம் மெள்ளக் கலைந்தது.

இந்த வேடிக்கையை வீட்டு வாசலிலிருந்தே பார்த்துக் கொண்டிருந்த அத்தையம்மாளுக்கு மனத்தில் ஆயிரம் எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன. சிவசங்கரம் பிள்ளையின் மனதும் பெரிதும் இடிந்து போயிருந்தது. தீவிர

சிந்தனையுடனேயே வீட்டுக்குத் திரும்பி வந்தார். துப்பாக்கி விஷயம் அவருக்கு நன்றாகத் தெரியும். ராஜபார்ட்டார் கொக்கு சுடுவதற்காக மட்டுமின்றி 'ஞான சௌந்தரி' நாடகத்தில் உபயோகப் படுத்துவதற்காகவும் அதை வாங்கியிருந்தார். பிலேந்திரன் வேட்டைக்குப் போகும்போது அதில் வெறும் பவுடரை வைத்துச் சுட்டு நெருப்பைக் கிளப்பி, தமது நடிப்புத் திறமையைக் காட்டுவது ராஜபார்ட்டாரின் வழக்கம். அதற்காக வாங்கப்பட்ட ரிவால்வரைப் பைத்தியமானாலும் பிடிவாதம் நிரம்பிய வரதப்பிள்ளை எடுத்து வந்து குண்டு இருப்பது தெரியாமல் சுட்டி.ருக்கிறான் என்பதைச் சிவசங்கரம்பிள்ளை ஊகித்துக்கொண்டார். இருந்த போதிலும் அவர் மனத்தைப் பெரும் கவலை பிடித்து வாட்டிக் கொண்டிருந்தது. வீட்டுக்கு வந்ததும் அவர் கவலையை ஒன்றுக்குப் பத்தாக விசிற ஆரம்பித்த அத்தையம்மாள், "அண்ணா! பெண்ணைக் கொடுப்பதாக ராஜபார்ட்டானுக்கு வாக்குக் கொடுத்துட்டையே! ஆரம்பமே அபசகுனமா இருக்கே அப்பா" என்று தனது அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்லத் தொடங்கினாள்.

22. இரவில் வந்தவர்

சிவசங்கரம் பிள்ளையின் மனத்தை ஏதேதோ எண்ணங்கள் வாட்டி வதைத்துக் கொண்டிருந்ததால், அத்தையம்மாளின் கேள்விக்கு அவர் பதிலேதும் சொல்லாமல் மேல் துண்டை எடுத்து வாசல் திண்ணையோரத்தை ஒரு தட்டுத் தட்டி விட்டு உட்கார்ந்து கொண்டார். அவர் மௌனத்தின் காரணத்தைப் புரிந்துகொண்ட அத்தையம்மாளும் அடுத்தடுத்துக் கேள்விகளைக் கேட்காமல், வாசல் திண்ணையின் மரத்தூணை ஒரு கையால் கட்டிப் பிடித்த வண்ணம் தன் பார சரீரத்தையும் அதன்மீது சாத்திக்கொண்டு நின்றாள். சில தினங்களாகவே

நிம்மதியிழந்திருந்தால் ஓரளவு உறுதியும் குறைந்திருந்த அத்தையம்மாளைப் போல் தானும் சாய்ந்து விடக் கூடாதென்ற எண்ணத்தால் தானோ என்னமோ, அத்தையம்மாளின் பலமான மார்பு பக்கவாட்டில் தன்மீது சாய்ந்து இழைந்த போதும் தின்னையின் மரத்தூண் அந்தச் சுமை பூராவையும் தாங்கிக் கொண்டு உறுதியுடனேயே நின்றது. அண்ணன் பேசாதிருந்ததால் நீண்டநேரம் தூணைக் கட்டிக் கொண்டு அனைந்து அனைந்து உறவாடிய அத்தையம்மாள் கடைசியில் பொறுமையிழந்து, ''ஏன் அண்ணா! நான் கேட்பது உன் காதிலே விழவில்லையா?'' என்று மீண்டும் சம்பாஷணையைத் துவக்கினாள்.

அதுவரை மௌனமாயிருந்த சிவசங்கரம் பிள்ளையும் தின்னையில் ஓர் அனைப்பு அனைந்து ஏதோ முக்கிய காரியத்தைச் செய்து முடிப்பவர்போல் மடியிலிருந்த சவுக்கத்தை எடுத்து இரண்டாக மடித்து ஓர் உருவு உருவித் தோள்மேல் போட்டுக்கொண்டு, ''காதிலே விழாதென்ன செல்லம்மா? நல்லாத்தான் விழுந்தது''. என்று பதில் சொன்னார்.

''அப்போ என்ன செய்யறதா உத்தேசம்''? என்று கேட்டாள் அத்தையம்மாள்.

''என்ன செல்லம்மா இப்படிக் கேக்கறே? நம்ம உத்தேசப்படி நடக்கிற நிலையிலேயா நாம் இருக்கோம்?'' என்று பதிலுக்குக் கேள்வி கேட்டார் பிள்ளை.

''நம் இஷ்டத்தை மீறி நாம் எதுக்கப்பா இந்த பைத்தியத்தின் தலையிலே குழந்தையைக் கட்டணும்'' என்று அத்தையம்மாள் திட்டமாகவே கேட்டாள்.

பதிலுக்கு ஒரு மூச்சு விட்டார் பிள்ளை. பிறகு சொன்னார்: ''செல்லம்மா! நம்ம குழந்தை மாத்திரம் புத்திசாலித்தனமாக நடந்துகிட்டிருந்தா நம்ம இஷ்டத்தை மீறி எதையும் செய்யவேண்டிய அவசியமில்லே. ஆனால், அந்த மாடி வீட்டுத் தம்பி ஊருக்கு வந்த சில நாட்களுக்குள்ளேயே என்னென்ன

வெல்லாம் நேர்ந்து போச்சு பாரு. என்னாலே கௌரவமா வெளியிலே தலையைக் காட்ட முடியலையே''.

''இந்தக் கிராமத்திலே இருக்கிறவனெல்லாம் அக்கப் போர் பிடிச்ச பயலுக. அவர்களுக்காக நம்ம கொழந்தையை அந்த ராஜபார்ட்டான் கிட்டப் பலி கொடுக்கிறதாப்பா? அப்படித்தான் மோகனா என்ன செஞ்சுட்டா? மாடி வீட்டுத் தம்பி டாக்டர். இவளுக்கு தலைக்குக் கட்டுப் போட்டான். காயம் ஆறிடுச்சான்னு பார்க்க நான்தான் அனுப்பினேன். பட்டணத்திலே இருக்கிற பெண்களெல்லாம் தன்னந் தனியாத்தான் ராவிலேயும் டாக்டர் வீட்டுக்குப் போறங்க, வர்றாங்க! அவுங்க செய்யாததை மோகனா என்ன செஞ்சுட்டா?''

''அது பட்டணம் செல்லம்மா. இது கிராமம். அங்கே ஜனங்களுக்கு வேறே வேலை அதிகம். அக்கப் போருக்கு அவகாசமில்லை. இந்த ஊர் சமாசாரம் வேறே.''

''இந்தப் பட்டிக்காட்டுச் சனியனுக்காகக் கொழந்தை யையா பலி கொடுக்கப் போறே?''

'' 'ஊருடன் ஒத்து வாழ்'னு பெரியவங்க சொல்லி யிருக்காங்க செல்லம்மா. நாம் இந்த ஊரிலேதான் இருக்கோம். இங்கேதான் வாழணும். மோகனா வாழ்க்கை யோட நூறு வேலி நிலமும் சம்பந்தப்பட்டிருக்கு. பரம்பரை பரம்பரையாக நம்மை வளர்த்த அந்தப் பூதேவியைவிட்டு நாம் போக முடியுமா?''

''அந்தப் பூதேவிக்காக ஒரு மூதேவிக்கு மோகனாவை கொடுக்கிறதா அண்ணா? எனக்கு என்னமோ மனசு கேக்கலை! இந்தப் பூதேவியை விட்டுச் சீதேவி யாக்கிக்கோ. பணத்தை எடுத்துண்டு பட்டணம் போவோம்'' என்றாள் அத்தையம்மாள்.

சிவசங்கரம் பிள்ளை அத்தையம்மாளை எரித்து விடுவது போல் பார்த்தார். ''மூளையிருந்துதான் பேசறையா செல்லம்மா? இந்த ஊரைவிட்டு ஒரு நாளும் நான் கிளம்ப மாட்டேன்.

நிலத்தையும் விற்கமாட்டேன். வரதப் பிள்ளை அசடா யிருக்கலாம். ஆனால் அவனுக்குப் பிறக்கும் குழந்தைகள் ஏன் புத்திசாலியாக இருக்கக்கூடாது? அந்தக் குழந்தைகள் நிலத்தை அனுபவிக்கட்டும். நிலமும் கிருஷியும் என் கூடப்பிறந்தவை செல்லம்மா. படித்துப் பட்டம் பெற்றும் நான் பட்டணம் போகாமல் இந்தப் பட்டிக்காட்டில் அடைபட்டதே இவற்றுக்காகத்தான். நாம் செய்யும் குற்றங்களுக்காக இவற்றைப் பலியிட மாட்டேன்'' என்றார்.

''அப்படியானால் உன் முடிவுதானென்ன?'' என்று வினவினாள் அத்தையம்மாள்.

''வரதப் பிள்ளைக்குப் பெண்ணைக் கொடுப்பதாக முடிவு. பிள்ளையாண்டான் அசடாயிருந்தாலும் நல்லவன். ராஜபார்ட்டார் இந்தத் திருமணத்துக்கு ஒத்துக் கொள்வது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. நம் குழந்தைக்கிருக்கிற பேரைக் கேட்டு நியாயமாக அவர் நம் வீட்டை விட்டு எட்டடி விலகி நிற்கவேண்டும். அப்பேர்ப்பட்டவர் வந்து பெண் கேட்கிறார். எதனால்? வேறே பெண் கிடைக்கலையா? இல்லே செல்லம்மா. நம்ம கஷ்டத்தைக் கண்டு பரிதாபப் படுகிறார் மனுஷன். அந்தப் பெருந்தன்மைக்கு நாம் பதில் பெருந்தன்மை காட்டா விட்டாலும் நம்ம சின்னப் புத்தியையாவது காட்டாதிருக்கனும்'' என்று சீறினார்.

''அப்படியானா இந்தச் சகுனம்?''

''நமக்கு ஏற்பட்டிருக்கிற அவல நிலைக்கு ஏத்த சகுனந்தான்'' என்று பதில் சொல்லிவிட்டு எழுந்து வாசலை நோக்கி விடுவிடு என நடந்தார் சிவசங்கரம் பிள்ளை. அவர் போகிற வேகத்தைப் பார்த்த அத்தையம்மாள் அதற்குக் காரணத்தையும் புரிந்து கொண்டிருந்ததால் பெருமூச்சொன்றை விட்டுத் தன் இரும்புப் பிடியிலிருந்து திண்ணைத் தூணையும் விடுவித்து விட்டு உள்ளே சென்றாள்.

ரேழியின் மறைவிலிருந்து அத்தையம்மாளுக்கும் தன் தந்தைக்கும் நடந்துகொண்டிருந்த சம்பாஷனையை கேட்டுக் கொண்டிருந்த மோகனா அத்தையம்மாள் உள்ளே நுழைவதற்கு முன்பாகவே புழக்கடைக்கு ஓடி விட்டாள். துக்கம் நெஞ்சைப் பிளந்து கொண்டிருந்தாலும் குழந்தையிலிருந்து தன்னைப்பற்றி ஒரு வார்த்தை கூடத் தவறாகப் பேசாத தந்தையே கண்ட படி பேசியபடியால் புத்தி அடியோடு குழம்பிப் போயிருந்த படியாலும் கண்களில் பொல பொல வென நீரை உகுத்துக் கொண்டே `மாட்டுக் கொட்டகைக்குச் சென்ற மோகனா அங்கிருந்த சின்னஞ்சிறு கன்றுக் குட்டிக்கருகில் உட்கார்ந்து கொண்டு ஆறுதலாக அதன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள்.

அந்தக் கட்டழகியைப் பளபளத்த தன் விழிகளால் உற்றுப் பார்த்த அந்த இளங்கன்று அவள் கன்னத்தை மெள்ள நக்கிக் கொடுத்தது. ''ராஜா! உனக்காவது என் மேலே பரிதாபமிருக்கே'' என்று உலகத்தால் உதறித் தள்ளப்பட்ட மோகனா, அவளைப் போலவே சூது வாது அறியாமலிருந்த இளங்கன்றுடன் உறவாடினாள். வழவழப்பான அதன் உடலைக் கட்டிப்பிடித்துக் கொண்டு இளமை சொட்டிய அதன் கண்களில் ஆறுதலைக் கண்ட மோகனா தன் தந்தை சொன்னதையெல்லாம் எண்ணிப் பார்த்து ராஜபார்ட்டாரின் வீட்டில் தன்னைப்பற்றி என்ன பேச்சு நடக்கிறதோ என்று நினைத்து ஏங்கினாள்.

அன்று ராஜபார்ட்டார் வீடு பெரும் யுத்தகளமாகயிருந்தது. ராஜபார்ட்டார் பெண் பேசப் போவதில் அதிக இஷ்டமில்லா திருந்த வள்ளியம்மை அவரைப் பிடித்து வாங்கு வாங்கென்று வாங்கிக் கொண்டிருந்தாள். வரதப்பிள்ளை தன் கைத்துப் பாக்கினை எடுத்துக்கொண்டு போனதால் சீற்றமடைந்திருந்த ராஜபார்ட்டாரும் வள்ளியம்மைக்கு அடங்காமல் எதிர்க்கூச்சல் போடவே, அக்கம் பக்கத்து வீட்டார் மெள்ள வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்தார்கள். வழியில் போய்க்கொண்டிருந்த உழவர்கள்

ஒரிருவர் வாசலில் அவர் வீட்டுக்கெதிரில் சற்று நேரம் நின்று வேடிக்கை பார்த்தனர்.

ராஜபார்ட்டார் மிகுந்த கோபத்துடன் நடையில் உலாவிக் கொண்டிருந்தார். அவர் வந்ததும் வராததுமாகப் போட்ட கூச்சலைச் சமையலறையிலிருந்து கேட்ட வள்ளியம்மாள் குழம்பைக் கிளறிவிட்ட கரண்டியுடனேயே நடைக்கு வந்தாள். அரைகுறையாகக் குழம்பு ஒட்டிக்கொண்டிருந்த அந்தக் கரண்டியைப் பார்த்த ராஜபார்ட்டார், ''ஏன்! மகனுக்காகப் பரிஞ்சுண்டு கரண்டியாலே எனக்குச் சூடுபோட வந்திருக்கையோ?'' என்று கூவினார்.

சிவசங்கரம் பிள்ளை வீட்டுக்கருகில் நடந்த சம்பவம் ஏற்கெனவே ஊர் முழுவதும் பரவிவிட்டதால் வள்ளியம்மையும் விஷயத்தைப் பூர்ணமாகவே அறிந்திருந்தாள். ஆகவே உஷ்ணமான விவாதத்துக்குத் தயாராயிருந்த அவள், ''கரண்டியைக் கண்டு நீங்க ஏன் பயப் படணும்? உங்ககிட்ட தான் கைத் துப்பாக்கியிருக்கே. அதாலே என்னையும் என் மகனையும் சுட்டுப் பொசுக்குங்களேன்'' என்றாள்.

''உன் மகனைச் சுட்டா பிசகில்லேடி என்று தொடர்ந்து சீறினார் ராஜபார்ட்டார்,

''என்னை ஏன் தனியா விடணும்? என்னையும் வேலை தீத்துடுங்க. உங்களுக்கும் சௌகரியம்'' என்று குரலை ராஜபார்ட்டாருக்குமேல் உயர்த்தினாள் வள்ளியம்மை.

அப்பனுக்கு முன்பே வீட்டுக்கு ஓடி வந்துவிட்ட வரதப்பிள்ளை கூடத்திலிருந்த நெல் குதிருக்குப் பக்கத்தில் ஒளிந்து கொண்டிருந்தான். அவனைப் பற்றி அது வரை சிந்தியாத ராஜபார்ட்டார், மனைவி தம்மைவிடச் சற்று இரைந்து பேசவே கோபத்தை மகன்மேல் தீர்த்துக் கொள்ள எண்ணி, ''டேய் வரதா! களுதை!'' என்று கூப்பிட்டார்.

குதிருக்குப் பக்கத்தில் பதில் பேசாமல் உட்கார்ந்திருந்த வரதப் பிள்ளையின் உடல் ஆடியது. ''கிடா மாட்டுப்பயலே! கூப்பிடறேன். ஒளிஞ்சுக்கிட்டா இருக்கே?'' என்று கூறிக் கொண்டே கூடத்துக்குள் நுழைந்த ராஜபார்ட்டாரை வழி மறித்த வள்ளியம்மை, ''இந்தாங்க! அவன் வழிக்குப் போகாதீங்க'' என்றாள்.

''போனா?''

''இப்பவே நான் வாசலுக்குப் போய் கொலை கொலைன்னு கூச்சல் போடுவேன்.''

''இதுதான் பொம்பளைங்களுக்கு அழகோ?''

''ஆமாங்க! புள்ளையைக் கொலை செய்ய வர புருஷன் கிட்டே இருக்கிற பொம்பளை அளகாவா நடந்துக்குவா?''

''இப்ப என்ன, உன் பிள்ளையைக் கொலையா செய்து விட்டேன்?''

மேலே பேசாதீங்க. ஊர் சிரிக்குது. வெளியிலே பாருங்க. உங்க கூச்சலைக் கேட்டுப் பண்ணை வீட்டு ஆளுங்கள் எல்லாம் வேடிக்கை பாக்கறாங்க.''

ராஜபார்ட்டார் திரும்பி வாசலைப் பார்த்தார். அங்குச் சிறு கும்பல் கூடியிருப்பதைக் கண்டு பேசாமல் உள்ளே போய்த் துப்பாக்கியைப் பெட்டியில் பத்திரப் படுத்திவிட்டு, நடைத் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்டு வள்ளியம்மையைச் சிறிது மோர் கொண்டு வரச் சொல்லி அருந்தினார். வள்ளியம்மையும் அதற்குள் சாந்தப்பட்டு விடவே மெள்ளக் கல்யாண விஷயத்தை ஆரம்பித்தார்.

''வள்ளி! நான் ஏதோ சொல்றேன்னு கோவிக்காதே. வரதனுக்கும் இத்தனை கைத் துடுக்கு உதவாது. இன்றைக்கு சிவசங்கரம் பிள்ளை வந்து தலையிடலேன்னா ஊர்க்காரங்க உன்பிள்ளை முதுகைப் பிடிச்சுப் பார்த்திருப்பாங்க'' என்றார் ராஜபார்ட்டார்.

''ஏதோ பெரிய மனுஷன்'' என்று சொல்லி வைத்தாள் வள்ளியம்மை, தன் பையனைக் காப்பாற்றினாரே என்ற மரியாதையால்.

''அந்த மனுஷன் சம்பந்தம் நமக்குக் கிடைக்கிறது சுலபமில்லே வள்ளி!'' என்றார் ராஜபார்ட்டார்.

''கிடைச்சுடுத்துங்களா?''

''ஆகா! ராஜபார்ட்டான் போனா ஒரு காரியத்தை முடிக்காமெ விடுவானா?''

''இந்தக் காரியம் அப்படியொண்ணும் கஷ்டமில்லீங்க. அவங்கதான் அந்தப் பொண்ணை யார்தலையிலே கட்டலாம்னு பார்த்துக்கிட்டிருக்காங்களே!''

இந்தப் பதிலுக்குப் பிறகு சற்று நேரம் ராஜபார்ட்டார் மௌனம் சாதித்தார், பிறகு சொன்னார்: ''வள்ளி! இந்த ஊர் அக்கப்போருக்காக ஒரு பெண் வாழ்க்கை கெட்டுப் போறதா? அத்தனையும் நான் செஞ்ச பாவம். நான் கிளப்பிவிட்ட அவதூறு. அதுவும் நம்ம வரதனின் நல்லதை உத்தேசித்துத் தான் செஞ்சேன். இந்தக் கல்யாணத்துக்கு அப்புறம் வரதன் இந்தச் சுற்று வட்டாரத்திலேயே பெரிய மிராசுதாரா இருப்பான். பணம் சேந்துட்டா அவன் அசட்டுத் தனத்தைக்கூட மத்தவங்க புத்திசாலித்தனமா நினைப்பாங்க. இந்தப் பொண்ணைப் பத்தித் தகவல் தெரியாமெ தாறுமாறா இன்றைக்குப் பேசறவங்க நாளைக்கு அதன் தயவுக்குக் காத்துக்கிட்டு நிப்பாங்க. என் மனசுக்கு இந்தச் சம்பந்தம் சம்மதம். உனக்கிஷ்டமில்லேன்னா சொல்லிடு'' என்று பணிவாகக் கொஞ்சும் தோரணையில் பேசினார் ராஜபார்ட்டார்.

ராஜபார்ட்டார் ஒரு முறை ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் அதை மாற்றமாட்டார் என்பது வள்ளிக்குத் தெரியுமாதலால், அவள் மேற்கொண்டு ஆட்சேபிக்க வில்லை.

பத்து நாட்கள் பறந்தோடின. காளை மாடு விஷயத்தைப் பற்றிய நினைப்பு கிராமத்து மக்கள் மனத்திலிருந்து செத்துவிட்டது. அந்த இடத்தில் வரதப்பிள்ளை திருமணத்தைப் பற்றிய வம்பு நிரம்பி நின்றது. அடுத்த இரண்டு நாட்களுக் குள்ளாகவே வள்ளியம்மையுடன் சிவசங்கரம் பிள்ளை வீட்டுக்குச் சென்ற ராஜபார்ட்டார் அவருடன் பழம் பாக்கு வெற்றிலை மாற்றிக்கொண்டார். திருமணம் நிச்சயம் நடந்த விஷயம் ஊரெங்கும் பரவி விட்டது. அந்தத் தகவல் கிடைத்த அன்று முதல் உத்திராதிப் படையாச்சி வீட்டுத் திண்ணையில் கம்பராமாயணப் பிரசங்கம் நின்று, மோகனா விவாகப் பிரசங்கம் நடந்தது. வராஹாச்சாரியும் குருக்களும் இந்தத் திருமணத்தைப் பற்றி பலபடி பேசினார்கள் - ஏன் - ஊர் பூராவுமே பேசியது. அந்தப் பேச்சினால் மனம் பூரித்தவர் பலர்; மனம் உடைந்தவர் சிலர். மனம் உடைந்ததா, பூரித்ததா என்பதை வெளியில் காட்டாத ஒருவனும் அந்த ஊரில் இருந்தான். அவன்தான் மாடிவீட்டு முதலாளி.

தாழைக் காட்டுக்கருகில் ராஜபார்ட்டாரிடம் அவன் வாக்குக் கொடுத்த நாளாய் அந்தக் கிராமத்தில் அவனை யாருமே பார்க்கவில்லை. பார்க்க முயன்ற ஓரிருவரை முருகன் வெளிக் கூடத்திலேயே சந்தித்து, ''ஐயா ஊரில் இல்லை'' என்று அறிவித்து அனுப்பிவிட்டான். அந்தக் கிராம மக்கள் சம்பந்தப்பட்ட வரையில் சுந்தர் ஊரை விட்டே மறைந்து விட்டான். அவன் மறையவில்லை என்பதற்கு ஓர் அத்தாட்சி மட்டும் இருந்தது. இரவு வேளையில் மாடி அறையில் விளக்கு சதா எரிந்து கொண்டிருந்தது. யாரோ இருவர் அந்த அறையில் உலாவிக் கொண்டே இருந்தார்கள். மோகனாவுக்குத் திருமணம் நிச்சயமான பதினைந்தாவது நாள் இரவு வெகு நேரம் கழித்து மாட்டு வண்டியொன்று அந்த ஊருக்கு வந்து நேராக மாடி வீட்டில் போய் நின்றது. அந்த வண்டியிலிருந்து; ஹாட்கூட் எல்லாம் தரித்த ஒரு பெரிய மனிதர் தோல் பெட்டி ஒன்றுடன்

கீழே இறங்கினார். யாரையும் உள்ளே விடாத முருகன் அவரை வர வேற்று ''ஐயா உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருக் கிறார். மாடிக்குப் போங்கள்'' என்று சொல்லி வழி காட்டினான். அந்தப் பெரிய மனிதர் மாடிப் படிகளில் மெள்ள ஏறிச் சென்றார். அவர் போவதைப் பார்த்துக் கொண்டிருந்த முருகன் ஏக்கம் நிரம்பி வழிந்த பெரு மூச்சு ஒன்றைவிட்டு,'' ''கடைசியில் ஐயா கதி இப்படியா ஆகணும்?'' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

23. தசரதன் கூச்சல்

பௌர்ணமி வர நாலைந்து நாட்களே இருந்ததால் ஒவ்வோர் இரவும் காய்ந்த பாய்நிலவு செண்பகத் தோட்டத்தை ஜொகஜ்ஜோதியாக அடித்துக்கொண்டிருந்தது. இராக்காலங்களில் கீழைக்குளத்துத் தாழைக் காட்டில் பூத்த தாழம்பூக்கள் தங்கள் வாயிதழ்களை விரித்து வெண்மதியின் அமுதக் கிரணங்களை உண்டு, அதற்குப் பதிலாகத் தங்கள் சுகந்தத்தைத் தென்றலிடம் தந்ததால், தென்றல் காற்று ஊர் பூராவுக்கும் நறுமணத்தை விநியோகித்துக் கொண்டிருந்தது. அறுவடையாக்கப்பட்டிருந்த நிலங்களில் மொட்டை மொட்டையாக நின்று கொண்டிருந்த காய்ந்த கட்டைக் கதிர்கள் கூட் நிலவொளியால் இயற்கையான மஞ்சள் வர்ணம் சற்றே மாற்றப்பட்டு, மஞ்சளும் வெண்மையும் கலந்த ஒரு மனோகர வண்ணத்தைப் பெற்றுப் பார்ப்பதற்கு மிக இன்பமாகக் காட்சியளித்தன. மேலைக்குளத்து அல்லி மலர்கள் சந்திரனின் வெண்கதிர்களை நோக்கி நகைத்துக் கொண்டிருந்தன. மேலைக்குளத்துக் கரையிலிருந்த பெருமாள் கோயிலின் தங்க முலாம் பூசியிருந்த வெள்ளிக் கலசம் சந்திர வெளிச்சத்தின் ஒளியைப் பிரதி பலித்துக் கிராமத்தின் கலங்கரை விளக்கம்போல் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

செண்பகத்தோட்டத்தை அத்தகைய நிலவொளியில் பார்த்தவர்கள் அதற்குச் சமமான சொர்க்கம் இருக்க முடியாதென்று திட்டமாகச் சொல்வார்கள். அதிகக் கட்டடங்களோ சிற்ப வேலை மண்டபங்களோ இல்லாதிருந்த போதிலும் தமிழ்நாட்டின் எளிய கிராமங்களுக்கு எத்தனை எழில் உண்டு என்பதற்கு அத்தாட்சியாக விளங்கியது செண்பகத் தோட்டம், இத்தகைய இயற்கை அழகு பொங்கித் ததும்பிக்கொண்டிருந்த செண்பகத்தோட்டத்தில் ஆலய விழாக்கள் அந்த ஊருக்குத் தனிச்சிறப்பை ஊட்டி வந்தன. அதுவும் மோகனாவுக்குக் கலியாணம் நிச்சயமான பத்து நாட்களுக்குள்ளாகவே மாரியம்மன் கோயில் திருவிழாவும் வந்துவிட்டதால் ஊர் அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

ஊர் ஜனங்கள் அனைவரும் கோயிலுக்கு ஏதாவது ஒரு பணியைச் செய்து வந்தார்கள். பௌர்ணமியில்தான் திருவிழா துவங்கும்; ஆனால் அதற்கு நாலைந்து நாள் முன்னதாகவே கோயிலைச் சுற்றிச் சிங்காரிக்கும் வேலை மும்முரமாக நடந்தது. உத்திராதிப் படையாச்சி பந்தல் வேலையில் மகாநிபுணரென்று பெயர் பெற்றிருந்தார். ஒவ்வொரு வருஷமும் அவருடைய மேற்பார்வையில்தான் பந்தல் போடும் வேலை நடக்கும். அவரே நாலைந்து பையன்களுடன் சென்று தென்னந் தோப்புகளில் புகுந்து வேண்டிய மட்டைகளை வெட்டித் தள்ளுவார். அவற்றை முடையும் பொறுப்பைக் கிராமத்துப் பெண்கள் பலரிடம் ஒப்படைப்பார். மாரியம்மன் கோயில் பணியென்றால் யாரும் மறுத்துச் சொல்ல முடியாது. அதுவும் உத்திராதி உத்தரவு போட்டுவிட்டால் கேட்க வேண்டியதில்லை. கிற்று முடைந்துதான் ஆக வேண்டும். இல்லாவிட்டால் உத்திராதிப் படையாச்சி கண்டபடி சாபம் கொடுப்பார்.

உத்திராதிக்குப் பயப்பட்டு வேலைகள் வேகமாக நடந்தன. உத்திராதிப் பிரதினமும் தாமே நேரில் நின்று பந்தல் வேலையைக் கவனித்தார். காலையிலிருந்து கையில்

பாளைக்கீற்றுகளுடன் நின்று, ''உம் நடக்கட்டும். ஏலே! தூங்கறையா?'' என்று சத்தம் போட்டு, இரண்டு மூன்று நாட்களில் வேலையை முடித்தார். அந்த ஊரில் மாரியம்மன் கோயிலுக்குத் தனி விசேஷம் உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. ஏனென்றால் சிவன் கோயிலில் அடி எடுத்து வைப்பதைப் பெரும் பாவம் என்று கருதிய வராஹாச்சாரிகூட மாரியம்மன் கோயில் விஷயத்தில் அதிக அக்கறை காட்டி வந்தார். விஷ்ணுவிடத்தில் அவருக்கிருந்த பக்தியை விட வைசூரியிடத்திலிருந்த கிலி மாரியம்மனிடம் பயபக்தியை உண்டு பண்ணியிருந்ததால், அவர் அந்தக் கோயில் பணியில் வலிய வந்து கலந்துகொள்வது வழக்கம். தாமாக வேலை எதுவும் செய்யாவிட்டாலும் சாயந்தரமாகக் கோயில் பக்கம் வந்து, ''என்ன உத்திராதி, பந்தலைச் சீக்கிரம் முடி. உற்சவத்தையொட்டி பாலம்மா பள்ளாட்டமிருக்கு. உக்கடையான் கூத்து வேறே இருக்கு'' என்று அதிகாரம் செய்துவிட்டுப் போவார்.

பள்ளாட்டத்தையும் கூத்தையும் பற்றி அடிக்கடி வராஹாச்சாரி பிரஸ்தாபித்ததற்குக் காரணமும் உண்டு. அந்த இரண்டையும் ஏற்பாடு செய்தவர் வராஹாச்சாரிதான். தாம் உதவிக் கமிஷனராயிருந்த காலத்தில் இருந்த பரிச்சயத்தை யொட்டிப் பேரளம் இன்ஸ்பெக்டரைக் கெஞ்சாத கெஞ்சலாகக் கெஞ்சி, இரண்டு வைபவங்களையும் அவர் ஏற்பாடு செய்திருந்தாலும், தமது பழைய அதிகாரத்தைக் கண்டு பயந்தே அவர்கள் ஆட ஒப்புக்கொண்டதாக வராஹாச்சாரி சொல்லிக் கொண்டு திரிந்தார்.

மாரியம்மன் கோயிலில் சிரத்தை கொண்டிருந்தவர் வராஹாச்சாரி மட்டுமல்ல; தமிழர்களின் மூடப் பழக்கங்களை ஒழிக்க வேண்டுமென்று கழகத்தில் சேர்ந்திருந்த அழகண்ணல் கூட மாரியம்மன் கோயில் உற்சவ ஏற்பாடுகளில் தீவிர சிரத்தை காட்டினார். என்னதான் தமிழர்களின் மூடப் பழக்கங்களை அவர் கண்டித்துக் கறுப்புச் சட்டையைப் போட்டுக் கொண்ட

போதிலும், வைசூரியிடத்திலிருந்த பயம் அவர் கறுப்புச் சட்டையைப் பத்துப் பதினைந்து நாட்களுக்குக் கழற்றும்படி செய்துவிட்டது. அவரும் அடிக்கடி கோயிலுக்கு வந்து தமது பரம வைரியான உத்திராதிப் படையாச்சியின் பக்கத்தில் நின்று பந்தலை அண்ணாந்து பார்த்து, ''ஏன் உத்திராதியண்ணேன்! அந்த மூங்கிலை இந்தப் பக்கம் இளுத்துக் கட்டினா ஷ்ட்ராங்கா யிருக்காது?'' என்று ஏதேதோ 'ஐடியா'க்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். 'பந்தல் வேலையில் இந்தப் பயலுக்கு என்ன தெரியும்' என்று நினைத்துக் கொண்டிருந்த உத்திராதிப் படையாச்சிகூட: ''இல்லே தம்பீ! அது அங்கிருந்தாத்தான் சரியாயிருக்கும்'' என்று பதில் சொல்வார்.

வருஷத்தில் பத்து நாட்களே வரும் செண்பகத் தோட்டத்து மாரியம்மன் கோயில் உற்சவம் விநோதிகளைப் பேச வைக்கும்; மக்கள் துயரத்தைத் துடைத்து மகிழ்ச்சியளிக்கும். ஊரையே சுத்தமாக்கித் தோரணங்களும், பந்தல்களுமாகப் பெரிய கல்யாண மண்டபமாக அடிக்கும், உற்சவத்தில் ஜனங்கள் துயரங்களை மறந்தார்கள். உற்சவத்திற்காக வந்திருந்த மிட்டாய்க் கடைகளையும், சில்லறைப் பாத்திரக் கடைகளையும் சுற்றி வந்து கண்டதை வாங்கிக் களிப்படைந்தார்கள். பள்ளாட்டமும் கூத்தும் அவர்களைக் களியாட்டம் ஆட்டக்கூடிய அம்சங்கள்.

பௌர்ணமியும் வந்தது. காலையில் பள்ளாட்டம் முடிந்தது. உற்சவம் துவங்கியது. அம்மன் புறப்பாடு குதூகலமாக நடந்தது ஊர் அல்லோலகல்லோலப் பட்டது. பையன்கள் இங்குமங்கும் ஓடியதால் தெருக்களில் எழுந்த புழுதி ஊரைச் சுற்றிக் கொண்டது. எங்கும் இரைச்சல். அந்த ஊர் ஜனங்களோடு பக்கத்திலிருந்த வாளூர். பாவட்டக்குடி, காளையாகுடி, சத்திரம் முதலிய ஊர்களிலிருந்தும் கட்டுச் சாதத்துடன் ஜனங்கள் வந்திருந்ததால், நெருக்கம் தாங்க முடியவில்லை. அத்தகைய நெருக்கத்திலும் புழுதியிலும் மக்கள் இன்பமே அடைந்தார்கள்.

திருவிழா அவர்கள் வாழ்விலே பிரதி வருஷமும் நடக்கும் பெருவிழா.

இந்த விழாவில் கலந்துகொள்ளாதவர் அந்த ஊரில் இருவர்தான். ஒருத்தி மோகனா; இன்னொருவன் சுந்தர். மோகனாவாவது காலையில் அம்மன் ஊரை வலம் வந்தபோது தரிசனம் செய்ய வீட்டைவிட்டு வெளியே வந்தாள். சுந்தர் மாடி வீட்டுக் கதவைக்கூடத் திறக்காமல் அடைப்பட்டே கிடந்தான். அவன் நெஞ்சுரத்தைப் பார்த்த வராஹாச்சாரிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வரவே, தமது பக்கத்தில் அம்மனுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த குருக்களைப் பார்த்துக் கேட்டார், ''குருக்களே! பார்த்தீராங்காணும் பயல் திமிரை?'' என்று.

''நாம ஏங்காணும் சிரமப்படணும், ஐயங்கார் ஸ்வாமி! எல்லாம் அவள் கவனிச்சுக்குவா!'' என்று முன்னே போய்க் கொண்டிருந்த அம்மனைக் காட்டினார் குருக்கள்.

''இவனைப் போல அயோக்கியனை அவ கவனிக்க மாட்டாங்காணும்! உம்மையும் என்னையும் போலச் சோப்ளாங்கிகளைத்தான்...!'' என்று ஆரம்பித்த வராஹாச்சாரி, அதில் ஏதாவது அபசாரம் நேர்ந்துவிட்டால் என்ன செய்வதென்ற பயத்தால் வாயைச்சட்டென்று மூடிக்கொண்டார்.

அவர் பயத்தை அதிகப்படுத்த, ''ஏங்காணும் ஐயங்கார் ஸ்வாமி! நமக்கேங்காணும் இந்தத் தொல்லை? அந்தப் பயலுக்காக நீர் எதுக்கு அம்மாகிட்டே அபசாரப் படணும்?'' என்றார்.

இதனால் அதிகக் கிலியடைந்த வராஹாச்சாரி, ''அட இப்ப என்னங்காணும் சொல்லிட்டேன்?'' என்று குருக்களை உஷ்ணமாகப் பார்த்துக் கேட்டுவிட்டு, ''அம்மா நம்மை ஒண்ணும் பண்ண மாட்டா! அவளுக்குத் தெரியாதா என்ன, யார் எப்படிங்கறது?'' என்று தம்மைத் தாமே சாந்தி செய்து

கொண்டார். ஆனால் இத்துடன் சம்பாஷணை நிற்கவில்லை. அன்று இரவு கூத்து நடந்தபோதும் வராஹாச்சாரியும் குருக்களும் சுந்தரைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்.

உக்கடையான் கூத்து என்றால் ஏகக் கூட்டம் கூடும். அதை ஒட்டிப் போலீஸ் பந்தோபஸ்துக்காகக் கான்ஸ்டபிள்களுடன் பேரளம் இன்ஸ்பெக்டரே நேரில் வருவார். அன்றும் இன்ஸ்பெக்டரே வந்திருந்தார். அவர் பெரிய அதிகாரியாதலால் ஓர் ஒதுக்குப்புறமாக அவர் உட்கார ஒரு கயிற்றுக் கட்டில் போடப்பட்டிருந்தது. மற்றொரு கட்டிலில் கண்ணப்பிள்ளை முதலானவர்கள் வேறொரு பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்கள்.

உக்கடையான் கூத்தைப் பலமாகத் துவக்கினான். ஆரம்பத்தில், ராஜபார்ட்டார் சிறந்த நடிகர் என்பதை உத்தேசித்து ராமர் வேஷம் போட்டுக்கொண்டிருந்த அவருக்கு ஒரு கும்பிடு போட்டான். ராஜபார்ட்டார் மிகக் கர்வத்துடன் அக்கம் பக்கத்திலிருந்தவர்களைப் பார்த்துவிட்டு அவன் மரியாதையைப் பெற்றுக் கொண்டதற்கு அறிகுறியாகச் சிரக்கம்பனம் செய்தார்.

முதலில் பிள்ளையார் வந்தார். 'பிறகு 'அண்டம் கிடுகிடுக்க அமரர் நடுநடுங்க அதட்டினார் யனுமார் வருகின்றார். அதட்டி யனுமார் வருகின்றார்!' என்று கூவிக்கொண்டு அனுமார் வந்து அட்டகாசம் செய்தார். பிறகு இராம நாடகம் ஆரம்பமாயிற்று.

இராமன் உடல் பூராவும் அரிதாரம் பூசிப் பச்சைச் சாயத்தை அடித்துக்கொண்டு பட்டைத் திருமண் காப்புடன் வந்து பல அறிவுரைகளைச் சொல்லியதன்றி, தமது கோதண்டத்திலும் கால்களிலுமிருந்த சதங்கைகள் ஓசைப்படும்படியாக 'திமு திமு' வென்று குதிக்கவும் குதித்தார். பிறகு இலட்சுமண வேஷக்காரன் இடுப்பில் பாவாடையுடன், தலைமயிரை ஜடை கொத்ஸு வைத்துப் பின்னிக்கொண்டு நுழைந்தான். அவனுக்கும் இராமனுக்கும் தர்க்கம் பலமாக நடந்து கொண்டிருந்தது!

கூத்துக் காட்சிகள் மாறிக்கொண்டிருந்தன. காட்சிகள் ஏறஏற மக்களின் உணர்ச்சி ஏறிக்கொண்டிருந்தது.

இராமன் வனவாசம் போகிற கட்டம் வந்தது. தசரதன் பெரிய ஓலம் வைத்தான். இராமனும் பதிலுக்குக் கதறி ஜனங்களை அழவைத்தான். கடைசியில், ''ஐயோ இராமா!'' என்று பெரிதாகக் கூச்சலிட்டான் தசரதன். அதே சமயம், தாழைக்காட்டின் பக்கத்திலிருந்து, 'டுமீல்! டுமீல்!' என்ற துப்பாக்கிச் சத்தம் இருமுறை கேட்டது. அதைத் தொடர்ந்து, ''ஐயோ! ஐயோ!'' என்ற அலறலும் ஊரைப் பிளந்தது.

24. தாழைக் காட்டில் ஒரு கொலை

தாழைக் காட்டிலிருந்து வந்த அந்த அலறலைக் கேட்கும் வரையில் உக்கடையான் கூத்துத் தசரதனை விடப் பெரிதாக இன்னொருவர் கூச்சல் போட முடியும் என்று அந்தக் கிராமத்தார் நம்பியதே இல்லை. ஜனங்களை அப்படியே திக்பிரமையடையச் செய்யும் முறையில் எழுந்தது அந்த அலறல். அப்பொழுது நள்ளிரவு சற்றே தாண்டிவிட்டது. இரவு எல்லோரும் சாப்பிட்ட பிறகே உக்கடையான் கூத்தைத் தொடங்குவானாதலால், தசரதன் பிரலாபக் கூட்டம் வரும்போது நள்ளிரவாகிவிட்டது ஆச்சரியமல்ல. ஆகவே, தசரதன் பிரலாபத்தோடு அந்த இரவில் வேறொரு குரலும் சேர்ந்துகொண்டு கத்தியதைக் கேட்ட மாத்திரத்தில் ஜனங்கள் பெருங்குழப்பமடைந்து திடீரென எழுந்து விட்டார்கள். பலர் தாழைக் காட்டுக்காகவும் ஓடத் தொடங்கினார்கள்.

கௌரவ விருந்தாளரான போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெயராஜ் நாயுடுகூடக் கண்ணப்பிள்ளை முதலானவர்களுடன் தாழைக்காட்டை நோக்கி விரைந்தார். எங்கும் ஒரே கலவரம்.

குறுக்கும் நெருக்கும் ஜனங்கள் நடமாட ஆரம்பித்தார்கள். சிலர் நாடகம் நடந்து கொண்டிருந்த இடத்துக்கு முதுகைக் காட்டிக்கொண்டு நின்று தாழைக் காட்டுக் கூச்சல் என்னவா யிருக்கும் என்று தர்க்கம் செய்யலானார்கள். தாழைக் காட்டு அலறல் வரும்வரை பிரலாபித்துக் கொண்டிருந்த தசரத வேஷக்காரனுக்கு மேற்கொண்டு பிரலாபிப்பதா வேண்டாமா என்று தெரியாமற் போகவே, நாடக முதலாளியான ராமவேஷக்காரனை உள்ளிருந்து கூப்பிட்டான். கைகேயியிடம் விடை பெற்றுக்கொண்டு பதினான்கு வருஷ வனவாசத்துக்குப் போயிருந்த ராமனும், வெள்ளைத் துணித் திரையின் மறைவிலிருந்து வெளியே வந்து மகாஜனங்களை உட்காரும்படி வேண்டிக் கொண்டான். தசரதனும் பிரலாபத்தை மறந்து அமைதியாயிருக்கும்படி மக்களிடம் மன்றாடினான். அந்த இருவர் கெஞ்சலையும் சிறிதும் லட்சியம் செய்யாத செண்பகத் தோட்டத்து மகாஜனங்கள் கூத்தை அறவே மறந்து தாழைக் காட்டை நோக்கிச் சென்றார்கள். வெளியூர்களிலிருந்து வந்த சிலர் மட்டும் கூத்துக்காக உட்கார்ந்தார்கள். கொஞ்சம் அமைதி நிலவியதும் உக்கடையான் மீண்டும் கூத்தைத் துவக்கினான். ஆனால், அதற்குள் தசரதன் 'டெம்போ' இறங்கி விட்டதால் அவன் தீன சுரத்திலேயே அழ ஆரம்பித்தான். அந்தக் கட்டமும் ஓரளவு சோகமாகத்தானிருந்தது. ஆனால், அதைவிடச் சோகமான, பயங்கரமான ஒரு கட்டத்தைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள், இன்ஸ்பெக்டரும் மற்றவர்களும் தாழைக்காட்டில்.

இரண்டு கான்ஸ்டபிள்களுடன் வெகு துரிதமாகத் தாழைக் காட்டை நோக்கி ஓடிய இன்ஸ்பெக்டர் ஜெயராஜ் நாயுடு கீழைக்குளத்தை ஒட்டி நின்ற இடத்திற்கு வந்ததும், அங்கிருந்த தாழை மரத்துக்குப் பக்கத்தில் தோன்றிய காட்சியைக் கண்டு அசைவற்று நின்றுவிட்டார். அவருக்குப் பின்னால் வந்தவர்களும் அங்கே தெரிந்த கோரக் காட்சியின் மீது கண்ணைச் செலுத்தியதும் செயலற்று நின்றனர். மற்றவர்களுக்குப் பின்னால்

வந்து கூட்டத்தை விலக்கி முன்னால் வந்த வராஹாச்சாரி மட்டும், ''என்னப்பா, சுந்தரம்! இதென்ன அக்கிரமம்?'' என்றார். மக்கள் சுந்தரையும் அவன் காலடியில் கிடந்த உருவத்தையும் மாறிமாறிப் பார்த்தார்கள். ''கொலை! கொலை!'' என்ற சொல் கூட்டத்தில் எழுந்தது, ''அதுவும் ஒரு பெண். அடப்பாவி!'' என்ற சொற்களும் எழுந்தன.

அந்தத் தாழைக்காட்டு மரத்தடியில் ஒரு பெண் இரத்த வெள்ளத்தில் தோய்ந்து கிடந்தாள். அவளுக்கு எதிரே துப்பாக்கியும் கையுமாக மாடிவீட்டு முதலாளி நின்று கொண்டிருந்தான். இன்ஸ்பெக்டர் ஜெயராஜ் அந்தக் காட்சியைக் கண்டு ஒரு விநாடிதான் அசைவற்று நின்றார். பிறகு தமது பணியைத் தொடங்கினார். முதலில் சுந்தரின் கையிலிருந்த ரிவால்வரைப் பிடுங்கினார். அடுத்தபடி கீழே கிடந்த பெண்ணின் கையைப் பிடித்து நாடி பார்க்க முற்பட்டார். சுந்தரின் திடமான குரல் அவரைத் தடுத்தது.

''அவசியமில்லை, இன்ஸ்பெக்டர்; அவள் இறந்து விட்டாள். ரிவால்வரில் இரண்டு குண்டுகள் காலியாகி விட்டன'' என்றான் மாடி வீட்டு முதலாளி.

அவனது திடமான குரலைக் கேட்ட வராஹாச்சாரி கூட ஆச்சரியப்பட்டார். அவரது உத்தியோக காலத்தில் எத்தனையோ குற்றவாளிகளைப் பார்த்திருக்கும் வராஹாச்சாரி சுந்தரின் மனோதிடத்தைப் பார்த்ததும் 'இப்படியும் ஒரு மனிதன் இருக்க முடியுமா?'' என்று ஆச்சரியப்பட்டார். தவிர, இன்ஸ்பெக்டரை, ஒரு சாதாரண மனிதன் பிரேதப் பரிசோதனையிலிருந்து தடுப்பதும் அவருக்குப் பிடிக்கவில்லையாகையால், ''இன்ஸ்பெக்டர்! நீங்கள் நாடியைப் பிடித்து உயிர் இருக்கிறதா இல்லையா, பாருங்கள். நம்ம டியூட்டியை நாம் செய்வோம்'' என்று, தமக்குப் போலீஸ் இலாகாவில் உள்ள பாத்யதையையும் அனுபவத்தையும் காட்டிப் பேசினார்.

இப்படி மாஜி உதவிக் கமிஷனரால் தூண்டப்பட்ட இன்ஸ்பெக்டரும் உட்கார்ந்து நாடிப் பிடித்துப் பார்த்து விட்டு எழுந்திருந்து வராஹாச்சாரியை நோக்கி, ''அவர் சொன்னது சரிதான். உயிர் போய்விட்டது'' என்றார்.

''சரி மிஸ்டர்! நீங்க என்னுடன் ஸ்டேஷனுக்கு வாங்க'' என்று சுந்தரை அழைத்த இன்ஸ்பெக்டர், பிணத்தை ஒரு மாட்டு வண்டியில் போட்டு எடுத்துக் கொண்டு வரும்படி ஜவான்களுக்கு உத்தரவு போட்டு விட்டுச் சுந்தர் கையில் விலங்கை மாட்டினார்.

அதுவரை அங்கு நடந்தவற்றைக் கவனித்துக் கொண்டு கும்பலோடு கும்பலாக நின்று கொண்டிருந்த சிவசங்கரம் பிள்ளை இன்ஸ்பெக்டரை நோக்கி, ''இன்ஸ்பெக்டர் ஸார்! இவரைக் கைது செய்யத் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றனவா?'' எனறா.

''இந்தப் பக்கம் வந்திருக்கலாம், யாரோ விழுந்திருப் பதைப் பார்த்து நின்றிருக்கலாம்'' என்றார் சிவசங்கரம் பிள்ளை.

சிவசங்கரம் பிள்ளை ஒரு கொலைகாரனுக்குப் பரிந்து பேசுவதைக் கண்ட கிராமவாசிகள் ஆச்சரியப்பட்டார்கள். இன்ஸ்பெக்டருக்குக்கூட அது ஆச்சரியமாயிருக்கவே, அவர் கேட்டார், ''கைத்துப்பாக்கி இவர் கையில்தானே இருந்தது?'' என்று.

சிவசங்கரம் பிள்ளை அப்பொழுதும் மசியவில்லை. ''சுட்டவன் துப்பாக்கியைப் போட்டுவிட்டு ஓடியிருக்கலாம். சத்தம் கேட்டு நம்மைப்போல் இங்கு வந்து இவர் அதைக் கையில் எடுத்திருக்கலாம். 'எதையும் தீர விசாரிப்பது நல்லது'' என்றார்.

வராஹாச்சாரி ஆச்சரியத்தால் சிவசங்கரம் பிள்ளையை உற்று நோக்கினார். சிவசங்கரம் பிள்ளையோ மாடிவீட்டு

வாலிபனையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார். சுந்தரின் முகத்தில் ஓரளவு குழப்பமிருந்தாலும் அது ஒரு குற்றவாளியின் முகமாகப் படவில்லை அவருக்கு, சுந்தரின் கண்களும் அவர் கண்களைச் சந்தித்தன. அந்தக் கண்களில் அவர் என்ன கண்டாரோ தெரியவில்லை. மேற்கொண்டு பேசுவதை நிறுத்திக் கொண்டார்.

சுந்தரமே மேற்கொண்டு பேசினான்: ''இன்ஸ்பெக்டர் ஸார்! கொலை செய்தது நான்தான். அதற்கான ருசுக்களை ஸ்டேஷனில் கொடுக்கிறேன்; வாருங்கள்'' என்று நகர முற்பட்டான். அவன் நகருவதற்குள் ஏற்பட்ட மற்றொரு சம்பவமும், அந்தச் சம்பவத்தால் வெளிவந்த தகவலும் அங்கு கூடியிருந்த ஜனங்களை இன்னும் அதிகமாக அதிர வைத்தன. சுந்தரின் வேலைக்காரனான முருகன் மக்களை விலக்கிக் கொண்டு வெகு வேகமாக ஓடிவந்து, ''எசமான்.'' என்று ஆரம்பித்தவன் கீழே கிடந்த பெண்ணுருவத்தைப் பார்த்ததும், ''என்ன எசமான் இது? அவுங்களா!'' என்று குளறினான்.

''ஆமாம் முருகா, அ!வளேதான்!'' என்றான் சுந்தர்.

''நீங்க கொண்ணூட்டீங்களா?''

''ஆமாம் முருகா!''

''கட்டின பொண்டாட்டியையா கொண்ணூட்டீங்க?'' என்று பிரமிப்படைந்து கூவினான்.

இன்ஸ்பெக்டர் அவனுக்காகத் திரும்பி, ''யார் இவன்?'' என்றார்.

''இவன் அவருடைய வேலைக்காரன்'' என்று வராஹாச்சாரி கூறினார்.

''சரி; இவனையும் ஸ்டேஷனுக்குக் கொண்டு வாருங்க'' என்று கூறிவிட்டுச் சுந்தரை அழைத்துக் கொண்டு நடந்தார் இன்ஸ்பெக்டர்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் சுந்தர் பேரளம் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகப்பட்டான். பிணமும் மாட்டு வண்டியில் பேரளம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டது. பிணம் ஊரை விட்டு நகர்ந்தும் அதைப் பற்றிய பேச்சு மட்டும் கிராமத்தைவிட்டு அகலவில்லை, இரவு முழுவதும் மக்கள் அதைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். சுந்தர் தான் கொலை செய்தவன் என்பதைபற்றிக் கிராம மக்களுக்குச் சிறிதும் சந்தேகமே இல்லை. இறந்தவள் பெரிய சினிமா நட்சத்திர மென்ற தகவலையும், அவள் சுந்தரின் மனைவி யென்பதையும் அடுத்த சில நாட்களில் அறிந்த செண்பகத் தோட்டத்து மக்களிடையே வம்பு பெரிதும் பரவிவிட்டது. வராஹாச்சாரி, குருக்கள் முதலானோர் தங்கள் பணியைத் திறமையாக நடத்தினார்கள்; இத்தனையிலும் சுந்தர் குற்றவாளியாயிருக்க முடியாது என்பதை இருவர் திடமாக நம்பினார்கள். ஒருவர் சிவசங்கரம் பிள்ளை; இன்னொருத்தி மோகனா. சுந்தர் செண்பகத் தோட்டத்துக்கு வந்ததிலிருந்து இதுவரை பற்பல நிகழ்ச்சிகள் நடந்தேறினாலும் அவனிடம் முதலில் ஏற்பட்ட அன்பும், பிறகு எழுந்த காதலும் மட்டும் அவள் இதயத்தில் சற்றும் அணையாமல் சுடர் விட்டுக் கொண்டேயிருந்தன. அதன் விளைவாக, ''சுந்தர் ஒருகாலும் கொலை செய்திருக்க மாட்டார்'' என்று நம்பினாள் மோகனா. சிவசங்கரம் பிள்ளை அவன் குற்ற மற்றவன் என்று நம்பியதற்குக் காரணம் அவனிடத்திலிருந்த அன்பல்ல; வேறு திடமான காரணங்களும் இருந்தன. அந்தக் காரணங்களைக் கோத்து வரிசையாக கடிதத்தில் எழுதவும் தொடங்கினார். கடிதத்தை எழுத எழுத அவர் உணர்ச்சியை அடையவே, அவர் பெருமூச்சு விட்டு காமிரா அறையிலிருந்த நாற்காலியில் சாய்ந்தார். அவர் அப்படிச் சாயும்வரை அவருக்குப் பின்னால் நின்று படித்துக் கொண்டிருந்த மோகனாவின் உள்ளம் துடிதுடித்துப் பெரிய எரிமலையாக எழுந்தது, ''இதெல்லாம் உண்மையா அப்பா?'' என்று கேட்டாள் அவள்.

''அத்தனையும் உண்மை!'' என்றார் பிள்ளை.

''அப்படியானால் இதை உடனே போலீஸுக்கு ஏன் தெரிவிக்கவில்லை?'' என்று மீண்டும் கேட்டாள் மோகனா.

சிவசங்கரம் பிள்ளை சிறிது நேரம் யோசித்தார். பிறகு எழுந்திருந்து அந்தக் கடிதத்தை எடுத்துச் சற்றுத் தூரத்தில் வைக்கப்பட்டிருந்த சிம்னி விளக்கில் கொளுத்தினார். ''அப்பா! அப்பா! அவரை விடுவிக்கக் கூடிய ஒரே சாட்சியத்தை எரித்துவிட்டீர்களே அப்பா!'' என்று மோகனா கதறினாள்.

சிவசங்கரம் பிள்ளை அவள் கதறலைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் கடிதத்தைக் கொளுத்தினார். பிறகு தலையைத் திருப்பி அவளைப் பார்த்தார். அவர் கண்களில் நீர் சுரந்தது. ''உன் நன்மையை உத்தேசித்து தானம்மா இதைச் செய்கிறேன்'' என்றார் அவர்.

25. சுந்தரத்தின் உயில்

சுந்தரை நிரபராதி என்று நிரூபிக்கக்கூடிய விவரங்களைக் கடிதத்தில் எழுதிவிட்டுப் பிறகு அந்தக் கடிதத்தையே கொளுத்திவிட்ட சிவசங்கரம் பிள்ளையை மோகனாவின் பரிதாப விழிகள் நன்றாக ஏறெடுத்துப் பார்த்தன. ஏக்கம் நிறைந்த அந்தப் பார்வை பிள்ளையின் உள்ளத்தை உருக்கத்தான் செய்தது என்றாலும், அவர் தாம் கொண்ட உறுதியிலிருந்து மாற இஷ்டமில்லாதவராய் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். ஆனால் அவரை அவ்வளவு சுலபத்தில் விட்டுவிட இஷ்டமில்லாத மோகனா, ''ஏன் அப்பா, நீங்கள் செய்வது சரிதானா''? என்று கேட்டாள்,

''சிவசங்கரம் பிள்ளை அவள் முகத்தைப் பார்க்காமலே தரையை நோக்கித் தலையைக் குனிந்தபடி, ''எதைக் கேட்கிறாயம்மா?'' என்று வினவினார்.

''நீங்கள் இப்பொழுது செய்தீர்களே அந்தக் காரியத்தைப் பற்றித்தான். கடிதத்தை எதற்காக எழுதினீர்கள்? எதற்காகக் கொளுத்தினீர்கள்?'' என்று மோகனா வற்புறுத்திக் கேட்டாள்.

''தாழைக் காட்டுக் கொலை சம்பந்தமாக எனக்குத் தோன்றிய தகவல்களை எழுதினேன்.''

''எதற்காக எழுதினீர்கள்?''

''போலீஸுக்குத் தெரிவிக்கலாமென்று.''

''பின் ஏன் கொளுத்தினீர்கள்?''

''அந்த விவரங்களைத் தெரிவிப்பதால்...'' என்று இழுத்தார் பிள்ளை.

''என் கல்யாணம் தடைப்படும்'' என்று முடித்தாள் மோகனா. அத்துடன் நிற்காமல் மேலும் கேட்டாள்: ''உங்கள் பெண் வாழ்வதற்காக ஒரு நிரபராதியைத் தூக்கு மேடைக்கு அனுப்ப உத்தேசிக்கிறீர்கள். இது உங்களுக்குச் சம்மதந்தானா?''

சிவசங்கரம் பிள்ளை பதிலேதும் பேசாமல், சற்று நேரம் அறையில் உலாவிவிட்டுப் பிறகு மோகனாவின் மீது தமது கண்களை நன்றாகப் பதியவிட்டுப் பதில் சொல்லத் தொடங்கி, ''மோகனா! இதில் என் சம்மதம் எப்படியென்பதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் சுந்தர் இந்த விவரங்கள் வெளியாவதை விரும்பவில்லை. அவன் இஷ்டத்திற்கு விரோதமாக நான் எதுவும் செய்ய விரும்பவில்லை'' என்றார்.

மோகனாவின் முகத்தில் பிரமிப்பின் சாயை படர்ந்தது. ''என்ன! இந்த விவரங்கள் வெளியாவதை அவர் விரும்ப வில்லையா?'' என்று தடுமாறித் தத்தளித்த குரலில் கேட்டாள்.

''ஆம்; விரும்பவில்லை'' என்றார் பிள்ளை.''

''ஏன்?''

''எனக்குத் தெரியாது. அவன் அந்தப் பிணத்தின் அருகில் நின்றிருந்த பொழுதே எனக்குத் தெரிந்த தகவல்களைச் சொல்ல ஆரம்பித்தேன். அவன் ஒரே பார்வையில் என்னைத் தடுத்து விட்டான்.

''அவர் தடுத்தால் நீங்கள் கேட்க வேண்டுமென்பது அவசியமா?''

''இதில் தர்க்கத்துக்கு இடமில்லை மோகனா. அவன் அன்று தாழைக் காட்டில் என்னைப் பார்த்த பார்வை என் மனத்தைவிட்டு அகலவில்லை. அந்தப் பார்வையில் 'எதையும் சொல்லாதே' என்ற கட்டளை திட்டமாயிருந்தது. அந்தக் கட்டளையிலிருந்து என்னை விடுவித்துக் கொள்ளச் சென்ற சில தினங்களில் எத்தனையோ முறை முயன்றேன்; முடியவில்லை.''

''அவர் எதற்காக உங்களுக்குக் கட்டளையிட வேண்டும்?''

எல்லாம் உன் நன்மையை முன்னிட்டுத்தான். உன் வாழ்வுக்கு இடையூறாகத் தான் முளைத்ததாகச் சுந்தர் நினைக்கிறான். உன் பெயருக்கு இழுக்கு வந்ததற்கும் தான் தான் காரணம் என்று நினைக்கிறான். இப்பொழுது உனக்குத் திருமணம் நிச்சயமாகி இருக்கிறது. அடுத்த மாதம் கல்யாணம்; அதற்குள் வரதப்பிள்ளைமீது சந்தேகம் விழுந்தால் போலீஸார் அவனையும் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள். கல்யாணம் நடக்காது.''

மோகனாவின் கண்களில் நீர்த்துளிகள் இரண்டு ஓடின.

''அப்பா! உங்கள் பெண்ணை ஒரு பித்தனுக்குக் கொடுப்பதற்காக ஒரு பாவமும் அறியாத அந்த உயர்ந்த புருஷரைச் சிறைக்கு அனுப்புவது தர்மமா? நீங்கள் நன்றாக யோசித்துத்தான் முடிவுக்கு வந்திருக்கிறீர்களா?'' என்று நிலத்தை நோக்கித் தலையைக் குனிந்த வண்ணம் கேட்டாள் மோகனா.

சிவசங்கரம் பிள்ளை பக்கத்திலிருந்த விசுப்பலகையில் இருந்த விசிறியை எடுத்து இரண்டு மூன்று தடவை விசிறிக்

கொண்டு, தம்மைத் தைரியப்படுத்திக் கொண்டார். பிறகு சொன்னார். மோகனா! தீர யோசித்துத் தான் இந்த முடிவுக்கு வந்தேன். வரதப்பிள்ளை கைத் துப்பாக்கியுடன் தாழைக் காட்டுப்பக்கம் போனதை நான் பார்த்தேன். ஆனால், அவன் சுட்டதைநான் பார்க்கவில்லை. என்ன காரணத்தினாலோ வரதப்பிள்ளை திடீரெனத் தாழைக்காட்டுப் பக்கத்தில் மறைந்து கொண்டான். அவன் எக்கேடு கெட்டுத் தொலையட்டுமென்று தான் வீட்டை நோக்கி நடந்தேன். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் குண்டுச் சத்தம் கேட்டது. மீண்டும் குளத்தை நோக்கித் திரும்பினேன். வரதப்பிள்ளை கனவேகத்தில் வீட்டை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான். அவனை நிறுத்திப் பேச முயன்றேன். இருமுறை கூப்பிடவும் செய்தேன். அவன் நிற்கவேயில்லை. அவன் ஓடின ஓட்டத்தைப் பார்த்த பிறகுதான் வரதப் பிள்ளைக்கும் அத்தனை சுறுசுறுப்பு உண்டென்பதைப் புரிந்து கொண்டேன். பிறகு நேராகக் கொலை நடந்த இடத்துக்குச் சென்றேன். அதற்குள் பெருங்கூட்டம் அங்கு கூடிவிட்டது. அங்கும் நான் கண்டவற்றைப் பிரஸ்தாபிக்க முயன்றேன். சுந்தர் என்னை அடக்கி விட்டான். அவனே உன் வாழ்வை வளப்படுத்த முயலும் போது அதற்குத் தடையாக நான் இருக்கலாமா?''

அவருக்குப் என்ன பதில் கூறுவதென்று மோகனாவுக்குத் தெரியாததால் அந்த அறையைவிட்டு அகன்றாள். அன்றிரவு அந்த வீட்டில் எல்லோருக்கும் உண்ணாவிரதம். மோகனா தனக்குப் பசியில்லை என்று சொல்லிப்படுக்கப் போய்விட்டாள். சிவசங்கரம்பிள்ளையும் பசியில்லை என்று சொல்லிவிட்டார். இரண்டு பேருக்கும் பசிக்காதபோது அத்தையம்மாளுக்கு மட்டும் பசிக்குமா? அவளும் புடைவையை அரைகுறையாக இழுத்துப் போர்த்துக்கொண்டு உள்முற்றத்துத் தாழ்வாரத்தில் ஒருக்களித்துப் படுத்துக்கொண்டு, விசிறியை எடுத்து இடது கையால் விசிறிக்கொள்ளலானாள்.

அவளிடமிருந்து பத்தடி தள்ளிப் படுத்துக்கொண்டிருந்த மோகனாவின் மனம் துயரக் கடலின் அலைகளில்

தாவிக்கொண்டிருந்ததால், அவள் தூக்கம் வராமலே புரண்டு கொண்டிருந்தாள். சுந்தர் அந்த ஊருக்கு வந்த நாளாய் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் அவள் இளம் உள்ளத்திலே வலம் வந்துகொண்டிருந்ததால், இன்பமும் துன்பமும் கலந்த உணர்ச்சிகள் அவளை வாட்டிக் கொண்டிருந்தன. அவன் காளையை அடக்கித் தன்னைத் தூக்கிச் சென்ற அன்று படுத்துக்கொண்டிருக்கும் அதே கோரைப் பாயில் தன்னருகே உட்கார்ந்து கை பார்த்தது முதலிய சம்பவங்களை நினைத்துப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள் அவள். தன்னிடம் அத்தனை அன்புடன் உறவு கொண்டாடியவர் எதற்காகப் பிறகுத் தன்னைப் பார்க்கக்கூட மறுத்தார் என்பது அவளுக்கு விளங்கவில்லை. 'யாரோ சினிமா ஸ்டாராமே, அவளை விவாகம் செய்து கொண்டிருந்ததாலா?' என்று அவள் தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். 'சினிமா ஸ்டாரிடம் புத்திசாலியான சுந்தர் எப்படிச் சிக்கினார்? அத்தனை ஸ்திரீ லோலரா அவர்?'' என்று எண்ணிப் பார்த்த அவள், 'சேசே! ஒருகாலும் இருக்காது. இதில் ஏதோ பெரிய மர்மமிருக்கிறது' என்று தன்னைத்தானே தேற்றிக் கொண்டாள்.

சிவசங்கரம் பிள்ளையும் கிட்டத்தட்ட அதே ரீதியில்தான் எண்ணிக்கொண்டு படுத்திருந்தார். சுந்தரின் வாழ்க்கையில் ஏதோ பெரிய மர்மம் இருக்கிறதென்பதை மாத்திரம் அவர் ஊகித்துக் கொண்டாரே தவிர, அது என்ன மர்மமாயிருக்கும் என்பதைத் திடமாக அறிய அவரால் முடியவில்லை. சிவசங்கரம் பிள்ளை சுந்தரைப் பற்றி எத்தனையோ அநுதாபத்துடன் நினைத்தாலும், அவன் வரவால்தான் மோகனாவின் பெயருக்குப் பெரிய களங்கம் கிராமத்தில் ஏற்பட்டு விட்டது என்பதை மட்டும் அவரால் மறக்க முடி:யவில்லை. இந்த மாதிரி ஏதேதோ எண்ணங்கள் மனத்தை வாட்ட, இரவு முழுவதும் தூங்காமலே காலந்தள்ளிய பிள்ளைக்கு மறு நாட்காலையில் பெரிய பொறுப்பு ஒன்று காத்திருந்தது. அந்தப் பொறுப்பைத் தூக்கிக்கொண்டு வந்து சேர்ந்தார் ஒரு பெரிய மனிதர்.

அப்பொழுதுதான் சிவசங்கரம்பிள்ளை துண்டை உதறித் தோள்மேல் போட்டுக்கொண்டு கழனி வெளியைச் சுற்றிப் பார்த்துவிட்டுவரக் கிளம்பிக்கொண்டிருந்தார். அவர் கைத்தடியை எடுத்துக்கொண்டு வாசலில் காலை வைத்ததும் தெருக்கோடியில் வண்டியொன்று வெகு வேகமாக வந்து கொண்டிருந்தது. வண்டி ஊருக்குப் புதிதாகத் தோன்றவே சிவசங்கரம்பிள்ளை வாசலில் சற்று நிதானித்தார். வண்டி நேராக அவர் வீட்டு வாசலில் நிற்க, வண்டிக்குள்ளிருந்து அல்பாகா கோட் அணிந்த ஒரு மனிதர் கையில் ஒரு தோற்பையுடன் கீழே குதித்து, ''தாங்கள்தானே சிவசங்கரம் பிள்ளை?'' என்று கேட்டார். பிள்ளை ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையசைக்கவே அல்பாகா கோட்டுக்காரர், ''டேய், மாட்டை அவிழ்த்து விடு; ஐயாவுடன் பேசிவிட்டு வருகிறேன்'' என்று வண்டிக்காரனிடம் சொல்லிவிட்டு, ''உள்ளே போகலாமா?'' என்று பிள்ளையிடம் அனுமதி கேட்டார்.

பிள்ளை மறுபேச்சுப் பேசாமல் வந்த மனிதரைக் காமிரா ரூமுக்குள் அழைத்துச் சென்று அவரை நாற்காலியில் உட்காரச் சொல்லித் தாம் விசுப்பலகையில் அமர்ந்து கொண்டார். வந்த மனிதர் பக்கம் பார்த்துவிட்டு, ''இங்கு ரகசியமாகப் பேச முடியுமா?'' என்று மெள்ள விசாரித்தார்.

''ஆகா, பேசலாம்! இந்த அறையில் என் அனுமதியின்றி யாரும் வரமாட்டார்கள்'' என்று பிள்ளை தைரியும் சொல்லவே வந்தவர் பேச ஆரம்பித்து, ''என் பெயர் ஆனந்தம்'' என்றார்.

''அப்படியா? ரொம்ப சந்தோஷம்!'' என்றார் பிள்ளை.

வந்தவர் மிகுந்த கெட்டிக்காரராகத் தோன்றினார். ''ஆனந்தம், சந்தோஷம் இரண்டும் மகிழ்ச்சிக்குரிய வார்த்தைகள் தாம்; ஆனால், பிள்ளை அவர்களே! நான் வந்த காரியத்தில் எனக்கு மகிழ்ச்சி சிறிதுமில்லை. வருத்தம் மிகுந்த வேலைதான். இருந்தாலும் அவரவர் கடமையை அவரவர் செய்தாக வேண்டுமல்லவா?'' என்றார் அவர்.

பிள்ளை வந்தவரை உற்று நோக்கினார். அவருடைய அல்பாகா கோட்டிலிருந்தும் கழுத்தைச் சுற்றி அட்டை போலிருந்த காலரிலிருந்தும் அவர் வக்கீலாக இருக்க வேண்டுமென்பதைப் பிள்ளை உணர்ந்துகொண்டார். வந்தவருக்கு வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். அத்தனை வயதாகியும் பார்வையில் ஒரு சுறுசுறுப்பு இருந்தது வந்தவருக்கு. கண்கள் சதா எதையோ தேடுவனபோல் குறுகுறுவென்று அலைந்து கொண்டிருந்தன. முகத்தில் வரிவரியாகக் காணப்பட்ட இரண்டொரு சுருக்கங்கள் வந்த மனிதர் மிக உறுதியுடையவர் என்பதைத் தெளிவாக நிரூபித்தன.

மிக உறுதியுடனும் அவர் பேசினார்! ''பிள்ளையவர்களே! உங்களை எனக்குத் தெரியும். ஆனால் என்னை உங்களுக்குத் தெரியாது. ஆகையால் சொல்கிறேன், கேளுங்கள். அதோ அந்த மாடி வீட்டில் வசித்து வந்தாரே மிஸ்டர் சுந்தரம் எம். பி. பி. எஸ் - அவருடைய வக்கீல் நான். பட்டணத்தைச் சேர்ந்தவன். எனக்குப் பட்டணத்தில் பிராக்டீஸுக்கும் குறைவில்லை. மிஸ்டர் சுந்தரத்தைத்தவிர வேறொருவர் என் கட்சிக்காரராயிருந்தால் இடுப்பை உடைக்கும் பாதையை உடைய இந்தக் கிராமத்துக்கு நான் வர ஒப்புக்கொண்டிருக்கமாட்டேன். நான் வருவது இது இரண்டாம்முறை'' என்றார் ஆனந்தம்.

''இதற்கு முன்பு எப்பொழுது வந்தீர்கள்?'' என்று பிள்ளை விசாரித்தார்.

''சில நாட்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு வந்தேன்?''

''எதற்காக?''

''மிஸ்டர் சுந்தரத்தின் உயிலைத் தயாரிக்க.''

''என்ன! உயிலைத் தயாரிக்கவா?''

''ஆம்.''

''இத்தனை சிறு வயதில் உயில் தயாரிக்க வேண்டுமா?''

''அதைக் கேட்க வக்கீலுக்கு என்ன உரிமை இருக்கிறது பிள்ளைவாள்? ''உயிலைத் தயாரியுங்கள்' என்று மிஸ்டர் சுந்தரம் சொன்னார்; தயாரித்து வந்தேன்! பேசாமல் அதில் கையெழுத்திட்டு என்னிடம் கொடுத்தார். இதை இப்பொழுது உம்மிடம் கொடுக்கும்படி எனக்கு உத்தரவாயிருக்கிறது; கொண்டு வந்திருக்கிறேன்.''

இதைக் கேட்ட சிவசங்கரம் பிள்ளை பிரமித்துப் போனார். ''என்னிடம் கொடுக்கும்படி உத்தரவா? எப்பொழுது உத்தரவிட்டார் உங்கள் கட்சிக்காரர்?'' என்று கேட்டார் பிள்ளை.

''நேற்று மாலை'' என்று வக்கீல் ஆனந்தம் பதில் சொன்னார்.

''அவரைச் சந்தித்தீர்களா?''

''ஆமாம். பேரளம் போலீஸ் ஸ்டேஷனில் சந்தித்தேன்.''

''அவர் மேலிருக்கும் குற்றச்சாட்டு என்னவென்று தெரியுமா உங்களுக்கு?''

''தெரியாமலா போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றேன்?''

''அவர் குற்றவாளி என்று நீங்கள் நம்புகிறீர்களா?''

வக்கீல் நிமிஷ நேரம்கூட யோசிக்காமலே பதில் சொன்னார். ''அவராவது குற்றவாளியாவது! ஒரு நாளும் சுந்தரம் யாருக்கும் தீங்கிழைக்க மாட்டார். என்ன காரணத்தைக் கொண்டோ குற்றத்தைத் தன் தலைமேல் போட்டுக்கொண்டு பிடிவாதமாயிருக்கிறார்'' என்றார் ஆனந்தம்.

''அப்படிக் குற்றமற்றவரானால் அவரை நாம் தூக்கு மேடைக்கு அனுப்புவது நியாயமா...'' என்று வினவினார் சிவசங்கரம் பிள்ளை.

வக்கீல் ஆனந்தம் சிவசங்கரம் பிள்ளையை ஒரு விநாடி உற்று நோக்கினார். பிறகு கேட்டார். ''பிள்ளைவாள்! தங்களுக்கு ஒரு புத்திரி இருக்காளாமே, அவளை நான் பார்க்கலாமா?'' என்று.

''ஆகா! பாருங்களேன்!'' என்று சொல்லிய சிவசங்கரம் பிள்ளை, உட்புறமாகப் பார்த்து, ''மோகனா! மோகனா!'' என்று கூப்பிட்டார்.

மோகனா மௌனமாக மெள்ள நடந்து உள்ளே வந்து ஓரமாக நின்றாள். வக்கீல் ஆனந்தம் அவளை நன்றாக உற்றுப் பார்த்துவிட்டு மீண்டும் பிள்ளைக்காகத் திரும்பி, ''பிள்ளை வாள்! இப்பொழுது புரிகிறது எனக்கு. சுந்தரம் பிள்ளை ஏன் தூக்கு மேடையை அலங்கரிக்க ஆசைப்படுகிறார் என்பது'' என்று கூறி, ''சரி, நீ போம்மா'' என்று மோகனாவுக்கும் விடை கொடுத்தார்.

மோகனா உள்ளே சென்றதும் வக்கீல் ஆனந்தம் தமது தோற்பெட்டியைத் திறந்து அதிலிருந்து பல இடங்களில் முத்திரைகள் வைக்கப்பட்ட ஒரு கவரை எடுத்துச் சிவசங்கரம் பிள்ளையிடம் நீட்டி, ''பிள்ளைவாள்! இதுதான் மிஸ்டர் சுந்தரத்தின் உயில். இதைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். அவர் இறந்த பின்பு இதை உடையுங்கள்'' என்று கூறிவிட்டுத் தமது அலுவல் முடிந்துவிட்டது என்பதை நிரூபிக்க நாற்காலியிலிருந்து எழுந்திருந்தார்.

சிவசங்கரம் பிள்ளை உயிலடங்கிய அந்தக் கவரை வெகு நேரம் கையில் திருப்பித் திருப்பிப் பார்த்தார். பிறகு வக்கீலை நோக்கி, ''மிஸ்டர் ஆனந்தம்! சுந்தரத்தை விடுவிக்க வழியே இல்லையா என்று வினவினார்.

''இருக்கிறது.''

''என்ன வழி?''

''அவர் வாயைத் திறந்து உண்மையைச் சொல்ல வேண்டும்.''

''ஏன் சொல்ல மறுக்கிறார்?''

வக்கீல் பதில் சொல்லாமல் வாயிலை நோக்கி நடந்தார். ''என்ன வக்கீல் சார்! பதில் சொல்லாமல் போகிறீர்களே?'' என்று கேட்டார் பிள்ளை.

வக்கீல் ஆனந்தம் வண்டிக்காரனைக் கூப்பிட்டு, ''டேய், வண்டியைப் பூட்டு'' என்று ஆக்ஞாபித்து விட்டுப் பிள்ளையை நோக்கித் திரும்பி, ''பிள்ளைவாள்! காரணம் என்னைவிடத் தங்களுக்கு நன்றாகத் தெரியும்'' என்றார்.

சிறிது நேரம் இருவரும் வாயிற்படியில் மௌனமாகவே நின்றார்கள். அதற்குள் வண்டிக்காரனும் வண்டியைப் பூட்டிக்கொண்டு வந்து நிறுத்தவே புறப்படத் தயாரான வக்கீல் ஆனந்தம், ''பிள்ளைவாள்! உயில் ஜாக்கிரதை! எந்தக் காரணத்தை முன்னிட்டும் அதை மிஸ்டர் சுந்தரத்தின் மரணத்துக்கு முன்பு பிரிக்கக் கூடாது'' என்று எச்சரித்து விட்டு வண்டியிலேறிக் கொண்டு கிளம்பினார்.

வண்டி தெருக்கோடியை விட்டுத் தாண்டும்வரை அதையே பார்த்துக் கொண்டிருந்த சிவசங்கரம்பிள்ளை, உயிலைக் கொண்டுபோய் காமிரா அறையிலிருந்த தமது பெட்டியில் பத்திரப்படுத்தினார். அன்று முழுவதும் பிள்ளை ஏதோசிந்தனையிலேயேகாலத்தைக்கடத்தினார். பூஜை செய்யும் சமயத்தில்கூட அவர் மனம் நிம்மதியிழந்து கிடந்தது. ஆண்டவனை நினைக்கவும் மறுத்தது. இரவும் வந்தது. அப்பொழுதும் அவர் மனத்தில் நிம்மதியில்லாததால் கண்களை மூடிக்கொண்டிருந்தாரேயொழிய, தூக்கம் அணுவளவும் அவரை அணுகவில்லை. இரவு நன்றாக ஏறியது. அர்த்தஜாமப் பட்சிகூடக்கூவிவிட்டது. உடல் அசதியால் பிள்ளைகூடச்சற்றுக் கண்ணயர்ந்தார். சில விநாடிகளில் பெரும் நிம்மதி. பிறகு அந்த நிம்மதியைத் தவிடு பொடியாக்கவல்ல 'க்ரீச்' என்ற சப்தம் அந்த வீட்டை ஊடுருவிச் சென்றது. பிள்ளை அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தார். அவர் முன்னே எழுந்த காட்சி அவரை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது.

26. டிப்டி காட்டிய கடிதம்

அர்த்த ஜாமத்துக்குமேல் அறையில் எழுந்த அலறலைக் கேட்டுக் கண் விழித்துக்கொண்டு எதிரே தெரிந்த காட்சியைக் கண்டு பிரமை தட்டிப்போன சிவசங்கரம்பிள்ளைக்கு, என்ன செய்வது ஏது செய்வது என்று புரியாததால் அப்புறம் இப்புறம்கூடத் திரும்ப முடியாமல் சில விநாடிகள் சிலையென நின்றார். அவர் எழுந்து விட்டதையும் தன்னை உற்றுப் பார்த்துக் கொண்டு நிற்பதையும் கவனிக்காத மோகனா சிம்னி விளக்கருகில் தேம்பிக் கொண்டே நின்றாள். அந்த விளக்குக்குப் பக்கத்திலிருந்த பிள்ளையின் பெட்டி திறந்து கிடந்தது. காலையில் வக்கீல் கொடுத்துவிட்டுப் போன உயில், மோகனாவின் கையில் இருந்தது. கீழே கிடந்த கவரின்மீது சிவசங்கரம் பிள்ளையின் கண் சென்றதும், ''மோகனா! யார் உன்னை அந்தக் கவரை எடுக்கச் சொன்னது? முத்திரைகளை யார் உடைக்கச் சொன்னது?'' என்று பெருங் கூச்சல் போட்டார் பிள்ளை.

மோகனா பதில் சொல்லாமல் கையிலிருந்த உயிலைப் பிடித்துக்கொண்டே நின்றாள். சுருண்ட மயிர்கள் ஒன்றிரண்டு தவழ்ந்து விளையாடிய அவள் முகத்தில் குடிகொண்டிருந்த சோகத்தையும் அந்தச் சோகத்தின் காரணமாகக் கண்ணில் வடிந்த கொண்டிருந்த நீரையும் கண்ட சிவசங்கரம் பிள்ளையின் மனம் ஓரளவு இளகினாலும், அவர் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமலே ''மோகனா! நான் கேட்கிறது உன் காதில் விழவில்லையா?'' என்று கோபக் குரலிலேயே மீண்டும் கேள்வியை வீசினார்.

நீர் வடிந்து கொண்டிருந்த நீண்ட விழிகளை மோகனா பிள்ளையின்மீது திருப்பி, ''அப்பா! இதைச் சற்று வந்து படித்துப் பாருங்கள்'' என்று துக்கம் தொண்டையை அடைக்க, அதன்

காரணமாக வார்த்தைகளும் தடைபடத் தட்டுத் தடுமாறிக் கூறினாள்.

மேற்கொண்டு மோகனாவை அதட்டுவதால் எந்தவிதப் பயனுமில்லையென்பதை உணர்ந்துகொண்ட பிள்ளையும் அவள் கேட்டுக் கொண்டபடியே அவளருகே சென்று, அவள் கையிலிருந்த உயிலைப் பிரித்துப் படித்தார். உயிலின் பக்கங்கள் புரளப்புரள அவர் முகத்தில் வியப்பும் துக்கமும் கலந்து ஏறிக்கொண்டிருந்தன. உயிலின் நாலைந்து பக்கங்களைப் படித்து முடித்த பிள்ளையின் இதயத்தில் யாரோ பெரும் பாறாங்கல்லை ஏற்றிவிட்டிருக்க வேண்டும். அந்தச் சுமையைத் தாளாதவர் போல் பெருமூச்சிறிந்தார் அவர்.

பிள்ளை பெண்ணைப் பார்த்தார்; பெண் பிள்ளையைப் பார்த்தாள். இருவர் பார்வையிலும் கலந்து தொனித்த சோகக் கறையைக் கண்டுதானோ என்னமோ அதுவரை சலனமற்று நின்ற சிம்னி விளக்குக் கூட சற்றே சலித்தது. பிள்ளையின் மனத்திலே கவலை ஏறியதால் அவர் கால்கள் நடக்கும் சக்தியை இழந்தன. மெள்ளச் சிரமப்பட்டு இரண்டு அடிகளை எடுத்து வைத்து விசுப்பலகையில் உட்கார்ந்துகொண்டு, மோகனாவையும் தமது பக்கத்தில் உட்காரும்படி சைகை செய்தார். திடீரென மோகனா கிரீச்சென்று அலறியதாலும், பிள்ளையின் கேள்விகளும் கடுமையாக எழுந்ததாலும் விழித்துக்கொண்ட அத்தையம் மாளும் தாழ்வாரத்திலிருந்து எழுந்து காமிரா அறைக்கு, வந்து சேர்ந்து, ''அண்ணா! குழந்தை ஏன் அலறினா? நீ ஏன் ஏதோ அதிகாரம் பண்ணினே?'' என்று விசாரித்தாள்.

''அது ஒரு பெரிய கதை செல்லம்மா?'' என்று சொல்லி ஆயாசம் கலந்த குரலில் பெருமூச்சொன்றை விட்டார் பிள்ளை.

தனது பெரிய சரீரத்தின் மேல் அரை குறையாகத் தொக்கி நின்ற புடவையை அப்புறம் இப்புறம் தள்ளிவிட்டுக் கொண்ட அத்தையம்மாளும், ''அப்படி என்னப்பா பெரிய கதை? சொல்லேன், நானுந்தான் கேக்கறேன்'' என்றாள்.

''செல்லம்மா! மாடி வீட்டுத் தம்பியில்லே...'' என்று சம்பாஷணையைத் துவக்கினார் பிள்ளை.

''ஆமாம், அந்தக் கடங்காரனுக்கு என்ன இப்போ! அவன்தான் யாரோ ஒரு சிறுக்கியைக் கொன்றுவிட்டு டாணாவிலே கம்பி எண்ணறானே'' என்று கேட்டாள் அத்தையம்மாள்.

''அவன் டாணாவுக்குப் போனதோடு நம்மை விடலை செல்லம்மா.''

''இதுவரையில் குழந்தை மனசைக் குழப்பினது போதாதுன்னு இன்னும் ஏதாவது தகராறு பண்றானா?''

''இல்லே செல்லம்மா; அவன் செஞ்சிருக்கிற காரியம் வேறே. இன்னைக்குக் காலமே அவன் வக்கீல் வந்திருந்தார்...''

''அந்தக் கறுப்புச் சட்டைக்காரனைத்தான் நான் பார்த்தேனே.''

''அவர்தானே அவன் உயிலைக் கொண்டு வந்தார்?''

''இங்கே எதுக்குக் கொண்டு வந்தார்?''

''எங்கிட்ட கொடுக்கும்படி சொன்னானாம் மாடி வீட்டுத் தம்பி. அதை அவன் சாகிற வரைக்கும் பிரிக்கவும் கூடாதுன்னு சொன்னானாம். குழந்தை இதைக் கேட்டுண்டு இருந்திருக்கா. நடுராத்திரியிலே வந்து சாவியை எடுத்துப் பெட்டியைத் திறந்து கவரை உடைச்சு உயிலை வாசிச்சிருக்கா?''

''அதனாலே?''

''சத்தம் போட்டிருக்கா.''

''அப்படி அவ அலறும்படியா அதில் என்னதான் எழுதியிருக்கு?''

பதில் சொல்லச் சிவசங்கரம்பிள்ளைக்கு நா எழவில்லை. வார்த்தைகள் தொண்டையை விட்டு வர மறுத்தன. கடைசியில்

சமாளித்துக்கொண்டு, ''செல்லம்மா! அந்தத் தம்பி தன் சொத்து பூராவையும் மோகனா பேருக்கு எழுதி வச்சிருக்கான்! மோகனா அதை வச்சிண்டு பெருவாழ்வு வாழ்ந்தால் அதுதான் தன் ஆத்மாவுக்குச் சாந்தின்னு எழுதியிருக்கிறான். அவ இஷ்டப்படாவிட்டால் அத்தனை சொத்தும் இந்த ஊர் கோயிலுக்குப் போய்ச் சேரும். இதுதானம்மா உயில்'' என்றார்.

செல்லத்தமான் ஸ்தம்பித்துப் போனாள். அவளுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தில் மேலேயிருந்த துணி நழுவிப் பழைய ஸ்திதிக்கு வந்துவிட்டதைக்கூட அவள் லட்சியம் செய்யாமலே பிள்ளையை நோக்கி, ''ஏம்ப்பா! சொத்து எத்தனையிருக்கும்?'' என்று கேட்டாள்.

''கிட்டத்தட்ட ஒரு லட்ச ரூபாய்'' என்றார் பிள்ளை.

''இத்தனை பணம் ஏது அவனுக்கு?''

''எல்லாம் தம்பியே சம்பாதித்ததுதான்! பட்டணத்தில் தம்பி பெரிய டாக்டராம்.''

''இந்த வயசுக்குள்ளாகவா அத்தனை பெரிய வருமானம்!''

''டாக்டர் தொழிலிலும் நல்ல வருமானம். அதைத் தவிர யாரோ சினிமா முதலாளிக்குப் படம் பிடிக்கப் பணம் கொடுத்திருந்தானாம். அந்தப் படத்தில் கிடைத்த பணமும் சேர்ந்து கொண்டது.''

''இந்த லட்ச ரூபாயை என்னப்பா செய்யப் போறே?''

பிள்ளை பதிலுக்கு மோகனாவைப் பார்த்துவிட்டுப் பிறகு செல்லம்மாவையும் பார்த்தார். பிறகு வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னார். ''செல்லம்மா! பணம் ஒரு லட்சம் என்றவுடன் வாயைத் திறந்துட்டையே தவிர, இதனாலே ஏற்பட்ட உபத்திரவத்தைப் பத்தி நீ யோசித்தாயா?'' என்று.

''இதிலென்னப்பா உபத்திரவம் இருக்கிறது. நாமாகப் போய்ப் பணத்தைக் கேட்டோமா?'' என்றாள் அத்தையம்மாள்.

''இல்லை செல்லம்மா! ஏற்கனவே மாடி வீட்டுத் தம்பி பேரும் மோகனா பேரும் கிராமத்திலே சேர்ந்து அடிபடறது. அத்தோட அவன் அவளுக்குச் சொத்தையும் வச்சா ஊரார் என்ன பேசுவாங்க?'' என்று பிள்ளை கேட்டார்.

அப்பொழுதுதான் விஷயத்தைக் கிரகித்துக் கொண்ட அத்தையம்மாள், ''ஆமாம்ப்பா! இதுக்கு என்ன செய்யப் போறே?'' என்று கேட்டாள்.

''என்ன செய்யறதுன்னு எனக்குப் புரியலை, செல்லம்மா. இதை வேண்டாம்னா தம்பி ஆத்மாவுக்குச் சாந்தியில்லை. வாங்கிண்டா மோகனாவுக்கு அபவாதம். பெரிய தர்மசங்கடமா யிருக்கும்'' என்று பிள்ளை சொல்லி விட்டு பெருமூச்செறிந்தார். கடைசியாக என்ன செய்வதென்பதைப் பற்றி அவரே முடிவும் செய்தார். உயிலை எடுத்துப் பழையபடி கவரில் போட்டுப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினார்.

''என்ன செய்வதென்பதைக் காலையில் தீர்மானிப்போம்'' என்று கூறிவிட்டு, அத்தையம்மாளையும் மோகனாவையும் போய்ப் படுத்துக்கொள்ளச் சொல்லித் தானும் படுத்துக் கொண்டார்.

மூவருக்கும் அன்றிரவு வைகுண்ட ஏகாதசியாகவே கழிந்ததால், மூவரும் விடியற்காலையிலேயே எழுந்து விட்டார். பிள்ளை அன்று வெகு சீக்கிரமாகத் தமது ஸ்நானபானாதிகளை முடித்துக்கொண்டு சுந்தரைப் பார்க்கப் பேரளம் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கிளம்பினார். அவர் போன சமயம் தஞ்சையிலிருந்து இந்தக் கேஸை விசாரிப்பதற்காக 'ஸ்பெஷ'லாக வந்திருந்த டிப்டி சூப்ரின்டெண்டு அப்துல்லாவும் வேறு இரண்டு ரகசியப் போலீசாரும் சுந்தரை விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். இந்த வழக்குக்கும் தமக்கும் சம்பந்தம் எதுவுமில்லையென்றாலும், பழைய வாசனையை மறக்காத வராஹாச்சாரியும் டை, காலர் முதலியவற்றைப் போட்டுக்

கொண்டு, டிரௌஸரும் தலையில் ஆர்கண்டி தலைப் பாகையுமாக உட்கார்ந்திருந்தார். அப்படி உத்தியோக வேஷத்தில் வந்தும் அவர் ஆசாரத்தை விடவில்லையென்பதற்கு அறிகுறியாக அவர் கழுத்துப் பிராந்தியத்திலிருந்து இரண்டு மூன்று திருமண் காப்புகள் காலரையும் மீறி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. நெற்றியில் பட்டை நாமம் மஞ்சள் சூர்ணத்துடன் ஜொலித்துக் கொண்டிருந்தது. ரிடையராகி வைதிகத்தில் புகுந்த நாளாக வெளியே எங்கும் கையை 'நனைக்க' இஷ்டப்படாத வராஹாச்சாரி, ஒரு பிளாஸ்கில் காப்பியைப் போட்டு நான்கு ரஸ்தாளி வாழைப்பழத்தைக் காகிதத்தில் சுருட்டி இரண்டு சாமான்களையும் ஒரு பையில் அடைத்துக் கொண்டு வந்திருந்தார். அவருடைய பழைய உத்தியோகத்தை உத்தேசித்து அவருக்கும் ஒரு நாற்காலி போட்டு உட்கார வைத்திருந்தார்கள்.

சிவசங்கரம் பிள்ளை அந்த வட்டாரத்திலேயே பெரிய மனிதராதலாலும், அவரைத் தெரியாதவர்களகள் தஞ்சை ஜில்லாவில் யாரும் இல்லையாகையாலும் போலீஸ் ஸ்டேஷனில் அவருக்கும் பேருபசாரம் நடந்தது. டிப்டி சூப்பரின்டெண்டு ரப்துல்லா, அவரை வரவேற்று அவருக்கும் ஒரு நாற்காலி போடும்படி சொன்னார். சிவசங்கரம் பிள்ளை உட்கார்ந்ததும் தாமும் நாற்காலியில் அமர்ந்து கொண்ட டிப்டி சூப்பரின்டெண்டு வழக்கு விசாரணையை விட்டு, "பிள்ளைவாள் சௌக்கியமா? ஊரிலே விளைச்சல் எப்படி?" என்று விசாரித்தார்.

"ஏதோகடவுள் புண்ணியத்திலே நாங்க சௌக்கியந்தான். விளைச்சலும் பாதகமில்லை. எல்லாம் ஆண்டவன் கொடுக்கிறான்" என்று பதில் சொன்னார் பிள்ளை. ஏதோ சம்பிராதயத்துக்குப் பிள்ளை அப்படிப் பதில் சொன்னாரேதவிர, அவர் மனம் பூராவும் சுந்தரின் மேலேயே லயித்திருந்ததால் அவனிருந்த பக்கம் கண்களைச் செலுத்தினார். டிப்டி

சூப்பரின்டெண்டும் அவரும் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து சற்று தூரத்தில் ஒரு நாற்காலியில் சுந்தர் உட்கார்ந்திருந்தான். அவன் முகத்தில் சிறிதும் சலனமில்லை; வருத்தமே குடிகொண்டிருந்தது. மரணம் இன்னும் வரவில்லை என்று ஏங்குபவனைப் போலிருந்தான். குற்றம் புரிந்தவனுக்குள்ள எந்த சாயையும் அந்த முகத்தில் காணோம்.

பிள்ளையின் கண் சென்ற மார்க்கத்தைக் கண்ட அப்துல்லா தமது விசாரணையை மேற்கொண்டு தொடங்கினார். அவர் கேட்க, சுந்தர் பதில் சொன்னான்.

''கொலையுண்ட பெண்ணை உங்களுக்கு எத்தனை நாளாகத் தெரியும்?'' என்று விசாரித்தார் டிப்டி.

''மூன்று வருஷங்களாகத் தெரியும்!'' என்றான் சுந்தர், தெளிவான குரலில்.

''உமக்கு விவாகமாகி எத்தனை வருஷங்களாகின்றன?''

''இரண்டு வருஷங்கள்!''

''பெண்ணின் பெயர்?''

''இயற்பெயர் காமாட்சி. திரைப் பெயர் அகல்யா.''

அகல்யா என்ற பெயர் மின்சார விசைபோல் அந்த ஸ்டேஷனிலிருந்தவர்களிடை பாய்ந்தது.

''யார் சினிமா ஸ்டார் அகல்யாவா? அவளையா கொன்றுவிட்டீர்?'' என்றார் டிப்டி. அப்பேர்ப்பட்ட ஒரு சினிமா ஸ்டாரைக் கொன்றது பெரும் பாவம் என்று சொல்வது போல் தொனித்தது அவர் குரல். கான்ஸ்டபிள்கள்கூட அவர் அபிப்பிராயத்தையே கொண்டிருக்க வேண்டும். சுந்தரை மிகுந்த உற்சாகத்துடன் பார்த்தனர் அந்த அறையில் காவல் புரிந்த கான்ஸ்டபிள்கள் இருவரும்.

டிப்டியின் கேள்விக்கு அடக்கமாகவே பதில் சொன்னான் சுந்தர், ''ஆம்! அவளைத்தான் கொன்றேன்'' என்று.

''அவளுக்கும் உமக்கும் முன்பே தகராறு உண்டா?''

''உண்டு.''

''உம்மிடம் ஏதாவது கேட்பதற்காகச் செண்பகத் தோட்டத்துக்கு வந்தாளா?''

''ஆமாம்.''

''என்ன கேட்பதற்கு?''

''மன்னிக்க வேண்டும். இதற்கு என்னால் பதில் சொல்ல முடியாது.''

''மிஸ்டர் சுந்தரம் உங்கள் நன்மையை உத்தேசித்து நீங்கள் பதில் சொல்வது நல்லது'' என்று எச்சரித்தார் டிப்டி.

டிப்டியின் எச்சரிக்கையை சிறிதும் லட்சியம் செய்யாத சுந்தர், மேற்கொண்டு பதில் ஏதும் சொல்ல மறுத்தான். இதனால் கோபம் தலைக்கேறிவிட்ட டிப்டி அப்துல்லா, ''சுந்தரம்! உங்களைக் கடைசியாகக் கேட்கிறேன். இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும்; உம்மைத் தவிர செண்பகத் தோட்டத்தில் அவளுக்கு யாராவது உறவினர் உண்டா?'' என்று கேட்டார்.

''இல்லை'' என்றான் சுந்தரம்.

''சுத்தப் பொய். இதைப் படியும்'' என்று டிப்டி சுந்தரிடம் ஒரு கடிதத்தை நீட்டினார். கடிதத்தைப் படித்த சுந்தரின் முகத்தில்கூடக் கலவரக் குறி தோன்றியது. கடிதத்தைச் சிறிது உரக்கவே படித்தான் அவன்.

''அருமைச் சித்தப்பா...'' என்று கடிதம் தொடங்கி யிருந்தது.

''போதும்; விலாசத்தைப் படியும்...'' என்றார்.

''விலாசத்தைப் படிக்க வேண்டாம். நானே வந்து விட்டேன்'' என்று கூறிக்கொண்டே அழகண்ணல் ஸ்டேஷனுக் குள் நுழைந்தான்.

27. கடிதங்கள்

சுந்தரத்திடம் டிப்டி காட்டிய கடிதம் 'அருமைச் சித்தப்பாவுக்கு...'' என்று துவங்கியிருந்ததே ஸ்டேஷனி லிருந்தவர்களுக்கு ஆச்சரியத்தை விளைவித்திருந்ததென்றால், அந்த சித்தப்பா தான்தானென்று அறிவித்துக்கொண்டு அழகண்ணல் உள்ளே நுழைந்தது எல்லோருக்கும் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகப் போய் விட்டது. பிரபல சினிமா ஸ்டாரான அகல்யாவுக்குக் கிராமத்தில் ஓர் உறவினர் இருக்க முடியும் என்பதே எல்லோருக்கும் நம்பத் தகாத விஷயமாயிருந்தது. அப்படியிருக்கக் கேவலம் முரட்டுச் சுபாவமுள்ள கிராமவாசியான அழகண்ணலை அவளுடைய சித்தப்பா என்று ஒப்புக்கொள்வது சிரம சாத்தியமாகவே இருந்தது. ஆகவே, டிப்டி சூப்பரின்டெண்டு அப்துல்லா கூட அவருக்கு உடனடியாக 'ஸீட்' கொடுக்காமல், ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்துவிட்டு, ''சரி; அப்படி உட்காரும்'' என்று ஒரு நாற்காலியைச்சுட்டிக்காட்டினார்.

அப்படி அழகண்ணலுக்குத் தாமதித்து 'ஸீட்' கொடுத்ததில் வராஹாச்சாரிக்கு மிகவும் சந்தோஷம். தாம் வந்ததும் டிப்டி உடனடியாகச் செய்த உபசாரத்துக்கும் அழகண்ணலை நிற்க வைத்த பின்பே உட்காரச் சொன்னதற்கும் உள்ள வித்தியாசத்தை நினைத்து மனம் பூரித்தார். தாம் ரிடையராகியும் டிபார்ட்மெண்டில் தமக்கு மதிப்புப் பூராவாக இருந்ததில் பெரிய ஆனந்தம் அவருக்கு. அந்த ஆனந்தம் பூராவாகப் பார்வையிலும் தொனிக்க, கர்வத்துடன் அழகண்ணல்மீது தமது வைதிகப் பார்வையைச் செலுத்தினார்.

அவரது வைதிகத்தை உத்தேசித்தே அவர்மீது பூரண வெறுப்புக் கொண்டிருந்த கழக அழகண்ணலும் அவரை எரித்துவிடுவதுபோல் பார்த்தார். சற்றுநேரம் அந்தப் பார்வை

வராஹாச்சாரி மீது நிலைத்திருந்தால் அவர் எரிந்து போயிருந்தாலும் போயிருப்பார். ஆனால், டிப்டியின் கேள்வி அந்தப் பார்வையை நிலைக்க விடவில்லை;

''கடிதத்திலிருக்கும் விலாசம் உம்முடையது தானா?'' என்று அதிகாரத் தோரணையில் கேட்டார் டிப்டி.

''ஆமாம்'' என்று அடக்கமாகப் பதில் சொன்னார் அழகண்ணல்.

''உமது பெயர்?''

''அழகண்ணல்.''

''கொலை செய்யப்பட்ட பெண்ணை உமக்கு எத்தனை நாளாகத் தெரியும்?''

''நான் பார்த்ததேயில்லை.''

''என்ன, பார்த்ததில்லையா! அபத்தம்! அபத்தம்! இட்காண்ட் பி பிலீவ்ட்! (இதை நம்பவே முடியாது)...'' என்று வராஹாச்சாரி குறுக்கிட்டார்.

டிப்டி அப்துல்லாவின் உஷ்ணமான பார்வை வராஹாச்சாரிமீது திரும்பியது. ''மிஸ்டர் வராஹாச்சாரி! இது உத்தியோக பூர்வமான விசாரணை. இதில் கண்டவர்கள் குறுக்கிடக் கூடாது'' என்றும் எச்சரித்தார்.

வராஹாச்சாரிக்கு முகம் சுண்டிவிட்டது. அத்துடன் அவர் நெற்றித் திருமண்ணும் சுண்டியது. தமது பழைய உத்தியோக காலத்தை நினைத்துப் பெருமூச்செறிந்தார். அவர் உள்ளக் கஷ்டங்களை உணராத டிப்டி 'ஹ¤ம்' என்று கறுவிவிட்டு மேற்கொண்டு விசாரணையைத் தொடர்ந்தார்.

''மிஸ்டர் அழகண்ணல்! கொலையுண்ட பெண்மணியை நீர் பார்த்ததேயில்லையா?''

''இல்லை''.

''பின் எப்படி அவள் உமது அண்ணன் மகள் என்பதை அறிந்தீர்?''

''அவள் பல கடிதங்கள் எனக்கு எழுதியிருக்கிறாள்.''

''எத்தனை நாளாக உமக்கும் அவளுக்கும் கடிதப் போக்குவரத்து நடந்திருக்கிறது?''

''சில நாட்களாகத்தான்''

''அதாவது...''

''இந்த சுந்தர் மாடி வீட்டுக்கு வந்த நாள் முதலாகத்தான்.''

சுந்தரின் கண்கள் சற்றே நிலத்தை விட்டு மேலே எழுந்தன. அந்தக் கண்களை அழகண்ணலின் கண்கள் சந்தித்தன. அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டதை டிப்டியும் கவனித்தார். ஆனால், அதைப்பற்றிக் கவலைப் படாமலே மேற்கொண்டு கேள்விகளைக் கேட்டார்.

''சரி, மிஸ்டர் அழகண்ணல்! இந்த சுந்தர் கிராமத்துக்கு வந்து எத்தனை தினங்கள் கழித்து அவள் உமக்குக் கடிதம் எழுதினாள்?''

''சுமார் பத்து தினங்கள் கழித்து''.

''முதல் கடிதத்தில் என்ன கண்டிருந்தது?''

''தான் யார் என்பதை விளக்கியிருந்தாள்''.

''கடிதத்தின் சாராம்சம் என்ன என்பதைப் பற்றிச் சுமாராக விளக்கிச் சொல்ல முடியுமா?''

''முடியும். தான் எனது அண்ணன் மகளென்றும், தமிழ் நாட்டில் பெரிய நட்சத்திரமாக விளங்குவதாகவும் எழுதித் தன் போட்டோவையும் அனுப்பியிருந்தாள். அந்தக் கடிதத்தில் சுந்தர் என்ற டாக்டர் இந்தப் பக்கத்தில் வந்திருப்பதாகவும், அவரைப் பற்றிய தகவல்களை விசாரித்து எழுதும்படிக்கும்

எழுதியிருந்தாள். தவிர சுந்தருடைய போட்டோவும் அதில் இருந்தது''.

''அந்தக் கடிதம், போட்டோக்கள் உங்களிடமிருக்கின்றனவா?''.

''இதோ...'' என்று சொல்லிக்கொண்டு அழகண்ணல் தமது சட்டைப் பையிலிருந்து சில கடிதங்களை எடுத்து அவற்றிலிருந்து ஒன்றைப் பொறுக்கி டிப்டியிடம் கொடுத்தார். டிப்டி கடிதத்தை நிதானமாகப் படித்துவிட்டு போட்டோக்களையும் நன்றாகப் பார்த்து விட்டு இன்ஸ்பெக்டர் ஜெயராஜிடம் கொடுத்தார். இன்ஸ்பெக்டர் ஜெயராஜ் அதைப் பரிசீலனை செய்தபோது அழையாத வீட்டுக்கு நுழையாத சம்பந்தியான வராஹாச்சாரியாரும் தம்மிடம் கடிதத்தையும் போட்டோக்களையும் காட்டததால் வருத்தமுற்று இன்ஸ்பெக்டர் ஜெயராஜின் கையிலிருந்த கடிதத்தைச் சற்று எட்டிப் பார்த்துத் தம்மைத் திருப்தி செய்து கொண்டார்.

டிப்டி அழகண்ணலை மேலும் விசாரணை செய்யத் தொடங்கி, ''இந்தக் கடிதத்திற்குப் பிறகு எத்தனை கடிதங்கள் உமக்கு வந்திருக்கும்?'' என்று கேட்டார்.

''சுமார் பத்துக் கடிதங்கள் வந்திருக்கும்'' என்றார் அழகண்ணல்.

''எல்லாவற்றிலும் சுந்தரைப் பற்றித்தான் பிரஸ்தாபமோ?''

''ஆமாம்.''

''அந்தக் கடிதங்கள் எல்லாம் இருக்கின்றனவா?''

''இருக்கின்றன.'' கையில் வைத்திருந்த மீதிக் கடிதங்களையும் டிப்டியிடம் கொடுத்தார் அழகண்ணல். அவற்றைப் பத்திரப்படுத்தும்படி இன்ஸ்பெக்டரிடம் கொடுத்துவிட்டு டிப்டி விசாரணையைத் தொடர்ந்தார்.

''இந்தக் கடிதங்களுக்கு நீங்கள் ஏதாவது பதில் எழுதியிருக்கிறீர்களா?''

''அநேகமாக எல்லாக் கடிதங்களுக்கும் பதில் எழுதியிருக்கிறேன்.''

''எல்லாவற்றிலும் சுந்தரைப் பற்றிப் பிரஸ்தாப முண்டா?''

''வேறு தகவலைப் பற்றித்தான் அவள் கேட்டதே யில்லையே.''

''அவளுக்குப் பதிலெழுதுவதற்காகச் சுந்தரை நன்றாகக் கவனித்து வந்திருக்கிறீர்கள்?''

''ஆம்.''

''நீங்கள் வேவு பார்ப்பது சுந்தருக்குத் தெரியுமா?''

''தெரியாது.''

''அவரிடம் நீங்கள் ஏன் இந்தக் கடிதங்களைப்பற்றி பிரஸ்தாபிக்கவில்லை?''

''தான் கடிதமெழுதுவதை ரகசியமாக வைத்திருக்கும்படி அகல்யா எழுதியிருந்தாள். முதல் கடிதத்திலேயே அப்படிக் கண்டிருக்கிறது.''

''நீங்கள் பதில் கடிதங்கள் எழுதியதாகச் சொன்னீர்களே, அவற்றுக்கு நகல் வைத்திருக்கிறீர்களா?''

''இல்லை.''

''என்ன பதில் எழுதினீர்கள் என்பதைச் சுருக்கமாகச் சொல்ல முடியுமா?''

''முடியும். முதற்கடிதத்தில் சுந்தர் என் கிராமத்திலேயே இருப்பதாக எழுதினேன். பிறகு அவர் மாடி வீட்டைத் தைரியமாக வாங்கியதைப் பற்றி எழுதினேன்...''

இங்கு டிப்டி இடைமறித்து, ''மாடி வீட்டை வாங்கத் தைரியமென்ன வேண்டியிருக்கிறது?'' என்று கேட்டார்.

''அந்த வீடு துரதிருஷ்டம் பிடித்த வீடு. அந்த வீட்டில் இருந்த குடும்பங்களெல்லாம் நசித்துவிட்டன. வெகு நாட்களுக்கு முன்பு அந்த வீட்டில் அருணாசலம் பிள்ளை என்பவர் வாழ்ந்தார். அவர் சிவசங்கரம்பிள்ளையின் அத்தை மகன். சிவசங்கரம்பிள்ளையின் வயதும் அவர் வயதும் ஒன்றுதான். இந்த வீட்டை வாங்கின உடனேயே அவருக்கு இறக்குமதி வியாபாரத்தில் பெரு நஷ்டம் ஏற்பட்டு இன்ஸால்வெண்டாகி ஓடிவிட்டார். அதற்குப் பிறகு ஒருவர் அந்த வீட்டை வாங்கினார். அவர் மனைவி மாடி ஹாலில் தூக்குப்போட்டுக்கொண்டு இறந்தாள். சில நாட்களுக்கெல்லாம் அந்த மனிதரும் வைசூரியால் காலமானார். அது முதல் இராக் காலங்களில் மாடி ஹாலில் யாரோ கூச்சல் போடுவதுபோல் சத்தம் கேட்கும். இது கிராம மக்கள் அனைவருக்கும் தெரியும். ஆகவே அந்த வீட்டுப் பக்கம் யாரும் போவது கிடையாது. அதை யாரும் வாங்கவும் மறுத்தார்கள். கடைசியில் சுந்தர்தான் வாங்கினார்.

''அவர் எப்படி வாங்கினார்?''

''வைசூரியில் இறந்து போனவரின் அண்ணன் யாரோ பட்டணத்தில் இருக்கிறாராம். அவருக்கு வீடு சேர்ந்தது. அவரது கிராம ஏமிஜண்டு ராஜபார்ட்டார்.''

''யார் ராஜபார்ட்டார்!'' ஆச்சரியத்துடன் கேட்டார் டிப்டி.

''ஆம் சார்! ராஜபார்ட் ராமலிங்கம். இன்றைக்குக் கூடக் கூத்தில் ராஜபார்ட் வேஷம் போட்டால் வெளுத்து விடுவார்'' என்றார் அழகண்ணல்.

''கூத்தாடியா!'' என்றார் டிப்டி.

''அப்படி என்னை அவமரியாதையாகப் பேச வேண்டாம்'' என்று கூறிக்கொண்டே ராஜபார்ட்டார் ஸ்டேஷனுக்குள் நுழைந்தார்.

28. வரதப்பிள்ளை கைது!

ராஜபார்ட்டார் அன்று அமர்க்களமாக டிரஸ் செய்து கொண்டிருந்தார். போலீஸ் ஸ்டேஷனில் தமது முழு கௌரவத்தையும் காட்டுவதற்காக மீசையை நெய்போட்டு நன்றாக முறுக்கி விட்டிருந்தார். நெற்றியில் குங்குமப் பொட்டும் அதற்குச் சற்றுக் கீழே புருவ மத்தியில் ஜவ்வாதுப் பொட்டும் பெரிதாகக் காட்சியளித்தன. ஏதோ விசேஷங்களுக்குப் போகும் ஸில்க் ஜிப்பாவை அன்று போட்டிருந்தார். சொக்காயில் ஏதோ பழைய செண்டை அளவுக்கு மீறிப் போட்டிருந்ததால், அவர் உள்ளே நுழைந்ததும் ஓர் அழுகல் வாசனை ஸ்டேஷன் பூராவையும் கௌவிக் கொண்டது. டிப்டி சூப்பரின்டெண்டு அப்துல்லா கர்ச்சிப்பால் மூக்கை இறுக்கிப் பிடித்துக் கொண்டார். வராஹாச்சாரி தமது யோக வஸ்திரத்தால் மூக்கை அழுத்திக்கொண்டு ''சே சே'' என்று வாய்விட்டும் சொன்னார். தமது செண்டை இப்படி எல்லோரும் அவமதிப்பதைக் கண்ட ராஜபார்ட்டாரின் முகம் சுருங்கியது. ''மூக்கை யாரும் பிடித்துக்கொள்ள வேண்டாம். இது பாரிஸ் செண்டு!'' என்றார் ராஜபார்ட்டார்.

''சரி சரி; அப்படி உட்காரும்'' என்று எரிந்து விழுந்த டிப்டி, இன்ஸ்பெக்டருக்குப் பின்னால் சற்றுத் தூரத்திலிருந்த ஒரு நாற்காலியைச் சுட்டிக்காட்டினார். டிப்டியின் திருஷ்டி தம்மீது உஷ்ணமாக விழுந்ததும் சற்று அடங்கிய ராஜபார்ட்டார் தமக்குக் காட்டப்பட்ட நாற்காலியில் அமர்ந்தார்.

டிப்டி மேற்கொண்டு அழகண்ணனை விசாரிக்கத் தொடங்கி, ''இவர்தானே அந்த ராஜபார்ட் ராமலிங்கம்'' என்று கேட்டார்.

''ஆமாம்.''

''பட்டணத்துக்காரருக்கு இவர்தான் ஏஜெண்டா?''

''ஆமாம்.''

''சுந்தருக்கு வீட்டைப்பற்றிய தகவல் தெரியுமா?''

''தெரிந்திருக்க முடியாது.''

இங்கே ராஜபார்ட்டார் குறுக்கே புகுந்து, ''நன்றாகத் தெரியும்'' என்றார்.

அழகண்ணல் தமது முரட்டுப் பார்வையொன்றை ராமலிங்கத்தின்மீது நாட்டிவிட்டுப் பிறகு டிப்டியை நோக்கி, ''டிப்டி சார்! வீட்டைப்பற்றிய கதையைத் தெரிந்த யாரும் அதை வாங்க மாட்டார்கள். அது ராமலிங்கத்துக்குத் தெரியும். ஆகையால்தான் விக்கிரயத்தைப் பட்டணத்திலேயே காதும் காதும் வைத்த மாதிரி முடித்துவிட்டார்'' என்றார்.

ராஜபார்ட்டார் மீண்டும் குறுக்கிட்டு, ''டிப்டி சார்! அது சுத்தப் பொய்! சகல தகவல்களையும் நான் டாக்டருக்குக் கூறியிருக்கிறேன். வேண்டுமானால் அவரையே கேட்டுப் பாருங்கள்'' என்றார்.

டிப்டி சுந்தரை நோக்கினார். சுந்தர் மௌனமாயிருந்தான். டிப்டி ராமலிங்கத்தை நோக்கிக் கேட்டார்: ''உமக்கு சுந்தரை எப்படித் தெரியும்?''

''என் முதலாளி வீட்டுக்குப் போயிருந்தேன்.''

''யாரவர்?''

''பட்டணத்தில் இரும்பு வியாபாரம். கந்தசாமி கோயிலுக்கருகில் கடை; மயிலாப்பூரில் பங்களாவிலிருக்கிறார். அவர் பெயர் என் பெயர்தான்''.

''ரொம்ப விசேஷம். அந்த ராமலிங்கம் உம்மைக் கூப்பிட்டு அனுப்பியிருந்தாரா?''

''ஆம்''.

''எதற்கு?''

''நன்னிலத்தில் சில நிலங்கள் இருக்கின்றன; அவற்றை விற்பதற்கு. அதைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் சுந்தர் அங்கு வந்தார். கிராமத்தில் வீடு ஏதாவது இருக்குமா என்று கேட்டார். நான் மாடி வீட்டைப் பற்றிச் சொன்னேன். எங்கள் முதலாளி சம்மதப்படவில்லை. 'டாக்டர், உங்களுக்கு அது வேண்டாம்' என்று எச்சரிக்கையும் செய்தார்''.

''அதற்கு சுந்தர் என்ன சொன்னார்?''

''அந்த வீட்டை ஏன் வாங்கக் கூடாது என்று கேட்டார்.''

''உங்கள் முதலாளி காரணங்களைச் சொன்னாரா?''

''சொன்னார். ஆனால், அதற்கெல்லாம் சுந்தர் மசியவில்லை. அதைப் பிடிவாதமாக வாங்கினார். மிகவும் எச்சரித்த பிறகே வீட்டை அவருக்கு விற்றோம்''.

டிப்டி, சுந்தரை நோக்கித் திரும்பி, ''டாக்டர்! இதெல்லாம் உண்மையா?'' என்று விசாரித்தார்.

''உண்மைதான். வீட்டைப் பற்றிய சகல விவரங்களையும் அறிந்து கொண்டுதான் வாங்கினேன்'' என்றான் சுந்தர்.

''உங்களுக்குப் பிசாசுகளில் நம்பிக்கையில்லையா?''

''இல்லை; இருந்தாலும் பயமில்லை''.

''ஏன்?''

''உருவத்துடன் உள்ள மனிதப் பிசாசுகளையே பலவற்றைப் பார்த்திருக்கிறேன். அருவங்களைப் பற்றிப் பயப்படுவதில்லை.''

டிப்டி சூப்பரின்டெண்டு அப்துல்லா சிறிது நேரம் யோசித்துவிட்டு, பிறகு அழகண்ணனை விசாரிக்கத் தொடங்கினார்; ''சரி, மேற்கொண்டு உங்களுக்கும் உங்கள்

அண்ணன் மகளுக்கும் நடந்த கடிதப் போக்கு வரத்து விவரங்களைச் சொல்லுங்கள்'' என்றார்.

''நடந்த எல்லாவற்றையும் கடிதங்களில் எழுதினேன் முக்கியமாக...'' என்று பேச்சைச் சற்று இழுத்தார் அழகண்ணல்.

''தைரியமாகச் சொல்லுங்கள்'' என்றார் டிப்டி.

அழகண்ணலின் தைரியம் எங்கோ பறந்துவிட்டது. பரிதாபம் நிரம்பிய கண்களைச் சிவசங்கரம் பிள்ளையின் மீது திருப்பினார். அழகண்ணலின் மனத்தில் ஓடிய எண்ணங்களைப் புரிந்துகொண்ட சிவசங்கரம் பிள்ளை. ''அழகண்ணல், சும்மா சொல்லப்பா. நீதியை முன்னிட்டு எந்த உண்மையையும் மறைக்காதே'' என்றார்.

''அதுதான் சரி. பிள்ளைவாளுடைய நேர்மையை அறியாதவர்கள் இந்த வட்டாரத்தில் ஏது?'' என்று வராஹாச்சாரி சிலாகித்தார்.

டிப்டி, ''சரி சரி!'' என்று கூறி, ஒரு பார்வையும் பார்த்து, வராஹாச்சாரியை அடக்கிவிட்டு, மறுபடியும் அழகண்ணலை நோக்கி, ''உம்! விஷயத்தைச் சொல்லுங்கள்'' என்றார்.

''வேறொன்றுமில்லை, நமது பிள்ளைக்கு ஒரு மகள் இருக்கிறாள்...''

டிப்டியின் புருவங்கள் சற்று யோசனையின் மீது மேலே சென்றன. ''ஓகோ!'' என்று எதையோ அறிந்தவர்போல் கூறினார்.

''ஆமாம் ஸார்! அவள் பெயர் மோகனா. ரொம்பவும் அழகாயிருப்பாள்'' என்றார் அழகண்ணல்.

''அப்படியா!''

''ஆமாம்; அவள் சுந்தரை அடிக்கடி அவர் வீட்டில் சந்தித்து வந்தாள். தவறாக நினைக்க வேண்டாம். அது படித்த பெண். சைகிள்கூட விடும். இருந்தாலும் செண்பகத் தோட்டம் கிராமம்.

முன்னேற்றக் கருத்துக்களே இல்லாத பட்டிக்காடு... ...'' என்று சொல்லி வராஹாச்சாரியை வெறுப்புடன் ஒரு முறை நோக்கிவிட்டு, ''அந்த ஹரில் வீண் வம்பைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்?'' என்றார் அழகண்ணல்.

''அந்த வம்பைப் பற்றியும் எழுதினீர்களாக்கும்?'' என்று டிப்டி கேட்டார்.

''அதுமட்டுமல்ல; இருவருக்கும் விவாகம் நிச்சயமாகும் போலிருந்தது. அதைப்பற்றியும் எழுதினேன். ஆனால், அது... ...''

''என்ன ஆயிற்று?''

''முறிந்து விட்டது.''

''ஏன்?''

''பட்டணத்துக்குப் போயிருந்த ராமலிங்கம் சுந்தர் விவாகத்தைப் பற்றி அறிந்து வந்து சிவசங்கரம் பிள்ளையைக் கலைத்து விட்டதாக ஹரில் பேசிக் கொண்டார்கள்.''

இதைக் கேட்டதும் துள்ளி எழுந்த ராஜபார்ட்டார், ''பொய்! சுத்தப் பொய்! நான் ஏன் கலைக்க வேண்டும்.'' என்று கூவினார்.

அழகண்ணலும் விடவில்லை. ''உமது பிள்ளைக்கு அந்தப் பெண்ணைக் கட்டத்தான்'' என்று சீறிவிட்டு, ''டிப்டி சார்! இவர் பிள்ளைக்கும் மோகனாவுக்கும் நிச்சயம்கூட ஆகிவிட்டது'' என்றார் அழகண்ணல்.

ராஜபார்ட்டார் இடிந்து போய் உட்கார்ந்து விட்டார். சிவசங்கரம் பிள்ளையின் முகத்தில் உணர்ச்சி ஏதும் தெரியவில்லை. வெறும் கல்லாயிருந்தது அவர் முகம். சுந்தர் மௌனமே உருவாக உட்கார்ந்திருந்தான்.

டிப்டியும் தீவிர யோசனையில் இறங்கினார். நீண்ட நேரம் ஏதோ யோசித்துவிட்டு அத்துடன் அன்றைய விசாரணையை

நிறுத்தி விட்டார். அந்த விசாரணைக்கு வந்திருந்த ஒவ்வொரு வரும் ஏதேதோ யோசித்தவண்ணம் செண்பகத் தோட்டத்துக்குக் கிளம்பிச் சென்றனர்.

நான்கு நாட்கள் பறந்தன. செண்பகத் தோட்டம் நிம்மதியிழந்து கிடந்தது. ஒவ்வொரு வீட்டிலும் சினிமா ஸ்டார் கொலையைப்பற்றித் தர்க்கம் நடந்து கொண்டிருந்தது. அந்தக் கொலையே அந்த ஊருக்குப் பெரிய அதிர்ச்சி; அதைவிடப் பெரிய அதிர்ச்சியொன்றும் ஐந்தாவது நாள் விளைந்தது. அந்த அழகிய கிராமத்திலே ஐந்தாவது நாள் மாலை ஐந்து மணி இருக்கும். இன்ஸ்பெக்டர் ஜெயராஜ் போலீஸ் கார் ஒன்றில் நாலைந்து கான்ஸ்டபிள்களுடன் ராஜபார்ட்டாரின் வீட்டு வாசலில் போய் இறங்கினார். அடுத்த சில விநாடிகளில் வரதப்பிள்ளையின் கைகளில் விலங்கை மாட்டிக் காரில் தூக்கித் தள்ளினார். வாயிலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு கதறிய வள்ளியம்மையைச் சிறிதும் லட்சியம் செய்யாமலே போலீஸ் மோட்டார் பேரளத்தை நோக்கிப் பறந்தது.

29. டிப்டியின் குற்றச்சாட்டு

இன்ஸ்பெக்டர் ஜெயராஜ் வரதப்பிள்ளையை கைது செய்து போலீஸ் ஜீப்பில் தூக்கிச் சென்றபோது ராஜபார்ட்டார் வீட்டில் இல்லை. ஒரு முக்கியக் காரியமாக வாளூருக்குச் சென்றிருந்த அவர், திரும்பி வந்ததும், வீடு இருந்த நிலையைக் கண்டு திக்பிரமையடைந்தார். தெருக்கோடியில் வரும்போது வள்ளியம்மையின் பெரிய அழுகைக் குரல் அவருக்கு ஸ்பஷ்டமாகக் கேட்டது. போதாக் குறைக்கு உதவிக் கமிஷனர் வராஹாச்சாரியும் சிறு கும்பலுடன் வாசலில் நின்று கொண்டிருந்தார். என்ன நேரிட்டு விட்டதோ என்ற திகிலில் தளர்ந்த நடையில் வீட்டை அணுகிய ராஜபார்ட்டாரை உள்ளே

நுழைய விடாமல் வாசலிலேயே குசலப்பிரச்சனம் செய்ய ஆரம்பித்த வராஹாச்சாரி, ''என்ன ராமலிங்கம், உனக்கு இந்தக் கஷ்டம் வரவேண்டாம்'' என்று மெள்ள விஷயத்தை அவிழ்க்கலானார்.

சம்பாஷணையை இப்படி வராஹாச்சாரி துவங்கியதற்கும், ''என் செல்வமே! நீ ஒருத்தருக்கும் ஒரு தீங்கும் செய்யலையே! உனக்கா இந்த கதி வரணும்!'' என்று வள்ளியம்மை உள்கூடத்திலிருந்து அலறியதற்கும் பொருத்தம் அதிகமாக இருக்கவே, வெலவெலத்துப் போன ராஜபார்ட்டார், ''ஏங்க கமிஷனர் ஸார், என் பிள்ளைக்கு என்ன ஸார்?'' என்று கேட்டார்.

''அப்படி ஒன்றும் பிரமாதமாக நடந்துடலை ராமலிங்கம். எல்லாம் அந்தப் பயல் சுந்தராலேதான். எந்த வேளையிலே அவன் இந்த ஊருக்கு வந்தானோ-!'' என்று அலுத்துக் கொண்டார் வராஹாச்சாரி.

''ஏன்? அவன் என்னாங்க செஞ்சான்? என் பையனைக் கொன்னுட்டானா?'' என்று கேட்ட ராமலிங்கம் பிள்ளை, ''ஐயோ வரதா!'' என்று தலையில் கையை வைத்துக் கொண்டு உள்ளே நுழைய முயன்றார்.

வராஹாச்சாரி அப்பொழுது ஸ்நானம் செய்து மடியாயிருந்ததால், ''டேய்! ராஜபார்ட்டாரைப் பிடித்து நிறுத்து'' என்று பக்கத்திலிருந்தவர்களுக்குக் கட்டளையிட்டு, ''ஏம்பா ராமலிங்கம்! உன் கற்பனை ஒரேயடியா ஓடறதே, ஜெயிலில் இருக்கிற சுந்தர் உன் பையனை எப்படிச் சுட முடியும்?'' என்று கேட்டார்.

பையனுக்குப் பேராபத்து ஒன்றுமில்லையென்பதை யறிந்த ராஜபார்ட்டார் சிறிது நிதானத்துக்கு வந்து, ''சுவாமி! அப்படியானால் பையனுக்கு என்னதான் நேர்ந்தது?.' என்று வினவினார்.

''ஒன்றுமில்லை ராமலிங்கம்; போலீசார் பிடித்துக் கொண்டு போயிருக்கிறார்கள்'' என்று சொல்லிய வராஹாச்சாரியார், அந்த வேலை தமக்குப் புதிதல்ல என்பதைச் சுட்டிக் காட்ட ஒரு புன்முறுவலும் செய்தார்.

''என்ன! என் மகனைப் போலீஸார் பிடித்துக் கொண்டு போய்விட்டார்களா?'' என்று பதறினார் ராஜபார்ட்டார்.

''ஆமாம்'' என்றார் வராஹாச்சாரியார்.

''எதற்காகப் பிடித்துக்கொண்டு போயிருக்கிறார்கள்?''

''எல்லாம் சினிமா ஸ்டார் கொலை விஷயமாகத்தான் இருக்கும்''

''சினிமா ஸ்டார் கொலை விஷயமா? அதற்கும் என் பையனுக்கும் என்ன சம்பந்தமிருக்க முடியும்?''

''ஒன்றுமிருக்காது.''

''இல்லையென்றால் என் மகனை ஏன் கைது செய்ய வேண்டும்?''

''அதைக் கண்டுபிடுப்போம், வா. சீக்கிரம் ஆகாரத்தைப் பண்ணிட்டுப் பேரளம் போவோம்.''

''இந்த விஷயத்திலே நீங்கதான் உதவி செய்யணும், ஸ்வாமி. வரதப்பிள்ளை...''

''ஒண்ணுந் தெரியாதவன்; அசடு''

''அவனைப் போய் கைது செய்யலாமா?''

''கூடாததுதான். வரவர டிபார்ட்மெண்டு கெட்டுப் போச்சு. யாரென்ன செய்யறதப்பா?'' என்ற வராஹாச்சாரி, தாமிருந்த காலத்தில் போலீஸ் டிபார்ட்மெண்ட் எவ்வளவு நன்றாக அலுவல் புரிந்தது என்பதைச் சுட்டிக் காட்டினார்.

ஆனால், அது விஷயத்தில் அதிகச் சிரத்தையைக் காட்டாத ராஜபார்ட்டார், ''ஸ்வாமி! இதோ நான் கிளம்பி வருகிறேன்.

நீங்கள் தயவுசெய்து கூடவந்து பையனைக் காப்பாத்தணும்'' என்று கைகூப்பி, வேண்டிக் கொண்டு வள்ளியம்மையைச் சமாதானப்படுத்த உள்ளே நுழைந்தார்.

அது அத்தனை சுலபமாக முடியவில்லை ராஜபார்ட்டாருக்கு. கணவனைக் கண்டதும் பெரிய அலறலாக அலற ஆரம்பித்தாள் வள்ளியம்மை. அவள் கூச்சலைக் கேட்ட ராஜபார்ட்டார், அரிச்சந்திர நாடகத்தின் மயான காண்டத்தில் சந்திரமதிகூட இவ்வளவு நன்றாகப் புலம்ப முடியாது என்று நினைத்தாலும்கூட, அதை வெளியில் காட்டாமல், ''ஏண்டி இப்படி ஒரேயடியாகக் கூச்சல் போட்டு ஊரைக் கூட்டியிருக்கே?'' என்று சற்றுக் கடுமையாகவே கேட்டார்.

''என்னாங்க இப்படிக் கேக்கிறீங்க? என் மவனைப் போலீஸார்... ... ஹீ... ...ஹீ'' என்று மீண்டும் அழுதாள் வள்ளியம்மை.

''அடசும்மா இருங்கறேன்! போலீஸார் என்ன, கொக்கோ! இன்னும் கொஞ்ச நேரத்திலே நம்ப பையனைக் கொண்டாந்து உம் முன்னாலே நிறுத்துறேன் பாரு!'' என்று மீசையைத் தடவினார் ராஜபார்ட்டார்.

ஆனால் அவர் சாமர்த்தியத்தில் அதிக நம்பிக்கையில்லாத வள்ளியம்மை, ''ஐயோ! என் மவனைப் போலீஸார் விடுவாங்களா?'' என்றாள் கண்களைத் துடைத்துக் கொண்டே.

''விடாதே என்னவாம்? அதுவும் நம்ப கமிஷனரய்யா வேறே என்னுடன் வராங்க'' என்று விஷயத்தை விளக்கினார் ராஜபார்ட்டார்.

அப்பொழுதுதான் மெள்ளத் தைரியம் வந்தது வள்ளியம்மைக்கு. ராஜபார்ட்டாரால் கையாலாகா விட்டாலும் உதவிக் கமிஷனர் ஏதாவது செய்வார் என்ற நம்பிக்கையில் அழுகையை நிறுத்திக் கூடத்துத் தூணில் சாய்ந்து கொண்டாள்.

அதற்குமேல் ஆலசியம் செய்தால் மீண்டும் வள்ளியம்மையின் பிரலாபம் கிளம்புமென்ற பயத்தால் விடுவிடு என்று புழக்கடைப் பக்கம் சென்ற ராஜபார்ட்டார் அதிதுரிதமாக ஸ்நானாபானாதிகளை முடித்துக்கொண்டு பேரளத்துக்குக் கிளம்பினார்.

வராஹாச்சாரியும் அவரும் பேரளம் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தபோது வெயில் நன்றாக ஏறிவிட்டதானாலும், கொலையைப் பற்றிய விசாரணையை மும்முரமாக நடத்திக் கொண்டிருந்தார் டிப்டி அப்துல்லா. அவர் முன்னால் நின்று நடுங்கிக்கொண்டிருந்த வரதப் பிள்ளை ராஜபார்ட்டானரைக் கண்டதும் போலீஸ் ஸ்டேஷனே அதிரும்படியாக, ''அப்பா!'' என்று பெரிதாகக் கூச்சல் போட்டான்.

ராஜபார்ட்டாரும் கன்றைக் கண்ட மாடுபோல் அவன் இருந்த இடத்திற்குத் தாவிப் பிள்ளையை அணைத்துக் கொண்டார். ராஜபார்ட்டார் கண்களில் நீர் வழிந்தோடி அவருடைய பெரிய மீசையைச் சொட்டச் சொட்ட நனைத்து விட்டதைக்கண்ட போலீஸ் ஜவான்கள்கூட பிள்ளையிடம் சற்று அநுதாபமே கொண்டார்கள். ஆனால் கடமையிலேயே கருத்துள்ள டிப்டி மாத்திரம் ஜவான்களைக் கடுமையாக முறைத்துப் பார்த்து, ''டேய் கைதியிடமிருந்து அந்த ஆளை விலக்கு. அவருக்கு உட்கார ஒரு குறிச்சி போடு'' என்று உத்தரவிட்டார்.

டிப்டியின் மூர்க்கமான குரலையும் கடுமையான உத்தரவையும் கேட்ட வராஹாச்சாரியின் மனம்கூடப் படாத பாடு பட்டது. 'அட! என்ன கிராதகனா யிருக்கான் இந்த சாயபு! நான் கூடத்தான் அந்தக் காலத்திலே போலீஸ் உத்தியோகம் பண்ணினேன். ஆனாலும் இப்படியா ஜனங்களை விரட்டினேன்?'' என்று மனத்துக்குள்ளேயே அலுத்துக்கொண்ட

வராஹாச்சாரி டிப்டியிடம் குறுக்கிட்டு, ''மிஸ்டர் அப்துல்லா இவர்...'' என்று ஏதோ ஆரம்பித்தார்.

''இந்தப் பையனின் தந்தையை எனக்குத் தெரியும்'' என்ற டிப்டியின் குரலில், ''நீ சும்மா இரு'' என்றொரு கட்டளையும் வராஹாச்சாரியை நோக்கிப் பறந்தது.

ரிடையரான மாத்திரத்தில் போலீஸ் டிபார்ட்மெண்டில் எத்தனை தூரம் மதிப்புக் குறைந்து விடுகிறதென்பதை உணர்ந்துகொண்ட வராஹாச்சாரியும் கப்சிப்பென்று வாயை மூடிக்கொண்டு தமக்குப் போடப்பட்ட ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். ராஜபார்ட்டாருக்கும் நாற்காலியொன்று போடப்பட்டது. ஆனால் வரதப்பிள்ளையை மட்டும் நிறுத்தியபடியே விசாரித்தார் டிப்டி.

''வரதப்பிள்ளை! உண்மையைச் சொல்கிற வரையில் உனக்கு எந்த ஆபத்துமில்லை!'' என்று உறுதி கூறிய டிப்டி, இன்ஸ்பெக்டர் ஜெயராஜ் நீட்டிய கைத்துப்பாக்கியை அவனிடம் நீட்டி, ''இதோ பார்! இது யாருக்குச் சொந்தம்?'' என்று கேட்டார்.

கைத்துப்பாக்கியைக் கண்டதும் ராஜபார்ட்டாரின் உடல் ஒரு முறை ஆடியது. அது, தான் நாடகமாடவும் கொக்கு சுடவும் வாங்கி வைத்திருந்த துப்பாக்கியென்பதையும், அதைக்கொண்டு முன்பொரு முறை வரதப்பிள்ளை மாடு ஒன்றைச் சுட்டுவிட்டதையும் தொகுத்துப் பார்த்த ராமலிங்கம்பிள்ளையின் மனத்தில் பலவித சந்தேகங்கள் எழுந்தாடின! ஒரு வேளை தமது அசட்டு மகனே சினிமா ஸ்டாரைத் தெரியாமல் சுட்டு விட்டானோ என்ற பயம் வேறு அவரைப் பிடித்து வாட்டவே, நாற்காலியின் கைகளைச் சற்று இறுகப் பிடித்துக்கொண்டார். வராஹாச்சாரிக்கும் மெள்ள மெள்ள அத்தகைய ஒரு சந்தேகம் எழ ஆரம்பித்தது. 'கொலைக்கும் இந்த வரதப்பிள்ளைக்கும் ஏதோ சம்பந்தமிருக்கிறது. இல்லாவிட்டால் போலீசார் கைது செய்யும்

அளவுக்குப் போகமாட்டார்கள்' என்று வராஹாச்சாரி நினைத்தார். அந்த நினைப்புக்கு ஆதாரம் இருப்பதை டிப்டியின் அடுத்த கேள்விகள் சந்தேகமற நிரூபித்தன.

கைத்துப்பாக்கி யாருக்குச் சொந்தம் என்ற தன் முதல் கேள்விக்குப் பதில் ஏதும் சொல்லாமல் நின்றிருந்த வரதப்பிள்ளையை நோக்கி, ''உம்! பதில் சொல். இந்தத துப்பாக்கி யாருடையது?'' என்று மிரட்டினார் டிப்டி.

வரதப்பிள்ளைக்குப் பதில் ராஜபார்ட்டாரே பதில் சொல்லத் தொடங்கி, ''அது என் கைத்துப்பாக்கிங்க. ஞான சௌந்தரி நாடகத்தில் நான் பிலேந்திரனாக நடிப்பது வழக்கம். இதைப்பற்றி யாரைக் கேட்டாலும் சொல்வார்கள். பிலேந்திரன் வேட்டைக்குப் போகும்போது இந்தக் கைத்துப்பாக்கியைத்தான் எடுத்துச் செல்வது வழக்கம்'' என்று மேலும் ஏதோ சொல்லப் போனார். ஆனால், டிப்டியின் கோப விழிகள் அவர் வார்த்தைகளை மேலே ஓடவிடாமல் செய்தன.

''மிஸ்டர் ராமலிங்கம்! இது போலீஸ் ஸ்டேஷன். உம்மை விசாரணை செய்யும் சமயத்தில் நீர் பேசலாம். சற்றுச் சும்மா இரும்!'' என்ற சுடுசொற்கள் டிப்டியின் வாயிலிருந்து வெளிவந்தன. ராஜபார்ட்டாரை இப்படி அடக்கியபின் வரதப்பிள்ளையை நோக்கிய டிப்டி. ''என்ன தம்பீ, பயப் படாமல் பதில் சொல்!'' என்று அன்பாகவே பேசினார்.

''அது... அது... அப்பாவுது'' என்று குளறினான் வரதப்பிள்ளை.

''இதை நீ அடிக்கடி எடுக்கிறதுண்டா?''

''உண்டு''

''எதற்கு?''

''தமாஷா கொக்குச் சுடப் போவேன்.''

''ஓகோ! தமாஷா கொக்கை மாத்திரந்தான் சுடுவாயா? இல்லை, மாடு மனுஷன் எல்லாவற்றையும் சுடுவதுண்டா?''

டிப்டியின் இந்தக் கேள்வி வராஹாச்சாரிக்குக் கோபத்தைக் கிளறிவிடவே, ''ஐ அப்ஜெக்ட்! இதை நான் ஆட்சேபிக்கிறேன்!'' என்று கூறினார்.

டிப்டியின் கண்கள் மெள்ள வராஹாச்சாரி மீது திரும்பின. ''நீர் யார் ஆட்சேபிப்பதற்கு?'' என்று வினவினார் டிப்டி.

உலகமே சுழல்வது போலிருந்தது வராஹாச்சாரிக்கு. இந்த மாதிரி பல டிப்டிகளைக் கட்டி அரசாண்ட தம்மை அப்துல்லா அப்படிக் கேட்டதை நினைத்து உள்ளம் வெடித்துப் போனார். ஆகையால் அடுத்து வந்த சொற்களில் உஷ்ணம் பரிபூர்ணமா யிருந்தது.

''நானும் இந்த டிபார்ட்மெண்டில் வேலை செய்தவன் தான். ஆனால், இந்த மாதிரி குற்றத்தை ஸ்தாபிக்கும் படியான கேள்விகளைக் கேட்பது கிடையாது'' என்றார் வராஹாச்சாரி டிப்டியைப் பார்த்து.

''வராஹாச்சாரியார்! நீ போலீஸில் இருந்த காலம் வேறு; இது வேறு! இப்பொழுது சுதந்திர சர்க்கார் நடக்கிறது. உண்மையைக் கண்டுபிடிப்பதுதான் இப்பொழுது முக்கியமே தவிர, வீண் ஜபர்தஸ்தும் நாள் கணக்கில் விசாரணையைக் கடத்தும் சம்பிரதாய முறைகளும் முக்கியமல்ல. அது கிடக்கட்டும்; நீர் உதவிக் கமிஷனர்தானே?''

''ஆமாம்.''

''இந்த ரிவால்வரைப் பாரும்.''

வராஹாச்சாரி ரிவால்வரைப் பிரித்து ஐந்து ரவைகள் பிடிக்கும் சுழலில் இரண்டு அறைகள் காலியாயிருப்பதைக் கண்டார். ''இந்த இரண்டு ரவைகளும் எங்கே?'' என்று வினவினார் வராஹாச்சாரி.

''சினிமா ஸ்டார் அகல்யாவின் உடலில் இருக்கின்றன'' என்று நிதானமாகப் பதில் சொன்னார் டிப்டி.

வராஹாச்சாரிக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. அகல்யாவைச் சுட்டது வரதப்பிள்ளைதானென்பதற்குத் திட்டமான சாட்சியம் போலீசாரிடம் சிக்கி விட்டதைக் கண்டு பரிதாபம் நிரம்பிய விழிகளை ராஜபார்ட்டார் மீது திருப்பினார்.

30. சில ருசுக்கள்

துப்பாக்கியைப் பிரித்துப் பார்த்ததும் வராஹாச்சாரியின் விழிகளில் உதயமான சந்தேகத்தையும் அந்த சந்தேகத்தோடு பரிதாபத்தையும் பிரதிபலிக்கும்படியான பார்வையொன்றை அவர் ராஜபார்ட்டாரின் மீது திருப்பியதையும் கண்ட டிப்டி வெற்றி ததும்பிய புன்னகை யொன்றை வராஹாச்சாரி மீது வீசினார். டிப்டியின் புன்சிரிப்புக்குக் காரணத்தை உணர்ந்து கொண்ட வராஹாச்சாரி தமது அநுபவத்தையும் டிப்டிக்குக் காட்ட இஷ்டப்பட்டவராய், ''இந்தக் கைத்துப்பாக்கியைத்தானே இன்ஸ்பெக்டர் ஜெயராஜ்; டாக்டர் சுந்தரத்திடமிருந்து கைப்பற்றினார்?'' என்று வினவினார்.

மாஜி உதவிக் கமிஷனரின் சாமர்த்தியமான கேள்வியை டிப்டி புரிந்து கொண்டாரானாலும், தமது இதழ்களில் உதயமான வெற்றிப் புன்னகையைச் சிறிதும் மாற்றாமலே, ''மிஸ்டர் வராஹாச்சாரியார்! இது சுந்தரிடமிருந்து கைப்பற்றிய கைத்துப்பாக்கிதான். ஆனால், துப்பாக்கியின் அடிப்பாகத்திலுள்ள நம்பரைக் கவனியுங்கள்'' என்றார்.

வராஹாச்சாரி துப்பாக்கியின் அடிபாகத்தைத் திருப்பி ''6233'' என்று முணுமுணுத்தார்.

''எஸ்'' என்று அதை ஆமோதித்த டிப்டி, ''இப்பொழுது பாரும்; இதோ லைசெஸன்ஸில் காணப்படும் நம்பர், துப்பாக்கி விவரம், பெயர் முதலியவற்றை'' என்றார்.

''ஆம், ஆம்! நம்பர்கள் பொருந்துகின்றன. பெயரும்...'' என்று இழுத்தார் வராஹாச்சாரி.

''ராமலிங்கத்தின் பெயர்'' என்று டிப்டி வாசகத்தை முடித்தார்.

''இதிலிருந்து என்ன முடிவு கட்டியிருக்கிறீர்கள்?'' என்று வராஹாச்சாரி வினவினார்.

''எந்த முடிவையும் கட்டவில்லை. ஆனால், ஒரு குற்றம் நடக்கும்போது, கிடைக்கும் ருசுக்களைச்சரியான படிதொகுத்துக் குற்றத்தைச் சரியான நபர்மீது சாட்டிக் கோர்ட்டில் நிறுத்துவது போலீசாரின் கடமை'' என்றார் டிப்டி.

கேவலம் ஒரு டிப்டி சூப்பரின்டெண்டு நேற்று வந்தவன், போலீசாரின் கடமையைப்பற்றித் தனக்கு எடுத்துச் சொல்கிறானே என்பதால் வராஹாச்சாரி மிகுந்து கோபமடைந்தாலும், தமது கோபம் செல்லுபடியாகும் காலம் மலையேறிவிட்டதை உணர்ந்து, மிகச் சாதாரணமான குரலிலேயே பேசத் தொடங்கி, ''வாஸ்தவம் டிப்டி ஸார்! ஆனால், இந்தக் கொலைக்கும் வரதப்பிள்ளைக்கும் என்ன சம்பந்தம் என்பது புலனாக வில்லையே. கொலை செய்ததாகத் தான் சுந்தரம் ஒப்புக் கொள்கிறானே?'' என்று கேட்டார்.

''பலர் பல காரணங்களுக்காகக் குற்றத்தைத் தங்கள் மீது சுமத்திக்கொள்கிறார்கள். அவர்கள் சொல்வதை மட்டும் வைத்துக்கொண்டு குற்றத்தை நிர்ணயிக்க முடியாது. குற்றம் சம்பந்தப்பட்ட பல ருசுக்களையும் ஆராய்ந்தே போலீஸார் ஒரு முடிவுக்கு வர வேண்டும். இந்தக் கேஸில் எனக்குச் சில சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கின்றன'' என்றார் டிப்டி.

''என்ன? சந்தேகமா?'' என்று வராஹராச்சாரி வினவினார்.

''முதன் முதலில் இந்தக் கைத்துப்பாக்கி சுந்தருடையது என்று நினைத்தோம். ஆனால், லைஸென்ஸையும் துப்பாக்கி நம்பரையும் பார்த்த பிறகு இது ராமலிங்கத்தினுடையது என்று தீர்மானித்தோம். இவருடைய கைத்துப்பாக்கி சுந்தரின் கைக்கு எப்படிப் போயிற்று? சுந்தருக்கு ராமலிங்கம் கைத்துப்பாக்கியை கடனாகக் கொடுத்தாரா? இல்லை, சுந்தர் கைத்துப்பாக்கியை ராமலிங்கத்துக்குத் தெரியாமல் எப்படியாவது எடுத்துக் கொண்டாரா? இத்தகைய சந்தேகங்கள் எழுந்தன. அதைப்பற்றிக் கிராமத்தில் விசாரித்தோம். மாடு மேய்க்கும் பையன்கள் இருவர், வரதப்பிள்ளை கைத்துப்பாக்கியுடன் அதே இரவில் குளத்துப் பக்கமாகப் போனதாகச் சொன்னார்கள்'' என்று விளக்கினார் டிப்டி.

''யாரவன்கள்? என் பையன் அந்தப் பக்கமே போகலை சார். இருட்டுன்னாலே அவனுக்குப் பயமாச்சே!'' என்று கெஞ்சினார் ராஜபார்ட்டார்.

டிப்டி ராஜபார்ட்டாரை ஒரு விநாடி உற்றுப் பார்த்து விட்டுக் கேட்டார்: ''சரி மிஸ்டர் ராமலிங்கம்! கூத்து நடந்த அன்று நீர் எங்கிருந்தீர்?''

''அம்மன் கோயிலுக்கருகில் கூத்தை நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.''

''உமது மனைவி?''

''அவளும் கூத்துக்கு வந்திருந்தாள்.''

''பையன்?''

''அவன் எப்பொழுதும் இரவில் கண் விழிக்க மாட்டான். வீட்டிலேயே படுத்துத் தூங்கிவிட்டான்.''

''சரி, இதைப் பாரும்!'' என்று டிப்டி மேஜை டிராயரிலிருந்து ஒரு மோதிரத்தை எடுத்து ராஜபார்ட்டாரிடம் நீட்டினார்.

ராஜபார்ட்டார் மோதிரத்தை உற்றுப் பார்த்தார். டிப்டி, ராஜபார்ட்டாரின் மீது வைத்த கண்ணை வாங்காமலே பார்த்துக் கொண்டிருந்தார். மோதிரத்தின் அடியைக் கவனித்ததும் ராஜபார்ட்டாரின் முகத்தில் கிலி துள்ளிக் குதித்ததைக் கண்ட டிப்டி. ''மிஸ்டர் ராமலிங்கம்! மோதிரத்தின் அடியில் வெட்டப்பட்டுள்ள 'வ' என்ற எழுத்து யாரைக் குறிக்கிறது?'' என்று விசாரித்தார்.

''என் மகன் வரதப்பிள்ளையைத்தான். இந்த மோதிரத்தை நான் செய்து போட்டேன்'' என்று மெள்ள உண்மையைக் கக்கினார் ராமலிங்கம்.

''இந்த மோதிரம் கொலையுண்ட இடத்திலிருந்து கிடைத்தது'' என்று கூறிய டிப்டி வராஹாச்சாரியையும் வரதப்பிள்ளையையும் மாறி மாறிப் பார்த்தார். வராஹாச்சாரிக்கு மட்டுமின்றி ராஜபார்ட்டாருக்கும் நிலைமை தெள்ளென விளங்கிவிட்டது. ராஜபார்ட்டார் உள்ளம் புத்திர வாத்ஸல்யத்தாலும் கோபத்தாலும் துடிக்க ஆரம்பிக்கவே, அவர் வரதப்பிள்ளையைக் கொலைப் பார்வையாகப் பார்த்து, ''டேய் வரதா! உண்மையைச் சொல். இந்தத் துப்பாக்கியை எடுத்துண்டு தாழைக்காட்டுப் பக்கம் போனாயா?'' என்று கேட்டார்.

''போனேம்ப்பா'' என்று அழுதான் வரதப்பிள்ளை.

''மடப்பயலே! இதை எடுக்காதேடா எடுக்காதேடா என்று எத்தனை தடவை மாரடிச்சிண்டிருக்கேன்?''

''ஆமாம்ப்பா!''

''பின்னே ஏண்டா எடுத்தே களுதே?'' என்று கூவிக் கொண்டு வரதப்பிள்ளையை அடிக்க ஓடினார் ராஜபார்ட்டார்.

டிப்டி மாத்திரம் கடுமையான பார்வையொன்றை அவர் மீது திருப்பி, ''மிஸ்டர் ராமலிங்கம்!'' என்று அதட்டியிருக்கா விட்டால், அந்தப் போலீஸ் ஸ்டேஷனிலேயே வரதப்

பிள்ளையின் முதுகுத்தோல் பிய்ந்து போயிருக்கும். டிப்டியால் தடுக்கப்பட்டபடியால் ராஜபார்ட்டார் வரதப் பிள்ளையின் மீது கையை வைக்காவிட்டாலும் பார்வையால் அவனைச் சுட்டார். 'வீட்டுக்கு வா, தோலை உரிச்சு உப்பைத் தடவறேன்' என்ற சொற்கள் அவருடைய பார்வையில் திட்டமாகத் தெரிந்தன. தகப்பனுடைய பார்வையைக் கண்ட வரதப்பிள்ளைக்கு வீட்டுக்குப் போய்த் தகப்பனிடம் உதைபட்டுச் சாவது நல்லதா. அல்லது போலீஸ் ஸ்டேஷனில் நிம்மதியாக அடைபட்டுக் கிடப்பது நல்லதா என்ற சந்தேகம் உண்டாகவே, அவன் தகப்பனாரையும் டிப்டியையும் மாறி மாறிப் பார்த்தான்.

நிலைமையை நன்றாக உணர்ந்துகொண்ட டிப்டி வரதப்பிள்ளையிடம் சிறிது அநுதாபம் காட்டியே பேசத் தொடங்கி, "மிஸ்டர் ராமலிங்கம்! கொஞ்சம் பொறுமையுடன் இருங்கள். உங்களைக் கேட்காமல் வரதப்பிள்ளைதுப்பாக்கியை எடுத்தது தவறுதான். அந்தச் சிறு தவறைப் பற்றிக் கவனிக்க இது சமயமல்ல. இப்பொழுது அவன்மீது சுமத்தப்படுவது பெரும் குற்றம். அதை முக்கியமாகப் பாருங்கள்!" என்றார்.

"மாடி வீட்டுத் தம்பிதான் குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டானே" என்றார் ராஜபார்ட்டார்.

"உண்மைதான் மிஸ்டர் ராமலிங்கம்! ஆனால், வழக்கு பூர்த்தியாக அது மட்டும் போதாது. சுந்தர் குற்றத்தை ஒப்புக் கொண்டிருப்பது வாஸ்தவம். சாட்சியங்களும் அவருக்கு எதிராக நிரம்ப இருக்கின்றன. ஆனால், அதே சமயத்தில் வரதப் பிள்ளைக்கு எதிராகவும் சாட்சியங்கள் கிடைத்திருக்கின்றன. இரண்டு மாட்டுக்காரப் பையன்களின் வாக்கு மூலம், கொலை நடந்த இடத்தில் கிடைத்திருக்கும் உமது பையனின் மோதிரம், உமது பெயர் வெட்டப்பட்டுள்ள கைத்துப்பாக்கி எல்லாம் சந்தேகத்தைக் கிளப்புகின்றன. சினிமா நட்சத்திரம் அகல்யா சுடப்பட்டது உமது துப்பாக்கியால் என்பதும் நினைவிருக் கட்டும்" என்றார் டிப்டி.

''கடைசியில் என்னதான் முடிவு?'' என்று கேட்டார் வராஹாச்சாரி.

''வரதப்பிள்ளையும் லாக்கப்பில்தான் இருக்க வேண்டும்.''

''இந்தத் துப்பாக்கி எப்படிக் கிடைத்ததென்று சுந்தரத்தை விசாரித்தீர்களா?''

''இல்லை; இந்தத் துப்பாக்கி சம்பந்தமான தகவல் கிடைப்பதற்குள் சுந்தரத்தை நன்னிலம் ஸப் ஜெயிலுக்கு அனுப்பிவிட்டேன். ஆனால் அதைப்பற்றி விசாரித்துப் பார்க்கும்படி ரிப்போர்ட்டும் அனுப்பியிருக்கிறேன்.''

''ரிப்போர்ட் வரும் வரையில் வரதப்பிள்ளையை ஜாமீனில் விட முடியுமா?'' என்று கேட்டார் வராஹாச்சாரியார்.

''வராஹாச்சாரியார்! நீங்களும் இந்த இலாகாவில் வேலை பார்த்ததாகச் சொல்லுகிறீர்கள். கொலைக் கேஸில் ஜாமீனில் விடுதலை செய்வதுண்டா?'' என்று பதில் கேள்வி கேட்டார் டிப்டி.

இவ்வளவுக்குப் பிறகு வராஹாச்சாரியும் ராஜபார்ட்டாரும் தோல்வியுடனேயே கிராமத்துக்குத் திரும்பினார்கள். வரதப்பிள்ளையைச் சில மணி நேரத்தில் கொண்டு வந்து நிறுத்துவதாகச் சபதம் செய்துபோன தன் கணவன் வெறுங்கையுடன் திரும்பி வந்ததைக் கண்ட வள்ளியம்மை, ராஜபார்ட்டாருக்கு சகஸ்ரநாம அர்ச்சனை செய்ய ஆரம்பித்துப் பெரிய ஒப்பாரி வைத்தாள். இரண்டு நாட்களுக்கு வீட்டில் ராஜபார்ட்டார் பட்ட அவதிக்குக் கணக்கே இல்லை. வராஹாச்சாரிக்கும் வெளியில் தலை காட்ட முடியவில்லை. அவரை அதிகச் செல்வாக்குள்ளவர் என்று நினைத்துக் கொண்டிருந்த கிராமத்து ஜனங்களுக்கு அவர் சுத்த வெத்து வேட்டென்று தெரிந்ததும் அவரைப் பற்றிப் பலவிதமாகப்

பரிகசித்துப் பேச ஆரம்பித்தார்கள். அவர் பெருமாள் குளத்துக்குத் தீர்த்தமாடப் போனபோதும் வந்தபோதும் கிராமவாசிகள் அவரைப் பார்த்து நகைத்தார்கள். பிற்பகலில் குருக்களுடன் சீட்டாடப் போன போது குருக்கள் கூட அவரைப் பார்த்து, ''என்ன ஐயங்கார் ஸ்வாமி! பேரளம் போன காரியம் பலிக்கலை போலிருக்கே. உங்களை ராஜபார்ட்டார் மலையா நம்பினான்'' என்று கேலியாகக் கேட்டு, ஒரு சிட்டிகைப் பொடியையும் மூக்கில் இழுத்தார்.

''அதில்லையா குருக்களே! வந்திருக்கிற டிப்டி முஸ்லிமோல்லியோ அவனுக்கு நம்மையெல்லாம் கண்டா பிடிக்காது'' என்று ஜாதி பேதத்தைக் கிளப்பிவிட்டார் வராஹாச்சாரி.

ஆனால், அதைக் குருக்கள் ஒப்புக்கொண்டதாகத் தெரியவில்லை. ''என்ன இருந்தாலும் போலீஸ் டிபார்ட்மெண்டில் உங்க செல்வாக்கென்ன, சர்வீஸ் என்ன!'' என்று ஆரம்பித்தார் குருக்கள்.

''ஆமாய்யா! அதெல்லாம் இந்தப் பயலுக்கு எங்கே தெரியறது? இருக்கட்டும்; இந்த டிப்டியாவிசாரணையை முடிக்கப் போறான்? பின்னாடி இவன் அப்பன் வருவான் அவன் கிட்ட பேசிக்கிறேன்'' என்றார் வராஹாச்சாரி.

''அதுவரைக்கும் வரதப்பிள்ளை போலீசார் கொட்டிலிலே தான் இருக்கணும் போலிருக்கு?'' என்று கிண்டலாகக் கேட்டார் குருக்கள்.

குருக்களின் கிண்டலை வராஹாச்சாரியும் புரிந்து கொண்டாலும் அதைக் கவனிக்காததுபோல் சீட்டைக் குலுக்கினார். ஆனால் சீட்டு ஆடும்போதும் குருக்கள் விடாது வரதப்பிள்ளையைப் பற்றியே பேசிக்கொண்டிருந்ததால், வராஹாச்சாரி சீக்கிரமாகவே சீட்டுக் கச்சேரியை முடித்துக் கொண்டு வீடு திரும்பினார். ரிடையராகி ஓய்வெடுத்துக்

கொள்ளக் கிராமத்துக்கு வந்த அவர் மனதிலும் கொலை வழக்கைப் பற்றிய குழப்பமே குடி கொண்டிருந்தது.

செண்பகத் தோட்டமே அந்தக் குழப்பத்தில் ஆழ்ந்து கொண்டிருந்தது. இத்தனையிலும் சற்று மன ஆறுதலடைந்தவர் சிவசங்கரம் பிள்ளைதான். ஆனால், அவர் மன ஆறுதலையும் பெயர்த்து எறியக்கூடிய செய்தியொன்று பேரளத்திலிருந்து கிடைத்தது. அதைச் சொல்ல டிப்டியே அவர் வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

31. வரதப்பிள்ளையின் விடுதலை

சிவசங்கரம் பிள்ளையை அவசரமாகத் தேடி டிப்டி அப்துல்லா அவருடைய வீட்டுக்கு வந்தபோது பிள்ளைவாள் வாசல் திண்ணையிலே உட்கார்ந்து தமது பழைய ரிகார்டுகளைப் புரட்டிக்கொண்டிருந்தார். சாதாரண நாட்களாயிருந்தால் அந்தக் காலை நேரத்தில் பிள்ளையை வீட்டில் பார்ப்பது பரம துர்லபம். விடியற் காலையில் ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து வயக் காட்டுக்குப் போகும் பிள்ளைவாள் காலைக் கடன்களை யெல்லாம் முடித்துக் கொண்டு பயிர் பச்சைகளையெல்லாம் பார்த்துவிட்டு வெயிலேறும்போது தான் வீட்டுக்கு வருவார். ஆனால், மனத்தில் பெரும் குழப்பமும் கவலையும் சூழ்ந்திருந்ததன் காரணமாகச் சென்ற சில நாட்களாக அவர் அந்தப் பழக்கத்தை அறவே விட்டு, வீட்டிலேயே உட்கார்ந்து பழங்குப்பைகளைக் கிளறிக் கொண்டிருந்தார். அன்றும் அந்தப் பணியில் ஈடுபட்டிருந்த அவரை ஜீப் காரின் ஹாரன் திடுக்கிட வைத்து இந்த உலகத்துக்குக் கொண்டு வரவே, பிள்ளைவாள் திண்ணையிலிருந்து இறங்கி டிப்டியை எதிர்கொண்டார்.

ஜீப்பிலிருந்து இறங்கிய டிப்டியும் பிள்ளைவாளுக்குச் சலாம் போட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்துகொண்டார்.

டிப்டி வந்த காரணத்தை அறிந்து கொள்ள இஷ்டப்பட்ட பிள்ளையும் மெள்ளச் சம்பாஷணையைத் துவக்கி, ''டிப்டி ஸார்! தாங்கள் இந்த ஏழை வீட்டைத் தேடி வரணுமா! ஒரு வார்த்தை சொல்லியனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேன்'' என்றார்.

''என்ன பிள்ளைவாள் அப்படிச் சொல்றீங்க! உங்க வீட்டைத் தேடி எத்தனையோ மந்திரிகள், கவர்னர்கள் வந்திருக்காங்க! நான் வந்தது ஒரு பெரிசா? சர்க்கார் உத்தியோகத்திலே இருக்கிறவன்தான் பெரிய மனுஷன்னு நினைக்கிற காலம் போச்சுங்க. இனிமே உழைப்பாளிங்க, ஊருக்கு நல்லது பண்றவங்க இவங்கதாங்க பெரிய மனுஷாள்'' என்று டிப்டி உபசாரமாகப் பேசினார்.

''இத்தனை புகழ்ச்சிக்கு நான் அருகதையில்லை. இருக்கட்டும். ஏதோ காரியமா வந்திருக்கீங்க போலிருக்கு!'' என்று சொல்லிவிட்டு உள்ளே திரும்பிய பிள்ளை, ''ஏ குட்டி மோகனா! ஐயாவுக்குக் கொஞ்சம் பால் கொண்டா'' என்றரர்.'

''வேண்டாம் பிள்ளைவாள்! வரச்சே பேரளத்திலே காப்பி சாப்பிட்டுத்தான் வந்தேன்'' என்றார் டிப்டி.

பிள்ளை விடவில்லை. ''ஏங்க! நம்ப வீட்டுக்கு வந்துட்டு நீங்க சும்மா போகிறதாவது?'' என்று பிடிவாதம் செய்யவே, டிப்டியும் வேண்டா வெறுப்பாக உடன்படுவதுபோல் பாசாங்கு செய்து, மோகனா கொண்டுவந்த சுண்டக்காய்ச்சின காற்படி பாலை 'மடக் மடக்' என்று விழுங்கிவிட்டு மோகனாவை ஒரு விநாடி பார்த்து, ''இதுதான் தங்கள் குழந்தையோ?'' என்றும் விசாரித்தார்.

''ஆமாம்'' என்றார் பிள்ளை.

''தங்கமான குழந்தை'' என்று பெருமூச்செறிந்தார் டிப்டி.

''என்ன செய்றது டிப்டி சார்! அவள் தலைவிதி இந்த அபவாதம் வந்து சேர்ந்தது!''

''இதற்காகவா பயப்படறீங்க பிள்ளைவாள்? கிராமத்திலே தான் இதெல்லாம் அபவாதம். பட்டணத்திலே இது சர்வ சகஜம். கவலைப்படாதீங்க; உங்களுக்கு நல்ல சேதி கொண்டாந்திருக்கேன்.''

''நல்ல சேதியா!'' பிள்ளை டிப்டியின் முகத்தை நன்றாகக் கவனித்தார். டிப்டி கொடுத்த பால் டம்ளரை வாங்கிக் கொண்டு ரேழியில் பதுங்கி நின்ற மோகனாவும் விஷயத்தைக் கேட்கக் காதுகளைத் தீட்டிக்கொண்டாள்.

பிள்ளையின் ஆர்வத்தைக் கவனித்த டிப்டியும், ''அதைச் சொல்லத்தானே இங்கே வந்தேன். உங்க மருமகப்பிள்ளையை விடுதலை பண்ணிட்டேன்'' என்றார்.

பிள்ளைக்குத் தூக்கி வாரிப்போட்டது. ''யாரைச் சொல்றீங்க?'' என்று விசாரித்தார்.

''அதாங்க வரதப்பிள்ளை இல்லை, வரதப்பிள்ளை? அவனைக் கொண்டாந்து அவுங்க வீட்டிலே இறக்கி விட்டுத்தானே இங்கே வர்றேன்!'' என்று பதில் கூறினார் டிப்டி.

''வரதப்பிள்ளை விடுதலை ஆயிட்டானா! அப்பொ அவன் ரிவால்வர், குண்டுகள்...'' என்று குழப்பத்தால் ஏதும் புரியாதவராய்க் கேட்டார் பிள்ளை.

''ரிவால்வர் அவன் ரிவால்வர்தான். ரிவால்வரிலிருந்து இரண்டு குண்டுகள் காலியாயிருந்ததும் உண்மைதான். ஆனால், நட்சத்திரம் அகல்யா மேலே பாய்ந்தவை அந்தக் குண்டுகளில்லை'' என்று விளக்கினார் டிப்டி.

''அப்படியா!' பிள்ளை வாயைப் பிளந்து ஆச்சரியத்தில் மூழ்கினார்.

''ஆமாம்! பிரேதப் பரிசோதனையின்போதுதான் இந்த உண்மை வெளிப்பட்டது. அகல்யாவின் உடலிலிருந்து கிடைத்த

ரவைகளை வரதப்பிள்ளையின் ரிவால்வரில் பொருத்தினோம். பொருந்தவில்லை.

"ஓகோ! அப்படியானால்..."

சுட்ட ரிவால்வர் இதில்லை, பிள்ளைவாள்; வேறு ரிவால்வர்!"

"அப்படியானால் இதிலே காலியான குண்டுகள்..."

"இருக்கிற இடம் தெரியவில்லை. ராஜபார்ட்டார் ரவைப் பெட்டியைப் பரிசோதித்ததில் இரண்டு குண்டுகள் காணவில்லை. ஆனால், மாண்டவள் உடலிலிருந்த குண்டுகள் அவையல்ல."

சிவசங்கரம்பிள்ளை தீவிரமாக யோசித்தார். டிப்டி அவரை யோசனை செய்யவிடாமலே பேசினார்: "பிள்ளைவாள்! இந்தக் கொலை படுவிநோதமாக இருக்கிறது. வரதப்பிள்ளை கொலை செய்யவில்லையென்பது திட்டமாகத் தெரிகிறது. டாக்டர் சுந்தர் கொலை செய்ததாக ஒப்புக் கொள்கிறார். ஆனால், அவர் எதைக் கொண்டு கொலை செய்தார் என்பது விளங்கவில்லை. ஏனென்றால் கொலை நடந்த இரவில் அவர் கையில் பிடித்திருந்தது ராஜபார்ட்டாரின் ரிவால்வர்தான்."

சிவசங்கரம் பிள்ளைக்கும் குழப்பம் அதிகமாயிற்று. அத்தனை குழப்பத்திலும் தெளிவாயிருந்தவள், பிள்ளையின் மகள் மோகனாதான். டிப்டியின் விளக்கத்தைக் கேட்டதும் அவள் ரேழியின் மறைவிலிருந்து வெளியே வந்து, "டிப்டி சார்! வரதப்பிள்ளை நிரபராதின்னா அவரும் நிரபராதிதானே? அவரை மட்டும் ஏன் விடுதலை செய்யவில்லை?" என்று கேட்டாள்.

டிப்டி ஆச்சரியம் ததும்பும் பார்வையை மோகனாமீது நாட்டி, விஷயத்தை ஓரளவு ஊகித்துக் கொண்டார்.

மோகனா டாக்டர் சுந்தர்மீது தீராக்காதல் கொண்டிருப்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்டார். வரதப்பிள்ளையைப் பெயர்சொல்லிப் பேசிய மோகனா, டாக்டருக்கு மட்டும் 'அவர்' என்ற பட்டம் போட்டதிலிருந்து நிலைமையை அறிந்து கொண்டாராதலால், விஷயத்தைத் தெளிவாக்கத் தொடங்கி, ''அவரை எப்படியம்மா விடுதலை பண்றது?'' என்று கேட்டார்.

''அவர் சுட்டதாகச் சொல்வது வரதப்பிள்ளையின் ரிவால்வராலே, அதாலே சுடலைங்கிறது தெரிஞ்சு போச்சு; அப்போ வரதப்பிள்ளை நிரபராதின்னா அவரும் நிரபராதி தானே?'' என்று மோகனா கேட்டாள்.

''ஆமாம்மா. அதுக்கு டாக்டர் ஒப்புக்கலையே. அவர், தானேதான் சுட்டதாகவும், சுட்ட துப்பாக்கியை வீசி எறிஞ்சுட்டதாகவும் சொல்கிறார்.''

''ஓகோ! அப்படின்னா வரதப்பிள்ளை துப்பாக்கி அவர்கிட்டே எப்படிக் கிடைச்சுதாம்?''

''வரதப்பிள்ளை அந்தப் பக்கம் அலறிண்டு ஓடி வந்தானாம். கொலையைப் பார்த்ததும் துப்பாக்கியைப் போட்டுட்டு ஓடிட்டானாம். அதைத் தான் எடுத்துப் பார்த்துக் கிட்டிருக்கச்சே போலீஸார் வந்து பிடிச்சுக் கிட்டாங்களாம். இப்படிச் சொல்றாரு டாக்டர்.''

சிவசங்கரம் பிள்ளையும் மோகனாவும் அசந்து போனார்கள். டாக்டர் சுந்தர் பிராணனை விடக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறான் என்பது தெளிவானாலும், காரணத்தைத் தெரிந்துகொள்ள அவர்களால் இயலவில்லை. விஷயத்தை விளக்கிவிட்டு டிப்டி போன பிறகு, வெகுநேரம் மட்டும் பிள்ளையும் மோகனாவும் அதைப் பற்றியே தர்க்கித்துக் கொண்டிருந்தார்கள். என்ன தர்க்கித்தும் சுந்தரின் மனப் போக்கைத் தெரிந்து கொள்ள இயலாததால், அன்று பகல் மோகனாவே பேரளத்துக்குக் கிளம்பினாள்.

பேரளம் போலீஸ் ஸ்டேஷனை அவள் அடைந்த போது மாலை நாலு மணி இருக்கும். இன்ஸ்பெக்டர் ஜெயராஜே அவளை அழைத்துக்கொண்டு போய் ஸ்டேஷன் சிறையிலிருந்த சுந்தரிடம் விட்டு வந்தார்.. அநாதைபோல் சிறையின் ஓர் ஓரத்தில் தரையில் உட்கார்ந்திருந்த சுந்தரைப் பார்த்த மோகனாவின் கண்களில் நீர் சுரந்தது. ஏதோ பேச வாயெடுத்தாள்; பேச்சு வரவில்லை. விக்கி விக்கி அழ ஆரம்பித்துவிட்டாள்.

32. கம்பராமாயணமும் வம்ப ராமாயணமும்

சிறையில் ஒரு மூலையில் உட்கார்ந்து ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த டாக்டர் சுந்தர், முதலில் சிறைக்கதவு திறக்கப்பட்டதையோ, மோகனா உள்ளே நுழைந்ததையோ கவனிக்கவுமில்லை; குனிந்த தலை நிமிரவுமில்லை. சிந்தனையின் காரணமாகக் குனிந்த தலையுடன் உட்கார்ந்திருந்த டாக்டரின் காதுகளில் சிறைக்கதவு திறக்கும் சத்தம் விழுத்தான் செய்தது. ஆனால், சுந்தர் மோகனாவின் வருகையைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லையாகையால் யாரோ வார்டன் கதவைத் திறக்கிறானென்று நினைத்துத் தலையை நிமிராமல் தன் சிந்தனையை மேற்கொண்டு ஓட்டலானான். ஆனால் அந்த சிந்தனையை மோகனாவின் விக்கலும் அழுகையும் சரேலென அறுத்துவிட்டன.

அப்படிச் சிந்தனை கலையவே தலையைத் தூக்கி, வந்தது யாரெனக் கவனித்த சுந்தர் பிரமித்துப்போனான். இந்த உலகத்தில்தான் இருக்கிறோமா, வேறு ஏதாவது உலகத்துக்குச் சென்றுவிட்டோமா என்று ஏதுமறியாமல் திணறிய சுந்தர், சிறிதுநேரம் தான் உட்கார்ந்திருந்த மூலையை விட்டு

எழுந்திருக்காமல் அவளையே நோக்கிக் கொண்டிருந்தான். நின்ற பாணியில் தலையைக் குனிந்து முகத்தைக் கைகளில் புதைத்துக்கொண்டு விக்கி விக்கி அழுது கொண்டிருந்த நிலையிலும் மோகனா எத்தனை அழகாயிருந்தாள் என்பதைக் கவனித்த சுந்தர் பெருமூச்செறிந்தான். பிறகு எழுந்து வந்து அவள் தோள்களில் தன் கைகளை வைத்து, ''மோகனா! இங்கே ஏன் வந்தாய்?'' என்று கேட்டான்.

பதிலுக்கு அவள், அவன்மீது சாய்ந்தாள். அவள், முகத்தை அவன் மார்பில் புதைத்துக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழவும் செய்தாள். சுந்தரின் மனம் சுக்கு நூறாக வெடித்துவிடும் போலாகிவிட்டது. அவன் இடதுகை அவள் அழகிய உடலைச் சுற்றி வளைத்து அணைத்தது. அவன் வலதுகை அவள் முதுகை ஆறுதலாகத் தடவிக் கொடுத்தது. ''மோகனா! மோகனா! அழாதே'' என்று உதடுகள் ஆறுதல் வார்த்தைகளை உதிர்த்தன.

ஆனால், மோகனா லேசில் ஆறுதல் அடையவில்லை. வெகுநாட்களாகச் சாத்தப்பட்ட அணைக் கதவுகள் தூக்கப் பட்டவுடன் காவேரி பிரவாகிப்பதுபோல, உள்ளடக்கி வைக்கப்பட்ட அவள் உணர்ச்சிகள் மடை திறந்து பிரவாகித்ததால் அவள் நீண்ட நேரம் அழுது கொண்டே இருந்தாள். தன் மார்பிலே துவண்டு கிடந்த அவள் தலையைக் கோதிவிட்டுக் கொண்டே சுந்தர் அவளுக்கு மேலும் ஆறுதல் மொழிகளைக் கூறினான். ''மோகனா! நீ என்ன சிறுகுழந்தையா? எதற்காக அழுகிறாய்? நான் குற்றம் செய்தேன்; அதன் பலனை அநுபவிக்கிறேன். அதற்காக நீ ஏன் அழவேண்டும்? கொலை செய்தவனைத் தண்டிக்காமல் விடச் சட்டம் இல்லையே மோகனா!'' என்றான் சுந்தர்.

மெள்ளத் தலையைத் தூக்கிச் சுந்தரை நோக்கிய மோகனா, ''நீங்கள் கொலை செய்தது உண்மையா? நிச்சயமாக என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள்'' என்றாள்.

அவள் முகத்தைப் பார்த்தான் சுந்தர். அவன் சுந்தர வதனத்திலே வருத்தம் கலந்த புன்னகை ஒன்று தோன்றியது. அவன் சொன்னான்: ''ஆமாம் மோகனா! நான் கொலை செய்தது உண்மைதான்!''

''நான் நம்பவில்லை'' என்று மோகனா கூறினாள், புடவைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே.

''என் மேல் உனக்குள்ள அன்பு அப்படிப் பேசச் சொல்கிறது மோகனா! ஆனால், உண்மையை அன்பு மறைக்க முடியுமா?''

''அன்பையும் உண்மையையும் பிரிக்க முடியாது சுந்தர்! டாக்டர்களாலும், ஏன் அணுவைப் பிரிக்கும் விஞ்ஞானிகளாலும் அவற்றைப் பிரிக்க முடியாது. அன்பு; சத்தியம், அஹிம்சை எல்லாமே பிரிக்க முடியாத தத்துவங்கள்.''

சுந்தர் அவளை இறுக அணைத்துக் கொண்டான். ''தத்துவங்களும் உடைந்து போகும் காலம் இது, மோகனா. கலியில் சகல உண்மைகளும் தத்துவங்களும் உடைந்து போகும் என்று பெரியவர்கள் சொல்ல வில்லையா?'' என்று கேட்டான்.

மோகனா அவனைத் தன் பரிதாப விழிகளால் நோக்கி விட்டுச் சொன்னாள், ''எந்தப் பெரியவர்கள் அதைச் சொல்லியிருந்தாலும் நம் கண் முன்னிருந்த மகாத்மா சத்தியம் அழியாது என்று சொல்லியிருக்கிறாரே; அதை நாம் நம்ப வேண்டாமா?'' என்று.

''நம்பவேண்டும்.''

''அப்படியானால் சத்தியம் நிலைக்க வழி செய்யுங்கள்.''

''நான் என்ன சத்தியத்தை அழிக்கிறேனா?''

''ஆம்; உண்மையை மறைக்கிறீர்கள். வேண்டாம்; சொல்லிவிடுங்கள் உண்மையை. நீங்கள் கொலை

செய்யவில்லையென்பதைப் பறை சாற்றுங்கள்'' என்று மோகனா கெஞ்சினாள்.

''இதென்ன பைத்தியம் மோகனா! நான்தான் கொலை செய்தேன். நான்...'' என்று ஏனோ இழுத்தான் சுந்தர்.

''ஏன் தயங்குகிறீர்கள்? நீங்கள் கொலை செய்தவரானால் வரதப்பிள்ளையிடமிருந்த துப்பாக்கியை ஏன் பிடுங்கிக் கொண்டீர்கள்?'' என்று கேட்டாள் மோகனா.

சுந்தர் திகைத்துப் போனான். ''என்ன சொல்கிறாய் மோகனா! வரதப்பிள்ளையின் துப்பாக்கியை நான் பிடுங்கிக் கொண்டேனா?'' என்று கேட்டான்.

''ஆமாம்'' என்றாள் மோகனா.

''வரதப்பிள்ளை ஏதாவது உளறிவிட்டானா?'' சந்தேகத்துடன் எழுந்த அந்தக் கேள்வியில் கவலையும் கலந்து நின்றது.

மோகனாவின் கண்களில் சந்தேகம் துளிர்த்தது. ஆகவே, அவள் பொய்யும் சொல்ல ந் தொடங்கி, ''ஆமாம்; வரதப்பிள்ளை சொன்னான்'' என்றாள்.

''என்ன சொன்னான் மோகனா?''

''அதை நான் சொல்வானேன் உங்களுக்கு?''

''மடப்பயல்! வாயை மூடிக்கொண்டிரு என்று எத்தனை தடவை சொன்னேன் அவனுக்கு!''

''வரத்ப்பிள்ளையின் வாயை மூட யாராலும் முடியாது. அவன் குற்றத்தை அவனே ஒப்புக்கொண்டு விட்டான்.''

''பொய்! பொய்! சுத்தப் பொய்! அவன் கொலையே செய்யவில்லை.''

மோகனாவின் ஒரு கை சுந்தரின் தோளைப் பற்றிக் கொண்டது. தல்லையை நிமிர்ந்து அவன் முகத்தை நன்றாக

நோக்கிய மோகனா, ''சுந்தர்! என்னை ஏன் இப்படி வதைக்கிறீர்கள்? கொஞ்சம் உண்மையைச் சொல்ல மாட்டீர்களா? என்னை மீளாத் துயரத்தில் ஆழ்த்த வேண்டு மென்பதுதான் உங்கள் எண்ணமா?''என்று கெஞ்சினாள்.

சுந்தர் அவள் மீதிருந்த தன் கரங்களை எடுத்தான். பிறகு சிறையில் சற்று உலாவினான். கடைசியாகப் பேச முனைந்த போது அவன் பேச்சில் உறுதி காணப்பட்டது. ''மோகனா! என்னை வீணாக வற்புறுத்தாதே. என்னால் எதுவும் சொல்ல முடியாது. உன் வாழ்க்கையில் நான் குறுக்கிட்டதே தவறு. 'நான் மகா பாதகன்'' என்றான் சுந்தர்.

''அப்படி என்ன தவறு செய்தீர்கள்?'' என்று கேட்டாள் அவள்.

''ஆயிரம் தவறுகள்! ஆயிரம் தவறுகள், மோகனா! அவற்றில் ஒன்று உன்னைத் தாக்கினாலும் உன் வாழ்வு பாழ்பட்டுவிடும். என்னை எதுவும் கேட்காதே; போய்விடு!'' என்றான் சுந்தர்.

''உங்களைப்பற்றித் தீர்ப்புக் கூற நீங்கள் யார்? தீர்ப்புச் சொல்ல வேண்டியவர்கள் பிறர்!'' என்று மோகனா பதில் சொன்னாள்.

''உலகமே என்மேல் தீர்ப்புக் கூறிவிட்டது மோகனா. இனி தீர்ப்புக் கூற யாரும் பாக்கியில்லை. உலகமென்ன, என் மனச்சாட்சியே தீர்ப்புக் கூறிவிட்டது. இனி நான் மரணத்தில்தான் சாந்தி காண முடியும்'' என்றான் சுந்தர்.

அவன் உண்மையை ஏதோ காரணத்தால் மறைக்கிறா னென்பதை மோகனா கண்டு கொண்டதன்றி, அவன் உண்மையைச் சொல்லமாட்டானென்பதையும் புரிந்து கொண்டாளாகையால் மேற்கொண்டு ஏதும் பேசாமலே

சிறையை விட்டுக் கிளம்பிச் செண்பகத் தோட்டத்துக்கு வந்து சேர்ந்தாள்.

அவள் செண்பகத் தோட்டத்தை அடையுமுன்பாகவே அவளைப்பற்றி ஊரில் வம்பு அதிகமாக அடிப்பட்டுக் கிடந்தது. அவள் பேரளம் போன விஷயம் ஊரில் நன்றாகப் பரவி யிருந்ததால், மூலைக்கு மூலை ஜனங்கள் அதையே பேசிக் கொண்டிருந்தார்கள். இந்த மாதிரி ஏதாவது சந்தர்ப்பம் கிடைக்குமா என்று காத்திருந்த வராஹாச்சாரி அன்று இருட்டியதும் வழக்கத்துக்குச் சற்று முன்பாகவே உத்திராதி வீட்டுக்குக் குருக்களுடன் வந்து சேர்ந்தார். அன்றைக்கு உத்திராதி சீதாபஹரண படலத்தை எடுத்துக்கொண்டு விளாச ஆரம்பித்தார். அதைச் சற்றும் காது கொடுத்துக் கேட்காத வராஹாச்சாரி குருக்களைப் பார்த்து, ''குருக்களே! விஷயத்தைக் கேட்டீரா?'' என்றார்.

ஒரு சிட்டிகைப் பொடியை எடுத்து வாணக்குழாய்க்கு மருந்தை அடைப்பது போல் மூக்கில் திணித்து உறிஞ்சிய குருக்கள், ''கேட்காமெ என்ன? சங்கதிதான் ஊர் சிரிக்கிறதே!'' என்றார்.

''இதைத்தான் கம்பர் பெருமான் சொல்கிறார்' என்று உத்திராதி பிரசங்கத்தில் சொல்லிக் கொண்டு போனார். உடனே வராஹாச்சாரி அவரை மடக்கி ''உத்திராதி! கொஞ்ச நாழி தொந்தரவு பண்ணாமல் இரேன்'' என்று கம்பராமாயணப் பிரசங்கம் பெரிய தொந்தரவு போலவும், தன் அக்கப்போர்தான் அவசியம் போலவும் கூறிவிட்டு, 'என்னய்யா குருக்களே! சங்கதி சந்தி சிரிக்கிறதுங்கிறீரே? அதுக்கு என்ன பண்ண உத்தேசிக்கிறீர்?'' என்று குருக்களைப் பார்த்துக் கேட்டார்.

''அதுக்கு அவக என்ன செய்வாக?'' என்று காலட்சேபம் கேட்க வந்திருந்த துரைசாமிப் பத்தர் குறுக்கிட்டார்.

''ஏண்டாதுரைசாமி, நீ சொல்றது நன்னாயிருக்காடா? இது இந்த ஊரிலே நடக்கலாமா? வயது வந்த குட்டி தைரியமா பேரளம் போய் அந்தப் பயலைப் பார்க்கிறதாவது!'' என்று சீறினார் வராஹாச்சாரி.

''கூடாதுங்க. ஆனா அதுக்கு நாமெல்லாம் என்ன செய்ய முடியும்? சிவசங்கரம் பிள்ளை பெரிய மனுஷன்'' என்றான் மளிகைக் கடை கொமாரசாமி.

''பெரிய மனுஷனாயிருந்தா மானாவமானம் இல்லையா? நாளைக்கே போய் அவர்கிட்டே சொல்லுவோம்'' என்றார் குருக்கள்.

''என்ன சொல்றது?'' என்று வராஹாச்சாரி சந்தேகத்துடன் கேட்டார்.

''பெண்ணை மொதல்லே அந்த ராஜபார்ட்டான் பிள்ளைக்குக் கொடுக்கச் சொல்லிச் சொல்றது! அவன்தான் ஜெயில்லேயிருந்து வெளியிலே வந்துட்டானே'' என்றார் குருக்கள்.

''பெண் சம்மதிக்குங்களா?'' என்று பத்தர் கேட்டார்.

''சம்மதிக்க வைக்கிறது!'' என்றான் கொமாரசாமி.

இந்த விவாதத்துக்கிடையில் மீண்டும் ஒரு கம்பராமாயணப் பாட்டை நுழைக்க முயன்ற உத்திராதிப் படையாச்சியின் தந்திரம் பலிக்கவில்லை. உத்திராதிப் படையாச்சியின் கம்ப ராமாயணத்தையோ, சிக்குப் பலகையையோ லட்சியம் செய்யாமல் பக்தர்கள் எழுந்து சென்றார்கள்.

போகும்போது எல்லாரும் மறுநாள் சிவசங்கரம் பிள்ளையைச் சந்திப்பதென்ற உறுதியுடன் போனார்கள். அங்கிருந்து கீழக்குளத்தங்கரைப் பக்கமாகப் போய்ப் பிறகு

வீட்டுக்கு வரலாமெனச் சென்ற வராஹாச்சாரியை மற்றொரு நிகழ்ச்சியும் தூக்கி வாரிப் போட்டது. கீழக் குளத்தங்கரைத் தாழைக் காட்டின் ஓரத்தில் மோகனாவும் வரதப்பிள்ளையும் ஏதோ கிசு கிசு என்று பேசிக் கொண்டிருந்தார்கள். வராஹாச்சாரி தமது பழைய காலத்துப்பறியும் அனுபவத்தை நினைவு படுத்திக் கொண்டு, பக்கத்திலிருந்த ஒரு மறைவுக்குச் சென்று பதுங்கிக்கொண்டு, அவர்கள் பேசுவதை உற்றுக் கேட்கலானார்.

33. வரதப்பிள்ளையின் ரகசியம்

'வரதப்பிள்ளை ஏதாவது உளறிவிட்டானா? என்று சுந்தர் ஜெயிலில் கேட்டதிலிருந்து, 'இந்தக் கொலையில் ஏதோ மர்மம் இருக்கிறது' என்று தீர்மானித்துக் கொண்ட மோகனா, அந்த மர்மத்தை எப்படியாவது அறிந்துகொள்ள வேண்டுமென்று முடிவு செய்து, அதற்காக அசனகுடியிலுள்ள தயிர்க்கார ஆதியின் உதவியை நாடினாள். மோகனாவின் விருப்பத்துக்கு முதலில் ஆதி சம்மதிக்காமல், ''கொளந்தை! நீ ஒரு தடவை டாக்டர் ஐயாவைப் பார்த்துத்தான் ஊரை அமர்க்களப்படுத்திட்டே. இப்போ இந்த வரதப்பிள்ளையையும் தனியாகப் பார்த்துப் பேசினா, வம்பு ரொம்ப சாஸ்தியாய் போயிடும்'' என்று எச்சரித்தாள். ஆதியின் எச்சரிக்கையைக் காதில் வாங்கிக் கொள்ளாத மோகனா, ''இல்லை ஆதி, நீ எப்படியும் போய்த்தானாகணும். வரதப்பிள்ளையை இன்னிக்குச் சாயந்தரமே பார்க்கணும். ஊரார் என்ன பேசினாலும் சரிதான்!'' என்றாள்.

மோகனாவை ஒருமுறை நோக்கிய ஆதி பெருமூச் செறிந்தாள். ''சரி கண்ணு, உன்னிஷ்டம். வரதப்பிள்ளையை எங்கே வரச் சொல்றே?'' என்று கேட்டாள்.

''தாழைக் காட்டுக்கு?''

"எத்தனை மணிக்கு?"

"ராவுலே இருட்டினப்புறம்."

"இது நல்லா இருக்குமா கண்ணு?"

"எல்லாம் நல்லாத்தான் இருக்கும்; நீ போய்ச் சொல்லு!"

இந்தச் சம்பாஷணைக்கு அப்புறம் ஆதி எதுவுமே பேசவில்லை. மோகனாவின் விருப்பப்படி வரதப்பிள்ளையை இருட்டிய பிறகு தாழைக் காட்டுக்குப் போகும்படி சொன்னாள். இதைக் கேட்ட வரதப்பிள்ளைக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. "ஏன் ஆதி? நெசம்மாவா?" என்று சொல்லி, அசப்பில் ஆதி முதுகிலும் தட்டிக் கொடுத்தான்.

மேலைக் குளத்தங்கரையிலிருந்த இலுப்ப மரத்தடியில் நின்றிருந்த ஆதி சுற்று முற்றும் பார்த்தாள். "மடப்பய மவனே; ஏண்டா முதுகிலே தட்டினே? யாராலும் பாத்தாங்கன்னா என் கதி..." என்று இழுத்தாள்.

"ஒண்ணும் ஆகாது, ஆதி. நீ எங்கம்மா மாதிரி இருக்கே!" என்றால் வரதப்பிள்ளை.

"உம்மாதிரி ஒரு பிள்ளை இருந்திருந்தா நான் உருப்பட்ட மாதிரிதான்!" என்று ஆதி சிணுங்கினாள்.

"அப்ப நான் உன் பிள்ளையாகவே இருக்கேனே" என்று வரதப்பிள்ளை இளித்தான்.

"ஏ வரதப்பிள்ளை! இன்னொரு தடவை கொரங்கு மாதிரி இளிச்சே, பல்லைத் தட்டிடுவேன். சாக்கிரதை!" என்று சொல்லிவிட்டு ஆதி நடையைக் கட்டினாள்.

வரதப்பிள்ளை விவரம் புரியாமல் சற்று நேரம் அவள் போவதைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். பிறகு தான் கையில் பிடித்துக்கொண்டிருந்த வண்டிக்காளையை இழுத்துக் கொண்டு போய் மேலைக்குளத்தில் தள்ளி அத்துடன் நன்றாக

நீச்சலடித்தான். அவனுக்கிருந்த உற்சாகத்தில் இரண்டு அல்லி மலர்களைக் கொடியுடன் பிடுங்கிக் காளையின் கழுத்தில் போட்டு வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனான்.

அவன் வந்த தோரணையே வள்ளியம்மைக்குக் கூடப் பிடிக்கவில்லை. ராஜபார்ட்டாருக்கோ கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது. ''இன்றைக்கு என்ன களுதைக்குக் குஷி பிறந்திருச்சு? காளைக்கல்ல அல்லியைக் கட்டியிருக்கான்!'' என்று கறுவினார் ராமலிங்கம். ஆனால் வள்ளியம்மையின் அதிருப்தியையோ, ராமலிங்கத்தின் கறுவலையோ அடியோடு பொருட்படுத்தாத வரதப்பிள்ளை, அன்று பகல் பூராவும் வீட்டை இரண்டுபடுத்திக் கொண்டிருந்தான். சிறையிலிருந்து வந்ததால் அவனை எதுவும் சொல்ல ராமலிங்கம் பயந்தார். ஆனால், அவரையும் பதற்றத்துக்கு உள்ளாக்கவல்ல பாதையிலும் இறங்கத் தொடங்கிய வரதப்பிள்ளை, ''ஆணாலழகு மன்னன் அர்ஜுன் ராஜன் ஏது சொல்வான்...'' என்று பாட ஆரம்பித்தான்.

ராஜபார்ட்டார் துடிதுடித்துப் போனார். பஞ்சபாண்டவர் வனவாசம் தெருக்கூத்து நடக்கும்போது கட்டியக்காரனுக்குப் பதில் அவர்தான் அந்தப் பாட்டைப் பாடுவது வழக்கம். அதை வரதப்பிள்ளை பாடியதும் ராக்ஷஸ சொரூப மெடுத்த ராஜபார்ட்டார், ''பயலே! அத்தனை தூரத்துக்கு முத்திப் போச்சா?'' என்று கூவினார்.

''ஏன் நான் பாடினா என்னவாம்?'' என்றான் வரதப்பிள்ளை.

''அது என்ன பாட்டு தெரியுமாடா?'' என்று ராஜபார்ட்டார் அந்தப் பாட்டில் தமக்குள்ள அறிவையும் வரதப்பிள்ளைக்குள்ள ஞானசூன்யத்தையும் காட்டத் தொடங்கினார்.

அதுவரை வரதப்பிள்ளையிடம் கோபமாயிருந்த வள்ளியம்மை அந்தக் கோபத்தைக் கணவன் மீது திருப்பி, ''ஏன் அவனுக்குத் தெரியாதாம்? உக்கடைக் கூத்தை அவன் எத்தனை தடவை பார்த்திருக்கான்'' என்றாள்.

ராஜபார்ட்டாருக்கு அவமானம் தாங்கவில்லை. 'கேவலம் உக்கடையான் கூத்தைப் பிரமாதமாகப் பேசி விட்டாளே' என்ற கோபத்தால் அவளை முறைத்துப் பார்த்து, ''ஏண்டி, உக்கடைக் கூத்தான் பாடறது அத்தனை அழகாயிருக்கா? உன் பிள்ளைக்கும் உனக்கும். சரி, நீங்க இரண்டு பேரும் மூட்டையைக் கட்டிகிட்டு உக்கடைக்கே போங்க'' என்றார்.

''உக்கடையான் கூத்தைப் பார்க்காதவங்கள்ளாம் அவன் ஊருக்குத்தான் போய்கிட்டிருக்காங்களா? பொறாமையைப் பாரு, பொறாமையை!'' என்றாள் வள்ளியம்மை.

ராஜபார்ட்டாருக்குக் கோபம் மிதமிஞ்சிப் போனதால் ஏதும் பதில் சொல்லாமல் துண்டை உதறி விசுப்பலகையில் போட்டுப் படுத்துக் கொண்டார். வரதப்பிள்ளையும் நாள் முழுவதும் லூட்டி அடித்துக் கொண்டிருந்து விட்டுப் பொழுதுபோய்ச் சற்று இருட்டியதும் கீழைக் குளத்துத் தாழைக் காட்டை நோக்கிச் சென்றான்.

அங்கு அவனுக்கு முன்பாகவே மோகனா வந்து காத்துக் கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் வரதப்பிள்ளையின் உடல் ஒரு முறை லேசாக நடுங்கியது. யாராவது பார்த்து விடப் போகிறார்களே என்று சுற்று முற்றும் பார்த்தான்.

''இப்படி வாங்க'' என்று சற்று இருட்டாயிருந்த இடத்துக்கு நகர்ந்தாள் மோகனா. கை கால் வெட வெடக்க வரதப்பிள்ளையும் அவளைத் தொடர்ந்தான். சற்று நேரம் இருவருமே பேசவில்லை. கடைசியில் மோகனாவே பேச்சைத் தொடங்கி, ''நான் ஒண்ணு கேட்பேன், பதில் சொல்வீங்களா?'' என்று கேட்டாள்.

''எது வேணும்னாலும் கேளு, மோகனா! சொல்றேன்!'' என்றான் வரதப்பிள்ளை.

''இந்தத் தாழைக் காட்டிலே கொஞ்ச நாளைக்கு முன்னால் ஒரு கொலை நடந்துதே நினைவிருக்கா?'' என்று குரலில் குழைவை வரவழைத்துக் கொண்டு கேட்டாள் மோகனா. கொலைப்

பிரஸ்தாபத்தைக் கேட்டதும் ஓடிப் போய் விடலாம் போலிருந்தது வரதப்பிள்ளைக்கு. இருந்தாலும் மோகனாவின் மேலிருந்த காமப் பித்து கோழையான வரதப்பிள்ளையையும் சற்று நிறுத்தி வைத்தது.

பயந்துகொண்டே கேட்டான் வரதப்பிள்ளை, ''ஏன் மோகனா! அந்தக் கொலையைப் பற்றி இப்ப என்ன?'' என்று.

''எனக்குச் சொல்ல வெட்காமாயிருக்கு...''

''என்ன வெட்கம்? கொலையிலே வெட்கப்படறதுக்கு என்ன இருக்கு?''

''ஒன்றுமில்லை. என்னை உங்களுக்குக் கட்டிக் கொடுக்கிறதா அப்பா நிச்சயம் பண்ணிட்டாரு...''

''அப்பா நிச்சயம் பண்ணிட்டாரா? அப்ப நீ...''

''என்னாங்க நீங்க! எனக்கு... நாம்ப இரண்டு பேரும் கொழந்தையிலிருந்து ஒண்ணா வெளையாடினவங்க...''

மோகனாவின் குரலும் பேச்சும் பெரும் மயக்கத்தை கொடுக்கவே, வரதப்பிள்ளை நிலைதடுமாறினான். அதை மோகனா நன்கு பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கி, ''சரி! அப்பாவுக்கும் சம்மதம், எனக்கும்...'' என்று வார்த்தைகளைப் பாதியில் நிறுத்தினாள்.

''சம்மதம்னு சொல்லு'' என்று குதித்தான் வரதப்பிள்ளை.

''சொல்லணுமா?''

வேணும், வேணும்!''

''ஆனா ஒண்ணு பயமாயிருக்கு. உங்களை அந்தக் கேஸிலே யாராவது புடிச்சிட்டுப் போயிட்டா?''

வரதப்பிள்ளை ஒரு முறை கனைத்தான். ''மோகனா! நடந்ததை உன்கிட்டச் சொல்லிப்பிடறேன். எங்கப்பாரு கிட்டக் கூட நான் எதையும் சொல்லவில்லை; அப்புறம் நீயே யோசி.

இந்தக் கொலையை நான் செய்யலை; அந்த டாக்டர் பயல் இருக்கானே. அவனும் செய்யலை!'' என்று கூறினான்.

மோகனா மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டாள். ''நீங்க ரெண்டு பேரும் செய்யவில்லையா?'' என்றாள், குரலில் ஆச்சரியம் தொனிக்க.

''இல்லை மோகனா! மொதல்லே நான்தான் கொண்ணுட்டதா நெனைச்சுட்டேன். அன்றைக்குத் தான் என் கையிலே எங்கப்பாரு துப்பாக்கி கிடைச்சுது. அதைச் சுடறதிலே எனக்கு ரொம்ப ஆசை. ஆனா எங்கப்பாரு அதைப் பூதம் காக்கிற மாதிரி காக்கிறாரு. அன்றைக்கி அவர் கூத்துக்குப் போயிட்டாரு. நான் துப்பாக்கியை எடுத்துக்கிட்டு இந்தப் பக்கமா வந்தேன். யாருமில்லாத சமயமாப் பார்த்துத் தாழை மரத்தைக் குறி வைச்சு இரண்டு தடவை சுட்டேன். இன்னும் யாரோ கூடச் சுட்டாங்க. அடுத்த விநாடி ஒரு பொண்ணு அலறும் சத்தம் கேட்டுத் தாழைக் காட்டுக்குள்ளே ஓடினேன். அங்கே ஒரு பொண்ணு செத்துக் கிடந்தாள்!''

''அப்புறம்?''

''சித்த நேரத்துக்கெல்லாம் டாக்டர் சுந்தர் ஓடி வந்தான். கொஞ்ச நேரம் அந்தப் பொண்ணை முறைச்சுப் பார்த்தான். பிறகு என் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கிக்கொண்டு, என்னை ஓடிப் போயிடுன்னான்.''

''ஹ¥ம்!''

''ஏண்ணேன். காரணம் கேட்காதே; மோகனா மனசு கஷ்டப்படாமே நடந்துக்கோ. உம்; ஓடு''ன்னான்! நான் ஓடக் காலெடுத்து வச்சேன். வேறே யாரோ தாழைக் காட்டிலே ஓடற கால் சத்தம் கேட்டது. 'யாரோ ஓடறான்' னேன். டாக்டர் கேட்கவில்லை; 'நீ மொதல்லே ஓடித் தப்பிச்சுக்கோ'ண்ணான். அப்புறம் நிப்பேனா? பிடிச்சேன் ஓட்டம்!'' என்று சொல்லிய வரதப்பிள்ளை, தான் ஓடிய பெருமையை நினைத்துச் சற்று சிரிக்கவும் சிரித்தான்.

மோகனாவின் எண்ணங்கள் எங்கோ பறந்து கொண்டிருந்தன. தனக்கு வாழ்வளிக்கவும் ஊரார் அக்கப் போரிலிருந்து தன்னைக் காப்பாற்றவுமே சுந்தர் பெரும் தியாகம் செய்திருக்கிறானென்பதையும், அதற்காகவே கொலைப் பழியைத் தன்மீது போட்டுக் கொண்டிக்கிறானென்பதையும் சந்தேகமறத் தெரிந்து கொண்ட அவளுக்கு, உலகமே சுற்றுவதுபோலிருந்தது. வரதப்பிள்ளை கல்யாண விஷயமாக ஏதோ சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே வீட்டை நோக்கி நடந்தாள். அவள் பேசாமல் நடந்தது வரதப்பிள்ளைக்கு மிகவும் வருத்தமாயிருந்தாலும், எப்படியும் அவளை மணந்துவிடலாம் என்ற நினைப்பில் சந்துஷ்டியுடனேயே வீடு திரும்பினான்.

அவர்கள் சம்பாஷணையைக் கேட்ட வராஹாச்சாரி பிரமித்துப் போனார். இந்தக் கொலையின் மர்மத்தை அவிழ்ப்பது அத்தனை சுலபமல்லவென்று அவருக்குப் புரிந்ததோடு, சுந்தர் குற்றவாளியல்லவென்பதையும் சந்தேகமறத் தெரிந்து கொண்டாராதலால் மறுநாள் காலையில் துரைசாமிப் பத்தர், கொமாரசாமி, உத்திராதிப் படையாச்சி முதலிய பஞ்சாயத்துக்காரர்கள் அவரைச் சிவசங்கரம் பிள்ளையின் வீட்டுக்கு அழைத்தபோது அவர் இணங்கவில்லை. அத்துடன் மோகனாவுக்கும் வரதப்பிள்ளைக்கும் விவாகம் செய்யும் யோசனையைக்கூட எதிர்த்து, ''அந்தக் குட்டிக்கு இஷ்டவிரோதமான கல்யாணத்தை ஏன் பண்ணி வைக்கணும்?'' என்று கேட்டார்.

குருக்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''பண்ணி வைக்கணும்னு நீர்தான் சொன்னீர் ஸ்வாமி!'' என்றார் குருக்கள்.

''கொஞ்சம் பார்ப்போமே'' என்றார் வராஹாச்சாரி.

''கொஞ்சம் பார்க்கிறதாவது நஞ்சம் பார்க்கிறதாவது! சும்மா வாருங்காணும்'' என்றார் குருக்கள்.

''என்ன ஒரு ராவுக்குள்ளே மாறிட்டீங்க?''என்றார் பத்தர்.

''கம்பன் தெரியாமலா சொன்னான்?'' என்று படையாச்சி ஆரம்பித்தார்.

''அட, உம்ம ராமாயணமும் நீரும்!'' என்று எரிந்து விழுந்த வராஹாச்சாரி, அவர்களுடன் போக மறுத்து விட்டார்.

ஆனால், மற்றப் பஞ்சாயத்துக்காரர்கள் சிவசங்கரம் பிள்ளையைச் சந்தித்து மோகனாவை வரதப்பிள்ளைக்குக் கொடுத்து, எப்படியாவது அவள் மேலுள்ள பழியை நீக்கிக் கொள்ளுமாறு வற்புறுத்தினார்கள். ஊரார் வற்புறுத்தலுக்குப் பணிந்த பிள்ளையும், பஞ்சாங்கக்காரரைக் கூப்பிட்டுத் திருமணத்திற்கு நாளும் வைத்தார். திருமண ஏற்பாடுகள் பலமாக நடந்து கொண்டிருந்தன. பந்தல் மேற்பார்வையை உத்திராதிப் படையாச்சியே மேற்கொண்டார். திருமணநாளை எதிர்பார்த்து ஊர்மக்கள் பெரும் உற்சாகத்துடன் இருந்தார்கள். பிள்ளை ஊருக்கே பெரிய பணக்காரர். அவருக்கு மோகனா ஒரே மகள். பணத்தை லட்சியமில்லாமல் செலவு செய்தார் பிள்ளை. மாப்பிள்ளை அழைப்புக்குப் பேரளத்துப் பிளஷரைக்கூடச் சொல்லியாகிவிட்டது. திருமண நாளும் நெருங்கியது.

34. திருமணம்

பெரிய பண்ணை வீட்டுக் கலியாணத்திற்காக நடந்த ஏற்பாடுகளின் தடபுடல், செண்பகத் தோட்டத்தில் நடந்த கொலையால் உண்டான இருளை அறவே கிழித்தெறிந்து விட்டதால், அந்தக் கிராமம் முழுவதும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்து இருந்தது. பந்தலை மேற்பார்வை பார்த்து வந்த உத்திராதிப் படையாச்சி, பண்ணையார் வீட்டுக்கு மட்டு மல்லாமல், தெருவுக்கே பெரும் பந்தலைப் போட்டு மகர தோரணங்களைக் கட்டி விட்டார். பண்ணையார் வீட்டுக் கலியாண சம்பந்தமாக இரண்டு குளத்தங்கரைகளில் மட்டுமின்றிச் சங்கிலி வீரன் கோயிலிலும் பெருமாள்

கோயிலிலும் பேச்சு நடந்தது. கீரனூரானுக்கு அட்வான்ஸ் கொடுத்தாகி விட்டதென்ற மாத்திரத்தில், குருக்கள் மனம் பூரித்து, ''பலே! பலே கீரனூரானா? பெரிய பய; பல்லவியை வெளுத்தெறிஞ்சுடுவானே'' என்று கூவினார்.

அதுவரை மௌனமாகப் பந்தல் சிங்காரிப்பதில் ஈடுபட்டிருந்த உத்திராதி, சட்டென்று குருக்களை நோக்கி, ''ஏன் குருக்களையா? சின்னப்பயலுக்குத்தான் என்னவாம்? அவனுக்குத்தான் காத்து இனிமேன்னு சொல்றாங்க'' என்று கீரனூர் நாதஸ்வர சகோதரர்களைப்பற்றித் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

''ஏன் உத்திராதி! காத்து சரியாயிருந்தாப்போதுமா? நாலு களைச் சவுக்கத்திலே பெரிய பயல் பல்லவியைத் தொடங்கிட்டான்னாதவுல்.மீனாட்சிசுந்தரமே ததிங்கிணத்தோம் போடுவான் தெரியுமா? காத்துலே என்னப்பா இருக்கு? சரக்கு வேணாமா?'' என்று உற்சாகத்துடன் கூறினார்.

கீரனூரார் மேளத்தைப்பற்றி உத்திராதியும் குருக்களும் மட்டுமென்ன, சென்பகத்தோட்டமே பேசிக்கொண்டது. சம்பந்திக்குத் தாம் எந்த விதத்திலும் குறையக் கூடாது என்பதற்காக ராஜபார்ட்டார் உக்கடைக் கூத்துக்காரனை மூன்று நாட்கள் அரிச்சந்திரன் மயான காண்டத்தை ஆட ஏற்பாடு செய்திருந்தார். வள்ளியம்மை அதை எவ்வளவோ தடுத்து, ''நல்லாயிருக்கே நீங்க சொல்றது? கல்யாணமும் அதுவுமா மயானகாண்டத்தை நடத்தலாமா?'' என்று வாதாடிப் பார்த்தாள். ராஜபார்ட்டார் எதற்கும் மசியாமல், ''போடி போ! உக்கடையான் கூத்திலே மயான காண்டந்தான் முதல் தரம். அதுக்குத் தான் அவனுக்குப் பேர். அந்த நாடகத்துக்கு அதிகப் படியா அம்பது ரூபா வாங்கறான். அதை நடத்தாமே வேறு எதை நடத்தறது? மயானகாண்டத்திலே சந்திரமதி புலம்பினா ஊரே அதிருண்டூ!'' என்று பிரமாதமாகக் கூறிவிட்டார்.

இந்த விஷயம் சிவசங்கரம்பிள்ளையின் காதுக்குப் எட்டியது. அதைப்பற்றி அவர் பிரஸ்தாபித்தபோது

அத்தையம்மாள் கொதித்தெழுந்து, ''இந்த இழவெடுத்த சம்பந்தம் வேண்டாம்னு சொன்னேனே கேட்டியா? கொளந்தை கலியாணமும் அதுவுமா மயானகாண்டம் ஆடப் போறானாமே படுபாவி! என்று சீறினாள்.

சிவசங்கரம்பிள்ளை பதிலேதும் பேசவில்லை. அந்தச் சில தினங்களில் அவர் முற்றும் துறந்த துறவிபோல் காலம் கழித்தார். மோகனாவும் தன் வாழ்க்கையின் முடிவு இது தானென்ற தீர்மானத்தில் நடைப்பிணமாக மாறிவிட்டாள். ஊர் முழுவதும் அவள் திருமண விஷயமாகக் குதூகலத்தில் திளைத்தும், அவள் மட்டும் நெஞ்சை அழுத்த விதியின்மேல் பழியைப் போட்டு நடமாடிக் கொண்டிருந்தாள். ராஜபார்ட்டாரும் கலியாண விஷயத்தில் எந்தத் தாமதமும் இல்லாமல் பழம் பாக்கு வெற்றிலையைக் காலாகாலத்தில் மாற்றிக் கொண்டார்.

அந்த நிச்சயதார்த்த வைபவமே பெரும் வைபோகமா யிருந்தது. அன்று ராஜபார்ட்டாரும் வரதப்பிள்ளையும் செய்துகொண்ட அலங்காரத்தைப் பார்த்த கிராமவாசிகள், ''நடக்கப் போவது நிஜத் திருமணந்தானா. நாடகமா?'' என்று தெரியாமல் திணறிப் போனார்கள் ஏற்கெனவே கோமாளியான வரதப்பிள்ளை விசிறி மடிப்பு அங்கவஸ்திரம் இத்யாதிகளை அந்த நிச்சயதார்த்த தினத்தன்று மாத்திரமின்றி, அடுத்த தினங்களும் தரித்துக்கொண்டு தாழைக் காட்டையும் குளத்தங்கரைகளையும் சுற்றிக்கொண்டிருந்தான். திருமணநாள் நெருங்க நெருங்க அவன் சேஷ்டைகள் அதிகமாவதைக் கண்ட ராஜபார்ட்டார் அவனை அடக்கி வைக்க எடுத்த முயற்சிகளெல்லாம் வீணாயின.

அந்தக் கலியாணத்தில் குருக்கள், பத்தர் கொமரசாமி முதலிய பலரும் சிரத்தையெடுத்துக் கொண்டாலும், எல்லா ஏற்பாடுகளிலிருந்தும் வராஹாச்சாரி மட்டும் விலகியே நின்றார். எதிலும் தலையிடும் வராஹாச்சாரி இந்தத் திருமண ஏற்பாடுகளிலிருந்து விலகி நின்றது கிராமத்தில் எல்லோருக்கும் குறிப்பாகக் குருக்களுக்குப் பெரும் வியப்பாக இருந்தது.

இதைப்பற்றி விசாரிக்கவே பெருமாள் கோயிலுக்கருகில் வராஹாச்சாரியைச் சந்தித்த குருக்கள், ''என்ன ஸ்வாமி! கல்யாணத்தை நடத்தித்தான் தீருவேனென்று பிடிவாதம் பிடிச்சீர். அப்புறம் பிள்ளை வீட்டுப் பக்கமே காணோமே?'' என்று கேட்டார்.

மேலைக்குளத்தில் தீர்த்தமாடிவிட்டு, பன்னிரண்டு திருமண் காப்புகளையும் நன்றாகச் சாத்திக்கொண்டிருந்த வராஹாச்சாரியின் முகத்தில் துக்கமே நிரம்பி நின்றது ''குருக்களே! பொறுமய்யா! கல்யாணம் நடக்கட்டும் பார்ப்போம்'' என்றார் அவர்.

குருக்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது. வராஹாச்சாரியை சந்தேகத்துடன் நோக்கி, ''ஏனய்யா ஐயங்கார் ஸ்வாமி! ஏதாவது மொட்டைக் கடிதாசி எழுதிப் போடப் போறீரா? அதெல்லாம் ஒண்ணும் செய்யாதீங்காணும். நல்ல காரியம் நடக்கட்டும்'' என்றார்.

வராஹாச்சாரி முகத்தில் துக்கக் குறி மறைந்து கோபக் குறி தென்பட்டது. ''ஓய் குருக்களே! இந்த வராஹாச்சாரியை யார்னு நெனைச்சீர்? ரிடையர்டு உதவிக் கமிஷனராக்கும்!'' என்று சீறினார்.

''அதனால்தானய்யா கேட்கிறேன். ஓர் உதவிக் கமிஷனர் செய்யக்கூடிய வேலையா இது?'' என்று குருக்கள் மேலும் கேட்டார்.

''அப்படின்னா நான் மொட்டைக் கடுதாசி எழுதப்போறேன்னு தீர்மானிச்சுட்டீரா?

''பின்னே எப்படிக் கல்யாணம் நிற்கும்?''

''நிற்கும்னு யார் சொன்னது?''

''நீர்தானே சொன்னீர், கல்யாணம் நடக்கட்டுமே பார்ப்போம்னு''.

''அதனாலே?''

"நிக்கறதுக்குக் காரணமிருக்கணுமில்லையோ?"

"அந்தக் காரணம் நான்தான்னு தீர்மானம் பண்ணீட்டீர். அப்படித்தானே?"

ஐயங்கார் ஸ்வாமியின் போக்கு குருக்களுக்கு அடியோடு புரியவில்லை. மேலே ஏதாவது கேட்டால் வராஹாச்சாரி அவர் அல்ஸேஷினைப்போல வள்ளென்று விழிப்போகிறாரென்ற பயத்தால், மேற்கொண்டு அவர் பேச்சை வளர்த்தவில்லை. வராஹாச்சாரியும் எதையும் விளக்காமலே சென்றார்.

திருமணநாளும் வந்தது. முதல் நாளன்று மாப்பிள்ளை அழைப்பு ஏகத்தடபுடலாக நடந்தது. சிவசங்கரம் பிள்ளைதாமே முன்னின்று எல்லோரையும் வரவேற்றார். பிள்ளை வீட்டுத் திருமணமாதலால் காளையாகுடி, வாளூர் முதலிய இடங்களிலிருந்து மட்டுமின்றி, கும்பகோணத்திலிருந்தும் பல பணக்காரர்கள் வந்திருந்தார்கள். சாப்பாடு பத்து வீடுகளில் ஏககாலத்தில் நடந்தது. பிள்ளைக்குக் கைகட்டிச் சேவகம் செய்ய நூற்றுக்கணக்கான கிராமவாசிகள் தயாராயிருந்தார்கள்.

திருமணநாளின் விடியற்காலையில் மோகனாவுக்குச் சுமங்கலிகள் மஞ்சனமாட்டினார்கள். உள்ளே துக்கமிருந்தாலும் அதை வெளியில் காட்டிக்கொள்ளாத அத்தையம்மாள், மோகனாவுக்குத் தானே தலைவாரிப் பின்னிப் பூச்சூட்டிக் கன்னங்களைக் கைகளால் தடவியெடுத்துத் திருஷ்டி கழித்தாள். காமிரா உள்ளில் அப்பொழுது அத்தையும் மோகனாவும் தனித்திருந்த நேரம் அது. திருஷ்டி கழித்த அத்தையைக் கலங்கிய கண்களுடன் பார்த்த மோகனா, லேசாகத் துக்கச் சிரிப்பு சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறே கண்ணு?" என்று அத்தையம்மாள் கேட்டாள், கண்களில் நீர் சுரக்க.

"ஒண்ணுமில்லை அத்தை".

"சொல்லு கண்ணு".

"திருஷ்டி ஏன் கழிக்கிறே அத்தே".

''என்ன இப்படிக் கேக்கிறே கண்ணு?''

''திருஷ்டி பட்டா என்ன முழுகிப் போயிடும்''.

''நீ சௌக்கியமா இருக்க வேண்டாமாம்மா?''

''சௌக்கியம் ஏது அத்தை? அது எனக்கு இனிமேல் ஏது?''

''குழந்தை! நீ நெனைக்கிறது எனக்குப் புரிகிறது. ஆனா, அவங்க அவங்களுக்குக் குடுத்து வச்சதுதாம்மா கிடைக்கும். விதிக்குத் தலைவணங்கி, அதிலே சௌக்கியத்தைச் சம்பாதிக்கிறதிலேதாம்மா இருக்கு நம்ம கெட்டிக்காரத்தனம்''.

''சரி அத்தே! உன்னை மாமன் கட்டிக்கச்சே உனக்கு அவரைப் பிடிச்சிருந்ததா?''

''ஓ பிடிச்சிருந்ததே! நான் வாழ்ந்த கொஞ்ச நாளும் சொர்க்க வாழ்வுதான் கண்ணு. ஆனா, அவர் இருக்க நான் குடுத்து வைக்கலே!''

''அத்தே!''

''ஏம்மா?''

''கொஞ்ச நாளென்றாலும் இஷ்டப்பட்ட புருஷனோட வாழறது சுகமா? இஷ்டமில்லாதவனோட வாழ்ந்து பூராகாலங் கடத்தறது சுகமா?''

அத்தை பதில் சொல்லவில்லை. பதிலை கன்னத்தில் வழிந்தோடிய அவள் கண்ணீர்த் துளிகள் கூறின. மோகனாவின் கண்கள் நீரைச் சுரக்கவில்லை. அவள் இதயம் வெடித்து இரத்தம் சுரந்து கொண்டிருந்ததை அத்தையம்மாள் கண்டாள். மரத்துப் போன அந்த இதயத்துடனும் உலர்ந்து போன உணர்ச்சியுடனும் தோழியர் மோகனாவைப் பந்தலுக்கு அழைத்துச் சென்றார்கள்.

திருமண நேரம் வந்தது. மேளம் பலமாக முழங்கியது.

சிறுபுலியூர் வாத்தியார் ஸ்வாமிகள் மிகுந்த அபஸ்வரத் தில் திருமண மந்திரங்களைக் கூறிக்கொண்டிருந்தார். அது ஒன்றும் வாயில் நுழையாத வரதப்பிள்ளை, மந்திரங்களைச் சொல்லாமல் பக்கத்திலிருந்த கிராமப் பையன்களிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தான்.

''உம் உம்! பெண் எங்கே?'' என்று வாத்தியார் கூச்சல் போட்டார்.

''பெண் பெண்'' என்று மற்றுப் பிரபலஸ்தர்களும் கூவினார்கள்.

திருமணப் பெண்ணுக்கு வேண்டிய சகல அலங்காரங் களுடன் திருஷ்டி படும்படியாக நடந்து வந்த மோகனா, வரதப்பிள்ளையின் பக்கத்தில் அமர்ந்தாள். அந்தத் திருமண அலங்காரத்தில் குறை ஏதுமில்லை, அவள் முகத்தில்தான் குறை இருந்தது. திருமணப் பெண்ணுக்கு வேண்டிய அந்த நாணம் எதுவுமே அந்த அழகிய வதனத்தில் காணோம். கடமைக்காக மணையில் உட்காரும் மனோபாவமே முகத்தில் பிரதிபலித்தது. இந்த வரண்ட பார்வையைக் கவனித்த சிவசங்கரம் பிள்ளையின் மனம் சுக்கு நூறாக வெடித்துக் கொண்டிருந்ததால், இருதயமும் படபடவென அடித்துக் கொண்டு கிரனூரான் மேளத்துடன் பலமாகப் போட்டியிட்டது.

வரதப்பிள்ளை மிகுந்த சந்தோஷத்துடன் தன் அசட்டுத் தனத்தையெல்லாம் காட்டிக் கோணங்கி செய்துகொண்டு மாங்கல்யத்தைக் கையில் ஏந்திக் கொண்டான். விதைக் கோட்டையின் மேல் உட்கார்ந்திருந்த பிள்ளைவாள் மோகனாவை அவனிடமிருந்து பாதுகாப்பவர்போல் இறுகப் பிடித்துக் கொண்டார். வெளியே கெட்டிமேளம் கொட்டியது. சுமங்கலிகள் லக்ஷ்மி கல்யாணம் பாடினார்கள், எங்கும் மங்கலத் தொனி கேட்டுக்கொண்டிருந்தது. அந்த மங்கலத் தொனிக்கு ஊடே புகுந்தது, ''நிறுத்து கல்யாணத்தை!'' என்ற வராஹாச்சாரியின் குரல்.

''யாரடாகல்யாணத்தை நிறுத்துவது?'' என்று வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பிய ராஜபார்ட்டார், அடுத்த விநாடி வெலவெலத்துப் போனார்: வந்தது வராஹாச்சாரி மட்டுமல்ல, அவரைத் தொடர்ந்து டிப்டி அப்துல்லாவும், இன்ஸ்பெக்டர் ஜெயராஜும் வந்திருந்தார்கள். கல்யாண மண்டபத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. கையிலிருந்த

தாலியைக் கீழே போட்டுவிட்ட வரதப்பிள்ளை போலீஸாரைக் கண்டு நடுநடுங்கித் தந்தைக்குப் பின்னால் பதுங்கினான்.

'நிறுத்து கல்யாணத்தை' என்ற குரல் வந்தபோது கூட முகத்தை உயர்த்தாத மோகனா, கல்யாணத்தில் குழப்பம் ஏற்பட்டுப் பலரும் பலபடி பேச ஆரம்பிக்கவே கண்களை உயர்த்தினாள். எதிரே புன்சிரிப்புடன் சுந்தர் நின்று கொண்டிருத்தான்.

35. தியாகமும் பலனும்

கண்ணை நிமிர்த்தியதும் எதிரே புன்சிரிப்புடன் சுந்தர் நின்று கொண்டிருந்ததைக் கண்ட மோகனா சொப்பன உலகத்தில் சஞ்சரிக்கத் தொடங்கினாள். அவள் மணக்கூடத்தை மறந்தாள்; தன்னை மடியில் தாங்கிக் கன்னிகாதானம் செய்வதற்காக விதைக்கோட்டைமேல் உட்கார்ந்திருந்த தந்தையை மறந்தாள். கூடத்திலிருந்த கூட்டமோ, டிப்டியின் வரவால் அதில் ஏற்பட்ட குழப்பமோ எதுவுமே அவள் உணர்ச்சிகளைத் தாக்கவில்லை. சுந்தர் ஒருவன்தான் அவள் கண்களுக்குப் புலப்பட்டான். அதுவும் சிறையிலிருந்து விடுதலையாகி வந்த சுந்தரல்லவா. பல நாட்களுக்கு முன்பு கார் நின்று போய், பூட்ஸில் சேர் மண்டிக் கிடக்கத் தாம்புக் கயிறு கேட்க வந்தானே அந்த சுந்தரைத்தான் அவள் கண்டாள். அதே புன்சிரிப்பு! அதே கம்பீரமான தோற்றம்! சற்றுத் தூரத்திலே அந்தக் கார்கூட நின்றிருந்தது. 'இதுதானே சிவசங்கரம் பிள்ளையின் வீடு?'' என்று எத்தனை அழகாகக் கேட்டான்.

இதை நினைக்க நினைக்க அவள் உடலெல்லாம் சொல்ல முடியாத வெட்கம் பரவியிருந்தது. அதுவரை மரத்துப் போயிருந்த அவள் உணர்ச்சிகளெல்லாம் மீண்டும் திரும்பின. ''எந்தப் பெண்ணுக்கும் வெட்கத்தை அளிக்கக் கூடியவன் அவள் காதலிக்கும் புருஷன் ஒருவன்தான்' என்ற தத்துவம் எத்தனை

உண்மையானது என்பதை நினைத்து வியந்தாள். சுந்தரை அவள் முதல் நாள் சந்தித்த அந்தக் கட்டத்தின் காட்சிகள் பூராவுமே அவள் முன்பாகப் பவனி வந்தன. குடத்துடன் குளத்திலிருந்து வந்த அத்தையம்மாளின் பெரும் உருவம்கூட அவள் முன் எழுந்தது.

இத்தகைய இன்ப நினைவுகளால் சுழன்றுகொண்டிருந்த மோகனாவுக்குத் தான் தந்தையின் மடியிலிருந்து இறக்கப் பட்டதோ, தாலியும் கையுமாக நின்ற வரதப்பிள்ளையை போலீஸ் இன்ஸ்பெக்டர் விசாரிக்கத் தொடங்கியதோ ஒன்றும் தெரியவில்லையாதலால், அவள் தன் கனவுலகத்திலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். அவளை இந்த உலகத்துக்கு கொண்டுவரத்தானோ என்னவோ காதலெல்லாம் குரலிலேயே பொங்கி வழிய, ''மோகனா'' என்று மெல்ல அழைத்தான் சுந்தர்.

மோகனா இந்த உலகத்துக்கு வந்தாள். அதுவும் வருத்தம் ஏதுமின்றியே வந்தாள். சுந்தருடன் இருந்ததால் இந்தப் பாழும் உலகம் கூட இன்ப உலகமாக மாறிவிட்ட பிரமை ஏற்பட்டது அவளுக்கு.

தீயும் பயிருக்குப் பெய்யும் மழையைப்போல அமுத தாரை போன்ற அவன் சொற்களால் மீண்டும் சாகாவரம் பெற்ற மோகனா, மெள்ள எழுந்து நின்றாலும் சில நாட்களாக அவளை வதைத்துக்கொண்டிருந்த துன்பம் அவளை மிகவும் பலவீனமாக அடித்திருந்ததால், பலமாக நிற்கமாட்டாமல் சற்றே ஆடினாள். சுந்தரின் கரங்கள் அவளைப் பிடித்துத் திடப்படுத்தின. ''மோகனா! இதோ பார்! நான்தான், உன் சுந்தர்' என்று அவள் காதில் சொன்னான்.

அவன் அப்படி அவளைத் தைரியமாகப் பார்த்ததைப் பார்த்த மற்றவர்கள் திகைத்துப் போனார்கள்.

''ஏம்பா உத்திராதி! கலி முத்தறதா?'' என்று விசாரித்தார் குருக்கள்.

''காலத்தின் கோளாறு ஸ்வாமி. இதுக்கும் அந்தக் காலத்துக்கும் இதுதான் ஸ்வாமி வித்தியாசம். ராம பிரானுக்குக் கவியாணும் நிச்சயமானப்புறம்கூட...'' என்று உத்திராதி கிளம்பினார்.

''உத்திராதி! கம்பராமாயணத்தை அவிழ்க்காதே, எரியும் கொள்ளியை ஏறத்தள்ளின மாதிரி இருக்கு?'' என்றார் குருக்கள்.

டிப்டி அப்துல்லா திடீரெனப் போலீஸாருடன் திருமண மண்டபத்தில் நுழைந்ததையும், வராஹாச்சாரி திருமாங்கலிய தாரணத்தை நிறுத்தச் சொல்லி உத்தரவு போட்டதையும், பிறகு போலீஸார் வரதப்பிள்ளையைத் தனியாக அழைத்து விசாரித்ததையும் கண்ட ஜனங்களிடையே பெருத்த பரபரப்பு ஏற்பட்டது. திருமணக்கூடத்தில் அவரவர்கள் நின்று ஏதேதோ பேசிக்கொண்டார்கள். பெண்கள் கூட்டத்திலும் பேச்சு பலபடியாக நடந்துகொண்டிருந்தது. அத்தனை குழப்பத்தையும் வராஹாச்சாரி சமாளித்தார். சிவசங்கரம் பிள்ளையைத் தனியாக அழைத்துக்கொண்டு போய் ஏதோ ரகசியம் பேசினார். பிறகு கூட்டத்தின் நடுவுக்கு வந்து சமஸ்கிருதம் பூராவாகக் கலந்த பாஷையில், ''ஒரு விஞ்ஞாபனம்'' என்று இரைந்து கூறி மற்றவர்கள் பேச்சை அடக்கிவிட்டு மேலும் சொன்னார்: ''சிவசங்கரம் பிள்ளைவாளுக்கு ஒரு குறைச்சல் வந்தா அது கிராமத்துக்கும் . பூரணமாக உண்டு. ஆகையினாலே அடியேனுடைய அபிலாஷைப்படி நம்ம டாக்டருக்கே மோகனாவைப் பாணிக்கிரகணம் பண்ணிக் குடுத்துடணும்கிறது! இதுக்குச் சபையிலிருக்கிறவாள் ஒப்புக்கணும்'' என்று.

திருமணக் கூட்டத்தில் சில விநாடிகள் மௌனம் நிலவியது. கடைசியாக உத்திராதிப் படையாச்சி வாயைத் திறந்து, ''ஆச்சாரியார் சரியாகத்தான் சொன்னாங்க. கம்பராமாயணத்திலேகூடப் பிராட்டி ராமபிரானைப் பார்த்ததும் மையல் கொண்டு கடைசியிலே அவரைத்தான் திருமணம் செய்துகொண்டதாகச் சொல்லியிருக்கிறது!'' என்று தன்

சம்மதத்தைத் தெரிவித்தது மட்டுமின்றி, ''பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?'' என்ற அடியையும் பாடிக்காட்டினார்.

அந்தச் சமயத்தில் மணவறைக்குள் நுழைந்த அழகண்ணல் நேராக மோகனாவிடம் சென்று கண்களில் நீர்த்தும்ப, ''நீ என்னை மன்னிக்கணும் கொழந்தை! இந்தப் பாவியாலேதான் உனக்கு இத்தனை கஷ்டங்களும்'' என்று நாக்குக் குளறக் கூறினார்.

அழகண்ணல் வார்த்தைகள் கூடத்தில் உட்கார்ந்திருந்த கண்ணப் பிள்ளையின் காதில் விழவே அவர் மிகுந்த ஆக்ரோஷத்துடன் எழுந்து, ''நினைச்சேன் அப்பவே! எல்லாம் இந்தக் கறுப்புச் சட்டைப் பயலின் விஷமம்!'' என்று சீறிக்கொண்டே அழகண்ணலிடம் சென்றார்.

''கண்ணப்பிள்ளை! நில்லுங்காணும். என்னய்யா விஷயம் தெரியாமே உளறுகிறீர்! அழகண்ணல் மகானுபாவன் காணும்'' என்று அவரை வழிமறித்தார் வராஹாச்சாரி.

வராஹாச்சாரியின் பேச்சு கண்ணப்பிள்ளையை மட்டுமில்லாமல் மற்றப்பேரையும் அயரவைக்கவே, கொமரசாமி கேட்டான், ''ஏன் சாமி, நீங்களும் கழகத்திலே சேர்ந்திட்டீங்களா?'' என்று.

''கழகமாவது மண்ணாங்கட்டியாவது! அழகண்ணலின் கறுப்புச் சட்டையைக் கழட்டிட்டா அவனும் நம்மைப் போல ஒரு மனுஷன்தான். ஏதோ கேட்பார் பேச்சைக் கேட்டுப் புத்தி கெட்டுக் கழகத்திலே சேர்ந்துட்டான். அது கிடக்கட்டும்; அவன் கழகமோ என்னமோ, அவன் இன்னிக்குச் செய்திருக்கிற காரியத்தை ஆயிரம் ஆஸ்திகனாயிருந்தாலும் செய்திருக்க மாட்டான்'' என்றார் வராஹாச்சாரி.

''அப்படி என்னய்யா செஞ்சிப்பிட்டான்?'' என்று உத்திராதி கேட்டார்.

''நிஜப் கொலையாளியைப் பிடித்துக் கொடுத்திருக்கான்'' என்று வராஹாச்சாரி மிக உஷ்ணமாகப் பதில் சொன்னார்.

''கொலையாளினையயா! பிடித்துக் கொடுத்தானா!'' கண்ணப்பிள்ளை ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தார்.

''அதுவும் கொலையாளி யார் தெரியுமா? அவன் சொந்த அண்ணன்! தன் கடமையைச் செஞ்சிருக்கான் அழகண்ணல். அவன் கழகமாயிருந்தா என்ன, எதுவாயிருந்தா என்ன?'' என்றார் வராஹாச்சாரி.

நன்றி ததும்பும் கண்களை வராஹாச்சாரிக்காகத் திருப்பிய அழகண்ணல் வாழ்க்கையில் முதன் முதலாக அவருடன் பேசத் தொடங்கி, ''ஸ்வாமி! இது சரியில்லீங்க. வரதப் பிள்ளையும் மோகனாவும் தாழைக்காட்டிலே பேசிக்கிட்டிருந்ததைக் கேட்டு, கொலை நடந்த ராவுலே வேறு ஒருத்தனும் ஓடியிருக்கான்கிற தகவலை நீங்க போலீஸுக்கு எழுதியனுப்பலேன்னா போலீஸ் எங்கே விசாரிக்கப் போறாங்க? நான் எங்கே நிஜத்தைச் சொல்லிடப் போறேன்! மோகனாவுக்கு வாழ்வளித்தது தாங்கள்தானுங்க?'' என்று சொல்லி அவர் காலில் விழப்போனார்.

பிறத்தியார் மேலே பட்டாலே தீட்டு என்று நினைக்கும் வராஹாச்சாரி அழகண்ணலை அப்படியே வாரித் தமது மார்போடு அணைத்துக்கொண்டார். கறுப்புச்சட்டை பன்னிரண்டு திருமண் காப்புகளுடன் உராய்ந்ததைக்கூட அவர் சட்டை செய்யவில்லை. ''அப்பா அழகண்ணல்! நீ உத்தமன். இல்லாவிட்டால் உன் அண்ணனைக் காட்டிக் கொடுத்திருக்க மாட்டாய்'' என்று கூறிய வராஹாச்சாரியின் கண்களிலிருந்து நீர் பொல பொலவென்று உதிர்ந்தது.

அந்தச் சமயத்தில் மோகனாவும் அழகண்ணலிடம் வந்து, ''அண்ணா! யார் அது உங்கள் அண்ணன்? எனக்காகவா அவரைக் காட்டிக் கொடுத்தீர்கள்?'' என்று கேட்டாள்.

''ஆமாம்மா, உன்னை அன்று அசனகுடித் தென்னந் தோப்பில் தூக்கிச் செல்ல முயன்றானே அவன் தானம்மா என் அண்ணன். பாலியத்திலே கெட்டுப் போனவன். ஊரை விட்டு

ஓடிப்போய்ப் பல வருஷங்கள் ஆச்சு. ஏதோ ஒரு தேவடியாளைத் தன் மகள்னு சொல்லிக்கிட்டுத் திரியறான்னு கேள்விப்பட்டேன். அதனாலேதான் இத்தனையும். அவன் டாக்டரைத் தேடிக்கிட்டு வந்த ராவுலேதான் உன்னை அவனும் பார்த்தான்; அவனை நானும் பார்த்தேன்'' என்றார் அழகண்ணல்.

''அவன் டாக்டரை ஏன் பார்க்கணும்?'' என்று கேட்டாள் மோகனா. தலையை நிலத்தில் தாழ்த்திக் கொண்டே.

''டாக்டருக்கு அகல்யாவை - அது அவ சினிமாப்பேரு, சொந்தப் பேரு காமாட்சி - சேத்து வச்சு அவருக்குக் கெட்ட பேர் வாங்கி வச்சு அவரை நாசம் பண்ணிட்டவன் அவன்தான். மானத்துக்குப் பயந்து டாக்டர் தலைமறைவாயிருக்கலாம்னு, மாடி வீட்டை வாங்கிக்கிட்டு இந்த ஊருக்கு வந்தார். இங்கேயும் அந்தப் பிசாசுகள் ரெண்டும் அவரைவிடாமல் தொடர்ந்தனர். இத்தனைக்கும் அவனை நான் எத்தனையோ முறை எச்சரித்தேன். கேக்கலை அந்தப் பயல்'' என்று அழகண்ணல் விவரித்தார்.

டிப்டி அப்துல்லாவுக்கு இந்தச் சமயத்தில் ஒரு சந்தேகம் வரவே அவர் கேட்டார், ''அப்படியானால் அகல்யாவை அவன் கொன்ற காரணம்?'' என்று.

''டாக்டரை மறுபடியும் மறுபடியும் மிரட்டிப் பணம் பறிக்கச் சொல்லி மாயாண்டி - அதான் என் அண்ணன் - அவளை ஏவினான். அவள் இணங்கலை. ஆத்திரத்தில் சுட்டு விட்டான். அந்தச் சமயத்திலே வரதப்பிள்ளையும் அந்தப் பக்கம் வந்து இரண்டு குண்டுகளைச் சுட்டிருக்கான், சுடப் பழகிக் கொள்ள. உடனே அகல்யாவின் அலறல் கேட்டிருக்கவே வரதப்பிள்ளை ஓடப் பார்த்திருக்கான். அதைப் பார்த்த மாயாண்டி ஓடியிருக்கிறான். அந்தப் பக்கம் டாக்டரும் வந்திருக்காரு. வரதப்பிள்ளை துப்பாக்கியும் கையுமா நிக்கிறதையும் கீழே அகல்யா விழுந்து கிடப்பதையும் பார்த்திருக்காரு. வரதப்பிள்ளையின் துப்பாக்கியை பிடுங்கிக்கிட்டு அவனை ஓடிப்போகச் சொல்லியிருக்காரு'' என்று மீதித் தகவல்களையும் விளக்கினார் அழகண்ணல்.

''டாக்டர் ஏன் இதைச் செய்யணும்?'' என்று ஏதேதோ நினைப்புகளால் குழம்பிப் போயிருந்த சிவசங்கரம் பிள்ளை கேட்டார்.

''இது புரியவில்லையா பிள்ளைவாள்? டாக்டராலே ஊரிலே மோகனாவுக்குக் கெட்ட பேர் உண்டாயிடுத்து. அவளுக்கு மணமாகிறது கஷ்டம். வரதப்பிள்ளைதான் கட்டிக்க முன்வந்தான். அவன் பேரிலே கொலைக் குற்றம் விழுந்தா அவளுக்கு வாழ்வே அஸ்தமனம். அதுக்காகத்தான் டாக்டர் கொலைக் குற்றத்தைத் தம்மேலே போட்டுண்டார். ஓய் பிள்ளைவாள், உம்ம பெண் அதிருஷ்டக்காரி ஐயா! அவளுக்காக உயிரையே கொடுக்கக்கூடிய ஒரு புருஷன் கிடைச்சிருக்கான் பாரும். அடடே! இப்படியே பேசிண்டிருந்தா முகூர்த்தம்னா போயிடும். டாக்டர், முதல்லே போய் ஒரு சொம்பு ஜலத்தைக் கொட்டிட்டு வாரும்'' என்று இரைந்தார் வராஹாச்சாரி.

வராஹாச்சாரியின் அதட்டலாலும், மற்றவர்களின் ஏகோபித்த ஆமோதிப்பாலும் அதே பந்தலில் டாக்டர் சுந்தர், மோகனாவின் கழுத்தில் மூன்று முடிச்சுக்களைப் போட்டான். கீரனூராளுக்கு இருந்த சந்தோஷத்தில் கெட்டி மேளம் பிரமாதப்பட்டது. பெண்களின் லக்ஷ்மி கல்யாணமும் பலமாகக் கேட்டது. பொதுமக்களின் ஆசீர்வாதமும் பலமாக எழுந்தது. அத்தையம்மாளுக்கிருந்த சந்தோஷத்தில் அவள் இங்கும் அங்கும் ஓடிய ஓட்டத்தில் சாதாரணமாகவே ஆடும் அவளுடைய சதைப் பிண்டங்கள் அன்று நர்த்தனமே புரிந்தன.

இப்படி உல்லாசமாகத் திருமணம் நடந்து கொண்டிருந்த சமயத்திலே உள்ளே நுழைந்த வக்கீல் ஆனந்தம், 'என்ன டாக்டர் ஸார்! நீங்கள்தான் அம்மாஞ்சி பெண்ணையே கட்டிக்கொண்டு விட்டீரே, அந்தப் பழைய உயிலை என்ன செய்வது?'' என்று கேலியாகக் கேட்டார்.

சிவசங்கரம் பிள்ளை திடீரென்று, ''அப்படியானால் சுந்தர்...'' என்று இழுத்தார்.

''உங்கள் அத்தான் அருணாசலம் பிள்ளையின் மகன்'' என்றார் ஆனந்தம்.

''அப்படியானால் பிள்ளையாண்டான் பரம்பரை வீட்டைத் தான் திரும்ப வாங்கியிருக்கான். மாடி வீடு அதிர்ஷ்ட வீடுதான்!'' என்று சிலாகித்தார் குருக்கள்.

திருமணம் முடிந்த பல நாட்கள்வரை ஊரெங்கும் இந்தக் கலியாண அதிசயத்தைப் பற்றியே ஜனங்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். மாயாண்டி ஓடினான் என்பதை அறிந்தும் கூட முக்கியச் சாட்சியத்தை மறைத்தற்காக வரதப்பிள்ளையைத் திருமண நாளன்று கைது செய்த டிப்டி அப்துல்லா சில நாட்களுக்கெல்லாம் அவனை விடுதலை செய்துவிட்டதால், அவனை அழைத்துக்கொண்டு ராஜபார்ட்டார் சென்னை சென்று விட்டார். அவர் ஊரைவிட்டுப் போயும் ஜனங்கள் அவர் சுந்தரின் விவாகத்தைத் தடுக்கவும், தன் பிள்ளைக்குப் பெண்ணைக் கட்டவும் செய்த சூழ்ச்சிகளைப் பற்றி வம்பு பேசிக் கொண்டிருந்தார்கள். குருக்கள் வீட்டில் சீட்டாடும் போதும் உத்திராதிப் படையாச்சி வீட்டில் கம்பராமாயணம் கேட்கும்போதும் வராஹாச்சாரி ராஜபார்ட்டாரைப் பிய்த்து வாங்கிக் கொண்டிருந்தார்.

செண்பகத் தோட்டம் மெள்ள மெள்ள அமைதியை அடைந்து கொண்டிருந்தது. எல்லோர் சந்தேகமும் தீர்ந்தது. ஆனால் மோகனாவுக்கு மட்டும் ஒரே ஒரு சந்தேகம் இருந்தது. பள்ளி அறையில் இருவரும் தனித்திருக்கையில் அவள் சுந்தரைக் கேட்டாள்; ''ஆமாம்; வரதப்பிள்ளைக்கு என்னைக் கட்டிக் கொடுக்கத்தான் அவனைக் காப்பாற்றினீர்கள். அவன் விடுதலையான பின்பும் நீங்கள் கொலை செய்ததாக ஏன் போலீஸாரிடம் பிடிவாதம் பிடித்தீர்கள்?'' என்று.

''உன்னை இழந்த பின்பு நான் வாழ முடியுமா மோகனா? இன்னொருவன் கையில் உன்னை ஒப்படைத்து விட்டு அதைப் பார்த்துக் கொண்டிருப்பது சாத்தியமா?'' என்றான் சுந்தர்.

'எவ்வளவு உத்தமப் புருஷனை நாம் அடைந்திருக்கிறோம்' என்று மோகனா பெருமூச்செறிந்தாள்'

''ஏன் மோகனா? என்ன?''

''நீங்கள் எனக்காக உயிரையே விடத் துணிந்தீர்கள். நான் என்ன செய்தேன் உங்களுக்கு?''

''என் உயிரைக் காப்பாற்றச் சூழ்ச்சி செய்து வரதப்பிள்ளையைத் தாழைக்காட்டில் அழைத்து ரகசியம் பேசினாயே, அது போதாதா? இல்லாவிட்டால் வராஹாச் சாரிக்குத்தான் உண்மை தெரியுமா? அவர்தான் டிப்டிக்கு எழுதுவாரா?''

''இன்னொருவன் ஓடினான் என்பதைக் கேட்டதும் நானும் போலீசுக்குத் தகவல் கொடுக்க வேண்டுமென்று துடித்தேன். அதற்குள் திருமணத்தை ஏற்படுத்தி விட்டார்கள். வராஹாச்சாரி புண்ணியத்தைக் கட்டிக்கொண்டார்.''

''இல்லாவிட்டால் இத்தனை நேரம் நீ இந்த அறையில் வரதப்பிள்ளையுடனே இருப்பாய்!'' என்றான் சுந்தர்.

மோகனா கட்டிலிலிருந்து கோபத்துடன் எழுந்தாள்.

''ஏன் மோகனா கோபமா?'' என்றான் சுந்தர்.

அவள் பதில் சொல்லாமல் நடக்க முயன்றாள். அவளது கையைப் பிடித்து இழுத்து மறுபடியும் கட்டிலில் உட்கார வைக்க முயன்றான் சுந்தர்.

''விடுங்கள் என்னை!'' என்று மோகனா சீறினாள்.

''எங்கே தாழைக்காட்டுக்குப் போகவா? வரதப்பிள்ளைக்குச் சொல்லியனுப்பட்டுமா?''-சுந்தர் சிரித்தான்.

அவள் கோபத்துடன் அவனை நோக்கித் திரும்பினாள்: ஏதோ சொல்ல வாயெடுத்தாள். ஆனால் சொல்ல முடியவில்லை; அவள் உதடுகள் சுதந்திரமிழந்தன; ஏன் - உடலும்தான்!

———— ★ ————

இந்நூலாசிரியரின் இதர நாவல்கள்

★

ராஜதிலகம்
ஜலதீபம் - I, II, III
கடல் புறா - I, II, III
யவனராணி - I, II
ராஜமுத்திரை - I, II
ராஜபேரிகை
கடல்ராணி
வசந்தகாலம்
புரட்சிப் பெண்
மலை வாசல்
கன்னி மாடம்
ஜீவ பூமி
ராணியின் கனவு
இளைய ராணி
மதுமலர்
நங்கூரம்
உதயபானு
மஞ்சள் ஆறு
மூங்கில் கோட்டை
பல்லவ திலகம்
நாக தீபம்
நீள் விழி

வானதி பதிப்பகம்
தியாகராயநகர். ::சென்னை - 17

